Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வேறு கோணங்களில்

பாரதி

சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Foundation
Gurukul Kan

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

100889

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

பல்வேறு கோணங்களில் பாரதி

100889

சீனி. விசுவநாதன்

Presented Free of Cost with Compliments from the Central Institute of Indian Languages (Government of India), Mysore 570 006

வெளியீட்டாளர் :

சீனி. விசுவநாதன்

2, டாடல் ஹவுஸ் லேன்,
சி. ஐ. டி நகர்,
சென்னை-600035,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு: 11 டிசம்பர் 1992

© சீனி. விசுவநாதன்

விலை : ரூ. 30-00

★

ஆசிரியரின் பிற நூல்கள்

பாரதி நூல்கள் :
விவரக் கோவை

பாரதி நூல்கள் :
பதிப்பு வரலாறு

மகாகவி பாரதி :
சில புதிய உண்மைகள்

பாரதி ஆய்வுகள் :
சில சிக்கல்கள்

புதுநெறி காட்டிய பாரதி

பல்சுவைக் கட்டுரைகள்

மறுமலர்ச்சிக் கவிஞர்

கட்டுரை மணிகள்

★

மாருதி பிரஸ்,
சென்னை-14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

தமிழறிஞர் **வெ. சாமிநாத சர்மா** அவர்கள் **நான் கண்ட நால்வர்** என்னும் நூலில்,

> "பாரதியார், ஒரு தேசீய கவி மட்டுமல்ல; உலக கவி. இடத்தையும், காலத்தையும் கடந்து சாசுவதமாக நிற்கும் பல உண்மைகள், அவருடைய படைப்புக் களில் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றை உலகத்தார் அறியவேண்டும்; அறியச் செய்ய வேண்டியது தமிழர் கடமை"

என்று எழுதிப் பாரதியின் படைப்புச் செல்வங்களை உலகத்தாருக்கு அறியத் தருகிற பெரும் பணியில் தமிழர் ஈடுபட வேண்டும் என்கிற தம் ஆசையை வெளியிட்டார்.

அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்களின் வாக்கைப் பொன்னே போல் மதித்து, அவர்தம் சொல்லுக்கு வடிவம் கொடுத்த எழுத்தாளர் பெருமக்கள் பற்பலர் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் அளவில் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாகப் பாரதியின் எழுத்துக்களை நூல் வடிவம் ஆக்குவதையே வேள்வியாகக் கொண்டுள்ளேன்.

பாரதி பத்திரிகைகளில் எழுதி, நூலாக்கம் பெறாத கதை, கட்டுரை, கவிதைச் செல்வங்களைக் கண்டறிந்து, பதிப்பித்து வருவதுடன், பாரதி பல்வேறு கோணங்களில் வைத்து மதிப்பிட வேண்டிய வைரம் என்பதையும் உணர்ந்து அதற்கேற்பவும் நூல்களை ஆக்கி வருகின்றேன்.

அந்த வகையில், இந்த ஆண்டு, பாரதியின் நூற்றுப் பதினொன்றாம் பிறந்த நாள் வெளியீடாகப் **பல்வேறு கோணங்களில் பாரதி** என்கிற நூலை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

பாரதியைப் பணிவதே எமக்கு வேலை!

* * *

'என்றுமுள தென்றமிழுக்கு இலக்கியமாய்த் திகழும்' பாரதியின் புகழ் பரவும் நூல் வரிசையில் வெளிப்படும் இந்த நூல் — **பல்வேறு கோணங்களில் பாரதியைத்** தரிசனம் செய்யத் தூண்டும் என்ற நம்பிக்கையில் எழுந்தது.

பாரதியின் பன்முகச் சிந்தனைகளை எடுத்துக் காட்டும் இந்த நூலில், இதுநாள் வரை எந்தவொரு பாரதி ஆய்வு நூலிலும் வெளிப்படாத — போதிய அளவு விளக்கம் பெறாத — சுவை மிகுந்த பல புதிய செய்திகள் அணி செய்வதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளில் பாரதி சிந்தனை செலுத்தியவர்: அவர் பாடாத துறை இல்லை; பாடுபடாத துறையும் இல்லை.

இந்த உண்மையை நான் எழுதி வெளிப்படுத்தி யுள்ள புதிய வழி நூலில் ஓரளவு கண்டறியலாம்.

நம்பகமான சான்றுகளைக் கொண்டுள்ள நூல் செய்திகளுக்கு ஆதாரபூர்வமான சித்திரங்கள் புது மெருகைத் தருகின்றன.

நம்பகமான செய்திகளையே தரவேண்டும் என்கிற காரணத்தால், **பாரதியார் நூல்**களைக் கொண்டும், பாரதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த **சக்ரவர்த்தினி, இந்தியா, கர்மயோகி** ஆகிய பத்திரிகை இதழ்களைக் கொண்டும், வேறு சில கருவி நூல்களின் துணைகொண்டும் இந்த நூலை உருவாக்கி யுள்ளேன்.

பாரதீய ஆய்வுலகப் பரப்பை விரிவாக்க வேண்டும் என்கிற ஆசை காரணமாக வெளிப்பட்ட இந்த நூலில், பாரதீய உலகம் கண்டறிய வேண்டிய உண்மைகள் பற்றியும் தொட்டுக் காட்டி யுள்ளேன்.

'தொட்டனைத்தூறும் மணற் கேணி' என்பது போல, தேடத் தேடப் பாரதி பற்றிய புதிய வெளிச்சங்கள் தோன்ற வழி பிறக்கும்.

ஒருசில நேரங்களில் கிடைக்காது என்ற நிலையில் இருந்த பாரதிச் செல்வங்கள் காலங்கடந்த பின்னர் கண்டறியப்பட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, பாரதியின் பேரில் மெய்யன்பு கொண்டவர்கள் விடா முயற்சியுடன் உழைத்தால் வெற்றியும் உறுதி. நம்மவர்கள் ஊக்கமுடன் தேடல் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே என் **ஆசை;** பிரார்த்தனையுங்கூட.

இந்த நூலின் நுழைவாயில் கட்டுரையாக அமைந்துள்ள **பாரதி ஆய்வுகள்** என்னும் கட்டுரையானது 24-3-92 அன்று என்னால் **சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறை**யில் ஆற்றப் பட்ட பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆகும்.

துறையின் தலைவர் முனைவர் **பொற்கோ** அவர்களின் தலைமையில் ஆற்றிய உரையை நூலில் சேர்த்துக்கொள்ள இசைவளித்த **சென்னைப் பல்கலைக் கழக**த்தாருக்கு என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதிக்கு நான் இந்த ஆண்டு சூட்டியுள்ள இப் புத்தணியை நீங்கள் வரவேற்று என் பணிக்கு ஊக்கம் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

வழக்கம்போல் என் பாரதிப் பணிகளுக்குக் கை கொடுக்கும் இனிய நண்பர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது. ஓம். வந்தே மாதரம்.

சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நூலாசிரியரைப் பற்றி....

'இதோ ஒரு 'மனிதன்' என்று அமரர் **கண்ணதாசன்** அவர்களால் பாரதி அன்பர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அதிசய மனிதர் திரு. **சீனி. விசுவநாதன்** தன்னைப் பாரதி பணிக்கே அர்ப்பணித்துக் கொண்டு, இதுவரை செய்துள்ள சாதனைகளை எளிதில் மதிப்பிட முடியாதென்பது பேருண்மை.

பாரதியார் சம்பந்தமாக இவர் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள் அனைத்தும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புற்று விளங்குகின்றன. இவரது சுய முயற்சியின் காரணமாகப் பல்லாண்டு காலமாகப் பலரும் முயன்று தேடியும் கிடைக்காத பாரதிச் செல்வங்கள் கிடைத்துள்ளன.

கூடியவரை பாரதி நூல் தொகுப்பில் வராத கட்டுரைச் செல்வங்கள் பல இவரால் வெளிக் கொணரப்பட்டிருக்கின்றன. தேனீ பல மலர்களி னின்றும் தேன் சேகரிப்பது போலவே, இவரும் பல இடங்களில் சுற்றித் தேடி யலைந்து, பாரதி பற்றிய செய்திகளையும் சேகரித்து, தொகுத்து வருகிறார்.

சி. விசுவநாதன்

பாரதியின் இளைய சகோதரர்
[பாரதி பிரசுராலய நிறுவனர்]

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வேறு கோணங்களில் பாரதி

1. பாரதி ஆய்வுகள் 9

2. பாரதி வரலாற்று நூல்களுக்கு ஒரு வரலாறு 46

3. பாரதியும் வங்கமும் 73

4. பாரதியும் வள்ளுவரும் 107

5. பாரதியும் அரவிந்தரும 145

6. பாரதியும் சிதம்பரனாரும் 161

7. பாரதியும் வ வெ.சு.ஐயரும் 194

8. பாரதியும் புதுவையில் பூத்த பொன் மலர்களும் 211

★

விமர்சனங்களுக் கல்லாது வேறு வகையில்
இந் நூலின் தகவல்களைப் பயன்படுத்த விரும்புவோர்
ஆசிரியரின் முன்அநுமதி பெற வேண்டுகிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Presented Free of Cost with Compliments from the Central Institute of Indian Languages (Government of India), Mysore 570 006

1

பாரதி ஆய்வுகள்

அன்பார்ந்த தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! பாரதி ஆய்வாளர்களே! உங்களுக்கெல்லாம் முதற்கண் என் வணக்கங்களைச் செலுத்திக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் நடைபெறுகின்ற பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவை ஆற்ற என்னை அழைத்துள்ளீர்கள். மிக்க நன்றி.

நான் கடந்த பல ஆண்டுகளாகப் பாரதி தேடல் முயற்சி களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றவன் என்ற காரணத் தால், இங்கே பேச அழைத்துள்ளீர்கள். நான் ஒரு பாரதி பக்தன்.

'கடலணை கட்ட இராமன் முற்பட்டபோது அணிலும் உதவியதுபோல' பாரதி இலக்கியப் பணிகள் ஆக்க பூர்வமான விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடனே நான் இப் பணியில் ஈடுபட்டேன். அவ்வளவுதான்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்றைய தினம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள் **பாரதி ஆய்வுகள்** என்பதுபற்றி யாகும்.

பாரதி ஆய்வுகள் கால காலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இனியும் தொடர்ந்து நடைபெறும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.

நடந்து முடிந்துபோன ஆய்வுகள்பற்றி நான் பேசி, உங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. 'காலம் பண விலை யுடையது.'

காலத்தின் அருமை கருதி, ஆய்வுகளில் நேரும் சிக்கல்களையும், நான் கண்டறிந்த உண்மைகளையும் சொல்லி, இனி நாம் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் பற்றியும் சுருக்கமாகச் சொல்லிவிடவே விரும்புகின்றேன்.

சமீப காலங்களில் நான் அறிந்த வரை பாரதி ஆய்வுகள் மிக விரிந்த - பரந்த அளவில் நடைபெற்று வருகின்றன. ஆனால், ஆழமான ஆய்வுகள் - ஆரோக்கிய ரீதியிலான ஆய்வுகள் - ஓரளவே மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்பதை நான் வருத்தமுடன் தெரிவிக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

மற்றும், நடந்து முடிந்துள்ள பாரதி ஆய்வுகளில் நுண்ணாய்வும், மீளாய்வும் செய்யப்பட வேண்டிய செய்திகள் பல உள்ளன.

ஆய்வாளர்கள் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி ஆய்வு செய்ய முற்படுகின்றபோது, இயன்ற வரை எல்லாச் செய்திகளையும் திரட்ட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிப் பிற நூல்களில் கண்டுள்ள செய்திகளை எடுத்தாள்வதிலும் எச்சரிக்கை யுடன் செயல்பட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செய்யவேண்டிய பணி ஆய்வுப் பணி.

ஆய்வுப் பணிகளில் உள்ள சிரமங்கள் பற்பல வாகும். அவற்றைச் சமாளித்து உண்மையை உலகிற்குக் காட்டுவது எப்படி?

பாரதியின் வாக்கையே — நான் வேதமாகக் கருதும் வசனங்களையே — இங்குக் காட்ட விரும்புகின்றேன்.

அம் மகாகவி சொல்வார் ''நம்பினார் கெடுவதில்லை'' என்று.

தொடர்ந்து அம் மகாகவி தெளிவுபடுத்துவார், இப்படி:

> ''நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; பலர் துணை செய்யமாட்டார்கள். ஆனால், நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால், காலக் கிரமத்தில் வெளி யுதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை. எத்தனை இடையூறுகள் எவ்வளவு பெரிதாக வந்தபோதிலும், எடுத்த காரியத்தை ஒரே உறுதியாக நடத்திக்கொண்டு போவதே ஆரிய லக்ஷணம். அவ்வாறு செய்யக்கூடியவனே மனிதரில் சிறந்தவன்.
>
> நம்பிக்கை யுண்டானால் வெற்றி யுண்டு.
>
> அந்த நம்பிக்கையின் முக்கிய லக்ஷணம் என்ன வென்றால், விடா முயற்சி.''

[**பாரதியார் கட்டுரைகள்:** [பா.பி. *1940*] பக். *39; 42*]

இதை ஆய்வுலகத்திற்குப் பாரதி வழங்கிய கொடை யெனவே நான் கருதுகிறேன்; கொள்கிறேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த வசனப் பகுதியின் ஒவ்வொரு வரியிலும் பொதிந்துள்ள உண்மையை நான் மேற்கொண்ட பாரதிப் பணிகளின்போது அனுபவிக்கவே செய்தேன்.

முதலில் என் சொந்தப் பாங்கான அனுபவங்களை உங்களிடையே பகிர்ந்து கொள்கிறேன்.

பாரதி நூற்றாண்டையொட்டி ஏதேனும் புதிய வழியில் நூலொன்றை வெளியிடுவதென்று தீர்மானித்தேன். நவீன ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு நூல்களை விவரிக்கும் நூல் விவரணத் தொகுதிகள் தேவை என்பதைக் கருதி, பாரதியாரைப் பற்றி நூல் விவரக் கோவையை வெளியிடுவது என்றும் முடிவெடுத்தேன்.

முடிவு எடுப்பது சுலபமாக இருந்தது. ஆனால், செயலில் இறங்கியபோதுதான் அதனுடைய தன்மை எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியவந்தது.

பாரதியைப் பற்றி நான் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், பாரதியின் இளவலும், பாரதி பிரசுராலய நிறுவனர்களில் ஒருவருமான என் ஞானாசிரியர் திரு. **சி. விசுவநாத ஐயரின்** ஆசியைக் கொண்டே தொடங்குவது வழக்கம். அதுபோல், இந்த நூல் முயற்சியைப்பற்றி அவரிடம் நேரில் தெரிவித்தபோது, ''இது முதல் முயற்சி. வெற்றிகரமாக முடிக்க வேண்டும்; நான் என்னிடம் உள்ளவற்றைத் தருகிறேன்" என்று என்னை உற்சாகப்படுத்தினார்; தம்மிடமிருந்த அரிய ஆவணங்களையும் கொடுத்து உதவினார்.

வேறு சில நண்பர்களுக்கு இந்த நூல் வெளியீட்டில் அவ்வளவாக நம்பிக்கை பிறக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பாரதி நூல்களுக்கு விலைப்பட்டியல் தயாரிக்கப் போகிறார்' என்று என்னையும் நான் மேற்கொண்ட நூல் பணி குறித்தும் கேலி பேசியவர்களும் உண்டு. 'வெறும் புத்தகப் பட்டியலைப் போட்டால் விலை ஆகுமா?' என்று கேள்வியை எழுப்பி, என் முயற்சியில் பின்னடையச் செய்தவர்களையும் என்னால் மறக்க முடியாது.

'நூலாக வெளியிடும் அளவுக்குப் பாரதி நூல்கள் வெளிவந்துள்ளனவா?' என்று வேறு சிலர் தங்கள் சந்தேகத்தை என்னிடமே கேட்டார்கள்.

இதற்கெல்லாம் மேலாக, 'பாரதி நூல் பட்டியல் என்றால், பல பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள விலைப் பட்டியல்களை வாங்கி, அதில் கண்டுள்ள பாரதி நூல் களுக்குப் பட்டியல் தரப் போகின்றீர்களா? இதென்ன, தேவையான காரியந்தானா?' என்று கருத்துத் தெரிவித்த நண்பர்களும் உண்டு.

ஆனால், வேறு சில உண்மையான நண்பர்களோ "எடுத்த காரியத்தை விடவேண்டாம்; நாங்கள் ஒத்துழைப்புத் தருகிறோம்" என்றனர்.

பாரதி சொன்னதுபோல், என்னுடைய பணியைப் பலர் ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளவில்லை; கேலியும் பேசினர்.

வேறு சில நண்பர்கள் - பாரதியைப் பற்றி என்னிடம் தகவல் பெற்றவர்கள் — நான் இது விஷயமாக அணுகிய போது உதவி தருவதாகச் சொல்லி, பின்னால் தமக்கு அவகாசம் இல்லை என்று கடிதம் போட்டவர்களையும் என்னால் மறக்க முடியாது. 'பலர் துணை செய்ய மாட்டார்கள்' என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் நடந்து கொண்டார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது சமயம், என் பாரதிப் பணிகளை மட்டுமே பாராட்டிக் **கவியரசு கண்ணதாசன்** அவர்கள் **குமுதம்** வார இதழில் எழுதியிருந்தார். அதனால், நண்பர்கள் பலர் எனக்கு எதிர்பாராத விதமாக வாய்த்தனர்.

மற்றும், தஞ்சை வழக்கறிஞர்-சேக்கிழார் அடிப்பொடி திரு. **டி. என். இராமச்சந்திரன்** அவர்கள் மானாமதுரை சென்றிருந்தார். என் முயற்சி பற்றி திரு. **சி. விசுவநாத ஐயர்** அவர்களின் வழி அறிந்து, எனக்கு முன்பின் அறிமுகமோ-பரிச்சயமோ இல்லாத திரு. டி. என். ஆர். உதவ முன் வந்தார். புதுக்கோட்டை நண்பர் திரு. **பி. கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் தம்முடைய நூலகத்தைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவினார்.

நான் சற்றும் எதிர்பாராத வகையில் வெளி உதவிகள் தாமே என்னைத் தேடி வந்தன.

இவ்விதமாக, பல ஊர்களில் தெரிந்தவர்களையும், நூலகங்களையும் அணுகி, இயன்ற வரை செய்திகளைத் திரட்டி,படாதனபட்டு, ஒருவழியாக, **வானவில் பிரசுரத்தின்** சார்பில் 1981 ஏப்ரலில் **மகாகவி பாரதி : நூற்பெயர்க் கோவை** என்ற பெயரில் முதல் தொகுதியை வெளியிட்டேன். இதில் 1908 முதல் 1980 வரைக்கும் பிரசுரமான நூல்கள் சேர்க்கப் பட்டன.

நூல் தொகுதி வெளியானவுடன், எனக்குக் கிடைத்த முதல் பாராட்டு பாரதியின் இளவல் அவர்களுடையது தான்.

அப் பெரியவர் தம் பாராட்டுரையில், என்னுடைய நூல் முயற்சியை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்; என்னையும் வாழ்த்தினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"**மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை** ஆசிரியரின் முயற்சிகளின் முகுடம். ஆங்கிலத்தில் கூறப்போனால், 'Magnum opus'. இந் நூலுக்கிணை இந் நூலேயாகும். இதுவரை தமிழ் இலக்கிய ஆய்வுத் துறையில் இத்தகைய நூலொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்று வியக்கத்தக்க முறையில் தயாரிக்கப்பட்டு, தனித்தன்மை வாய்ந்ததாக இலங்குகின்றது...

1908இலிருந்து 1980 வரை வெளிவந்துள்ள (1) பாரதி ஜீவிய காலத்திலும், அதன் பிறகும் வெளியான பாரதி நூல்கள் (2) பாரதி நூல்களைச் சார்ந்த குறிப்புகள், அறிக்கைகள், விமர்சனங்கள் இவை அடங்கிய 371 நூல்களின் உள்ளடக்கம், மதிப்பீடு, வெளியீட்டு வரிசைப் பட்டியல் போன்ற எண்ணிறந்த அம்சங்கள் அலங்கரிக்கின்ற இம் மாபெரும் ஆய்வு நூலை என்னென்று அழைப்பது? **பாரதி நூற் கலைக் களஞ்சியம்** என்பதா, வேறு, **எற் கொண்டிதன் பெருமை இசைப்ப மென்றுரை கடந்தேன்.**"

இது பாராட்டுரையின் ஒரு பகுதி.

அடுத்த பாராட்டு **டாக்டர் கைலாசபதி** அவர்களுடையது. எனக்குத் தனிப்பட்ட முறையில் இலங்கையிலிருந்து கடிதம் எழுதியதோடும் நில்லாமல் **மல்லிகை** இதழில் நூல் பற்றிய விமர்சனக் கட்டுரையையும் எழுதி இருந்தார். அதில்,

"பாரதி பற்றிய ஆய்வுகள் எப்படி எப்படி யெல்லாம் நடைபெற்று வந்திருக்கின்றன என்பதை ஒருவாறு இனங்கண்டு கொள்வதற்கு இப் பட்டியல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறுதுணைபுரியும். ஆதாரபூர்வமான செய்திகளைக் கொண்டு வெளிவந்துள்ள முதலாவது **பாரதி நூற் பெயர்க் கோவை** இதுவே. இதன் ஆக்கபூர்வமான விளைவுகள் நிச்சயம் எதிர் காலத்திலே தெரிய வரும்.

"கடந்த ஏழு தஸாப்தங்களுக்கு மேலாக பாரதி பற்றி வெளிவந்த நூல்கள் அனைத்தையும் தேடிக் கண்டு விவரம் திரட்டி, முறைப்படுத்தி வெளியிடுதல் சாதாரண காரியமன்று. ஆராய்ச்சியைத் தொழிலாய் கொள்பவர்களுக்கே சிரமமான பணியா யிருக்கும். ஆகவே, ஆசை பற்றி இப் பணியை மேற்கொண்டு அநேகமாக எல்லா நூல்களையும் குறிப்பிட்டிருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர்"

[**மல்லிகை :** ஆகஸ்ட் 1981 இதழ் - பக். 50-51]

என்று அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதை யெல்லாம் விட, என் மனத்தைத் தொட்ட பாராட்டு ஒன்று உண்டு என்றால், அது **துக்ளக்** இதழ் பாராட்டைச் சொல்வேன்.

காரணம், 'துக்ளக்' இதழ் அரசியல் தொடர்புடைய இதழ் என்பதை நீங்கள் அறிவீர்கள். இலக்கியத் தொடர்புடைய செய்திகளும் அதில் வரலாம். ஆனால், நூல் விமர்சனம் என்பது அதன் சரித்திரத்தில் கிடையாது. அப்படி நூல் விமர்சனம் வெளிவந்தது என்றால், அது நான் சம்பந்தப்பட்ட பாரதி நூல்களுக்கு மட்டுமே ஆகும்.

துக்ளக் ஆசிரியர் **சோ** அவர்கள் வெளியே தம்மைப் பாரதி பக்தன் என்று காட்டிக் கொள்ளாத உண்மையான பாரதி பக்தர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி பக்தர் ஆனதால், நான் புதுமையான வழியில் பிரசுரித்த நூலை அவர் பாராட்டினார்.

அதோடு மட்டும் அவர் தம் பாராட்டுகளைச் சுருக்கிக் கொள்ளாமல், நான் என் பதிப்புப் பணிகளுக்காகத் தேடி வரும் இதழ்களுக்கான பட்டியலையும் தந்து, என் முகவரியையும் கொடுத்து, என்னுடன் தொடர்பு கொள்ளும்படிக்கும் செய்தி வெளியிடச் செய்திருந்தார்.

'வெளியுதவிகள்' என்று பாரதி எழுதிய வாசகத்தின் உண்மைப் பொருள் அன்றுதான் எனக்கு விளங்கியது.

ஆரம்ப காலங்களில், இடையூறுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, நான் மேற்கொண்ட காரியத்தைப் பாதியிலே நிறுத்தி விட்டிருந்தால் முன்பே கேலி பேசியவர்களுக்கு இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால், நல்ல வேளையாக, அந்தச் சமயத்தில் என்னோடு தொடர்பு கொண்ட நண்பர்களின் இனிய நல் ஒத்துழைப்பினால் - பாரதி வணங்கிய அன்னை பராசக்தியின் அருளால் - நான் எடுத்துக் கொண்ட பணியை முடித்தேன்.

'நூலில் குறைபாடுகள், விடுபாடுகள் - இல்லையா?' என்று கேட்கலாம். 'கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி' இருந்த நிலையில் - எந்தவொரு ஸ்தாபனத்தின் ஒத்துழைப்போ, நிதி உதவியோ இன்றித் தனிப்பட்ட முறையில் என்னை நானே நம்பிச் செயலில் இறங்கினேனே அதனால் அதில் சில குறைபாடுகள் நேர்ந்தன என்பது உண்மைதான். பின்னால் அவற்றை நானே கண்டு பிடித்துத் திருத்தியும் கொண்டேன்.

இதில் நான் வெட்கப்படவோ, வேதனைப்படவோ ஏதுவும் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவறான தகவல்களைத் தந்து, திருத்திக் கொள்ளாமதி கௌரவப் பிரச்சினையாகக் கருதி, இருந்துவிடுவதுதான் தவறு. தவறு என்று தெரிந்த பிறகும் அதை நிலைநாட்டவும், நியாயப்படுத்தவும் முற்படுவதுதான் மாபெரும் தவறு. தவறை உணர்ந்து, அதைத் திருத்திக் கொள்வதில் — மன்னிப்புக் கேட்பதில் தவறே கிடையாது.

ஆய்வுகளில் இந்த மாதிரி குறைகள் நேர வாய்ப்பு உண்டு. தெரிந்தபின் அதைச் சரி செய்து கொள்வதே நேர்மையான ஆய்வாளனின் பண்பு.

இங்கே, தெரியாமல் தவறு செய்தபின், தான் செய்தது தவறு என்று உணர்ந்த நிலையில் பாரதீய உலகிற்கு உண்மையை வழங்கிய ஒரு செய்தியைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

பாரதி பாடாதன வெல்லாம் பாரதி பாடியனவாகக் கொள்ளப்படும் இந்த நாளில், நான் கண்டறிந்த உண்மையைச் சொல்கிறேன், கேளுங்கள்.

சொல்லையும், பொருளையும் வைத்துக்கொண்டு, எடை போட்டு, உரசிப் பார்த்து 'இது பாரதி பாடியது; பாரதி பாடாதது' என்று முடிவு எடுக்கிறவர்களைப் பற்றி நான் இங்கே பேசப் புகவில்லை.

எதைப்பற்றியும் கவலைப்படாமல், சொல்பவரின் செல்வாக்கை வைத்து 'சொல்வது இன்னார்; எனவே, உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது' என்று வாதாடு கிறவர்களைப் பற்றியும் இங்கே பேச்சில்லை.

பாரதி நூற்றாண்டு நெருங்கின சமயத்தில் ஒரு சர்ச்சை கிளம்பியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிலம்புச் செல்வர் **ம. பொ. சி.** அவர்கள் தம்முடைய **செங்கோல்** இதழில் **விடுதலைப் போரில் தமிழகம்** என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை எழுதி வந்தார்.

அப்போது, அவர் தம் கட்டுரையில், அதாவது 23-8-1981 ஆம் தேதியிட்ட **சிறைச்சாலைகளில் பேயாட்சி** என்ற தலைப்பிலான கட்டுரையில், 'சுப்பிரமணிய பாரதியாரின் பெயரால் 3-1-32 "சுதந்திரச் சங்கு" இதழிலே "சத்தியப் போர்" என்னும் தலைப்பிட்டிருந்த ஒரு பாட்'லைப் பிரசுரித்திருந்தார்.

பந்தமுற் றெத்தனை நாள்—இந்தப்
பாரினில் ஈடழிதல்

என்று தொடங்கும் பாடலைப் பிரசுரம் செய்து விட்டு,

"இந்தப் பாடல் அதுவரையில் வெளியாகியிருந்த பாரதியார் பாடல் தொகுப்பு நூலிலே இடம் பெறாததாகும். அதற்குப் பின்னும் இது வரை எந்தப் பதிப்பிலும் இந்தப் பாடல் காணப்படவில்லை. இது பற்றிக் குறிப்பு எதையும் 'சுதந்திரச் சங்கு' தரவில்லை. ஒருகால், ஒத்துழையாமை இயக்கத்தின் போது பாரதியார் இதனைப் புனைந்திருக்கலாம்"

[**செங்கோல்:** 23-8-81—பக். 4]

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது, **சத்தியப் போர்** பாடல் பாரதியார் பாடல் தொகுப்பில் இடம் பெறாத பாடல் என்பதாகவும், ஒத்துழையாமை இயக்கத்தின்போது பாரதியார் மேற் கண்ட பாடலைப் புனைந்திருக்கலாமோ என்பதாகவும் திரு. ம.பொ.சி. அவர்கள் தம் கருத்தைப் புலப்படுத்தி விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலின் உண்மையான தலைப்பு **புடை பெயர் பாட்டு** என்பதாகும்; **சத்தியப் போர்** என்பதாக இல்லை.

சத்தியப் போர் பாடல் பாரதி பாடல்தானா என்பதிலே திரு. ம.பொ.சி. அவர்களுக்குச் சிறிது ஐயப்பாடு தோன்றியதால், தக்கவர்களுடைய அபிப்பிராயத்தை அறிய அவர் முயன்றார்.

இதை யொட்டி வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. ஓரிருவரைத் தவிர்த்து விவாதத்தில் பங்கு கொண்டோர் பலரும் **சத்தியப் போர்** என்று மாறுதலடைந்த **புடை பெயர் பாட்டை**ப் பாரதியார் பாடியதுதான் என்று முடிவே கட்டி விட்டனர்.

பாரதியார் பாடியதுதான் என்று அவர்கள் முடிவு கட்டவும், நிலைநாட்டவும் அவர்கள் காட்டிய சான்றுகளை இங்கே பேசினால், அதுவே நீண்ட உரையாகிவிடும்.

எனவே, அதை விடுத்து நான் உண்மையைக் கண்டறிய மேற்கொண்ட முயற்சிகளுக்கு முன்னே, பாடல் பற்றிய ஓர் அடிப்படைச் செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

முதன்முதலாகப் 'பந்தமுற் றெத்தனை நாள்' என்ற தொடக்கத்து வரியைக் கொண்ட சத்தியப் போராம் **புடை பெயர் பாட்டு** பாரதி ஆச்ரமப் பதிப்பின் **சுதேச கீதங்கள்**—இரண்டாம் பாகத்தில் 134-135 ஆம் பக்கங்களில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

பின்னிட்டு, பாரதியார் பாடல்கள் நூலைப் பதிப்பித்த பாரதி பிரசுராலயத்தாரின் 1937ஆம் வருடப் பதிப்பிலும் அச்சாகிவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நிலையில், பாரதி பிரசுராலயத்தார் 'புடை பெயர் பாட்டு' [சத்தியப் போர்] பாரதி பாடாதது எனக் கண்டனர்.

100889

தாம் கண்டறிந்த அளவில், பாரதி பாடாத பாட்டு பாரதி பெயரால் உலா வருவதை அப் பாடலைப் பதிப்பித்த பாரதி பிரசுராலயத்தார் விரும்பவில்லை.

எனவே, நூல் முழுதும் அச்சான நிலையில், உண்மையை அறிந்து கொண்ட காரணத்தால், நூலின் அனுபந்தப் பகுதியின் குறிப்புரையில்,

> "இது 'சுதேச கீதங்கள்' இரண்டாம் பாகத்திலுள்ளது. இப் பதிப்பிலே புதிதாகச் சேர்க்கப்பட்டது. இது ஸ்ரீ பாரதியாரால் பாடியதல்ல என்று பின்னால் தெரியவந்தது"

[**பாரதியார் காவியங்கள்**: [பா.பி. 1937] பக். 673]

என்று தெளிவாகக் குறிப்பிட்டு விட்டனர்.

தாங்கள் செய்த தவறைப் பாரதி பிரசுராலயத்தார் நிலைநாட்ட முற்படாமல், தவறைக் களைய வழியும் செய்து விட்டனர்.

ஒருகணம் எண்ணிப் பாருங்கள். இந்தக் குறிப்பை மட்டும் பாரதி பிரசுராலயத்தார் தராமல் இருந்திருந்தால், பின்னிட்டுள்ள கவிதைத் தொகுதிகளில் எல்லாம் இந்தப் **புடை பெயர் பாட்டு** நிரந்தரமாக இடம் பெற்றிருக்கும் அன்றோ? அப்படி இடம் பெற்றிருந்தால், அதன் விளைவு விபரீதமாக அல்லவா முடிந்திருக்கும்?

தாங்கள் செய்த பிழையைத் திருத்திக்கொண்ட பாரதி பிரசுராலயத்தாருக்குப் பாரதி ஆய்வுலகம் கடமைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டிருக்கிறது. அஸ்திவாரமே ஆட்டங் கண்டு விடுமானால், அதன்மேல் எழுப்பப்படும் கட்டடத்தின் கதியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

'புடை பெயர் பாட்டு'ப் பிரச்சினையில் பாரதியின் தம்பியும் 'வலிய' இழுக்கப்பட்டார். விளக்கம் என்று கேட்கப் போக, அவரும் பதில் எழுத, அதுவும் 'செங்கோல்' இதழில் பிரசுரமாகி, பிரச்சினையில் சூடு பிடித்தது.

இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஓய்ந்தபின், நான் மானாமதுரை சென்றிருந்தேன். மானாமதுரையில் தானே பாரதியின் தம்பி வாழ்ந்து வந்தார்.

நான் மீண்டும் 'புடை பெயர் பாட்டு'ப் பிரச்னையைப் பற்றி அவரிடம் பிரஸ்தாபித்தேன்.

அதனைப் பற்றிய செய்தியை திரு. சி. விசுவநாதர் தெரிவித்தபோது, ''எனக்குச் சரியாக நினைவில் இல்லை. ஆண்டுகள் பலவும் கடந்து விட்டன. நானாக இதை ஊகத்தின் அடிப்படையில் செய்யவில்லை. தகுந்த காரணத்தை வைத்துத்தான் பாடல் நீக்கப்பட்டது. அதற்காக யார் என்னை எது சொன்னாலும் பரவாயில்லை" என்று பழைய கால சம்பவத்தை நினைவுகூர்வதில் உள்ள சிரமங்களை என்னிடம் மனந் திறந்து சொன்னார்.

அப்படி சொன்னதோடும் நில்லாமல் அவர் என்னிடம் "உங்கள் தேடல் முயற்சியில் இப்பாடல் பற்றிய உண்மைச் செய்தி தென்பட்டால், அதையும் தெரிவியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

"அந்தக் காலப் பத்திரிகைகளில் இது பற்றிய செய்தி வந்திருக்குமா? இல்லை, யாரேனும் எழுதிய பாடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் கையெழுத்துப் பிரதிகளுடன் சேர்ந்திருந்து பாடல் அச்சாகி இருக்குமா?" என்றெல்லாம் அவரைக் கேட்டேன்.

"பாடல் மறுபதிப்பு நிலையில் அச்சானதால் இது பற்றிய முழு தகவல்களையும் என்னால் இப்போதைக்குத் தெரிவிக்க முடியவில்லை. எதற்கும் பழம் பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள். தகவல் கிடைக்கலாம். அப்படி செய்வது பாரதிக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்" என்று சொல்லி முடித்தார்.

அன்றைய நாள்தொட்டு, பாடலின் உண்மைத் தன்மையை அறியத் தீவிரமாக முனைந்தேன்.

ஆண்டுகள் பல உருண்டோடின.

பழம் பத்திரிகைகள் என்ன அவ்வளவு எளிதில் கிட்டிவிடுமா, என்ன? ஒருவேளை, சில பத்திரிகைகள் கிடைக்கலாம். தப்பித் தவறி கிடைத்தாலும், நாம் தேடுகிற பகுதி அதில் இருக்கவேண்டுமே!

பத்திரிகையின் பெயரோ — வெளிவந்த ஆண்டோ — தெரியாத நிலையில், 'எதைத் தேடுவது? எப்படித் தேடுவது?' என்கிற மலைப்பு எனக்கு ஏற்படத்தான் செய்தது. என்றாலும் நான் நம்பிக்கையை இழக்க வில்லை; என் தேடல் முயற்சியையும் கைவிடவில்லை.

பாரதியின் இறுதிக்காலத்தில், செட்டி நாட்டு அறிஞர் மக்கள்தாம் அவரிடம் மிகுந்த நேசம் காட்டினர்; நூல் வெளியீட்டுக்கு ஆதரவும் தந்தனர்.

பாடல் நூல் அச்சான காலப் பகுதி 1922 ஆம் ஆண்டு என்பதால் அந்தக் காலப் பத்திரிகைகளைப் பார்வை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிட்டால், ஏதேனும் செய்தி கிடைக்காமலா போகும் என்று எண்ணினேன்.

நவசக்தி, **குமரன்** போன்ற பத்திரிகைகளைப் பார்வையிட்டேன்; பலன் இல்லை.

பாரதிக்கும், காரைக்குடி **தன வைசிய ஊழியன்** பத்திரிகைக்கும் தொடர்பு உண்டு. பாரதி எழுதி வைத்திருந்த குறிப்பொன்றில் நான் இதைக் காண நேர்ந்தது.

தன வைசிய ஊழியன் இதழ்களைப் பார்வையிடும் முயற்சியில் ஈடுபட்டேன். சில இதழ்கள் பார்வைக்குக் கிடைத்தும் தேடிய பகுதி, அவற்றில் இல்லை. இதழ்கள் தொடர்ச்சியாகக் கிடைக்க வழியில்லாத நிலையில், என் போன்றவர்களால் 'கோட்டையூர் செட்டியார்' என்று அழைக்கப்பெறும் திரு. **ரோஜா முத்தையா செட்டியார்** அவர்களிடம் **தன வைசிய ஊழியன்** பத்திரிகையைத் தொடர்ச்சியாகப் பார்க்க இயலுமா? என்று கேட்டதற்கு, அவரும் இரு தொகுதிகளைத் தந்தார்.

அப்போதும் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், நான் மனச்சோர்வு கொள்ளவில்லை.

ஓராண்டிற்கு முன்பு கோட்டையூர் சென்றிருந்தேன். அப்போது **தன வைசிய ஊழியன்** இதழ் தொகுதிகளைக் கேட்டுப் பெற்று, பக்கம் பக்கமாக — வரி வரியாக — நிதானித்துப் பார்வையிட்டதில், சுமார் பத்து ஆண்டுகளாக நான் தேடிக் கொண்டிருந்த செய்திக்கு ஆதாரம் கிடைத்துவிட்டது; அது நம்பகமான ஆதாரமாகவும் அமைந்துவிட்டது. என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரோஜா முத்தையா செட்டியார் நூலகத்தில் நான் பார்த்த நம்பகமான ஆதாரம் பாதுகாப்பாக இருக்கின்றது. அவருக்கு இந்த நேரத்தில் பாரதீய உலகின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பது என் கடமை.

சரி, நான் கண்டதைச் சொல்லி விடுகிறேன்.

தன வைசிய ஊழியன்—மலர் 2—இதழ் 47இல்-அதாவது, 28—7—1922ஆம் தேதியிட்ட இதழின் 8ஆம் பக்கத்தில் இவ்வாறான செய்தி உள்ளது:

ஸ்ரீமான் சி. சு. பாரதியின்
சுதேச கீதங்கள் 2-ம் பாகம்
ஒரு திருத்தம்

காலஞ் சென்ற கவி சிரேஷ்டர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரின் பத்னி ஸ்ரீமதி செல்லம்மா எழுதுகிறார் :—

"என்னால் வெளியிடப்பட்டுள்ள பாரதியார் சுதேச கீதங்கள் 2-ம் பாகம் 134-135ஆம் பக்கங்களில் உள்ள 'புடை பெயர் பாட்டு' என்ற ஐந்து பாடல்கள் எனது கணவரின் பாடல்கள் அல்ல. அவை சாத்தூர் ஸ்ரீமான் ப. ரெ. விசுவநாத பாரதியாரின் பாடல்களாகும். 'சுதேச கீதங்'களுடன் அவற்றைத் தவறாகச் சேர்க்க நேர்ந்தமைக்காக நான் பெரிதும் வருந்துகிறேன். இப்பொழுது கையிருப்பிலுள்ள சற்றேறக்குறைய 2000 பிரதிகளிலும் அவைகளை ரத்துச் செய்திருக்கிறேன். அடுத்த பதிப்பில் அவை நீக்கி விடப்படும்."

அன்பர்களே! பாரதியின் காரியங்கள் யாவினுக்கும் மனங் கோணாமல் கைகொடுத்த செல்லம்மா பாரதியின் அறிவிப்புச் செய்தி "புடை பெயர் பாட்டு" சர்ச்சைக்கு

பு.—ம

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்றுப்புள்ளி வைத்துவிட்டது; பாரதி பாடாத பாட்டு என்பதும் தெளிவாகிவிட்டது.

இதன் பின்பும், அந்தப் பாடல் - புடைபெயர் பாட்டு - பாரதி பாடியது எனக் கொள்வதில் பொருள் இல்லை.

தம் கணவருக்கு வலியப் புகழ் சேர்க்க விரும்பாத, தப்பித் தவறியும் மாசு நேர்ந்துவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்த செல்லம்மா பாரதியின் பண்புமிக்க — உண்மைத் தன்மையைப் பாரதீய உலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமை காரைக்குடி **தன வைசிய ஊழிய**னைச் சார்ந்தது என்பதை நினைக்க நினைக்க நம் உள்ளம் நன்றியால் நிறைகின்றது.

'இது என்னிடம் பாரதி தந்த பாடல் — இது என் நண்பர் பாரதி பாடக் கேட்டு எழுதிக்கொண்ட பாடல்' என்றெல்லாம் ஏராளமான செய்திகள் உலவி வர, விவரம் தெரியாமல் பிறர் பாட்டைப் பாரதி பாடல் என்று அச்சிட்டு விட்டோமே என்று தவித்த, நெஞ்சம் நடுங்கிய செல்லம்மா பாரதியை இன்று நினைத்தாலும் நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகிறது; அவரும் உண்மையை அறிந்த அளவில் திருத்தமாக வெளியிட, அதை அலட்சியப்படுத்தாமல் பிரசுரம் செய்த 'தன வைசிய ஊழிய'னுக்குப் பாரதீய ஆய்வுலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

இவ்வளவு சொல்வானேன்?

பாரதியே முயன்று நண்பர்களின் தூண்டுதலின்பேரில் 1908 ஜனவரியிலே **ஸ்வதேச கீதங்கள்** [முதல் பாகம்] என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார். இத் தொகுதியுள் **என் மகன்** என்றொரு பாடலும் பதிப்பிக்கப் பெற்று இருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் மகன் என்னும் பாடல் **மதுரை முத்துக் குமாரப் பிள்ளை** அவர்களால் இயற்றப்பட்டதாகும். அவருடைய பாடலைப் பாரதி பெரிதும் விரும்பியே தம் பாடல் தொகுதியில் சேர்த்துக் கொண்டார். எப்படி? "அவரது அனுமதியின் பேரில் பிரசுரிக்கப்பட்டது" என்ற குறிப்புடனேதான் பாரதி அந்தப் பாடலைப் பதிப்பித்தார்.

இந்தக் குறிப்பு மட்டும் நூலில் தரப் பெறாமல் இருந்திருந்தால், இலக்கிய உலகில் நடக்கும் சர்ச்சைகள் எத்தனை எத்தனையோ? யாரறிவார்!

நல்ல வேளையாக, பாரதி சற்று தீர்க்கதரிசனமாகப் பின் விளைவுகளை உணர்ந்து குறிப்புத் தந்து விட்டார் போலும்!

இவை எல்லாம் கடந்த பல ஆண்டுகளில் நான் பாரதி தேடலில் கண்டறிந்த உண்மைகளாகும்.

அடுத்து, இன்னும் சில தேடல் முயற்சிகள் உண்டு.

அவற்றையும் சற்று ஆழமாகச் சிந்தனை செய்வது பாரதீய ஆய்வுலகின் பரப்பை விரிவாக்க வழிவகை செய்யும் என நான் நம்புகிறேன்.

பாரதி நூற்றாண்டின்போது பற்பல பாரதி அன்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் பாரதி கைங்கரியத்தில் ஈடுபட்டனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் 'உலகம் சுற்றிய தமிழர்' என்று அழைக்கப்பெறும் **குமரி மலர்** திரு, **ஏ.கே. செட்டியார்** ஆவார்.

அவர் தம்முடைய 'குமரி மல'ரில் பாரதி பற்றிய பல பயன் தரும் செய்திகளையும் கட்டுரைகளையும் நிறையவே வெளியிட்டு வந்தார்.

ஒரு இதழில் காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்திற்குப் பாரதி 9—11—1919-இல் கடையத்தி லிருந்தும் எழுதிய கடிதத்தை வெளியிட்டு இருந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடிதம் கூறும் உண்மைகள்


ஓம் சக்தி

கடையம்
9. ஆகஸ்ட். 1919

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கத்தார் வேண்டுகோளின்படி பாரதி பாட்டுக்கள் எழுதி யனுப்பியதைத் தெரிவிக்கும் கடிதம் அது.

அந்தக் கடிதத்தில்,

> "...இன்று இக் கடிதத்துடன் மேற்படி பாட்டுக்க ளெழுதி யனுப்புகிறேன், இப் பாட்டுக்களும் ஹிந்து மதத்தைப் பற்றி நான் எழுதிக் கொடுத்த துண்டுக் காகிதமும் அச்சானவுடன் எனக்குச் சில பிரதிகள் அனுப்பும்படிக்கும்...வேண்டுகிறேன்"

என்று பாரதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தைப் பிரசுரிக்கும் முன்னர் திரு. செட்டியார் **ஹிந்து மதம்** என்ற தலைப்பில் பல ஆண்டுகளுக்கு முன்னர் சக்தி வை. கோவிந்தன் நடத்திய **சக்தி** இதழில் வெளிப்பட்ட கட்டுரையை மறு பிரசுரம் செய்திருந்தார்.

கட்டுரையின் ஆசிரியராகச் சுப்பிரமணிய சிவாவின் பெயர் குறிக்கப்பட்டிருந்தது.

'குமரி மலர்' செட்டியாரை நான் சந்திக்க நேர்ந்த போது, இது பற்றிப் பேச்சுவாக்கில் குறிப்பிட்டுப் பேசினேன்.

நான் அவரிடம் "பாரதி எழுதிய பாட்டு கடிதத்தில் குறிப்பிட்டபடி அச்சாகி யுள்ளது. காரைக்குடி வைசிய மித்திரன் பிரசில் அச்சிடப்பட்டுள்ளது. அதைப்போலவே, துண்டுக் காகிதத்தில் பாரதி எழுதிக்கொடுத்த கட்டுரையும் அச்சாகி இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். பாரதியின் கடித வாசகங்களை வைத்துப் பார்க்கும்போது, சிவா பெயரால் பிரசுரமாகி யிருக்கும் கட்டுரை பாரதியினுடைய தாக இருக்குமோ என்று பார்க்கவேண்டும்" என்று என் மனதில் தோன்றியதைச் சொன்னேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நீங்கள் சொல்வதும் சரிதான், இதை நானும் கவனிக்கவில்லை. அவசியம் இதைப் பற்றிய உண்மையை அறியவேண்டும்" என்று குறிப்பிட்டார், செட்டியார்.

இச் சம்பாஷணை எனக்கும் செட்டியாருக்கும் நடைபெற்ற தனிப்பட்ட உரையாடல்தான்!

எனக்குப் பதில் சொன்னதோடு செட்டியார் பிரச்சினையை அப்படியே விட்டிருக்கலாம்.

ஆனால், திரு. ஏ. கே. செட்டியாரோ நான் சுட்டிக் காட்டியதைக் 'குமரி மலர்' இதழில் குறிப்பிட்டு, நன்றி தெரிவித்திருந்தார். நான் அவரிடம் சொன்ன செய்தியை அவர் வெளியிடக் காரணம், என்னைப்போல் பிறரும் குழம்பக் கூடாது என்பதால்தான்!

திரு. ஏ. கே. செட்டியார் வெளியிட்ட குறிப்பு விவரமாவது:

> "சில மாதங்களுக்கு முன்னர் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தார் வெளியிட்ட இந்து மதம் பற்றிய துண்டுப் பிரசுரம் ஒன்றைச் "சக்தி" இதழிலிருந்து எடுத்து வெளியிட்டோம். துண்டுப் பிரசுரத்தை எழுதியவர் சுப்பிரமணிய சிவா என்று அதில் கண்டிருந்தது. இக் கடிதத்தைப் பார்க்கும் போது, பாரதியார்தான் அந்தத் துண்டுப் பிரசுரத்தின் ஆசிரியர் என்று தெரிகிறது. இதனை எடுத்துக் காட்டிய சீனி. விசுவநாதன் அவர்களுக்கு நன்றி."
>
> [**குமரி மலர்** : 1982 செப்டம்பர் இதழ்—பக். 64]

அன்பர்களே, காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தை வாழ்த்திப் பாரதி பாடிய பாட்டுக்கள் வைசிய மித்திரன் அச்சகத்தில் அச்சான பிரதி இதோ, இருக்கிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாருங்கள். பாரதியார் எழுதிய கடித நகல் பிரதியையும் கவனியுங்கள்.

எனவே, துண்டுக் காகிதத்தில் பாரதி எழுதிக் கொடுத்த கட்டுரையை—அது மூலப் பிரதியானாலும் சரி, அச்சான பிரதியானாலும் சரி — தேடும் முயற்சியில் நீங்களும் ஈடுபடலாம். வெற்றியும் கிடைக்கலாம்! 'ஆய்வுக் களம்' விரிவடையத் தொடர்ந்து முயற்சி செய்வோமாக!

அடுத்து, இன்னுமொரு சுவையான தேடல் முயற்சி பற்றிக் காண்போம்.

அறிஞர் **வெ. சாமிநாத சர்மா** அவர்களைத் தமிழ் இலக்கிய உலகில் அறியாதார் யாரும் இருக்க முடியாது.

அவர் **நான் கண்ட நால்வர்** என்றவொரு அருமையான வரலாற்று நூலை எழுதி இருக்கிறார்.

சர்மா அவர்கள் பாரதியாருடன் பரிச்சயம் கொண்டவர்; தமக்குத் தெரிந்த உண்மைகளை எழுத்தில் வடிக்கும் பண்பாளர் அவர். கூட்டிக் குறைத்து ஏதையும் அவர் எழுதமாட்டார்.

தம்முடைய நூலில் சர்மா அவர்கள்,

> ''1920ஆம் வருஷம் பாரதியார் சென்னை போந்த காலத்தில், சத்தியாக்கிரக இயக்கமும், கிலாபத் கிளர்ச்சியும் மும்முரமாக இருந்தன.
>
> ''இந்தக் காலத்தில் அரசியல் சம்பந்தமான பொதுக் கூட்டங்கள் பெரும்பாலும் திலகர் கட்டத்திலேயே நடைபெறுவது வழக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இந்தக் கூட்டங்களில் நாட்டுப்பற்றும், தியாக உணர்ச்சியும் மேலிட்டிருக்கும். கூட்டங்கள் மாலையிலேயே நடைபெறும் என்பதைச் சொல்லத் தேவை யில்லை.

"அந்தச் சமயத்தில் உணர்ச்சி யூட்டக்கூடிய தேசீயப் பாடல்கள் பாடப்பெறும். இவற்றுள் பாரதியாரின் தேசீயப் பாடல்தான் அதிகமாக இருக்கும். பாரதியாரே சில சமயங்களில் பாடுவார். ஒரு சமயம் 'அல்லா அல்லா அல்லா' என்ற தொடக்கத்துப் பாடலைப் பாடினார். அஃது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக் கிறது. இன்னொரு சமயம் 'பாரத சமுதாயம் வாழ்க வாழ்கவே' என்று ஆரம்பிக்கும் பாடலைப் பாடினார். அதுவும் என் உள்ளத்தில் உறுதியாக நிலைத் திருக்கிறது"

[**நான் கண்ட நால்வர்** (*1953*)—பக். *227*]

என்று எழுதி யுள்ளார்.

சாமிநாத சர்மா அவர்களின் இந்த வசனங்களை நான் படித்தது முதல் 'இந்தச் செய்தி எந்தப் பத்திரிகையிலாவது பதிவு ஆகி இருக்கக் கூடாதா?' என்று எண்ணி ஆதங்கப்பட்டதுண்டு.

ஆனால், எந்தப் பத்திரிகையில் தேடுவது? என்னால் இயன்ற அளவு 1920ஆம் வருடப் பகுதியில் வெளியான ஒருசில பத்திரிகைகளைப் பார்வை யிட்டேன். இந்தச் செய்திக்கான ஆதாரம் கிடைக்கவில்லை.

என்றாலும், சர்மா அவர்கள் சொல்லிய தகவல் நம்பகமானது என்று என் உள்ளம் நம்பியது. எனவே, தொடர்ந்து தேடல் முயற்சியில் ஈடுபட்டேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம் உருண்டோடியதே தவிர, ஆதாரம் கிடைத்த பாடில்லை.

என் பணிகளை அறிந்த நண்பர்களிடமும் சர்மா தெரிவித்திருக்கின்ற செய்திக்கான ஆதாரத்தைத் தேட வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வந்தேன்.

இந்த நிலையில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பாரதி நூல் பதிப்பிற்கான சில யோசனைகளைப் பெறும் பொருட்டு, நான் மானாமதுரை சென்றிருந்தேன் — என் ஞானாசிரியரைக் காண.

பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது, நான் அவரிடம் 'நான் கண்ட நால்வ'ரில் சாமிநாத சர்மா அவர்கள் குறிப்பிட்டிருந்த தகவலையும் பிரஸ்தாபித்தேன்.

அப்போது என் ஞானாசிரியர் திரு. சி. விசுவநாத ஐயர் "பாரதியே தம் கைப்பட எழுதிய **பாரத ஸமுதாயம்** பாடல் என்னிடம் இருக்கிறது. வ. வெ. சு. ஐயரின் காலப் பகுதியிலான **தேசபக்தன்** பத்திரிகையில் இப் பாடலுக்கும், **அல்லா** பாடலுக்கும் வ. வெ. சு. ஐயர் விளக்கம் எழுதி யிருப்பதாகவும் பாரதியே தம் கைப்பட எழுதியுள்ளார்" என்று தகவல் தந்து, என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கச் செய்து, திக்கு முக்காட வைத்தார்.

பின்பு பாடலுக்கான நகல் பிரதியை எடுத்து என் உபயோகத்திற்காகவும் அவர் அளித்தார்.

பாரதியார் தம் கைப்பட எழுதி யுள்ள குறிப்புக்களை ஆய்வாளர்களான உங்கள் முன் படைக்கின்றேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி தம் கைப்பட எழுதியுள்ள குறிப்பு விவரம் வருமாறு :

> ''**பாரத ஸமுதாயம்**—இதுவும் இதன் பின்னே வரும் **அல்லா** என்ற கீர்த்தனமும் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியால் நேற்று மாலைக் கடற்கரைக் கூட்டத்திலே பாடப்பட்டன. இதைப் பற்றிய மற்ற விவரங்களும், இப் பாட்டுக்களைக் குறித்து அந்த மஹா ஸபையின் முன்னே நம் பத்திராதிபர் ஸ்ரீமான் வ.வெ.சு. அய்யர் தெரிவித்த தேச பக்தி ஜ்வலிதமான விளக்கமும் மற்றோரிடத்தே எழுதப்பட்டிருக்கின்றன.''

இது, சாமிநாத சர்மா அவர்கள் தெரிவித்துள்ள செய்தியிலிருந்து சற்று மாறுபட்டு இருந்தாலும், அவர் தந்த தகவலில் உண்மை இருப்பதைக் காண்கிறோம்.

எனவே வ.வெ.சு. அய்யரின் விளக்கத்திற்காகவும், பாடல்கள் பற்றிய மற்ற விவரங்களுக்காகவும் நாம் **தேசபக்தன்** பத்திரிகையைத் தேடவேண்டும். குறிப்பாக, 1920 ஆம் வருடத்திய இதழ்ப் பிரதிகளைத் தேடிப் பெற்றாலே போதும், புதிய ஒளி கிடைக்கலா மல்லவா?

இங்கே, எனக்குள்ள சில சந்தேகங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அதாவது, **அல்லா** பாடல் பற்றிய செய்தியில் இன்னமும் தெளிவாக அறிய வேண்டியவை நிறையவே உள்ளன.

அல்லா பாடல் பாரதியால் பொட்டல் புதூரில் 20-6-1920 இல் **இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை** பற்றிப் பேசும் போது பாடிய பாடல் என்பதில் நமக்குள் கருத்து வேறுபாடு இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதற்கான ஆதாரமும் பாரதியின் கையெழுத்து வடிவிலேயே துண்டுக் காகிதத்தில் கிடைத்திருக்கின்றது. அதுவும், **சுதேச மித்திரன்** பத்திரிகைக்காக எழுதப்பட்ட கட்டுரைக் காகிதம்.

துண்டுக் காகிதம் தெரிவிக்கும் செய்திதான் என்ன?

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி பொட்டல் புதூரில் தெற்குப் புதுமனைத் தெருவில் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம்.

[ஞாயிற்றுக் கிழமை **20-6-1920**]

— o —

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி பொட்டல் புதூரில் தெற்குப் புதுமனைத் தெருவில் ஒரு மஹமதிய கனவான் அக்ராஸனத்தின் கீழ் —

முதலாவது அரபு பாஷையில் ஒரு உலேமா ஸ்தோத்ரம் அல்லாவைக் குறித்துப் புரிந்தார். ஸபையோர் அனைவரும் இடைக் கிடையே "ஆமீன்" கூறிவந்தோம்."

பாரதியாலேயே **சுதேச மித்திர**னில் தாம் செய்த பிரஸங்கத்தின் சுருக்கம் வெளிப்பட எழுதிய காகிதத்தின் ஒரு பகுதி தெரிவித்த செய்தியைப் பார்த்தோம்.

இதில் நாம் தெளிவு பெறவேண்டியவை எவை? எனப் பார்ப்போம்.

அல்லா பாடலை உள்ளடக்கிய கட்டுரை **சுதேச மித்திரன்** பத்திரிகையில் வெளியாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

சுதேசமித்திரன் 24-6-20

பொட்டல் புதூரிலே (20-6-20) மாலையில் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி ஒரு முஸ்லீம் ஸபையின் முன்னே, ப்ரஸங்கிக்கும் போது பாடிய பாட்டு.

அல்லா

சங்கராபரண ராகம்; திஸ்ர ஏக தாளம்

ஸ்வர வரிசைகளின் மாதிரி பின் வருமாறு:—

பல்லவி

தக்கீ, திக்கீ, ஸஸ்ஸா.

சரணங்கள்

பஸாநிநி, நிநிநிநி, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, ஸஸாஸாஸ—
(தக்கீ, திக்கீ, ஸஸ்ஸா)

பல்லவி

அல்லா, அல்லா, அல்லா!

சரணங்கள்.

(1) பல்லாயிரம் பல்லாயிரங் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலு மோர் எல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்த ஓர் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்ஜோதி (அ)

(2) கல்லாதவ ராயினு முண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாதவ ராயினுந் தவ மில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும்வந் தேத்துமளவில் யம பயங்கெடச் செய்பவன் (அ)

(3) ஏழைகட்குஞ் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர் பிரா
கோழைகட்கும் வீரருக்குங் குறை தவிர்ப்பவன், ஓர் குரு
ஊழி, பூழி, அமரராய்வ் வுலகின் மீதி விளைபுந்தம
வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர் அவன் பெயர் (அ)

கதாரத்னாகரம் இதழில் வெளியான பாடலின் வடிவம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்போது? 24-6-1920ஆம் தேதியிட்ட இதழில்,

இந்தச் செய்தியைக்கூடச் சுதேச மித்திரன் காரியாலயமே நடத்தி வந்த மாதப் பத்திரிகையான **கதா ரத்னாகரம்** இதழில் பிரசுரமான தகவலால்தான் அறிந்து கொள்ள முடிகின்றது.

கதாரத்னாகரம் மாத இதழில் **அல்லா** பாடல் மட்டும் 1920-ஜூலை இதழ்—பக்கம் 77இல் மறுபிரசுரம் ஆகி உள்ளது, ஸ்வர வரிசைகளுடன்.

கதாரத்னாகரம் மறுபிரசுரம் செய்த **அல்லா** பாடலின் முழுவடிவம் இங்கே உள்ளதைப் பாருங்கள்.

'கதாரத்னாகர' இதழை வைத்துப் பார்க்கும்போது **அல்லா** பாட்டில் மூன்று சரணங்கள் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

ஆனால், **இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை** என்னும் கட்டுரையைப் பாரதி பிரசுராலயத்தார் தங்கள் வசன நூலில் பிரசுரித்தபோது, இரண்டு சரணங்களே காணப்படு கின்றன.

'கதாரத்னாகர' இதழில் காணப்பட்ட **'ஏழைகட்குஞ் செல்வர்கட்கும்'** என்றுள்ள மூன்றாம் சரணம் இடம் பெற வில்லை, நூலாக்கம் பெறும்போது.

விடுபாடு எப்படி நேரிட்டது? கண்டறிய வேண்டாமா?

என் சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற்காகப் பாரதி ஆய்வாளர்களில் முன்னோடியான திரு. **பெ. தூரன்** அவர்களின் **பாரதி தமிழ்** நூலைப் பார்வை யிட்டேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

20-ஜூன் 1920

பார்க்க : மூன்றாம் தொகுதி. பகுதி தத்துவம். இக் கட்டுரை ஒரு சொற்பொழிவின் ஸாரமாகும்.

[**பாரதி தமிழ்** : (1953)-பக்.290]

என்ற குறிப்பை மட்டுமே தூரன் தந்து விட்டிருக்கிறார்.

திரு. தூரன் அவர்கள் தந்துள்ள காலக்குறிப்பு பாரதி பொட்டல் புதூரில் செய்த சொற்பொழிவின் தேதியைக் குறிப்பிடுகிறது.

நமக்குத் தெரிய வேண்டிய செய்திகள் **சுதேச மித்திரன்** இதழில் கட்டுரை வெளிப்பட்ட தேதி எது? கட்டுரையினிடையே வெளிப்பட்ட பாடலின் வடிவம் எது? என்பனவே யாகும்.

ஆனால், தூரன் அவர்கள் தந்த குறிப்பால், **சுதேச மித்திரன்** இதழில் வெளிப்பட்ட சொற்பொழிவின் ஸாரமான கட்டுரையின் தேதியை மட்டுமில்லை, கட்டுரையில் இடம்பெற்ற பாடல் வடிவத்தையும் நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை!

ஒருவேளை, அவருக்கே கட்டுரை வெளிப்பட்ட சுதேச மித்திரன் இதழ் கிடைக்கவில்லையோ என நினைக்க வேண்டி வருகின்றது.

இல்லையெனில், பாரதி பிரசுராலயம் பதிப்பித்த கட்டுரைத் தொகுதியான "தத்துவம்" பகுதியைப் பார்க்கும்படி எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது அல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை கட்டுரை வெளிவந்த **சுதேச மித்திரன்** இதழ் திரு. **பெ. தூரன்** அவர்களின் பார்வைக்குக் கிட்டவில்லை என்பதாகவே நான் கருது கின்றேன்.

காரணம், **பாரதி பிரசுராலயம்** பதிப்பித்த **பாரதியார் கட்டுரைகள்** தொகுதியில் விடுபட்ட பகுதிகளை யெல்லாம் கண்டறிந்து, நாம் அரிதின் முயன்று பதிப்பித்தளித்த **பாரதி தமிழ்** நூலில் திரு. பெ. தூரன் அவர்கள் வழங்கி யுள்ளார் என்பதை நாம் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

அவசியங் கருதி, சிலவற்றை மட்டும் பார்ப்போம்!

பாரதியார் கட்டுரைகள் தொகுதியுள் **சமூகம்** என்னும் பகுதியில் **எதிர் ஜாமீன்** அல்லது **மாப்பிள்ளை விலை** என்கிற கட்டுரை இடம் பெற்றுள்ளது.

இக் கட்டுரையின் சில பகுதிகள் ''பாரதி பிரசுராலய''ப் பதிப்பில் காணப்படவில்லை என்பதைக் கண்டறிந்த அளவில் திரு, **தூரன்** அவர்கள் தரும் செய்தி வருமாறு :

எதிர் ஜாமீன் அல்லது **மாப்பிள்ளை விலை**

சுதேச மித்திரன் : 15 ஜூன் 1915

''இது பாரதி நூல்கள், மூன்றாம் தொகுதியில் வந்துள்ளது.

''ஆனால், அநேகமாகப் பாதிக் கட்டுரையாகிய பின் பாகம் அதில் இல்லை. ஆதலால் அப் பகுதியைத் தருவதோடு தொடர்ச்சியை எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு முன் பகுதியின் சுருக்கத்தையும் இங்கே தருகிறோம்.''

[**பாரதி தமிழ்** (1953)—பக். 68]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு தகவல் தந்து, முன் பகுதிச் சுருக்கத்துடன், வெளியாகாத பகுதியையும் அவர் பதிப்பித்துள்ளார்.

காளிதாஸன் என்கிற புனைபெயரில் *10-7-1916*ஆம் தேதியிட்ட **சுதேச மித்திரன்** பத்திரிகையில் பாரதி **சில கவியரசர்** என்னும் தலைப்பிலான கட்டுரை ஒன்றை எழுதினார் என்கிற செய்தியையும் நாம் **பாரதி தமிழ்** நூலால் அறிகிறோம்.

சுதேச மித்திரனில் பிரசுரமான **சில கவியரசர்** என்ற கட்டுரையானது பாரதி பிரசுராலயப் பதிப்பான **பாரதி நூல்கள்** கட்டுரைத் தொகுதியின் **கலைகள்** பகுதியில் **கவி** என்ற திருத்தத் தலைப்பெயரால் இடம் பெற்றுள்ளதையும் **பாரதி தமிழ்** நமக்குத் தெரிவிக்கிறது.

மற்றும், மேற்குறித்த கட்டுரையிலும் இரண்டு பத்திகள் விடுபட்டுள்ளன என்று சொல்லி, விடுபட்டுப் போன பத்திகளையும் பதிப்பித்த நிலையில் திரு. தூரன் அவர்கள் எழுதிய குறிப்புரை வருமாறு :

> ''இக் கட்டுரை **பாரதியார் நூல்கள்** மூன்றாம் தொகுதியில் **கலைகள்** என்ற பகுதியில் **கவி** என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், இக் கட்டுரையில் உள்ள இரண்டு பத்திகள் அதில் இல்லை. இதில் இல்லாத சில பத்திகள் உள்ளன. ஒருவேளை பாரதியார் இக் கட்டுரையைப் பின்னால் திருத்தி அமைத்திருக்கலாம்.
>
> ''**கவி** என்ற கட்டுரையில் வராத இரு பத்திகளை மட்டும் இங்கு தருகிறோம்.
>
> ''போத்தன்னாவைப் பற்றிய குறிப்பின் கடைசிப் பத்தியாகக் கீழ்க்கண்ட வாக்கியங்கள் உள்ளன.''

[**பாரதி தமிழ்** (*1953*)—பக்-*120*]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறான செய்தியைத் தந்து, விடுபட்ட வாக்கியங்களைப் பிரசுரம் செய்துள்ளார்.

மற்றும் அவர் தந்துள்ள குறிப்புரையில்,

> "**கவி** என்ற கட்டுரையிலே திருவள்ளுவர், இளங்கோ என்பவர்களைப் பற்றி அவர்கள் பிறந்த ஊர், அவர்கள் ஜன்ம தினத்தைக் கண்டறிய வழி ஆகிய விஷயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், கம்பரைப் பற்றி இவ்விதக் குறிப்புக் காணப் பெற வில்லை. அது **சில கவியரசர்** என்ற கட்டுரையிலே திருவள்ளுவரைப் பற்றிய குறிப்புக்குப் பின் கீழ்க் கண்டவாறு ஒரு பத்தியாக உள்ளது."
>
> [**பாரதி தமிழ்** (*1953*)—பக். 121]

என்றுள்ளதான தகவலையும் தந்து, விட்டுப்போன பத்தியையும் வெளியிட்டார்.

சுதேச மித்திரன் பத்திரிகையில் தாம் பார்த்த **சில கவியரசர்** [கவி] என்ற கட்டுரையை அப்படியே தர வேண்டும் என்கிற நோக்கத்தில் 'ஒருவேளை பாரதியார் இக் கட்டுரையைப் பின்னால் திருத்தி அமைத்திருக்கலாம்' என்று அவர் கருதினாலுங்கூட, வாசக நேயர்களின் வசதிக்காகப் பதிப்பித்தார், திரு. தூரன்.

மற்றும், **வேத ரிஷிகளின் கவிதை** நூலிலே விடுபட்டுப் போன **அதிதி** பகுதியின் விஷயத்தையும், **நவராத்திரி** கட்டுரையில் வெளியாகாத கடைசிப் பத்தியையும், **மாலை** என்னும் கட்டுரையிலும், **ஹிந்துக்களின் கூட்டம்** என்னும் கட்டுரையிலும் முன்பின்னாக இடம் மாறிய செய்தியை யும், **ஜப்பானியக் கவிதை** பாரதி நூல்கள் தொகுதியில் சேர்ந் திருப்பினும், அக் கட்டுரை முழு உருவத்துடன் இல்லை என்பதாலும், கட்டுரையின் ஒரு பகுதியும், இடையிடையே

பு.—3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில சில வாக்கியங்களும், அதில் காணப்படவில்லை என்பதாலும், சுதேச மித்திரனில் வெளியான முறையில் முழுக் கட்டுரையையும் தந்தவர் திரு தூரன் அவர்கள் ஆவார்.

இதேபோல, **தர்மம்** என்ற கட்டுரையின் கடைசி இரு பத்திகள் வெளியாகவில்லை என்பதாகக் கண்டு விடுபட்டுப் போன பத்திகளை வெளியாக்கிய பெருமையும் திரு. தூரன் அவர்களுக்கு உண்டு.

இப்படி பாரதியார் கட்டுரைகளில் விடுபட்டுப் போனதாகக் கண்ட பகுதிகளைச் **சுதேச மித்திரன்** பத்திரிகை இதழ்களைப் பரிசோதனை செய்து வெளியிட்ட திரு. தூரன் அவர்கள் **இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை** பற்றிய கட்டுரையைப் பொறுத்தமட்டில் **பாரதி நூல்கள்** மூன்றாம் தொகுதியைப் பார்க்கச் சொல்வானேன்?

குறிப்பிட்ட இதழ் அவர் பார்வைக்குக் கிடைக்க **வில்லை; இதுதான் உண்மை.**

ஆக, 20-6-1920இல் பொட்டல்புதூரில் பாரதி பேசிய பேச்சு, அன்றைய தினமே 'சுதேச மித்திர'னில் பிரசுரமாகக் கூடிய சாத்தியக் கூறு கிடையாது.

எனவே, **கதாரத்னாகரம்** இதழில் காணப்பட்ட தகவலின்படி, 24-6-1920ஆம் தேதியிலான **சுதேச மித்திரன்** இதழ்ப் பிரதியை நாம் அவசியம் தேடிப்பெற வேண்டும்.

இப்படி இன்னும் தேடவேண்டியவை ஏராளமாக உள்ளன.

தேடத் தேடப் புதிய செய்திகள் கிடைக்கும்; **பாரதியின் ஆய்வுப் பரப்பும் விரிவடையும்.**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிபெயர்ப்பு என்ற அளவிலும் ஒருசில தேடுதற்குரியன.

எடுத்துக்காட்டாக, ரவீந்திர நாதர் எழுதிய **நாட்டுக் கல்வி** என்னும் பாடலைப் பாரதி மொழிபெயர்த்துள்ளார் அன்றோ? இதன் மூலத்தை அறிய நானும், என்னுடைய அருமை நண்பர் சேக்கிழார் அடிப்பொடி திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்களும் இன்றளவும் முயன்று வருகிறோம். சரியான தகவல் கொடுப்பார் யாரும் இல்லை.

தாகூரின் கதைகளையும், கட்டுரைகளையுங்கூடப் பாரதி மொழிபெயர்த்துள்ளதை நாம் அறிவோம். மொழி பெயர்ப்புகளை மட்டுமே நாம் கண்டு மகிழ்ந்திருக்கிறோம். மொழிபெயர்ப்புகளின் மூலங்களைப் பெற்று, அவற்றுடன் பாரதியின் மொழிபெயர்ப்புகளையும் அவசியம் பதிப்பிக்க வேண்டும்.

பாரதியின் இளமைக் காலத் தோழர் — பிற்காலத்தில் நாவலர் என்ற சிறப்புப் பெயரால் தமிழுலகம் கண்ட திரு. **ச. சோமசுந்தர பாரதி** நம்முடைய பாரதியின் மொழி பெயர்ப்பு அழகு பற்றித் தெரிவித்த கருத்து சிந்தனைக் குரியது.

> "ரவீந்திர நாதரின் சிறு கதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழிபெயர்ப்பு **படிக்கும்போது மொழிபெயர்ப்பாய்க் காணாமல்** தானே முதனூலும் ரவீந்திரர் ஆங்கிலமே மொழிபெயர்ப்பாயும் தோற்றும்படி அத்துணை அழகு பெற்று அமைந்துள்ளது."

[**பாரதியார் சரித்திரம்** (1928)—பக். 13]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றும், திலகர், ஜகதீச சந்திர வஸு—ஆகியோருடைய சொற்பொழிவுகளைப் பாரதியார் மொழிபெயர்த்து வழங்கியதையும் நாம் மறக்கவில்லை. இப்படி இன்னும் பலருடைய கவிதைகளைக்கூடப் பாரதி மொழிபெயர்த்துள்ளதை எப்படி நம்மால் மறக்க முடியும்?

பாரதியின் மொழிபெயர்ப்புத் திறனைப் புலப்படுத்திக் காட்ட அவர் மொழிபெயர்ப்பு செய்தவற்றிற்கெல்லாம் மூலங்களைப் பெற்று, முழு வடிவிலான பதிப்பொன்று தேவை. அப்படிப்பட்டதொரு பதிப்பு வரும் நாளை ஆய்வுலகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இறுதியாக, எனக்குள்ள ஆசையைத் தெரிவித்து விட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

பாரதியார் கவிதைகளுக்கு நான் என்னால் முடிந்த மட்டில் — என் சக்திக்கு ஏற்ற அளவில் — பாடபேத, பிரதிபேத வளங்களைச் சுட்டிக்காட்டிப் பதிப்பொன்றை வெளிப்படுத்தி உள்ளேன்.

அப்படி நான் சுட்டிக்காட்டியுள்ள பாடபேத, பிரதிபேத வளங்களுக்கு விளக்கம் தரும் வகையிலான பதிப்பொன்றை யாரேனும் வெளியாக்கினால் புண்ணிய முண்டு.

எடுத்துக்காட்டாக, ஒன்றை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

ஸரஸ்வதி தேவியின் புகழ் என்ற பாடலில் 'தெய்வம் யாவும் **உணர்ந்திடும்** தெய்வம்' என்றுள்ள வரி பாரதி பதிப்பித்த **மாதா மணிவாசக** நூலுள், 'தெய்வம் யாவும் **உணர்த்திடும்** தெய்வம்' என்பதாக உள்ளதை நான் கண்டு பாடபேத மாறுதலைக் காண்பித்தேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உணர்த்திடும்' என்ற சொல் 'உணர்ந்திடும்' என்பதாகத் திரிந்துவிட்டதே!

உண்மையான சொல் வடிவில் அமைந்ததைக் கண்ட அளவில் சேக்கிழார் அடிப்பொடி திரு. டி. என். இராமச்சந்திரன், "அடடா, இதுவல்லவோ, உண்மைப் பாடம். சைவ சித்தாந்த சாரத்தை யல்லவா பாரதி இந்த வரியில் பிழிந்து தந்துள்ளார்" என்று சொல்லி, நான் கண்டறிந்த பாடபேத வளத்திற்காக என்னைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

இதைப் போன்றே, பல நுணுக்கமான பாடபேத வளங்கள் பாரதியார் பாடல்களில் உள்ளன.

எனவே, பாடபேதங்களுக்கான விளக்கங்களைக் காணுகின்ற ஆய்விலும் தக்கவர்கள் ஈடுபட வேண்டு கின்றேன்.

பாரதி இலக்கியம் ஓர் சங்கப் பலகை. அது எல்லோருக்கும் இடம் கொடுக்கும்.

பாரதி தேடல்களும், ஆய்வுகளும் சிறப்பான முறையில் அமையவேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பார், திருவள்ளுவ நாயனார்.

நான் இதுவரை பேசியதையும், வள்ளுவ நாயனாரின் வேத வாக்கைக் கொண்டு ஆராய்ந்து, மெய்ப்பொருள் காண விழையுங்கள்.

இங்கே எனக்குத் தெரிந்த உண்மைகளையும், கண்டறிய வேண்டிய உண்மைகளையும் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி — வணக்கம்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

பாரதி வரலாற்று நூல்களுக்கு ஒரு வரலாறு

மகாகவி பாரதி என்றும், மக்கள் கவி பாரதி என்றும், புதுமைக் கவி பாரதி என்றும் போற்றிக் கொண்டாடப் பெறும் எட்டயபுரம் **சி. சுப்பிரமணிய பாரதி** தம் வட்டத்தைக் கவிஞர் என்ற அளவிலே மட்டும் குறுக்கிக் கொண்டாரில்லை.

தமிழ்மொழியைப் புகழிலேற்றும் கவியரசர் தமிழ் நாட்டுக்கில்லை யெனும் வசைமொழியைப் பொய்யாக்கி, எந்நாளும் அழியாத ஜோதிகொண்ட நவ கவிதைகளைப் புனைந்தளித்த பாரதி, புகழ் வாய்ந்த பத்திரிகையாள ராகவும், மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாசிரியராகவும் திகழ்ந்திருக்கின்றார்.

நாட்டு மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை மட்டு மல்லாது, ஆன்மிக, தத்துவ, கலாசார எழுச்சியினை ஊக்குவிக்கவும், தம்முடைய எழுத்துப் பணிகள் போக, எஞ்சிய நேரங்களில், பொது மேடைகளில் சொற்பொழிவு ஆற்றிய முன்னணிப் பேச்சாளராகவும் பாரதி விளங்கினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி ஓர் உண்மையான ஹிந்து. ஆதலால், சர்வ மத ஞானத்தை வளர்க்க அவரால் முடிந்தது. பிற மதத்தார் தொழும் பரம்பொருள் மீது அவர்களே ஏற்கும் வகையில், துதிப்பாடல்களை இயற்றவும் முடிந்தது. மற்றும் இந்து — இஸ்லாம் — யேசு கிறிஸ்து மார்க்கங்களின் மகிமைகளை யெல்லாம் எடுத்துப் பேசியவர், பாரதி.

பாரதி தமிழகத்தில் தான் பிறந்தார் என்றாலும், இந்திய தேசியத் தலைவர்களைப் பற்றி யெல்லாம் திட்ட மிட்ட வகையில் தமிழ்ச் சாதிக்கு அறிமுகப்படுத்திய பெருமையில் அவருக்குப் பெரும் பங்குண்டு.

உலகத்து நிகழ்ச்சிகளை யெல்லாம் பாரதி படித்துத் தெளிந்து, அவற்றை யெல்லாம் எழுத்தில் வடித்தார்; பாட்டாகப் புனைந்தார்; மேடையில் முழக்கினார்.

ஆக, நாட்டு மக்களுக்குப் பல வகைகளிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்த பாரதி, பிறந்த மண்ணுக்குப் புகழும் பெருமையும் சேர்த்தார். பாரதியை இன்று உலகமே கொண்டாடுகின்றது.

"பாரில் அதிசயம் பாரதி" என்பார் கவியோகி சுத்தானந்த பாரதியார். பாரதி எப்படி அதிசயக் கவியோ அதுபோலவே அவர் ஓர் அபூர்வ மானுடருமாவார்.

அதிசயக் கவி—அபூர்வ மானுடர் பாரதிக்கு இன்னமும் திருத்தமான, தெளிவான, வரன்முறையான வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று எழுதப்படாததும் அதிசயத்துள் அதிசயந்தான்!

ஆம்; பாரதியின் படைப்புகளுக்கு மிகச் சிறந்த திறனாய்வு நூல்களும், ஒப்பீட்டு—மதிப்பீட்டு நூல்களும், கவித்திறம் பேசும் நூல்களும் பற்பல இருப்பினும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறையான, திருத்தமான, ஆராய்ச்சி பூர்வமான வரலாற்று நூல் ஒன்று இல்லையே என்ற மனக்குறையும், எழுதப் படல் வேண்டும் என்கிற ஆதங்கமும் எனக்குமே ஆண்டுகள் பலவாக உண்டு. இக் கருத்தை எனக்கு முன்னரும் பின்னரும் வற்புறுத்திய சான்றோர் சிலருண்டு.

எடுத்துக்காட்டாக, பாரதியின் இளைய சோதரரும், என்னுடைய ஞானாசிரியருமான பெரியவர் அமரர் **சி. விசுவநாத ஐயர்** முதன் முதலில் குரல் கொடுத்தார், பாரதிக்குச் சரியான—ஆதார பூர்வமான வரலாறு தேவை என்று.

அவர், 1977 செப்டம்பர் **கலைமகள்** மாத இதழில்.

......இனியும் நமது மகாகவியின் வாழ்க்கையைப் பற்றி ஊகங்களுக்கும், வதந்திகளுக்கும், கற்பனை களுக்கும் இடம் கொடுப்பது சரியாகுமா? இதை நிறுத்துவதற்கு ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது பாரதியைப் பற்றி விரிவான, முழுமையான, ஆதார பூர்வமான வாழ்க்கை வரலாறு ஒன்று உடனடியாகத் தயாரித்தாக வேண்டும்...பாரதியாரின் சரியான வாழ்க்கை வரலாற்றை எழுதி முடிக்க வேண்டியது மிகவும் அவசியமான — அவசரமான திட்டமாகக் கருத வேண்டும்"

[**கவி பிறந்த கதை** [1985]—பக். 25]

என்று எழுதினார்.

அண்மையில் காலஞ் சென்ற இலங்கைப் பாரதி ஆய்வாளர் பேராசிரியர் **கைலாசபதி** அவர்களும்,

"பாரதியார் வாழ்க்கையை ஆராய்ந்து நிறுவும் சரித நூல் இனிமேல்தான் வரவேண்டியுள்ளது .....

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்றைய நிலையில் புதிய ஆராய்ச்சி பூர்வமான வரலாறு எழுதப்படுவது இன்றியமையாதது. பாரதி சம்பந்தமான அனைத்தையும் நடுவு நிலைமை யுடன் மனச்சார்புகள் எதுவுமின்றி ஆராய்ந்து அந் நூல் எழுதப்படல் வேண்டும். பாரதியார் பற்றிய ஐதீகங்களும் கட்டுக் கதைகளும் எழுந்துள்ளன. இவற்றை யெல்லாம் தீர விசாரித்து, சான்றுகள் அனைத்தையும் மீளாய்வு செய்து, புதியதாய்க் கிடைக்கக்கூடிய தகவல்களையும் சேர்த்து ஆதார பூர்வமான வாழ்க்கை வரலாறு அவசியம் எழுதப்படல் வேண்டும்"

[**பாரதி ஆய்வுகள்** [*1983*]—பக். *175-176*]

என்று தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அன்று தொடங்கி இன்றுவரை வெளியாகி யுள்ள பாரதி வாழ்க்கை வரலாற்று நூல்களை ஆய்வுக் கண்கொண்டு நோக்குவோர் எவரும் எங்கள் கருத்தின் தன்மையை உணரவே செய்வர்.

சரி, இனி, பாரதிக்கு வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் உருவெடுத்த சரித்திரத்தைப் பார்ப்போம்.

பாரதியாருக்கு அவருடைய உற்றார், உறவினர், குடும்பத்தினர் முதலாயினோர் வரலாறுகள் எழுதி யுள்ளனர்.

பாரதி வாழ்ந்த காலத்தில், அவருக்கு உற்றுழி உதவி, உறுபொருள் கொடுத்த உத்தமர்களில் பலரும் தங்கள் சொந்தப் பாங்கான அனுபவங்களைப் பின்னொரு காலப் பகுதியில் கட்டுரைகளாக வடித்தனர்; நேர் உரைகளாகப் பேட்டி கண்டவர்களிடம் சிலவற்றைப் பதிவும் செய்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறு சிலர், பாரதியின் கவிதா சக்தியைப் பற்றியும், கவிதையின் அழகு, இனிமை, எளிமை ஆகியவற்றைப் பற்றி மட்டுமே வியந்து போற்றி எழுதினர்.

பாரதிக்கு மிக அணுக்கமானவர்கள் எல்லாருமே வரலாற்று நூல் எழுதாமல், துண்டு துணுக்குகளாகவோ, கட்டுரைகளாகவோ, கவிதைகளாகவோ வரலாற்றுத் தொடர்பான செய்திகள் சிலவற்றை வழங்கினர். பாரதியை நன்கு புரிந்து கொண்டவர்களும் தெரிந்து வைத்தவர் களுங்கூட ஓரளவே வரலாற்றுக் குறிப்புகளை வரைந்தனர்.

பாரதிக்கு அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய புலமைக்கும் இலக்கியப் படைப்புகளுக்கும் உரிய — உயரிய புகழும், பாராட்டுதல்களும் கிடைக்கவே செய்திருக்கின்றன. அவர் காலத்தில் மூன்று கட்டுரைகள் அவரைப் பற்றிப் பிரசுரமா யிருப்பதாக நான் அறிகிறேன். **கர்மயோகி** (1910), **தேசபக்தன் வருஷ மலர்** (சித்தார்த்தி) ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளிலும், New India (1919) (நியூ இந்தியா) என்னும் ஆங்கில நாளிதழிலும் பாரதி பற்றிய கட்டுரைகள் பிரசுரமாகி யுள்ளன. நானறிந்த வரை, அக் கட்டுரைகள் பாரதியின் கவித் திறத்தையும், மேதைமையையும், அவர் கையாண்ட புதிய உத்திகளையும் சிறப்பித்துப் பேசும் தன்மையனவாகவே அமைந்துவிட்டன என்பேன். ஆம்; அவை வாழ்க்கைச் சரிதக் குறிப்புகளாகவோ வாழ்க்கைச் செய்திகளை இனங்காட்டுவனவாகவோ அமையவில்லை.

பாரதி தம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைத் தனியே எழுதாவிட்டாலுங் கூட **கனவு** என்ற காதற்கவிதையிலும், **பாரதி அறுபத்தாறு** என்னும் முற்றுப் பெறாத பாடல் தொகுதியிலும், **சின்னச் சங்கரன் கதை** என்னும் முற்றுப் பெறாத கதைப் பகுதியிலும், **கவிதா தேவி அருள்வேண்டல்**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்ற சில பாக்களிலும் தம் வாழ்வுத் தொடர்பான சில பயனுள்ள செய்திகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார் என்பதும் நம்முடைய கவனத்திற்குரியது.

பாரதி 1921 செப்டம்பர் 11இல் மரணம் கடந்த பின்னர்தான் சரிதச் சுருக்கங்களும், வாழ்க்கைக் குறிப்புகளும், வரலாற்று நூல்களும் வெளிவரலாயின.

பாரதி அமரரான வுடனேயே முதன்முதலாகப் திரு. எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் **ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி—சில குறிப்புகள்** என்ற தலைப்பில் அரிய கருத்துச் செல்வங்களை வழங்கினார். இப் பெருமகனாரைத் தொடர்ந்து பாரதி பற்றிய வரலாற்றுச் செய்திகளை வழங்கியவர்களில் **நாவலர் சோமசுந்தர பாரதியார், சக்கரைச் செட்டியார்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1922 ஜனவரியில் **பாரதி ஆச்ரமத்தார்** பாரதியின் கவிதைச் செல்வங்களைத் தொகுத்து, **சுதேச கீதங்கள்** என்னும் தலைப்பெயருடன் இரு பகுதிகளாக வெளியிட்டனர். முதல் பகுதியில், நாவலர் சோமசுந்தர பாரதியார் **ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார்—சரித்திரச் சுருக்கம்** என்றும், இரண்டாம் பகுதியில் திரு. **சக்கரைச் செட்டியார்** The Political life of Sri Subramania Bharati என்றும் தம் நினைவுக் குறிப்புகளை ஒழுங்குபடுத்திக் கோவையாக எழுத்தில் வடித்துக் கொடுத்தனர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் தம் கட்டுரையில் பாரதியின் வாழ்க்கைக் குறிப்புகளையும், நிகழ்ச்சிகளையும் சுருக்கமாகத் தந்ததுடன், பாரதியின் புலமை, ஒருசில கவிகள் எழுந்த சூழல், குணநலன்கள், தமக்கிருந்த நட்புமுறை ஆகியவை பற்றியும் விரித்துரைத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு. சக்கரைச் செட்டியாரோ மிக விரிவாகப் பாரதியின் அரசியல் பிரவேசம், அரசியல் ஈடுபாடு ஆகியன குறித்து எழுதியதோடும் நில்லாமல், தமிழ்மக்கள் அமர கவி பாரதிக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

ஆக, நமக்கு 1921 செப்டம்பரிலிருந்து 1922 ஜனவரிக்கு உள்ளாகப் பாரதி வாழ்க்கை பற்றிய குறிப்புகளும், சரித்திரச் சுருக்கங்களும், அரசியல் ஈடுபாடு பற்றிய செய்தி களும் ஓரளவு கிடைக்கத் தொடங்கி விட்டன. இந்த வகையில் திருவாளர்கள் ராமாநுஜலு நாயுடு, சோமசுந்தர பாரதியார், சக்கரைச் செட்டியார் ஆகியோரை முன்னோடிகள் என்றே கொள்ளல் வேண்டும்.

இச் சான்றோர்களுக்குப் பின்னர்தான் **மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியார்**, **குவளையூர் கிருஷ்ணமாச்சாரியார்**, **சுந்தரேச அய்யர்**, **சாம்பசிவ அய்யர்**, **நீலகண்ட பிரமச்சாரி**, **நாராயண அய்யங்கார்**, **நாகசாமி**, **பாவேந்தர் பாரதிதாசன்**, **பரலி சு நெல்லையப்பர்** ஆகியோரும், இன்ன பிறரும் பத்திரிகை களில் எழுதினர்; தம் நண்பர்களிடம் பாரதி பற்றிய பசுமை நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

மேற்குறித்த பெருமக்களின் கருத்துரைகள் எல்லாம் பாரதி வரலாற்றுக்குப் பேருதவியாய் அமைந்தன என்று சொல்லும் போழ்தில், அவை தனி நபர்களின் இளமைக் காலப் பசுமை நினைவுகள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

துரதிருஷ்டவசமாகப் பாரதியின் கவிதா மண்டலத் தைச் சார்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் பாரதியைப் பற்றிய செய்திகளைப் பின்னிட்டுத்தான் பதிவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்திருக்கிறார்; அதே போல, பாரதியின் முதற் பதிப்பாளராகிய நெல்லையப்பரும் தம் நினைவுக் குறிப்புகளைப் பிற்காலத்தில்தான் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டார்.

பாரதியிடம் நெருங்கிய உறவு கொண்டு பாரதிக்குத் தாசனாக வாய்த்தவரும், பாரதியாலே அன்பு மிகக் கொண்டு உரிமையுடன் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட பேறு பெற்றவரும் சுருங்கிய முறையில்கூட வரலாற்று நூல் வரையாமல் போனது நம்முடைய பாக்கியக் குறைவே!

1928 ஆம் ஆண்டில் பாரதி பாடல்களில் ராஜத் துரோகக் கருத்துகள் இருப்பதாகச் சொல்லி, பிரிட்டிஷ் அரசு **சுதேச கீதங்கள்** என்னும் கவிதை நூல்களைப் பறிமுதல் செய்தது. இதனால் நாட்டில் கிளர்ச்சிகள் எழுந்தன. அச்சமயம் மீண்டும் **எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு** அவர்கள் தாம் அப்போது ஆசிரியர் பொறுப்பு வகித்த **அமிர்த குண போதினி** மாத இதழில் **சென்றுபோன நாட்கள்** என்ற பொதுத் தலைப்பில் **ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி** என்று குறுந் தலைப்பு அமைத்துத் தொடர் கட்டுரைகள் எழுதி வெளியிடலானார்.

அவர் தம்முடைய கட்டுரையின் தொடக்கத்தில்,

> "ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் பறிமுதல் செய்யப்பெற்றுப் பெரும் கிளர்ச்சி எழுந்துள்ள இச்சமயம் அவரது ஜீவியத்தை வரைதல் பொருத்தமானது. பலர் பலவிதமாக அவரைப் பற்றி வரைந்துள்ளனர். அவருடன் கலந்து நட்பு முறையிலிருந்த வகையில் நமக்குத் தெரிந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வற்றை இங்கு எழுதுகிறோம். பாரதியாருக்கு ஏற்பட்ட பிரசித்தி யெல்லாம் அவர் காலஞ் சென்ற பிறகுதான், விசேஷமாக அவரது பாடல்களால்தான்''

[**அமிர்த குண போதினி** (*1928*)
நவம்பர் இதழ்—பக். **443**]

என்று குறிப்பிட்டமை பொருள் செறிந்தது ஆகும்.

இத் தொடர் கட்டுரைகளில், முன்னர்—அதாவது, பாரதி மரணமடைந்தபோது, தாம் எழுதிய குறிப்பு களுடன் அந்த நாள் வரை எவரும் சொல்லாத — எழுத் துருவில் வடிக்காத பற்பல புதிய செய்திகளை எழுதி, பாரதி வாழ்க்கை வரலாற்று ஆய்வுப் பரப்பை ராமானுஜலு நாயுடு விரிவாக்கினார்.

திரு. நாயுடு அவர்கள் எழுதி யளித்த அரிய செய்திக் குறிப்புகளில் பலவும் 1928 தொடக்கம் 1947 வரையிலான கால எல்லையில் பிரசுரமான பாரதி வரலாற்று நூல்களில் போதிய அளவு இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பாரதியின் மூத்த மகள் **தங்கம்மா**ளும், இளைய மகள் **சகுந்தலா**வும் மற்றும் பலரும் அவ்வப்போது பத்திரிகைகளில் பாரதி பற்றி எழுதவே செய்தனர். என்றாலும், இவை யெல்லாம் சற்று காலங் கடந்த நிலையில் வெளிப்பட்டன வாகும். தமிழ்ப் பத்திரிகைகளும் பல்வேறு சந்தர்ப்பங் களில் பாரதியார் தொடர்புடைய செய்திகளை வெளியிடவே செய்தன.

காலப் போக்கில், கட்டுரை வடிவில் வெளிவந்த செய்திகளையும், நினைவுக் குறிப்புகளையும், சொந்தப் பாங்கான அனுபவங்களையும் கொண்டு பற்பலர் நூல்கள் எழுத முனைந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1928 இல் பாரதி பிரசுராலயத்தார் **பாரதியார் சரித்திரம்** என்ற பெயரால் சிறிய நூல் ஒன்றை வெளியிட்டனர். இது புதிய நூல் அன்று; என்றாலும் பாரதியார் சரித்திரம் என்ற தலைப்பில் வெளியான முதல் தொகுப்பு நூல் இதுவே யாகும்.

1922 இல் பாரதி ஆச்ரமத்தார் பிரசுரித்திருந்த 'சுதேச கீதங்கள்' கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றிருந்த நாவலர் சோமசுந்தர பாரதியாரின் சரித்திரச் சுருக்கமும், சக்கரைச் செட்டியார் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கமான 'ராஜீய வாழ்வும்', பரலி நெல்லையப்பரின் 'பாரதியாரின் தமிழ்ப் புலமை' என்னும் கட்டுரை ஒன்றும் சேர்க்கப்பட்டு இந்தப் பிரசுரம் வெளியானது.

1929 இல் பாரதியின் இளைய சகோதரர் திரு. **சி, விசுவநாதன்** ஆங்கிலத்தில் Bharati and his works என்றொரு நூலைப் பாரதியின் வாழ்க்கைக் குறிப்புகளும், பாரதி நூல்களின் மதிப்பீடும் சேர்ந்திருந்த முறையில் எழுதி வெளியிட்டார். இந்த நூலானது, பெரும் பகுதி பாரதி படைப்பிலக்கியங்களுக்கான கருவி நூலாகவே அமைந்துவிட்டது.

1936 இல் **ஆக்கூர் அனந்தாச்சாரி** என்ற தேசபக்தர் **கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம்** என்ற நூலை வெளிப்படுத்தினார்.

இதனிடையில் **வ. ரா.** என்று சுருக்கப் பெயரால் அழைக்கப்பெறும் **வ. ராமஸ்வாமி** அவர்கள் **காந்தி** இதழில் 1935-1936 இல் பாரதி வாழ்க்கைத் தொடர்பான தொடர் கட்டுரைகளை எழுதினார். அக் கட்டுரைகளே **1944** இல் **மகாகவி பாரதியார்** என்ற பெயருடன் நூலாக உருப் பெற்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1937 இல் **கவியோகி சுத்தானந்த பாரதியார்** அவர்கள் **பாரதி விளக்கம்** என்ற நூலை ஆக்கி அளித்தார். இந்த நூலின் முற்பகுதியில் பாரதி வாழ்வும், பிற்பகுதியில் பாரதி பாடல்களின் அருமை பெருமைகளும் விளக்கப்பட்டன.

1938 இல் **சக்திதாசன் சுப்பிரமணியன்** அவர்கள் **பாரதி லீலை** என்றவொரு நூலை எழுதி வெளியிட்டார்.* இந்த நூலில் பாரதி சரித்திரச் சுருக்கத்துடன், அவருடைய வாழ்வில் நிகழ்ந்தனவாகக் கருதப்பட்ட நிகழ்ச்சிகளும் சொல்லப்பட்டன.

1940 இல் **தி.ஜ.ர.** அவர்களின் **புதுமைக் கவி பாரதியார்** என்னும் நூல் வெளிவந்தது.**

1941 இல் பாரதியின் **மூத்த மகள் தங்கம்மாள்** அவர்கள் பாரதியின் மனைவி **செல்லம்மாள்** அவர்கள் கூறுகிற மாதிரியில் **தவப் புதல்வர் பாரதியார் சரித்திரம்** என்னும் பெயரில் அமர கவியின் வரலாற்றைச் சமைத்தளித்தார்.***

---

* இந்த நூல் 1950 இல் மறு அச்சாக வெளியான போது, 'பாரதியார்' என்று தலைப்புப் பெயர் மாற்றங் கண்டது.

** இந்த நூல் 1946 இல் மறுபதிப்பான நிலையில், அதில் சில தகவல்கள் சேர்க்கப்பட்டன.

*** இந்த நூலின் இரண்டாம் பதிப்பு 1945 இல் வெளிவந்த சமயத்தில் 'பாரதியார் சரித்திரம்' என்றே நூல் தலைப்பு மாற்றங் கண்டது; சில புதிய செய்திகளும் கொண்டமைந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1942 இல் **நாரண துரைக்கண்ணன்** அவர்கள் எழுதிய **தமிழ் நாட்டுத் தேசிய கவிஞர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்** என்ற சிறு நூல் வெளிவந்தது.

1946 இல் **கவியோகி சுத்தானந்த பாரதியார்** எழுதிய **கவிக் குயில் பாரதியார்** என்ற நூல் வெளிவந்தது.

இதே 1946 இல் கப்பலோட்டிய தமிழர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பெறும் **வ. உ. சிதம்பரனார்** அவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகளைக் கொண்டு, **வி. ஓ. சி. கண்ட பாரதி** என்ற தலைப்பில் சிறுநூல் ஒன்றை திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் பதிப்பித்து வெளியிட்டார்.

தங்கம்மாள் எழுதிய **அமரன் கதை** ((1946), **பாரதியும் கவிதையும்** (1947), **பிள்ளைப் பிராயத்திலே** (1947) ஆகிய நூல்களும், திரு. **ரா. கனகலிங்கம்** அவர்கள் எழுதிய **என் குருநாதர் பாரதியார்** (1947) என்ற நூலும் பாரதியின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக அமைக்கத் துணை புரிவனவாகும். இந்த நூல்கள் யாவும் பாரதியின் குணச் சித்திரத்தையும், கவிதை பிறந்த கதையையும் தெரிவிக்கின்றன.

ஆக, உண்மையில் 1928-1947க்கும் உட்பட்ட காலப் பகுதியில் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நூல்களே வெளிவந்தன.

இது, பாரதிக்கு வரலாறு எழுந்த பின்னணி சரித்திரமாகும்.

பாரதி அமரரானதிலிருந்து 1947 ஆம் ஆண்டு முடிய வெளிப்பட்ட பாரதி வரலாற்று நூல்களிலும், வரலாற்றுத் தொடர்பான நூல்களிலும் காணப்பெறும் செய்திகள், குறிப்புகள் ஆகியன சற்றே குழப்பத்தை உண்டுபண்ணக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடிய அளவில் சிக்கல்கள் நிறைந்தனவாக உள்ளன; முன்னுக்குப் பின் முரண்பட்டனவாகவும் உள்ளன. நூலுக்கு நூல் மாறுபாடு கொண்டனவாகவும் உள்ளன. இன்னும் சொல்லப்போனால், காலப் பிழைகளும், கருத்துக் குழப்படிகளும் மேற்குறித்த நூல்களிலே இடம் பெற்றுள்ளன.

வரலாற்று நூல்களில் காணப்பெறும் சிக்கல்களுக்கும், குழப்படிகளுக்கும் காரணம் யாதாக இருக்க முடியும்? அந் நூல்களில் எழுதப் பெற்றிருக்கும் முகவுரை, முன்னுரை ஆகியனவற்றை நாம் தெரிந்துகொண்டால், சிக்கல்கள் நேர்ந்தமைக்கான காரணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

எனவே, பாரதிக்கு வரலாறு கண்ட முன்னோர்களின் நூல்களில் இடம் பெற்றுள்ள முன்னுரை, முகவுரைகளின் சுருக்கங்களைக் காண்போம்.

"...பெருமை வாய்ந்த சிறந்த தேசீயக் கவியின் ஜீவிய சரிதத்தைத் தமிழர் அறிய வேண்டியது அவசியமெனக் கருதி, அதை வெளியிட வெகு நாளாக யான் ஆவல் கொண்டிருந்தேன்...

''எனக்கு ஏற்கனவே தெரிந்த தகவல்களுடன் சில நண்பர்கள் மூலமும் முக்கியமாக, பாரதியாரின் மனைவியாரான ஸ்ரீமதி செல்லம்மாள் அவர்கள் மூலமும் சில விஷயங்களை அறிந்துகொண்டு இந் நூலை வெளியிட்டுள்ளேன்."

[**கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம்** (*1936*)—பக். *6*]

என்று **ஆக்கூர் அனந்தாச்சாரி** தம் நூலுக்கான முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவியோகி சுத்தானந்த பாரதி அவர்களும் தாம் எழுதிய **பாரதி விளக்கம்** நூலில்,

> "தமிழர் உள்ளத்தில் ஆவேச வெள்ளமாகப் பொங்கும் இந்த அமர கவியின் தூல வரலாற்றை உலகம் அறிய விரும்புகிறது. தெரிந்ததைச் சுருக்க மாகச் சொல்லுவோம்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

> "யான் சென்று கேட்டபொழுது தத்தமக்குத் தெரிந்த சம்பவங்களை யெல்லாம் கூறியவர் பலர். 'நவ சக்தி' ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார், எட்டயபுரம் வித்வான் குரு குஹதாஸப் பிள்ளை, 'சுதேச மித்திரன்' உதவியாசிரியர்களான ஸ்ரீமான் உலகநாத நாயகர், நடேசய்யர், சக்கரைச் செட்டியார், வ. ராமஸ்வாமி அய்யங்கார் முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்"
>
> [**பாரதி லீலை** (1938)—பக். 5]

என்று **சக்திதாஸன் சுப்பிரமணியன்** தாம் எழுதிய பாரதி வரலாற்று நூலுக்கு உதவி செய்தோரைக் குறித்துள்ளார்.

பாரதியைப் புதுமைக் கவியாகவே கண்ட **தி. ஜ. ர.** அவர்கள் தாம் எழுதிய நூலுக்கு முன்னுரையோ, முகவுரையோ ஏதும் எழுதவில்லை. ஆனாலும், குறிப் பொன்றைப் பின்கண்டவாறு தந்துள்ளார்:

> "ஸ்ரீ விசுவநாதன், ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச் சாரியார், சுவாமி சுத்தானந்த பாரதியார்-இம்மூவரும் எழுதிய பாரதி சரித்திரங்களும், பாரதி பிரசுரா லயத்தாரின் பாரதி நூல்களும், 'ஹிந்துஸ்தான்' வாரப் பத்திரிகையின் வருஷ மலர்களில் வந்த சில அரிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரைகளும் இந் நூலை எழுத எனக்குப் பெரிதும் உதவியா யிருந்தன.''

முதல் பதிப்பு வெளியான சமயம் திரு. **தி. ஜ. ர.** அவர்கள் இவ்விதமாகக் குறிப்புத் தந்தார் என்றாலும், நூலின் மறுபதிப்பு 1946 ஆம் ஆண்டில் வெளிவந்தபோது விரிவான அளவில் முகவுரை எழுதியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நம் சிந்தனையைத் தூண்டுவனவாக அமைந்துள்ள காரணம் பற்றி, அவசியம் கருதி முகவுரையின் முக்கியப் பகுதிகளை மட்டும் பார்ப்போம்:

> ''பாரதியாரை நேரே அறிந்தவர் பலர் இருக்கிறார்கள். நான் அவரை நேரே காணும் பாக்கியம் பெற்றதே யில்லை. தூரத்தே யிருந்துகூடத் தரிசித்த தில்லை. நேரே பார்த்தவர்கள் அவரைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்லுகிறார்கள்; எழுதுகிறார்கள். அப்படி யிருக்க, நான் ஏன் அவர் வரலாற்றை எழுத வேண்டும்? எனக்கென்ன பாத்தியம்?
>
> ''ஒன்று, அவரை நான் நேரே காணாதது; இரண்டு, அவருடைய பாடல்களை இன்றைக்கும் ஒரு மாணவனைப் போலவே படிப்பது — இந்த இரண்டுந் தான் எனது பாத்தியம்.
>
> ''அவரை நேரே அறிந்தவர்களில் பெரும் பாலோர் ஒருவர் சொல்வதை ஒருவர் உண்மையல்ல என்கிறார்கள்; ஒருவர் மற்றவர் பாரதியாரைப் பார்த்தவரே அல்ல என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஒவ்வொருவரும் 'பாரதியாரின் பூஜாரி தாம்தான்' என்பதுபோல் பேசுகிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> "இந்தக் குற்றங்களோ, உபத்திரவங்களோ எனக்குக் கிடையாது. ஏனெனில், பாரதியாரை நான் பார்த்ததே யில்லை; பாரதியாரின் வாழ்க்கை பற்றி நான் எழுதியிருக்கும் வரலாறு பூராவும் பிறர் சொன்னவை. பாஷை மட்டுந்தான் என்னுடையது. இதை முதலிலேயே வாசகருக்கு எச்சரித்து விடுகிறேன்."
>
> [**புதுமைக்கவி பாரதியார்** (1946)—பக். iii]

இந்த அளவில் மட்டுமே அவர் தம் கருத்துரையை முடித்துக் கொள்ளவில்லை.

> "பாரதியார் ஓர் அபூர்வ புருஷன்; மேதை, அவருடைய வாழ்க்கை வரலாற்றை விஸ்தாரமாக, ஆதாரபூர்வமாக எழுதவேண்டும்.
>
> "இது ஒரு சிறிய ஜீவிய சரித்திரம்; அவ்வளவே"
>
> [**புதுமைக்கவி பாரதியார்** (1946)—பக். vi]

என்று வெளிப்படையாக அவர் எழுதியதையும் நாம் சிந்தையில் கொள்ளவேண்டும்.

அன்றைய நிலையில், தாம் அறிந்த செய்திகளை மட்டுமே கொண்டு, பாரதிக்கு வரலாற்று நூலை எழுதிய திரு. **தி.ஜ.ர.** அவர்கள் **விஸ்தாரமாக, ஆதாரபூர்வமாகப்** பாரதியின் வரலாற்றை எழுதவேண்டும் என்று மனந் திறந்து எழுதியதை நினைத்து நம்மால் வியவாமல் இருக்க முடியவில்லை.

ஒருவர் சொல்வதை மற்றவர் உண்மை யில்லை என்று சொல்லும் மனப்பான்மை ஆரம்ப நாளிலேயே வேர்விட்டு வளர்ந்து விட்டது போலும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1941 ஆம் ஆண்டிலே **தவப் புதல்வர் பாரதியார்** என்பதாக முதல் பதிப்பு வெளியாகி, பின் சில புதிய செய்திகள் சேர்க்கப்பெற்று, 1944இல் **பாரதியார் சரித்திரம்** என்ற பெயரில் மறு பிரசுரமான நூலில் **சக்தி காரியாலயத்தார்** பதிப்பக உரையாக,

> "...இவரைப் பற்றிய உண்மையான தகவல் களைத் தமிழர் தெரிந்து வைத்திருக்க ஆசைப்படுவது இயல்பு. பாரதியாரைப் புகழ வேண்டு மென்கிற நோக்கத்தில் பல கற்பனைகள் உலாவி வந்திருக்கின் றன. சரித்திரத்தில் கற்பனை ஊடாட விடப்படாது. பாரதியாரின் மனைவி செல்லம்மா பாரதி அவர்கள் கூறுகிற மாதிரியில், அவர்களின் மகள் தங்கம்மா பாரதி அவர்கள் இந்தச் சரித்திரத்தை உள்ளது உள்ளபடி எழுதி யிருக்கிறார்கள்"

என்பதான தகவல் காணப்படுகிறது. இரண்டாம் பதிப்பின் தகவல் இவ்வாறிருப்ப, நூலின் ஐந்தாம் பதிப்பு 1955ஆம் ஆண்டிலே பிரசுரமானது.

அப்போது, சக்தி காரியாலயத்தார் பதிப்புரை எழுதியபோது, **பாரதியார் சரித்திரம்** நூல் வெளிப்பட்ட வரலாற்றையும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பதிப்புரையும் ஆய்வாளர்களின் சிந்தனைக்கு விருந்தாக அமைவதால், பதிப்புரை தெரிவிக்கும் வரலாற்றையும் பார்த்து விடுவோமே!

> "...பாரதியார் பற்றி இல்லாத, பொல்லாத கதைகளையும் கட்டிவிட்டார்கள். அந்தச் சமயத்தில் பாரதியார் பற்றிய உண்மையான விஷயங்கள் வெளிவந்தால் தேவலையே, கட்டுக் கதைகள் ஒழியட்டுமே என்று எண்ணினேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அப்பொழுது தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளரில் ஒருவரான காலஞ் சென்ற ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) **'பாரதியார் சரித்திரம்'** புத்தகத்தைத் தாங்கள் வெளியிட வேண்டும். தங்கம்மாள் எழுதி இருக்கிறார்கள். பாரதியாரின் மகளே எழுதி இருப்பதால் உள்ளே உள்ள விஷயம் முழுதும் பச்சை உண்மையாக இருக்கும். சந்தேகம் வேண்டியதில்லை' என்று சொன்னார்கள். உடனே புத்தகத்தை வெளியிட ஒப்புக்கொண்டு வெளியிட்டேன். முதல் பதிப்பு 1941-ல் வெளிவந்தது.''

நூல் பதிப்பாளர் உரை இவ்வாறிருக்க, தங்கம்மாள் அவர்களும் தம் முகவுரையில்,

"...அவர் உயிரோடிருக்கும்போது, ஜனங்கள் அவரைப் பயன்படுத்திக் கொள்ளாதது போலவே, அவர் மறைந்த பிறகும் அவரது உண்மையான வரலாறுகளை மக்கள் அறிந்து கொள்ளமுடியாமலேயே இருக்கிறார்கள். அவரைப் பற்றித் தவறான விஷயங்களும் கற்பனைக் குறிப்புகளும் அடிக்கடி பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வெளிவருகின்றன. பொது ஜனங்கள் அவைகளை நம்பி விடுகிறார்கள். ஒருவர் மேலும் நான் குறை கூறவில்லை. சரியான சரித்திரம் இதுவரை வெளிவராதபடியாலேயே இந்தத் தவறுகள் ஏற்பட்டன.

''இந்தப் புத்தகத்தில் உண்மையான சம்பவங்களே வெளியாகியிருக்கின்றன; பாரதியாரின் அத்தையிடம் நான் நேரில் கேட்டறிந்தவை. என் தந்தையாரின் சரித்திரத்தை என் தாயாரே கூறுவது போல எழுதியிருக்கிறேன்; இதற்கு ஒரு காரணமுண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரைப் பற்றித் தவறான குறிப்புக்களை என் தாயார் படிக்கும் போதெல்லாம், மனம் புண்ணாகி, 'ஐயோ, உண்மையான செய்திகளைத் தமிழரின் காதுக்கு எட்டச் செய்வது எப்படி?' என்று ஏங்குவார்"

[**பாரதியார் சரித்திரம்** (*1944*)—பக். *3*]

என்றே குறிப்பிட்டுள்ளார்.

தம்முடைய வருணனைத் திறமையினால், பாரதியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்திய **வ. ரா.** அவர்கள் தாம் எழுதிய **மகாகவி பாரதியார்** நூலுக்குத் தனிப்பட எழுதிய முகவுரையில் மட்டுமில்லை, கட்டுரைகளின் ஊடேயும் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

வ. ரா. அவர்கள் தம் நூலுக்கான முன்னுரையில்,

"நான் இப்பொழுது எழுதி யிருக்கும் கதை, பாரதியார் சம்பந்தமாக முடிந்த கதை அல்ல.

"லக்ஷணமாக கொடுக்க முடியாத ஒன்றை, அவலக்ஷணத்தோடு கூடிய உருவத்தில் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. எனவே, அனேக சங்கதி களை நான் சொல்ல முடியாமல் விட்டுவிட வேண்டிய தாயிற்று.

"இன்னும் எத்தனையோ விஷயங்களைச் சேர்த்து, கணீர் என்று சொல்லவேண்டும்...

"பாரதியாரைப் பற்றி தவறான அபிப்பிராயங்கள் நாட்டில் உலவும் காலம் வந்திருக்கிறது. அவரைக் கண்டால் காணுவதற்கே பயந்து கொண்டிருந்த பேர்வழிகளில் பலர், பாரதியாரோடு நெருங்கிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழகியதாக, புரளிக் கதைகளை வெளியிடத் தொடங்கி யிருக்கிறார்கள். 'பணக்காரன் வீட்டிலே மாரடித்துக் கொள்ளுகிற' இந்த நபர்களைப்பற்றி என்ன சொல்லுவது என்று தெரியவில்லை.

> "இன்னும் சில வருஷங்களுக்குள்ளேனும், பாரதியாரைப் பற்றி விரிவாக எழுத முடியும் என்ற நம்பிக்கையோடு, இந்தப் புஸ்தகத்தைச் சுருக்கி விட்டேன்"

என்று தெரிவித்துள்ளார்.

எத்தனையோ விஷயங்களைச் சேர்த்துக் 'கணீர்' என்று சொல்ல வேண்டும் என்ற எண்ணங் கொண்ட வ. ரா. அவர்கள் பாரதியிடமே அவருடைய வரலாற்றை அறிய முயன்றும் தமக்குப் பலன் ஏதும் கிட்டவில்லை என்கிற செய்தியையும் தம்முடைய நூலிலே தந்துள்ளார். மற்றும், பாரதி தொடர்பான செய்திகள் பலவற்றைத் திரட்டிச் சேர்த்தாலொழிய, பாரதியின் வரலாற்றைப் பூர்த்தி செய்ய முடியாது என்பதையும் தெளிவாகப் புலப்படுத்தியும் உள்ளார்.

இன்னும் சற்று அழுத்தம் கொடுத்து திரு. வ. ரா. அவர்கள் தெரிவித்த கருத்துகள் பாரதி வரலாற்று நூல்களை எழுதுகிறவர்களுக்குச் சிறந்த படிப்பினைகளாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆம்; வ. ரா. அவர்கள் தம் சொந்த அனுபவத்தில் கண்ட உண்மைகளை எழுத்திலே வடித்தார்.

அவர் கண்ட உண்மைகள் தாம் எவை?

இதோ, நீங்களே படித்துப் பாருங்கள்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"...நான் எத்தனையோ தடவைகளில், அவருடைய அடிநாள் வரலாற்றைப் பற்றிய பேச்சை சம்பாஷணையிலே நுழைத்துப் பார்த்திருக்கிறேன். வெகு சாமர்த்தியமாக இந்தப் பேச்சை, கொழுந்திலேயே கிள்ளிக் கிடத்திவிட்டு, வேறு ஏதேனும் ருசியுள்ள சங்கதியைப் பற்றிப் பேசத் துவங்கி விடுவார்.

"பாரதியாரைப் பற்றி ஆங்காங்கே கிடைக்கும் 'துக்கடா'க்களை நண்பர்கள் பலர் சேர்ந்து திரட்டினாலொழிய,அவரது வாழ்க்கை வரலாற்றைத் தனி ஒருவன் பூர்த்தி செய்யமுடியாது...

"பாரதியாரின் பக்தர்களும், அபிமானிகளும்·· யாவரையும் கலந்து கொண்டால், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை ஒருவாறு பூர்த்தி செய்யலாம். இதனிடையே என்னாலான கைங்கர்யத்தைச் செய்கிறேன்.

"பாரதியாரின் வாழ்வைத் தொகுத்துச் சொல்லுகையில், வருஷப் புள்ளியில் சில சில்லறைத் தவறுகள் இருக்கலாம். இதைப் பற்றித் தெரிந்தவர்களிடம், நான் எவ்வளவோ விசாரித்துப் பார்த்தேன். என்னைப் போலவே அவர்களுக்கும் சந்தேகம். நமக்குச் சந்தேகமா யிருக்கும் வார்த்தையே அகராதியில் இருப்பதில்லை என்பதை அனுபவ மூலமாய் நீங்கள் அறிந்திருப்பீர்கள். என் கதியும் அப்படித்தான்."

[**மகாகவி பாரதியார்** [*1944*]—பக். 8-9;20]

தம் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை எல்லாம் வ. ரா. அவர்கள் நன்கு நமக்கு வார்த்தைகளாலே படம் பிடித்துக் காட்டிவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, இதுவரை, பாரதியின் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதிய அறிஞர் பெருமக்களின் முன்னுரை, முகவுரை, கருத்துரை—ஆகிய பகுதிகளின் சில முக்கிய அம்சங்களைப் பார்த்தோம்.

பாரதிக்கு வரலாறு கண்ட நூலாசிரியர்கள் தெரிவித்துள்ள செய்திகளால் நாம் பல்வேறு உண்மைகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

அதாவது, பாரதிக்கு வரலாற்றை எழுதிய ஆசிரியர்களில் பெரும்பாலோர், தெரிந்த செய்திகளுடன் சில நண்பர்கள் வழியாக அறிந்துகொண்டவற்றையும், பாரதி குடும்பத்தவர் தெரிவித்த சம்பவங்களையும், நினைவுக் குறிப்புக்களை வைத்துக்கொண்டும், பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டும், சொந்தப் பாங்கான அனுபவங்களைக் கொண்டும், சிற்சில நூல்களில் இடம் பெற்றிருந்த செய்திக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டும் நூல்களை எழுதினர் என்பது தெளிவாகின்றது.

இது தவிர, சந்தேக நிவர்த்தி செய்துகொள்ள நினைத்தும், சந்தேகத்துக்கான விளக்கம் கிடைக்காத நிலையில், வருடக் கணக்கைத் தெரிவிக்கும் செய்திகளில் தவறுகள் நேர்ந்துவிட்டன என்பது புரிகின்றது; குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையோ, நிகழ்ச்சி ஆண்டுகளையோ உறுதி செய்து தெரிவிக்கக்கூடிய நிலையில் பலரும் அந்த நாளில் இல்லை என்பதும் புலப்படுகின்றது.

இத்துணைக்கும் மேலாக அந்தக் காலத்திலேயே — பாரதிக்கு மிக நெருக்கமானவர்களும், உள்ளன்புடன் பழகியவர்களும், உறவினர்களும் வாழ்ந்த காலத்திலேயே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியைப் புகழ வேண்டும் என்ற நோக்கத்தில் பற்பல கற்பனைக் கதைகள், கட்டுக் கதைகள், தவறான செய்திகள், வருஷப் புள்ளிகளில் தவறுகள் ஆகியன எல்லாம் பத்திரிகைகளிலும், நூல்களிலும் இழைய முற்பட்டு விட்டன என்கிற பேருண்மையையும் அறிந்து கொள்கிறோம்.

பாரதியையே அறியாதவர்கள், அவரைப் பார்ப்பதற்கே பயந்தவர்கள் உட்பட பற்பலரும் "புரளிக் கதை"களைக் கடை விரிக்க ஆரம்பித்துவிட்ட கொடுமையையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

ஆக, ஆரம்ப நாளில் பாரதிக்கு வரலாறு கண்ட யாவரும் சான்றுகளின் துணைகொண்டோ, பாரதி ஆசிரியராய் தொடர்பு கொண்டிருந்த — நடத்திய பத்திரிகைகளின் துணைகொண்டோ, பாரதியே பலருக்கு எழுதிய கடிதங்களின் உதவி கொண்டோ, ஆவணச் செய்திகளின் தன்மையை உறுதி செய்து கொண்டோ நூல் எழுத முற்படவில்லை என்பது வெளிப்படை.

ஒவ்வொரு நூலாசிரியரும், ஒவ்வொரு கோணத்தில் பாரதியைக் கண்டு, தெளிந்து, தத்தம் படைப்புகளைப் படைத்தளித்தனர். இதன் காரணமாக, அந் நூல்களில் வரலாற்றுச் செய்திக் குழப்பங்கள், சந்தேக நிவர்த்தி செய்துகொள்ள இயலாத பல சிக்கல்கள் நேர்ந்தன.

மற்றும், காலந் தாழ்ந்து சம்பவங்களை நினைவு படுத்தி எழுதுவதில் ஏற்படும் தவறுகள் வரலாற்று உண்மைகளாகி விட்டன.

பாரதிக்கு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களோ, வரலாற்றுச் சுருக்க நூல்களோ இல்லாத நிலையிலும், இன்றுள்ள நவீன வசதிகள் எதுவும் வாய்க்கப்பெறாத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூழ்நிலையிலும் தத்தமக்குக் கிடைத்த செய்திகளையும், குறிப்புக்களையும் திரட்டி, நினைவுகூர்ந்து பாரதிக்கு வரலாறு உருவாகவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஈடுபட்ட பெருமக்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; மதிப்பும் மரியாதையும் செலுத்த வேண்டுவதும் நமது நன்றிக் கடன் ஆகும். 'நன்றி மறப்பது நன்றன்று.'

எனவே, பாரதிக்கு வரலாறு கண்ட முன்னோர்களின் பணிகளுக்கு நாம் தலை வணங்குவோமாக!

இனி நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் பார்ப்போம்.

முன்னாளில் உருவான நூல்களில் கண்டுள்ள மாறுபட்டனவும், முரண்பட்டனவுமான செய்திகளைக் களைந்தும், காலக் கணக்கீட்டுப் பிழைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தவற்றை நீக்கியும், 'புரளிக்கதை' களைப் புகவிடாமலும், கற்பனை வளத்திற்கு இடங் கொடாமலும் இயன்ற வரை ஆதாரபூர்வமான நூலை நாம் பாரதிக்கு ஆக்கி அளிக்கவேண்டும். இது காலத்தின் தேவையுங்கூட.

இங்ஙனம் நாம் எதிர்பார்க்கின்ற போழ்தில், முன்னைய நூல்களை வழிநூல்களாகவும், சார்பு நூல்களாகவும் பற்பலவும் இன்றளவும் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன என்பதை நாம் மறப்பதற்கில்லை.

என்றாலும், அவ்வப்போது பாரதி ஆய்வாளர்களில் பற்பலர் தத்தமக்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டு பாரதி இலக்கியப் பரப்பை வளப்படுத்தி, நூல்கள் எழுதி வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது, பாரதியின் வரலாற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலுக்குத் துணை செய்யும் வகையில் ஆதாரபூர்வமான — நம்பகமான — பல பயனுள்ள செய்திகளைத் தாங்கி ஒருசில நூல்கள் வெளிவரத்தான் செய்கின்றன.

ஆனாலுங்கூட, முழுமையான வரலாறு என்று கூறும்படியான நல்ல நூல் ஒன்று பாரதிக்கு இன்னமும் வரவில்லை என்பதே உண்மை. முழுமையான வரலாறு என்று குறிப்பிடும்போது, அது சரியான தகவல்களையும், உண்மையான செய்திகளையும் கொண்டுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்பதும் சொல்லாமலே பெறப்படும் உண்மையுமாகும்.

பாரதிக்கு இன்னமும் ஆராய்ச்சிபூர்வமான வாழ்க்கை வரலாறு எழுதப்படவில்லை என்பது அறிஞர் பலருடைய கருத்து.

பாரதியின் இளவல் திரு. சி. விசுவநாத ஐயர் அவர்கள்,

> "பிற நாடுகளில் பாரதிபோல் ஒரு கவி தோன்றி யிருப்பாரே யாகில், அரசினரே பொறுப்பேற்றுச் சரியான சரித்திரம் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்திருப்பர். இப்பொழுதும் காரியம் மிஞ்சிப் போகவில்லை. கிடைக்கக்கூடிய விவரங்களைச் சேகரித்து, தகுந்த எழுத்தாளர்களைக் கொண்டு தயாரித்துவிடலாம்"
>
> [**கவி பிறந்த கதை** : (1985)—பக். 85]

என்று தெரிவித்த அறிவார்ந்த யோசனையை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்.

விசுவநாத ஐயர் இப்படி எழுதக் காரணம் என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஏற்கனவே பாரதியாரின் உண்மையான வாழ்க்கை விவரங்கள் கொடுக்கக்கூடிய, அவருடன் நெருங்கிப் பழகிய பல நண்பர்களும் அவரது பந்துக்களில் பலரும் காலஞ் சென்று விட்டனர். இன்னும் தாமதிப்போமானால், உண்மையான விவரங்கள் கிடைப்பது மிகவும் அரிதாகிவிடும்.

"இதற்கிடையில், மக்களின் ஆர்வத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாரதியுடன் தங்களுக்குள்ள உறவைப் பெரிதுபடுத்திக் கொள்வதற்காகச் சிலர் கட்டுக் கதைகளை எழுதி வெளியிட்டு வருகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

"பாரதி யிறந்து சிறிது காலத்திற்குள் பாரதியை நேரில் தெரிந்த பலர் இன்னும் உயிரோடிருக்கும் பொழுதே, இந்தக் கதைகள் உலவ ஆரம்பித்து விட்டதென்றால், இன்னும் சில தலைமுறைகளுக்குப் பிறகு என்னென்ன கதைகள் தாம் கட்டப்படமாட்டா?"

[**கவி பிறந்த கதை** : (1985)—பக். 85]

பாரதியை அறிந்தவர்கள் உயிரோடு வாழ்கின்ற காலத்திலேயே பாரதியிடம் தாங்கள் கொண்டிருந்த உறவைப் பெரிதுபடுத்திக்கொள்ளப் புரளிக் கதைகளை உலவ விட்டவர்களைக் கண்ட பாரதியின் தம்பி மனம் நொந்து, மேற்கண்டவாறு எழுதினார்.

இப்படி பற்பலரும் தங்கள் தங்கள் பங்குக்குப் பாரதி வரலாற்றுக்குப் புறம்பான செய்திகளைத் தரும் நிலையைத் தடுத்து நிறுத்துவதற்குள்ள ஒரே வழி பாரதியின் **சரியான வரலாற்று நூல்** ஒன்றைப் படைக்க முயல்வது தான்.

கற்பனைக் கதைகள் மிகமிக அதிகமாகவும், உண்மைச் சம்பவங்கள் மிகக் குறைவாகவும் பாரதி வரலாற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல்களில் காணப்படுவதைத் தவிர்க்கப் பாரதி ஆய்வியல் அறிஞர்கள் முன்வரவேண்டும்.

இந்தக் கருத்துக்கு அனுசரணையாக, இலங்கைப் பேராசிரியர், பாரதி இயல் அறிஞர், டாக்டர் கைலாசபதி அவர்கள் பாரதி நூற்றாண்டு விழா நெருங்கின சமயத்தில் தெரிவித்த கருத்து நம் சிந்தனைக் குரியது.

> "இன்றைய நிலையில், புதிய ஆராய்ச்சி பூர்வமான வரலாறு எழுதப்படுவது இன்றியமையாதது. பாரதியார் சம்பந்தமான அனைத்தையும் நடுவு நிலைமையுடன், மனச் சார்புகள் எதுவுமின்றி, ஆராய்ந்து அந் நூல் எழுதப்படல் வேண்டும். பாரதியாரைப் பற்றிய ஐதீகங்களும் கட்டுக் கதைகளும் எழுந்துள்ளன. இவற்றை யெல்லாம் தீர விசாரித்து, சான்றுகள் அனைத்தையும் மீளாய்வு செய்து, புதிதாய்க் கிடைக்கக்கூடிய தகவல்களையும் சேர்த்து ஆதாரபூர்வமான வரலாறு அவசியம் எழுதப்படல் வேண்டும்."

[**பாரதி ஆய்வுகள்** : (1983)—பக். 262]

பாரதிக்கு ஓர் முழுமையான ஆதாரங்களோடு கூடிய வரலாற்றை எழுதி முடிக்கும் பணி புனிதமான ஒரு தேசீயத் திருப்பணி ஆகும்.

பாரதியின் அரசியல் தொண்டு, பத்திரிகைப் பணிகள், கவிதை உலகில் சாதனை, குண நலன்கள்—ஆகிய பல்வேறு அம்சங்களையும் ஒருசேர இணைத்து பாரதிக்கு ஓர் வரன்முறையான வரலாறு எழுதப்படுமானால், அது பாரத தேச வரலாறாகவே திகழும் என்பதில் ஐயமில்லை.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

பாரதியும் வங்கமும்

இந்திய விடுதலைப் போரில் வங்கத்தின் பங்களிப்பை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் மிகவும் சிறப்பித்து எழுதி யுள்ளனர்.

வங்காளந்தான் இந்திய மக்களின் சுதேசிய, அரசியல் இயக்கங்களி லெல்லாம் முன்னணியில் நின்று, வழி காட்டியது என்பது வரலாறு காட்டும் பேருண்மை.

வங்கத்தில் தோன்றிய சுதேசிய எழுச்சியானது பாரத நாடெங்கும் பரவி வேர் பாய்ச்சுவதாயிற்று.

ஆக, சுருங்கச் சொல்வதானால், 1905 ஆம் வருடத்திய வங்கப் பிரிவினையால்தான் பாரத தேசமெங்கும் சுதேசீய எழுச்சி காட்டுத் தீப்போல் பரவியது என்பதுதான் உண்மை.

வங்கத்தின் எழுச்சிகளை எல்லாம் சுதேச பக்திப் பணியில் ஈடுபட்ட நேரத்தில், பாரதி நன்கு அறிந்து கொண்டார்.

வங்கத்தின் எழுச்சியால் உந்தப்பட்ட பாரதி, வங்கத்தை மிகவும் நேசித்தார்; வங்க தேசீய எழுச்சியை

ப.—5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்த்திப் போற்றினார்; வங்க தேசத்தின் எழுச்சிக்குத் தூண்டுகோலாக நின்ற மேலோர்களையும், வங்க மண்ணில் தோன்றிய பெரியோர்களையும் போற்றி வணங்கினார்.

வங்கத்தின் சுதேசிய எழுச்சியைக் கண்ட அளவிலேயே பெருமித உணர்ச்சியுடன் **வங்கமே நனி வாழியவே** என்றுதான் பாரதி பாட்டிசைத்தார்; வங்க எழுச்சிக்குப் பாட்டால் வாழ்த்துரை வழங்கினார்.

அரசியலில் காலடி எடுத்து வைத்த நாள்தொட்டு, பாரதி வங்கத்தையே வழிகாட்டியாகக் கொண்டார்.

வங்கத்தை வாழ்த்தியதோடு திருப்தி கொள்ளாத பாரதி, பெங்காளத்தின் போர்ப் பரணிப் பாடலான 'வந்தே மாதர' கீதத்தையும் மொழிபெயர்த்து அருளினார்.

இதோடு மட்டுமா?

வங்கத்தில் கிளர்ந்து எழுந்த தேசியப் புரட்சிச் செயல்களை யெல்லாம் ஊன்றிக் கவனித்து, அவற்றை யெல்லாம் முறையாக மக்களுக்கு அறியத் தரும் அரிய பணியிலும் பாரதி ஈடுபட்டார்.

தம் வாழ்நாள் வரையிலும் வங்கத்தோடு நேசப் பான்மையுடன் கூடிய உறவைக் கொண்டிருந்தவர் பாரதி என்பது மிகைபடச் சொல்லும் வார்த்தை யில்லை; உபசார வார்த்தையு மில்லை. உண்மை, முக்காலும் உண்மை.

வங்க மஹாஜனம் காளி என்ற பெயருடன் சக்தி தெய்வத்தை மிகுதியாகக் கொண்டாடி வந்தது பாரதியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது போலும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் விளைவு! பிற்காலத்தில் அவர் **காளிதாஸன், சக்திதாஸன்** என்கிற புனைபெயர்களை விரும்பிச் சூட்டிக் கொண்டார்.

பாரதின் அரசியல் தேசிய மறுமலர்ச்சி வாழ்வே-அதன் முதல் அத்தியாயமே-வங்க மண்ணிலிருந்துதான் துவக்கம் பெறுகின்றது.

'இந்தியாவுக்குச் சுய ஆட்சி தேவை' என்று **தாதாபாய் நவுரோஜி** முழங்கிய 1906 கல்கத்தா காங்கிரஸ் மகாநாட்டில் 'பால பாரத' சங்கத்தின் பிரதிநிதியாகப் பங்கு கொண்டவர் பாரதி; அதேபோது, சகோதரி **நிவேதிதா தேவி**யைத் தரிசனம் செய்து, 'சுதேச பக்தி' உபதேசமும் பெற்று, புதிய உத்வேகத்துடன் சென்னை திரும்பினார்.

பாரதி **சுதேச மித்திரன்** பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கிய காலப் பகுதியிலும் சரி, பின்னர் **சக்ரவர்த்தினி** பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றிய காலப் பகுதி யிலும் சரி, அதன் பின்னர் **இந்தியா** பத்திரிகையில் இரண்டறக் கலந்தபோதும் சரி - வங்கமண்ணிலே பிறந்து, தேசத்துக்கு வழிகாட்டிய உத்தமர்களைப் பற்றியும், அவர்களது தன்னலம் பாராட்டாத சேவைகளைப் பற்றியும் நிறையவே எழுதினார்.

வங்காள சகோதரர்களால் தொடங்கப்பட்ட சுதேசிய விரதமானது இந்தியாவுக்கு எண்ணற்ற நன்மைகளை விளைவிக்கவல்லது என்பதைத் தெளிவுறக் கண்டு கொண்ட பத்திரிகையாளர்களில் பாரதிக்கு என்றுமே சிறப்பிடம் உண்டு.

மகாகவி பாரதியையும், வங்க மாநிலத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பல் செய்திகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளன. விரிவாக ஆராய வேண்டியதை, இங்கே சுருங்கிய முறையில்தான் காணவேண்டி உள்ளது.

முதலில், வங்கம் பெற்றெடுத்த உத்தமர்களைப் பாரதி எவ்வாறெல்லாம் பாராட்டிப் போற்றி யுள்ளார் என்பதை 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற அளவில் காண்போம்.

வங்க தேசத்தில் பிறந்த நல்லறிஞர்கள் தேச பக்தியையே தங்கள் தலையாய மதம் என்று கருதியவர்கள் என்பதையும், துஞ்சும் பொழுதினும் தாயின் பதத் தொண்டு ஒன்றையே நினைந்திட்ட உத்தமப் பெரியார்கள் என்பதையும் நம்மவர்க்கு நினைப்பூட்டியவர், பாரதி.

சுதந்திரப் போராட்ட காலத்தில், பெங்காள மாகாணத்தில் ஒவ்வொரு ஹிந்துவாலும் பக்தி சிரத்தை யுடன் உற்சாகத்துடன் **வந்தே மாதரம்** பாடல் பாடப்பட்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த வங்கப் பேரறிஞர் **பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர்** இயற்றியதுதான் 'வந்தே மாதர'ப் பாடல். அப் பாடலில் பாரதி தம் மனத்தைப் பறிகொடுத்துத் தமிழ் மக்களும் பொருள் உணர்ந்து பாட வேண்டும் என்பதற்காகவே மொழிபெயர்த்தளித்தார்; அதோடு மட்டுமில்லை, மூலப் பாடலையும், தம் மொழிபெயர்ப்புப் பாடல்களையும், தொடர்ந்தாற்போல் தம்முடைய கவிதை நூல்களில் பதிப்பிக்கவும் செய்தார்.

பங்கிம் சந்திரர் வங்க இலக்கியத்திற்கு மறுமலர்ச்சி அளித்த பெருமைக்குரியவர். இப் பெரியாரைப் பாரதி 'பங்கிம் புலவர்' என்றும், 'தெய்வப் புலவர் பங்கிம் பாபு' என்றும் குறிப்பிட்டு, அப் பெரியாரிடம் தமக்குள்ள அளவு கடந்த மதிப்பையும் மரியாதையையும் புலப்படுத்திக் கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்கத்தாவில், 1907 இல், பங்கிம் சந்திரரின் விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதுசமயம்,

" 'ஸுஜலாம் ஸுபலாம்' என்ற திவ்விய வசனங்களிலே தொடங்கிய வந்தே மாதர கீதம் இப்போது பாரத நாடு முழுமைக்கும் பொதுவாகி விட்டது. இந்த கீதம் எழுதிய ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் நமது மகரிஷி கணங்களிலே சேர்த்துப் பூஜை புரியத் தகுந்தவர்"

[**இந்தியா** : 20-4-1907 — பக். 6]

என்று பங்கிம் சந்திரரை ரத்தினச் சுருக்கமாகப் பாரதி சிறப்பித்து எழுதினார்.

உமேச சந்திர பானர்ஜி என்பவர் வங்கத்தின் சுதேச பக்த சிரோரத்தினமாகத் திகழ்ந்தவர். இவர் காங்கிரஸ் இயக்கம் தோன்றவேண்டும் என்று கருதிப் பாடுபட்டவர். 1885 ஆம் ஆண்டில் கூடிய முதலாவது காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை வகித்தவர்; நாட்டுப் பணியில் தீவிர ஆர்வம் காட்டியவர்; இத்தகைய பெருமைக்குரிய உத்தமர் 1906இல் மரணமடைந்தார்.

உமேச சந்திரர் மறைந்தபோது பாரதி இப்படி எழுதினார்:

"தாய் நாட்டிலே பல்லாயிரந் துன்பங்களில் கிடந்து தத்தளிப்பவர்களாகிய 30 கோடி ஜனங்களின் நிலைமையை நினைந்து நினைந்து ஏங்கும் தன்மையுள்ளவராயினார். இம் முப்பது கோடி மனிதர்களின் நிலைமையை எவ்வாறாயினும் செம்மைப்படுத்த வேண்டுமென்ற பேராசை இவர் மனதிலே பலமாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்பட்டது. அதற்காக இவர் உழைத்தது கொஞ்ச மில்லை. இந்த மஹான் இறந்த துன்பத்தைப் பாரத நாடு நெடுங்காலத்திற்கு மறக்க மாட்டாது. மேலும், காங்கிரஸ் சபையின் பிரதம ஸ்தாபகர்களி லொருவரும் முதல் அக்கிராசனாதிபதியு மாகிய உமேச சந்திரரின் திருநாமம் நம்மவர் நினைப்பி லிருந்து எக்காலத்திலும் நீங்க மாட்டாது."

[**இந்தியா** : *28-7-1906 — பக். 1*]

நன்றியுள்ள நெஞ்சம் நினைத்துக் கொண்டிருக்க வேண்டிய பெயர்களிலே உமேச சந்திரரின் பெயரும் ஒன்று என்று குறித்த பாரதி, **அசுவினி குமாரதத்தர்** என்ற பெயரைக் கேட்ட அளவிலேயே,

> ''மஹரிஷி அசுவினி குமாரதத்தர் கீழ்ப் பெங்காளத்துக்குப் பிதா. எவனெல்லாம் ஏழையோ, எவன் வயிற்றிலே பசியும், மனதிலே துக்கமும் இருக்கின்றனவோ அவனெல்லாம் அசுவினி பாபுவின் சொத்துக்கு உரிமை யுடையவனாவான். இவருடைய உள்ளக் கருணையைப் பற்றி விவேகானந்தருடைய மடத்தைச் சேர்ந்த நிவேதிதாதேவி தமது புஸ்தக மொன்றிலே எழுதி யிருப்பதைப் படித்தவர்களுக்கு இவர் கர்ணாவதாரமென்பது விளங்கும். இவர் பெரிய வேதாந்தி''

[**இந்தியா** : *19-12-1908 — பக். 5*]

என்று பெருமிதத்துடன் குறித்தார்.

அதே சமயம், இம் மஹான் சிறையில் அடைப்புண்டு, நோயால் வருந்திக் கொண்டிருந்தபோது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஒரு பெரிய வயோதிகர், நல்ல ஞானி, சிறந்த பண்டிதர், ஜனங்களுக்குத் தந்தை போலிருந்து பாதுகாத்து வந்த மஹா உபகாரி சிறைச்சாலையில் நிர்நிமித்தமாக அடைப்புண்டு நோயில் வருந்தி நாளுக்கு நாள் உயிர் குன்றிக் கொண்டிருக்கிறார். இதை ஏனென்று கேட்பாரில்லை. இவருக்கு யாதொரு கதியும் இல்லாமல் போய்விட்டது"

[**இந்தியா**: 1-5-1909 — பக். 3]

என்று பாரதி நெஞ்சு பொறுக்காமல் எழுதினார்.

அசுவினி குமாரதத்தர் கர்ணாவதாரம் மட்டுமில்லை; நாமசூத்திரர் (பெயர் மட்டில் சூத்திரர்) என்று கூறப்பட்ட வங்கநாட்டின் பள்ளர்களையும் சமூக வரம்பினுள்ளே சேர்த்து உயர்வுபடுத்த முயற்சிகள் செய்துவந்த சமூக சீர்திருத்தத் தேச பக்தருங்கூட என்பதையும் பாரதி புலப்படுத்தி யுள்ளார்.

உமேச சந்திரர், அசுவினி குமாரதத்தர் ஆகிய பெரியவர்களைப் போன்றே, மக்களிடம் அன்பு கொண்டு, தாய் நாட்டிடம் பக்தி கொண்டு தேசபக்தியிலே சிறந்து விளங்கிய **சுரேந்திரநாத் பானர்ஜி**யையும் பாரதி நெஞ்சாரப் போற்றி மகிழ்ந்தார். சுதேசியத்தில் அதிக ஊக்கம் காட்டிய வங்கச் செல்வரான இவரைப் பாரதி, 'தாய் நாட்டுக் கடமையைக் கல்லும் கரையும்படி உபதேசம்' செய்தவராகவே வருணித்தார்; மற்றும், 'பெங்காளத்தைக் கிரீடாதாரணம் இன்றி ஆளும் ராஜன் என்று சொன்ன உடனே, அது, சுரேந்திரநாத் பானர்ஜிதா னென்று அனைவரும் அறிந்துகொள்வார்கள்' என்றும் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தவர், பாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரோஜினி நாயுடு


சுரேந்திரநாத் பானர்ஜி

ராஜா ராம் மோஹனராய்

விவேகானந்தர்

வங்கத்தின் செல்வர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுரேந்திரநாத் பானர்ஜி **பெங்காளி** பத்திரிகையை நடத்தியவர்; பெங்காளத்தில் வசித்த மக்கள் ஐக்கியத் தன்மையும், அன்பும் கொண்டவர்களாக வாழவேண்டும் என்பதற்காகப் பெரிதும் பாடுபட்டவர்.

தாய்நாட்டு நன்மையையே நாடிநின்ற **சுரேந்திரநாத் பானர்ஜி** அவர்களைப் பாரதி,

''பெங்காளப் பிரிவினை நாள்முதல் சுதேசியத்தில் அதிக ஊக்கங் கொண்டு சிறு பிள்ளைக்கு நல் உபதேசங்கள் செய்து, அவர்களை நல்வழியில் விடுதலிலும், வயது வந்தவருக்குத் தாங்கள் நடந்து கொள்ள வேண்டிய வழியையும் தாய்நாட்டுக் கடமைகளையும் கல்லும் கரையுமாறு இரவும் பகலும் ஓயாமல் உபதேசித்து வரும் சுரேந்திரநாத் என்ற மகானை உருத் தெரியாப் பிள்ளைகளும் அறிந்திருக்குமெனில், இப்பெரியோரை என் சொல்வது?

''நமது நாட்டில் சுதேசிய விதையிட்டு, அவ் வயலின்கண் குடிலிட்டுக்கொண்டு இடைவிடாது காப்பவர் இம் மகான் என்பதை யாரும் மறுக்கார். தன் குலத்தன்மையைக் கருதி, இனி யான் விவாஹம் புரியேனென விரதங் கொண்ட அப் பீஷ்மரைப் போலவே, இம் மகானும் தாம் எத்தகைய துன்பத்திற்காளாயினும், எத்தனை தரம் கைது செய்யினும் தன் தாய்நாட்டு நன்மையைத் தேடி, சுதேசியம் செழித்துக் கிளைவிட்டுப் பழம் தரும் அளவும் யான் காத்து நிற்பவனெனக் கங்கணம் கட்டி யிருக்கிறார்''

[**இந்தியா :** *18-8-1906*—பக். 7]

என்றே நினைவுகூர்ந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவரை மட்டுமா?

இழிந்த நிலைமையில் இருந்த 'இந்தியா'வைக் கை தூக்கிவிடும் பொருட்டாக அவதரித்த தெய்வம் என்றே **விபின சந்திர பால**ரைக் கண்டார், பாரதி; திலகர் பெருமானின் வழிநின்று நாட்டுப்பணி ஆற்றிய பத்திரிகையாளரான பாலரின் மாசு மறுவற்ற அரசியல் கோட்பாடுகளால் கவரப்பட்டார். மதுவிலக்குக் கொள்கையில் பிடிப்புக் கொண்ட வங்காள ஜனத் தலைவரான பாலரின் அழைப்பின் பேரிலும் பாரதி 1906 கல்கத்தா மகாநாட்டில் கலந்து கொண்டார் என்பதும் பெருமைப் படக்கூடிய செய்தி. அதேபோல், பால பாரத சங்கத்தின் சார்பில், சென்னைக்குப் பாலரை அழைத்து வரவும், சொற்பொழிவு ஆற்றவும் பெருந்துணையாக இருந்தவர் பாரதி.

வங்க நாட்டின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய விபின சந்திர பாலரின் பெரும் பணிகள் குறித்து,

"கீழ் பெங்காள முழுதிலும் முடி சூடாத அரசராக விளங்கும் ஸ்ரீ விபின சந்திரர் சுதேசிய தெய்வத்தின் வங்க நாட்டவதாரம் என்று கருதுவதற்குரியவர். ஸ்ரீ ஹனுமான் எப்படி ஆகாரம் முதலிய எவ்விதமான லோக போகங்களையும் இச்சிக்காமல் 'ராம ராம' என்று தியானம் செய்துகொண்டே, ஆனந்தமடைந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றதோ, அதுபோல ஸ்ரீ விபின சந்திரரும் சதாகாலமும் பாரத நாட்டின் அபிவிருத்தியைப் பற்றித் தியானம் செய்வதிலேயே நாள் கழிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஹனுமானுக்கு எப்படி "ராமாமிருதம்" ஜீவனம் ஆகிறதோ, அதுபோல விபின சந்திரருக்கு "பாரதாமிருதம்" ஜீவனம் என்று கூறுதல் மிகவும் பொருந்தும்"

[**இந்தியா**: *26-1-1907*—பக். 4]

என்று எழுதிப் பெருமிதம் கொண்டார் பாரதி.

வங்கத்தின் முடிசூடா மன்னவரை உச்சிமீது வைத்துக் கொண்டாடிய பாரதி, வங்கத்து மகா கவி **ரவீந்திர நாத**ரை உலகத்து மகாகவிகளில் ஒருவராகவே போற்றிப் பெருமைப்பட்டார். 'ரவீந்திர கவிச் சக்கரவர்த்தி' என்றும், 'பாரத ரவீந்திரராகிய நவீந்திரர்' என்றும் அடைமொழிகள் கொடுத்தும் சிறப்பித்தார். 'கீர்த்தி அடைந்தால், ரவீந்திரரைப் போல் கீர்த்தி அடைய வேண்டும்' என்று மகிழ்ச்சி கொண்டாடினார். மற்றும், ரவீந்திரரின் படைப்புகளை உலகம் பாராட்டிய செய்தியை நம்மவர்க்கு உணர்த்தினார்; கவிதை ஒன்றையும், கதை—கட்டுரைகளில் சிலவற்றையும் மொழிபெயர்த்தார்.

சுவாமி விவேகாநந்தர் வழியில், பாரத தேசத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவர் என்று ரவீந்திர நாதரின் புகழை விதந்துரைத்தார், பாரதி.

"தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தி யொரு கீர்த்தியாகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்த்ர நாதர் இந்தியாவைப் பூலோக குருவென்று பூமண்டலத்தார் கண்முன்னே நிலை நாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலர்கள் வாழ்க!"

[**பாரதி தமிழ்** (*1953*) —பக். *486*]

என்று நெஞ்சாரப் பாரதி பாராட்டி, ரவீந்திரருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஹிந்துக்கள் நாகரிகத்திலும், அறிவிலும், ஆன்ம ஞானத்திலும் மேம்பட்டவர்கள் என்பதைத் தம்முடைய மேற்றிசை நாடுகளின் யாத்திரையால் நன்கு புலப்படுத்தியவர் **சுவாமி விவேகானந்தர்.** இவரை ஞானி என்றும், சர்வ சந்நியாசி என்றும் போற்றி வழிபாடு செய்தது அறிஞர் உலகம். இவர் தெய்வத் தன்மை வாய்ந்தவர் என்றும், உலக முழுமைக்கும் ஞான ஒளியைக் காட்டிவிட்டு, இளமையிலேயே வீடு பேறு அடைந்தவர் என்றும் போற்றிப் பெருமை பாராட்டினார்கள் இந்தியர்கள்.

விவேகாநந்தரைப் பொறுத்தமட்டில், பாரதி உலக அறிஞர்களின் கருத்துக்கு மதிப்பளித்தார். அதேபோல, இந்திய மக்களின் கணிப்புக்கும் தலைவணங்கினார். என்றாலும், விவேகாநந்தரைப் பாரதி புதிய பாரத தேசத்தை உண்டாக்கியவர்களிலே முதல் வகுப்பைச் சார்ந்தவர் என்றே சிறப்பித்தார். விவேகாநந்தரின் தேச பக்தியே பாரதியை ஈர்த்துவிட்டது என்பதில் ஐயமில்லை.

வேதாந்த மார்க்கத்தில் முற்றிலும் ஈடுபட்டு, உலகை மறந்த இராமகிருஷ்ண பரமஹம்சரின் தலைமைச் சீடரான விவேகாநந்தரின் தேசபக்திக்குப் பாரதி தலைவணங்கினார்.

> "இந்தியாவில் தோன்றி யிருக்கும் புது எழுச்சிக்கு எத்தனையோ பேர் எத்தனையோ விதமான காரணர்களாக விளங்குகிறார்கள். சுவாமி விவேகாநந்தர் மதாச்சாரியாராகவே நாட் கழித்த போதிலும் தேச பக்தி யெழுச்சிக்கு அவர் பெரியதோர் மூலாதாரமாக நின்றனர்"

[**இந்தியா**: *24-11-1906* —பக். 4]

என்று பெருமிதம் அடைந்ததோடும் அல்லாமல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஸ்வாமி விவேகாநந்தரின் தேச பக்தியானது அபரிமித மென்பதை நாம் இங்கே குறிப்பிடுவது அவசியமில்லை... நம்மவரின் அதிருஷ்டத்தாலும், ஈசனுடைய திருவருளாலும் மற்றெல்லா மாயைப் படலங்களையும் அறுத்தெறிந்துவிட்ட விவேகாநந்தர் சுதேசப் பற்றை மட்டிலும் நெடுங்காலம் கொண்டிருந்தனர்''

[**இந்தியா** : 25-8-1906 —பக். 5]

என்றும் சுவாமி விவேகாநந்தரின் தேச பக்தியை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டார், பாரதி.

'சர்வ சந்நியாசியாகிய விவேகாநந்தர் தம் தாய் நாட்டிடத்து மட்டும் ஒருவிதமான அதிகப் பற்று வைத்திருக்கலாமா?' என்று சிலர் கேள்விக் கணை தொடுத்தனர்.

பற்பலரும் பலவிதமான விளக்கங்கள் அளித்தனர். ஆனால், பாரதியோ தெள்ளத் தெளிவாக,

"விவேகாநந்தரிடம் இயற்கையிலேயே சுதேச பக்தி வேர் ஊன்றிப்போய் விட்டது. மஹா பலம் கொண்டவளாகிய பாரத மாதா தனது பலத்தைத் தானே அறியாதவளாகி, அடிமை நிலை கொண்டு நிற்பதை அவரால் பார்த்துச் சகிக்க முடியவில்லை''

[**இந்தியா**: 25-8-1906—பக். 5]

என்று விவேகாநந்தரின் தேசபக்திக்கு விளக்கம் கண்டார்.

அருட் புலவர் என்றும், சிந்தனைச் சிற்பி என்றும் வங்க மக்களால் பெரிதும் மதித்துக் கொண்டாடப் பட்டவர் **அரவிந்த கோஷ்.**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரவிந்தருடைய எழுத்தும் பேச்சும் சுதேசிய இயக்கத்திற்குப் புத்துணர்வையும் புதுவேகத்தையும் அளித்தன. அரவிந்தரும் திலகர் அணியைச் சேர்ந்தவர் என்பதால், பாரதி தம்மை அறியாமலே அரவிந்தரிடம் ஈடுபாடு கொண்டார். அரவிந்தருடைய அரசியல் — ஆன்மிகக் கோட்பாடுகளைப் பரப்பும் முயற்சிகளில் பாரதி முன்னணியில் நின்றார்,

தமிழகத்தில் அரவிந்தருடைய அரசியல் கொள்கை களைப் பத்திரிகை மூலம் பரப்பிய பாரதி, புதுவை வாசத்தின்போது அவர்தம் ஆன்மிகக் கோட்பாடுகளைத் தமிழில் தரக் **கர்மயோகி** என்னும் மாத இதழைத் தொடங்கியதும் வரலாறு தெரிவிக்கும் சேதிகளாகும். மற்றும், புதுவையில் அரவிந்தர் தங்கி இருந்த சமயம், அவருடன் வேதாந்த விசாரணையில் பாரதி ஈடுபட்டதும் உண்மை.

சுதேசியத்தின் நபிநாயகர் என்றே அரவிந்தரைப் பாரதி பெருமையோடு எழுதினார். மற்றும் 'ஞானச் சுடர்', 'தர்ம சூரியன்' என்றும் பொருள் செறிந்த அடைமொழி களால் குறிப்பிட்டு, அரவிந்தரின் மகிமையைப் பாரதி நம்மவர்க்கு உணர்த்தவும் செய்தார்.

அரவிந்தருக்குப் பாரதி எத்துணையோ புகழாரங்கள் சூட்டியிருப்பினும், பின்வரும் பகுதி மட்டும் நெஞ்சிருக்கும் வரை நினைவில் நிற்கும் பான்மை கொண்டதாகும்.

> "அவருடைய தேசபக்தியும், மாசற்ற ஒழுக்கமும் அவருடைய கொள்கையினின்று மாறுபட்டவர்கள் கூட, அவரைத் தெய்வம் போலப் பாராட்டி மதிக்கும்படி செய்கின்றன.''

[**இந்தியா** : *22-5-1909— பக். 2*]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதைவிட வேறு வகையில் அரவிந்தர் மகிமையை எடுத்துச் சொல்ல முடியுமா, என்ன?

பாரதிக்கு அரசியல் மறுமலர்ச்சியில் மட்டுமே யல்லாது, சமூக சீர்திருத்தங்களிலும், பெண்கள் மேம்பாடு, கல்வி முன்னேற்றத்திலும் மிகுந்த ஈடுபாடு உண்டு,

அந்த வகையில், இளமைக் காலத்திலேயே பாரதியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மகான் **ராஜா ராம் மோகன்ராய்** எனக் கொள்ளலாம். அம் மகானுடைய கொள்கைகள், செய்கைகள் ஆகியன யாவும் பாரதிக்கு உடன்பாடே.

ராஜா ராம் மோகன்ராய் இந்த மனித சமூகத்துக்குச் செய்திருக்கும் மகத்தான திருப்பணிகளைக் கண்டு வியந்து, அவரைப் பெரிதும் பாரதி பாராட்டினார்.

அநீதிகளை எதிர்த்த உத்தமர் என்றும், பகல்வேஷம் போட்டு மோசம் செய்யாத சீலர் என்றும் போற்றி எழுதியது, பாரதியின் எழுதுகோல்.

ராஜா ராம் மோஹனரின் சிலை ஊருக்கு ஊர் நிறுவப்பட வேண்டும் என்பதும், தேசத்தில் வழங்கும் மொழிகள் அனைத்திலும் அவருடைய திருச் சரித்திரம் எழுதப்படல் வேண்டும் என்பதும் பாரதியின் ஆசைக் கனவுகளாகும். தம் ஆசைக் கனவுகள் மெய்ப்பட வேண்டி, பாரதி நாட்டு மக்களிடம் காரியத்தில் உறுதிகொள்ள வேண்டுகோளும் விடுத்தார்.

தீமைப் பாதைகளில் சென்று கொண்டிருந்த மக்களுக்கு நல்வழி காட்டிய ராஜா மோஹன மகானின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குணங்களை விளக்கிய பாரதி, அவரை மறப்பது மகாபாவம் என்பதையும் சுட்டிக் காட்டவே செய்தார்:

"ராம் மோஹன சூரியன் பெங்காளத்திலே உதித்தபோது, இத் தேசம் பேரிருளில் முழுகிக் கிடந்தது.

"இடையிடையே இவ்வுலகினைக் கை தூக்கிவிடும் பொருட்டுத் திருவவதாரம் புரியும் மகா குரு கணத்துள்ளே ராம் மோஹனர் ஒருவர். அவர் அநீதியைக் கண்டு பொறுக்கமாட்டார்.

"எண்ணிறந்த ஸ்திரீ ஹத்தி புரிந்து, இத் தேசத்துக் கெல்லாம் அழிக்க முடியாத பெரும் பழி கொடுத்த ஸதி தஹன மென்னும் அரக்கனை மிதித்துக் கொல்லும்படியாக முதலிலே தூக்கப்பட்ட ராம் மோஹனரின் திருவடியை நாம் மறந்துவிட்டால் நமக்கு உய்யுண்டாமா?''

[**சக்ரவர்த்தினி** : 1906 ஆகஸ்ட் இதழ்—பக். 4;5]

இவ்வாறெல்லாம், செல்வத்திலேயும் மதிப்பிலேயும் சிறந்து விளங்கிய ராஜா ராம் மோகனரின் பெருமையைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டினார், பாரதி.

அரசியல், வேதாந்தம், சமுதாயத் திருத்தம் ஆகிய துறைகளில் உலகத்தாரின் நகைப்பு, உலகத்தாரின் நிந்தை, அவர்களின் அவமதிப்பு, அவர்கள் செய்த துன்பம், பொருட்சேதம், சரீரத் துன்பம் ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாமல் பாடுபட்ட உத்தமர்களையெல்லாம் பெரிதும் மதித்து, அவர்களுடைய திருப்பணிகளுக்குத் தலைவணங்கிய பாரதி விஞ்ஞானம், கலை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியம் ஆகியன போன்ற பல்வேறு துறைகளில் தம் முத்திரைகளைப் பதித்தவர்களையும் போற்றவே செய்தார்.

இயற்கை நூலில் நிகரற்ற திறமை பெற்றவரான **ஜகதீச சந்திர**ரைப் பாரதி பாராட்டும் விதமே அலாதியானது. விஞ்ஞான மேதையாகத் திகழ்ந்தும், ஜகதீச சந்திரர் இந்து மதத்தில் ஆழ்ந்த பக்தியும் கொண்டிருந்தார்.

ஜகதீச சந்திரரின் இப் பண்பு பாரதியைப் பெரிதும் கவர்ந்தது; அவரை வியப்பிலும் ஆழ்த்தியது.

விஞ்ஞான மேதையிடம் தாம் கொண்டிருந்த பற்றையும் பெருமதிப்பையும் பாரதி புலப்படுத்தியது ஒருபுறம் இருக்க, அந்த விஞ்ஞான மேதையின் சொற்பொழிவு ஒன்றையும் தமிழில் ஆக்கி, **ஜீவ வாக்கு** என்ற தலைப்பெயரால் அதை நூலாகவும் வெளிவரத் துணை செய்தார்.

ஜகதீச சந்திர வஸுவின் சிறப்புகள், தொண்டுகள் ஆகியன பற்றிப் பாரதி வரைந்த சொற் சித்திரம் இது:

"அற்புத பரீக்ஷைகளினால் உலகத்தின் உயிரொலியை நமக்குத் தெரியும்படி செய்த மஹானாகிய ஜகதீச சந்திர வஸு நம்முடைய ஹிந்து மதத்தில் ஆழ்ந்த பக்தி யுடையவர் என்பது சொல்லாமலே விளங்கும், ஹிந்துக்களின் மேன்மையைப் பற்றி அவர் வார்த்தை சொல்லும்போது, அந்த வார்த்தைகளிலே மிகச் சிறந்ததொரு ஜீவநாதம் உண்டாகிறது. அந்த வார்த்தைகளைப் படிக்கும் போதே படிப்போரின் ஜீவசக்தி மிகுதிப்படுகிறது.'

[**பாரதியார் கட்டுரைகள்** (1940)—பக். 67]

ப.—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

" 'செடியின் நாடி மண்டலம் மனிதனுடைய நாடி மண்டலத்தைப் போலவே உணர்ச்சித் தொழில் செய்கிறது' என்பதை உலகத்தில் சாஸ்திர நிரூபணத் தால் ஸ்தாபனம் செய்தவர் நமது ஜகதீசசந்திரவஸு. உலோகங்களிலும் இவர் பல புதிய சோதனைகள் செய்திருக்கிறார். ஒளி நூலில் மஹா வித்வான். தந்தி யில்லாத தூர பாஷைக் கருவியை 'மார்க்கோனி' பண்டிதர் உலகத்துக்கு வழக்கப்படுத்து முன்பே, ஜகதீச் சந்திரர் அந்த விஷயத்தைப் பற்றி துல்ய மான ஆராய்ச்சிகள் செய்து முடித்திருந்தார். செடி களுடைய ப்ராணனில் நாடி யுணர்ச்சி எங்ஙன மெல்லாம் தொழில் செய்கிறது என்பதைக் கண்டு பிடித்ததே, இவர் மனித சாஸ்திரத்துக்கு இதுவரை செய்திருக்கும் உபகாரங்களில் பெரிது."

"இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள் இயற்கை நூல் (ப்ரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடைமை என்று கருதி வந்தார்கள். இப்போது நமது ஜகதீச சந்திர வஸு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல் நாட்டு வித்வான்களில் ஒப்புக்கொள்ளாதார் யாருமில்லை."

[**பாரதியார் கட்டுரைகள்** (*1940*) — பக். *111;78*]

ஹைதராபாத்திலே பிறந்து வளர்ந்து இருந்தாலும், வங்கப் பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர் **சரோஜினி தேவி**. ஜாதிக் கட்டுகளைத் தகர்த்தெறிந்து நாயுடுவை மணந்தவர்; பிற்காலத்தில் 'கவிக்குயில்', 'கவியரசி' என்ற புகழ்ப் பெயர்களாலே அழைக்கப்பட்டவர்.

மாதர் குலத்தின் மாணிக்கமாய்த் திகழ்ந்த இவருடைய கவித்திறனும், பெண் கல்வி வேண்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும், பெண் கல்வியை விருத்தி செய்ய வேண்டும் என்றும் இம் மாது சிரோன்மணி வற்புறுத்திய பான்மையும், பிற சேவைகளும் பாரதியைப் பெரிதும் கவர்ந்தன.

அதனால், சரோஜினி தேவியைப் பாராட்ட முன் வந்தார் பாரதி.

100889

அவர் எழுதுவார், இப்படி :

"வங்காளத்துப் பிராமண குலத்தில் பிறந்து, ஹைதராபாத் நாயுடு ஒருவரை மணம் புரிந்து வாழும் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு என்ற ஸ்திரீ இங்கிலீஷ் பாஷையில் உயர்ந்த தேர்ச்சி கொண்டு ஆங்கிலேய அறிஞர்கள் மிகவும் புகழ்ந்து போற்றும்படியாக இங்கிலீஷில் கவிதை எழுதுகிறார். இவருடைய காவியங்கள் பல, இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு, அங்குள்ளோரால் மிகவும் உயர்வாகப் பாராட்டப் படுகின்றன. மேலும், இந்த ஸ்திரீ இங்கிலாந்தில் பல இடங்களிலே, நமது தேசத்து முன்னேற்றத்தை யொட்டி அற்புதமான ப்ரஸங்கங்கள் செய்து சிறந்த கீர்த்தி படைத்திருக்கிறார்."

[**பாரதியார் கட்டுரைகள்** (*1940*)—பக். 224)

இப்படி கவியரசி சரோஜினி தேவியின் கீர்த்தியை எடுத்துச் சொன்ன பாரதி, வேறு சில வங்க ஸ்திரீ ரத்தினங் களும் கீர்த்தி பெற்றதைக் குறிப்பிடுகிற பொழுது,

"மேலும் வங்காளி பாஷையிலே கவிதை எழுதுவோராகிய ஸ்ரீமதி காமிநீ ராய், ஸ்ரீமதி மனகுமாரி தேவி, ஸ்ரீமதி அநங்க மோஹினி தேவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற மூன்று ஸ்த்ரீகளுடைய பாட்டுக்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்து அமெரிக்காவிலுள்ள பத்திரிகை யொன்று புகழ்ச்சி யுரைகளுடன் சிறிது காலத்துக்கு முன்பு ப்ரசுரம் செய்திருப்பதினின்றும், இம் மாதர்களுக்கு அமெரிக்காவில் நல்ல கீர்த்தி யேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது"

[**பாரதியார் கட்டுரைகள்** (*1940*)— பக். 224-225]

என்று எழுதியது நம் சிந்தனைக்குரியது.

இன்னும் சொல்லப்போனால், வங்க தேசாபிமான முயற்சிகளிலும், கல்வி மேம்பாட்டிலும், ஞான விஷயங்களிலும் அக்கறை கொண்டு பாடுபட்டவர்களான **ராஸ விகாரி கோஷ், ஆனந்த மோகன வஸு, ஸுபோத சந்திர மல்லிக், அபேதாநந்தர், பூபேந்திரர்** போன்ற உத்தம சீலர்களைப் பற்றியும் பாரதி எழுதிச் சிறப்பித்துள்ளார்.

தேச பக்திக்கான அனலைத் தூண்டியவர்களில் வங்கத்தில் ஒரு பெண்மணி உண்டு என்றால், அப் பெண்மணி **சரளதேவியே** யாவார். இப் பெண்மணியைக் குறித்துப் பாரதி எழுதுங்கால் ''ஞானமணி'' என்றே விளிக்கிறார்.

"ஸரளதேவி என்ற பெங்காள மாது கல்வியும், அருளும், தேச பக்தியும் பெற்று விளங்கும் பெருமையை மற்றொரு முறை தனியாகப் பிரஸ்தாபிக்க நேரிடும்.''

[**சக்ரவர்த்தினி** : *1906* ஜனவரி இதழ்—பக். 126]

என்று பாரதி தகவல் தருகிறார்.

பின்னும், தாம் மொழிபெயர்த்த பாரத ஜனசபை என்கிற காங்கிரஸ் மகாநாட்டின் நடவடிக்கைக் குறிப்பில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"...இந்த ஸரளாதேவி வங்காளத்தில் தேசபக்தி அனலைத் தூண்ட மூல காரணமாக உழைத்தவர்களில் ஒருத்தி யாவார். இவர் இடந்தோறும் போய் வங்காளப் பிள்ளைகளுக்கு 'கஸ்ரத்' பழகுவதே ஸந்த்யாவந்தனம் பண்ணுவதற்கு மேலான அல்லது ஸமமான தர்மமென்று கற்றுக் கொடுத்தார்"

[**பாரத ஜன சபை** (1920) — பக். 117]

என்று ஸரளதேவியின் சீரும் சிறப்பும் பற்றிச் சொற்செட்டுடன் எடுத்துக்காட்டினார் பாரதி.

இனி, வங்கத்தில் எழுந்த சுதேசிய இயக்க முயற்சிகளைப் பாரதி எவ்வாறெல்லாம் மக்களிடையே புலப்படுத்திக் காட்டினார் என்பதைப் பார்ப்போம்.

சுதேச மித்திரன் பத்திரிகையில் வங்க வாழ்த்துக் கவியோடு, வங்க எழுச்சியை வாழ்த்திப் பெருமைப் படுத்திய பாரதி, **சக்ரவர்த்தினி** பத்திரிகையில் **பாபு சுரேந்திரநாத் பானர்ஜி** காசி நகரில் தம் நண்பர்களுடன் 'வந்தே மாதர' கீத முழக்கத்துடன் நகர்வலமாக வந்ததன் பின்னர், காசி விசுவநாதர் சந்நிதியில் செய்து கொண்ட பிரதிக்கினையோடு தம் வங்க சுதேசிய பிரச்சாரத்தை ஆரம்பிக்கிறார்.

"ஈசா, உனது காருண்ய விசேஷத்தால் எங்களது இச்சை நிறைவேறுவதாக. நாங்கள் எங்களால் கூடிய வரை அன்னிய தேசச் சாமான்களைத் தள்ளிவிட்டு, எங்கள் தாய் நாட்டில் செய்யப்பட்ட சாமான்களையே வாங்குவதாக உனது திருவடி மீது ஆணையிட்டுக் கொடுக்கிறோம். இம்மாதிரியே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாருடைய மனதிலும் நல்லெண்ணம் ஏற்படுமாறு நீ திருவருள் புரிவாயாக! ஜய் விசுவநாத்! வந்தே மாதரம்!''

[**சக்ரவர்த்தினி** : 1905 டிசம்பர் இதழ்—பக். 117]

சுதேசிய வெற்றிக்கு அடிக்கல் நாட்டிய இந்தியப் பெரியார், இவர். சுதேசீயம் வெற்றி பெற ஈசன் திருவருளை நாடிய இவர், நம்பிக்கையோடு பாடுபட்டார்.

சுரேந்திரநாத் பானர்ஜி சுதேசீய முயற்சி வெற்றி பெற வேண்டுவதற்கான ஒருசில வழிமுறைகளையும் நாட்டு மக்களுக்கு வகுத்துக் காட்டவும் செய்தார்.

இதைப் பாரதி பெருமகிழ்வுடன் வெளியிட்ட பாங்கு வருமாறு :

''சென்ற 12-ம் தேதியன்று கல்கத்தாவில் கூடிய ஒரு பெரிய கூட்டத்தில் பாபு சுரேந்திர நாத் பானர்ஜி ஒரு பிரசங்கஞ் செய்தார். அதில் வங்காளத்திலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் சுதேசீயக் கமிட்டி யொன்று ஸ்தாபிக்க வேண்டு மென்றும், இந்தக் கமிட்டியார் தத்தம் ஊரில் சுதேசீயத்தைப் பற்றிய பிரசங்கங்கள் செய்து, அந்நிய நாட்டுச் சரக்கை வரவொட்டாது தடுப்பதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்றும் பேசினார்.

''அவ்வாறே வங்காளத்தில் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு கமிட்டி ஏற்படப் போகின்றது. அந்நிய சரக்கை விலக்குவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டுமோ அம் முயற்சிகளைச் செய்வார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இவ்விதம் சென்னையிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு கமிட்டி ஏற்பட்டு, சுதேசியத்தை விருத்தி செய்யுமானால், மிகவும் நன்றா யிருக்கும்."

[**இந்தியா** : *19-1-1907* — பக். *13*]

பாரதியின் விருப்பத்தையும் இங்கே பார்க்க முடிகின்றது. வங்கப் பெரியார் சுரேந்திர நாத் பானர்ஜியின் சொற்பொழிவால் வங்க நாட்டிற்கு விளையப் போகும் நற்பயனைச் சுட்டிக்காட்டி, வங்கத்தைப் பின்பற்றிச் சென்னை மாகாணமும் சுதேசிய தருமத்தைக் கடைப்பிடித்து நன்மை பெறவேண்டும் என்றே பாரதி விரும்பினார்.

சுதேசியக் கமிட்டி ஒன்றை வங்காளத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஏற்படுத்தவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த சுரேந்திர நாத் பானர்ஜி, பம்பாய்க் கூட்டத்தில் பேசும்போது இப்படி எடுத்துரைத்தார் :

"வியாபாரிகள் இதில் எடுக்கவேண்டிய முயற்சி அதி முக்கியமானது. சுதேசிய சாமான்கள் செய்வதோடு அவற்றைச் சற்றேறக் குறைய குறைந்த விலைக்கும் விற்கவேண்டும், குறைந்த விலைக்கு விற்றாலல்லாமல் நமக்குப் போட்டியாய் நிற்கும் பரதேசிச் சாமான்களை அகற்ற முடியாது. அதிக லாபத்தைக் கருதாமல், சுதேசியத்தின் அபிவிர்த்தியை மட்டுமே கருதவேண்டும். இவ்வாறு கொஞ்சகாலம் நடத்தினால் கூடிய விரைவில் பரதேசிச் சாமான்கள் மெல்ல மெல்ல ஒதுங்கி விடும். இதுவே வியாபாரத்தின் ரகஸ்யம்."

[**இந்தியா** : *1-12-1906* — பக். *12*]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த விதமாக, வியாபாரிகளின் கடமை உணர்வை நினைப்பூட்டிய சுரேந்திர நாத் பானர்ஜியின் சுதேசிய விஷயங்களை யெல்லாம் 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரம் செய்தவர் பாரதி.

வங்கத்தில் லக்ஷ்மிபுரம் என்கிற ஊரில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியானது பாரதியின் உள்ளத்தைத் தொட்டது. சின்ன விஷயம்தான். ஆனால், பாரதியின் தேசீயப் பார்வைக்கு அது பெரும் திருப்பணியாகவே பட்டது.

பாரதியின் பார்வையில் பட்ட சுதேசீயத் திருப்பணியைத் தெரிவிக்கும் செய்தி இதுதான்:

> "வங்காள நாட்டில் லக்ஷ்மிபுரம் என்கிற ஊரிலே காலம் சென்ற யாதவ கிருஷ்ண முஜூம்தார் என்பவரின்... சிரார்த்தம் சமீபத்தில் நடைபெற்ற பொழுது... சிரார்த்தத்தில் உபயோகிக்கப்பட்ட வஸ்துக்களும், போஜன சாமக் கிரியைகளும் எல்லாம் சுதேசீயமாகவே இருந்தனவாம்."

[**இந்தியா** : *30-3-1907* — பக். *12*]

எங்கும், எதிலும், எப்போதும் சுதேசிய தர்மத்தை மக்கள் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்பதை எடுத்துக் காட்டவும், சுதேசிய இயக்கத்திற்கு வலிமை கூடி வருகிறது என்பதை உறுதிப்படுத்திக் காட்டவும் பாரதி இந்தச் செய்தியை வெளியிட்டார் என்பது வெளிப்படை.

வங்காளிகளைப்போலே தமிழ் மக்களும் சுதேசீய அபிமானம் கொண்டு விளங்க வேண்டும் என்பதுதான் பாரதியின் எண்ணம்; எதிர்பார்ப்புங்கூட.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பயில்வோருக்குத் தேசபக்தி, அன்னியப் பொருள்களை விலக்குதல், தொழில் முன்னேற்றம் ஆகியவை பற்றி விளக்கும் சுதேசீயக் கல்விமுறையின் தேவையைப் பாரதி தமக்குச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் வற்புறுத்தி வந்தார்; சுதேசீயக் கல்வி முயற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களையும் பாராட்டி மகிழ்ந்தார்.

கல்கத்தாவிலே 1906-இல் சுதேசீய பல்கலைக் கழகம் தோன்றிய பொழுதில்,

> ''சுதேசீய யூனிவர்ஸிடி யொன்று கல்கத்தாவிலே ஸ்தாபித்து விட்டார்கள். ஸர் குருதாஸ் பானர்ஜி, ஸ்ரீ ராஸ விஹாரி கோஷ் முதலிய கீர்த்திமான்கள் அதன் பொருட்டு இரவும் பகலும் உழைத்து வருகிறார்கள். நாளுக்கு நாள் அவர்களுடைய முயற்சி தழைத்தோங்குமாறு இறைவன் அருள் புரிவாராக''

[**இந்தியா** : 25-8-1906— பக். 6]

என்று பாரதி பிரார்த்தனை செய்தார்.

கல்கத்தா தலைவர்களின் சுதேசீய முயற்சிகள் தழைத்தோங்க இறை யருளை வேண்டி நின்ற பாரதி, ஒருகணம் சென்னை மாகாணத் தலைவர்களின் மனோ பாவங்களையும் எண்ணி பார்க்கிறார். எப்படி?

> ''சென்னை மாகாணம் என்ன செய்கிறது? ஸர் குருதாஸ் பானர்ஜி, டாக்டர் ராஸ விஹாரி கோஷ் முதலிய பெரியோர்களின் ஸ்தானத்திலே இங்கிருக்கும் ஜனத் தலைவர்கள் சுதேசீயக் கல்வியைப் பற்றிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறிதேனும் சிந்தனை புரிகின்றார்களா? சாகிற வரை வக்கீலாகவோ, ஜட்ஜாகவோ அல்லது வேறு ஏதாகவோ வேலை பார்த்துக் கொண்டேயிருந்து பணம் சம்பாதித்துக் கொண்டிருக்குமளவிலேயே மூச்சுப் போய்விட வேண்டும் என்று நிச்சயம் பூண்டவர்களாக இருக்கிறார்கள். 'இது வரை பணஞ் சேர்த்துக் குவித்து வைத்திருப்பது போதும்; இனியேனும் சிறிதுகாலம் தேச நலத்தின் பொருட்டு ஏதேனும் செய்வோம்' என்ற யோசனை இவர்கள் மனதிற்கு வரவே மாட்டேனென்கிறது.''

[**இந்தியா** : *25-8-1906 — பக். 6*]

சென்னை மாகாண ஜனத் தலைவர்கள் தேசநலத்தின் பொருட்டுத் தத்தம்மால் இயன்ற அளவு சேவை செய்ய வேண்டும் என்று பாரதி வற்புறுத்தினார்.

நடிப்புச் சுதேசிகள் என்கிற கிளிக் கண்ணிகள் பாடல் மிகப் பிரசித்தமான பாடல். இதில் பாரதி,

''கூட்டத்திற் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ—கிளியே
நாளில் மறப்பாரடீ''

[**ஸ்வதேச கீதங்கள்** *(1908)— கண்ணி 2*]

என்று பாடியதால், சொல்லும் செயலும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று பாரதி எதிர்பார்த்தார் என்பது நமக்குப் புரிகிறதல்லவா?

சுதேசியத்தை ஆதரிக்க வேண்டும் என்று வாயளவில் பேசிவிட்டு, செயலளவில் நடைமுறையில் கைக்கொள்ளாதவர்களைப் பாரதி வெறுத்தார். அதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமயம் சொன்னதைச் செயலில் காட்டுகிறவர்களைக் கண்டுவிட்டால், அவர்களைப் பாராட்டுவதில் அவர் என்றும் பின்வாங்கியதில்லை. அவர்கள் செய்த சீரிய பணியின் பெருமையை நாலு பேர் அறியத் தந்தவர் பாரதி என்பதைப் பின்வரும் செய்திக் குறிப்பால் நாம் அறிந்து கொள்ளலாம் :

> ''கல்கத்தாவில் ஒரு சபையார் ஜனங்களுடைய மனதில் சுதேசியம் உண்டுபண்ணுவதற்காகச் சுய நலத்தைப் பாராட்டாமலே, நம் தேசத்துச் சாமான்களைக் கொள் கிரயத்திற்கே விற்கிறார்கள். அதுவுமன்றி, ஒரு வண்டி நிறையச் சாமான்களை யேற்றிக்கொண்டு போய் விற்கிறார்கள். தினந் தோறும் சாயங்காலத்தில் பீடன் என்னுமிடத்தில் சுதேசி சந்தை கூட்டுகிறார்கள்.''

[**இந்தியா** : 22-9-1906— பக். 5]

'அந்நியப் பொருள்களைப் புறக்கணித்துச் சுதேசிய பொருள்களையே ஆதரிப்பது' என்ற கொள்கையில் பிடிப்புக்கொண்டு நின்ற பெங்காளத்தாரின் சுதேசியத் திருநாள் கொண்டாட்டம் பற்றியும் பாரதி நிறையவே செய்திகளைத் தந்துள்ளார்.

நிர்வாக வசதிக்காக என்று சொல்லி, வங்க மாகாணத்தைப் பிரித்தார், கர்ஸன் பிரபு 1905 அக்டோபர் மாதத்திலே.

பெங்காள மாகாணத் துண்டிப்பைக் கண்டித்து 1905 அக்டோபர் முதற்கொண்டு தொடர்ந்து வந்த ஒவ்வொரு வருடமும் வங்க மக்கள் சுதேசியத் திருநாளைக் கொண்டாடி வந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதாவது, பெங்காள மாகாணம் துண்டிக்கப் பெற்றபோது, அந்தத் துண்டிப்பை மக்கள் அங்கீகாரம் செய்ய மறுத்து, தேச ஐக்கியத்தை உணர்த்தும் பொருட்டாக அக்டோபர் 16ஆம் நாளைத் தேசியத் திருநாளாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டனர். இதைத் தவிர, பெங்காளிகளில் ஒருசிலர் அன்றைய தினம் உண்ணாநோன்பு விரதத்தையும் கைக்கொண்டனர்.

வங்காளியர் மேற்கொண்ட சுதேசியத் திருநாள் கொண்டாட்டம் பாரதியின் உள்ளத்தைத் தொட்டது. வங்க நாட்டில் கொண்டாடப்படும் சுதேசத் திருநாள் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திப் பாரதி எழுதினார்.

பாரதி எழுதிய வாய்மை மணக்கும் ஐக்கிய உணர்ச்சி கொப்பளிக்கும் வசனப் பகுதி வருமாறு:

"அக்டோபர் மாதம் 16-ம் தேதியே இந்தியா புதிதாக ஜனனம் புரிந்த திருநாள். முற்காலங்களி லெல்லாம் இந்திய ஜனங்களுக்குள்ளே சிற்சில வேறுபாடுகள் இருந்தன. இனி இந்தியாவுக்குள் ஒருமை ஏற்பட்டுவிட்டது.

"இந்தியா ஒரே நாடு. இந்தியர்கள் ஒரே ஜாதியார். இதைக் குறிப்பிடும் திருநாள் நமக் கெல்லாம் உயிர்போன்ற இனிமை யுடையதாகும்.

"அமெரிகாவாசிகள் ஜூலை 4-ம் தேதியைச் சுயாதீனத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இந்தியாவிலுள்ள நாம் சுயாதீனத்திற்கு மூலாதாரமாகிய ஐக்கியத்தைக் குறிப்பிடும் பொருட்டு மேற்படி நாளை வழங்க நிச்சயித்திருக்கின்றோம்."

[**இந்தியா** : 27-10-1906— பக். 5]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, பெங்காளத்தாரின் சுதேசிய உணர்வுகளுக்கு மதிப்பு அளித்தவர் பாரதி. சுதேசிய விரதத் திருநாளுக்குத் தேசிய அந்தஸ்தும் பெங்காளத்தாரால்தான் ஏற்பட்டது என்றும் போற்றினார் பாரதி.

தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சிகளை மேற்கொண்ட வ.உ.சி. அவர்களின் பணியை வெகுவாகப் பாராட்டிய பாரதி, அதே போன்ற ஓர் பெரும் முயற்சி பெங்காளத்திலும் தொடங்கியதைக் கேள்விப்பட்டு,

> "சுதேசிய உணர்ச்சி இந்த நாட்டாருக்குள் வேரூன்றி வருவதற்கும், இங்குள்ளவர்கள் ஆங்கிலேயரை யொப்பப் பெருமுயற்சிகள் செய்யத் துணிந்து விட்டதற்கும் ஒரு சாட்சி வேண்டுமானால், பெங்காள ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியையும் சொல்லலாம். அவர்கள் 10 லட்சம் ரூபாய் போட்டு இரண்டு கப்பல்கள் வாங்கி, சிட்டாகாங்கிலிருந்து ரங்கூனுக்கும், ரங்கூனிலிருந்து சிட்டாகாங்குக்கும் ஓட்டி வருகிறார்கள். இந்தியர்களுக்குப் பிடிவாத மிருந்தால் எந்த முயற்சிதான் கைகூடாது?"
>
> [**இந்தியா** : 10-11-1906 — பக். 12]

என்ற செய்தியைப் பெருமிதத்துடன் வெளியிட்டது பாரதியின் "இந்தியா".

இந்திய மக்களுக்குத் தேவையானது விடா முயற்சி தான் என்பதை அடிக்கடி நினைப்பூட்டியவர், பாரதி. விடா முயற்சியுடன் தொடங்கும் காரியத்தில் வெற்றியும் உறுதிதானே!

செல்வந்தர்கள் பெரும் முதலீடு செய்து சுதேசிய முயற்சி கைங்கரியத்தில் ஈடுபடுகின்ற பொழுது, ஏழைகள் அதற்குத் துணை புரிவது எப்படி?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏழைகள் செல்வம் படைத்தவர்களைக் காட்டிலும் மன உறுதி படைத்தவர்கள் என்பதைத் தெரிவிக்க வங்காள மக்களில் கடைநிலையில் வாழ்ந்த மக்களின் செயலைத்தான் பாரதி எடுத்துக்காட்டாகக் கொண்டார்.

பாரிஸால் நகரில் சிகை அலங்காரம் செய்யும் தொழிலாளர்கள் யாவரும் துணிந்து ஓர் முடிவை மேற்கொண்டனர்.

ஏழை மக்களாயினும், அவர்கள் சுதேசீய தர்மத்தில் காலூன்றி நிற்கவே விரும்பினர்.

அந்த ஏழை நாவிதர்கள் எந்த மாதிரியான முறையில் தங்கள் சுதேசீய தர்மத்தை நிலைநாட்ட முற்பட்டனர் என்பதைப் பாரதியின் 'இந்தியா' இதழில் வெளிப் பட்ட செய்தியால் அறிகிறோம்.

> "சில தினங்களுக்கு முன் பாரிஸால் பட்டணத்தி லுள்ள அம்பட்டர்களெல்லாம் ஒரு கூட்டம் கூடி, சுதேசி யல்லாத சாமான்களைத் தாங்கள் உபயோகிப்ப தில்லை யென்று சத்தியம் செய்ததுமன்றிப் பரதேசிச் சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு க்ஷவரம் செய்வதில்லை யென்றும் தீர்மானித்து விட்டார்கள். இதை இதர மாகாண சுதேசிகள் தயவுசெய்து கவனிக்கவேண்டும்.''

[**இந்தியா** : 2-2-1907 — பக். 12]

சமூகத்தில் கடைநிலையில் வாழ்ந்து தொழில் செய்தவர்கள் எடுத்துக்கொண்ட உயர்ந்த சத்திய விரதத்தைப் பாரதி செய்தியாக வழங்கியதோடும் நில்லாமல், இதர மாகாண சுதேசிகளும் இவ் விஷயத்தைச் சிரத்தையுடன் கவனிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏன்? எதற்காக?

சிகை அலங்காரம் செய்யும் தொழிலில் ஈடுபட்ட அத் தொழிலாளப் பெருமக்கள் தாங்கள் சுதேசி யல்லாத சாமான்களை உபயோகிப்பதில்லை என்று முடிவு எடுத்து, அதன்படி நடக்கவும் செய்யலாம். ஆனால், பரதேசச் சாமான்களை உபயோகிப்பவர்களுக்குத் தாங்கள் க்ஷவரம் செய்வதில்லை என்று தீர்மானம் செய்தார்களே, அது என்ன சாமான்யமான செயலா?

தாங்கள் செய்யும் தொழிலால் கிடைக்கும் அற்ப சொற்ப வருமானத்தைக் கொண்டு அன்றாடப் பிழைப்புக்கே அல்லல்படும் அம்பட்டர்கள் தங்கள் வாழ்வைப் பாதிக்கும்படியான ஒரு தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்ற முன் வந்தார்கள் என்றால், அவர்களுடைய சுதேசீய பக்தியை என்னவென்று சொல்வது? அவர்களின் தியாக புத்தியை எப்படிப் பாராட்டுவது?

சமூகத்தின் அடித்தள மக்களிடமிருந்து மேற் கொள்ளப்படும் காரியங்கள் வெற்றி பெறும் என்பதில் பாரதிக்கு அபார நம்பிக்கை. அதனால்தான் இம்மாதிரி யான செய்திகளைப் பாரதி பிரசுரம் செய்தார்.

பாரிஸால் நாவிதர்கள் செய்து கொண்ட சத்திய விரதத்தை இதர மாகாணத்தவர்களும் கைக் கொண்டால், விதேசிய மடமை நீங்க வழி பிறக்கும் அன்றோ?

'சுதேசிய'த் தேரைச் 'சுதந்திர' ராஜ பாட்டைக்கு இட்டுச் செல்லும் பணிகளில் எவர் எவர் ஈடுபட்டனரோ, அவர்களை யெல்லாம் பாரதியின் எழுதுகோல் வாழ்த்தியது.

எந்தத் தொழில் செய்வோரும் தங்களுக்கு இயன்ற வகைகளி லெல்லாம் சுதேசீய விரதத்தைக் கைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டால் நாட்டுக்குப் பெருநன்மைகள் விளையும் என்பதாகப் பாரதி எண்ணினார். அந்த எண்ணத்தின் விளைவாக, வங்க மாநிலத்தில் நிகழ்ந்த சுதேசீய நிகழ்ச்சிகளை யெல்லாம் செய்திகள் வடிவில் தந்தார்; கட்டுரைகளாக எழுதினார்.

சுதேசீய முயற்சிகளில் வங்கச் சோதரர்கள் ஆற்றிய பணிகளை மனமார வரவேற்று வாழ்த்தியவர், பாரதி. அதே சமயத்தில் வங்கச் சோதரர்களின் செயல்பாடுகளைச் சென்னை மாகாணத்தவரின் செயல்பாடுகளோடு ஒப்பிட்டு நோக்கியவரும் பாரதிதான்.

காரணம், தமிழ் மக்களும் சுதேசீய முயற்சிகளில் முன்னணியில் நின்று சிகரம்போல் திகழ வேண்டும் என்பதே பாரதியின் உள்ளக்கிடக்கையாக அமைந்ததால்.

'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?' என்று மனம் நொந்தவர், பாரதி. ஏன்?

1907 இல் கல்கத்தாவில் தொழிற் கல்விச்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக் கல்விச் சாலை அங்குள்ள செல்வந்தர்களின் ஆதரவு கொண்டு ஏற்படுத்தப் பட்டதாகும்.

கல்கத்தாவில் தொழிற் கல்விச்சாலை ஏற்பட்டதில் பாரதிக்கு மகிழ்ச்சிதான். என்றாலும், இதுபோதும் சென்னை மாகாணத்தவர்களின் நினைப்பே தோன்றி, அவருக்குக் கவலையைத் தந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி தம் கவலையை இப்படி தெரிவித்தார்:

"சுதேசீய சம்பந்தமாய் வங்காளத்தார் பல பெரிய காரியங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளில் கல்கத்தாவில் ஒரு தொழிற் கல்விச் சாலை ஸ்தாபித்ததைச் சொல்லவேண்டும். இது அங்குள்ள ஜமீன்தார்களாலும் மற்ற செல்வவான்களாலும் ஆதரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

"கல்கத்தாவில் இம்மாதிரியான கல்விச் சாலையை நம்மவர் கவர்ன்மெண்டின் உதவியின்றி வைத்து நடத்துவது அவர்களுக்குப் பெருமையே. மற்றப் பட்டணங்களிலும் இம்மாதிரியான கல்விச் சாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

"சென்னையில் நாஷனல் பண்டு சபையார் அடுத்த வருஷம் ஒரு நெசவு ஸ்கூல் ஸ்தாபிக்கப் போவதாக யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அது நிறைவேறினாலும் சென்னையார் மீதுள்ள குற்றம் ஒருவாறு நீங்கும்.

"ஆனால், நெசவு ஸ்கூல் மட்டும் போதாது. தொழிற்கல்விச் சாலை யொன்று ஸ்தாபித்து நமது பிள்ளைகளுக்கு எல்லாத் தொழில்களையும் சொல்லி வைக்கவேண்டும். கவர்ன்மெண்டின் சார்பின்றிச் செய்வதே உத்தமம். ஆனால், அதற்கு மிகுந்த பணம் வேண்டுமே! அர்பத்நட்டில் கொட்டி யிழக்கப் பணமுண்டு; பொதுக் காரியங்களுக் கில்லையே!

"கல்கத்தாவைப் போலச் சென்னையும் பெயர் வாங்க வேண்டுமானால், அவ்விடத்தாரைப் போலப் பணம் செலவு செய்கிறவர்கள் வேண்டுமல்லவா?"

(இந்தியா : 8-6-1907—பக். 10]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் நெஞ்சில் பட்டதை ஒளிவுமறைவு இல்லாமல் எழுதிய பாரதியின் சொற் சித்திரத்தைப் பார்த்தோம்.

இங்ஙனம் வங்கத்தைப் பாராட்டிப் பாரதியார் எழுதியவை ஏராளம் உண்டு.

வங்கமும் தமிழும் ஒன்றுக் கொன்று
வளர்த்த உறவுகள் ஆயிரம் ஆயிரம்

என்று நெஞ்சினிக்கப் பாடினார், **கவியரசு கண்ணதாசன்.**

'பரம்பரைப் பண்பையும் தாயகப் பற்றையும் தொடர்ந்து பேணி வளர்த்த பெருமை பாரதிக்கு என்றுமே உண்டு.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

பாரதியும் வள்ளுவரும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறி முறைகளை உணர்த்திய தெய்வப் புலவர்களுள் திருக்குறள் இயற்றிய **திருவள்ளுவ நாயனார்** முதல் வரிசையில் வைத்துப் போற்றப்படுகிறார்.

கவிச்சக்கரவர்த்தி பாரதி தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை மிகத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டவர் என்பதை நாம் அறிவோம். அந்த நிலையிலும் பாரதி நம் முன்னோரால் போற்றி வழிபட்ட திருவள்ளுவரிடத்திலும், அவர் செய்தருளிய திருக் குறளிடத்தும் தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்தார்.

ஈரடியால் மாந்தர்தம் உள்ளத்தை அளந்த பெருமைக்குரிய திருவள்ளுவருக்கு விழா எடுத்துக் கொண்டாட வேண்டும் என்றும், நினைவுச் சின்னங்கள் வைக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும், மயிலாப்பூர் கோயிலைச் செம்மையாகக் கட்டவேண்டும் என்றும் தமிழ்நாட்டு மக்களிடம் பாரதி வேண்டுகோள் விடுத்தார்.

வள்ளுவரின் குறளை 'வான் மறை' என்றும், 'தமிழ் வேதம்' என்றும் போற்றினார் பாரதி; திருவள்ளுவரைப் போன்ற தெய்வங் கண்ட கவி பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்றே பெருமிதமும் கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று வாய் மணக்கப் பாடினார்; 'திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகுங் கருதியும் தமிழச் சாதி அமரத் தன்மை வாய்ந்தது' என்று எண்ணிப் பரவசம் கொண்ட பாரதி 'திருக்குறளில் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மை யிலேயே பிறக்க நியாயமில்லை' என்று உறுதியுடன் அறுதியிட்டுக் கூறினார்.

தமிழ் நாட்டுப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிய வருகிறவர்களுக்குத் திருக்குறளில் தகுந்த பயிற்சி வேண்டும் என்று குறிப்பிட்ட பெருமையும் பாரதிக்கு உண்டு.

நம் முன்னோரால் பிரம தேவனுடைய அவதாரம் என்று போற்றப்பட்ட திருவள்ளுவ நாயனாரின் மகிமை குறித்தும், அவர் யாத்தருளிய திருக்குறளின் சிறப்புக் குறித்தும்,

> "திருவள்ளுவ நாயனார் 'முப்பால்' (மூன்று பகுதிகளை யுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினார். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமாள செய்கை"

[**பாரதியார் கட்டுரைகள்** (*1940*)—பக். *249*]

என்று பாரதி குறிப்பிட்டார்.

ஆம்; மனித வாழ்க்கைக்குத் தேவையான குறிக்கோள்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது திருக்குறள் என்று பாரதி பெருமை பேசினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்ஙனமாகப் பாரதி வாய் மணக்கவும், நெஞ்சு இனிக்கவும் வான்மறையான திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்ததோடும் நில்லாமல், தமக்கு வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் பொருத்தம் கருதித் திருக்குறட் மணிகளை மேற்கோள்களாகத் தம் படைப்பு இலக்கியச் செல்வங்களில் எடுத்து ஆளவும் செய்தார்.

பற்பல அறிஞர் பெருமக்கள் திருக்குறளை நுணுகி ஆய்ந்துள்ளனர்; ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்தைக் காட்டியும் உள்ளனர். ஆனால், பாரதியின் அணுகுமுறை வித்தியாசமான முறையில் அமைந்தது.

குறிப்பாக, அரசியல் கருத்துக்களை விளக்க முற்பட்ட பொழுதும், மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் தர்ம நெறிகளை எடுத்துக்காட்ட முற்பட்டபொழுதும் நெஞ்சில் பதியும்வண்ணமாகப் பாரதி குறட் பாக்களைக் கையாண்டார்.

திருக்குறட் பாக்களைப் பாரதி மேற்கோள் காட்டிய பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது; இடம், பொருள் கருதிக் கையாண்ட முறை எண்ணி எண்ணிச் சிந்திப்பதற்கும் உரியது.

திருக்குறளின் ஆழத்தையும் அழகையும் பாரதி தம்முடைய சொந்தப் பாங்கான வாழ்வு அனுபவங்களை முன்வைத்தே கண்டார்.

பாரதியின் தந்தை சின்னச்சாமி ஐயர் பெரும் செல்வந்தர். பற்பல வாணிகம் செய்து மிக்க பொருள் சேர்த்துப் புகழ்வாழ்வு வாழ்ந்தவர். சூழ்நிலை காரணமாக அவருடைய தொழிலில் பெரும் சரிவு ஏற்பட்டது. அதனால், அவர் பெருந் துயர் எய்தினார்; ஓங்கி நின்ற பெருஞ் செல்வம் யாவற்றையும் இழந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நிலையில், அவருடைய உற்றார், உறவினர் யாவரும் அவரை விட்டு விலகிச் சென்றனர்; புகழ்ச்சிகள் பேசி உதவிகள் பெற்ற நண்பர்களும் அவரை விட்டுப் பிரிந்தனர்.

தமக்கு ஏற்பட்ட தாழ்நிலையை எண்ணிச் சின்னச் சாமி ஐயர் மனம் நொந்தார்; உள்ளம் குன்றித் தளர்ந்தார்.

நாசக் காசினில் (பொருளில்) ஆசை வைத்துப் பின் சிறுமையுற்ற தம் தந்தையின் வாழ்வைக் கண்டுணர்ந்த பாரதி, பொருளற்றார் இவ்வுலகில் அடையும் சிறுமைகளை யெலாம் எண்ணிப் பொருமினார்.

'பணம் இல்லாதவன் பிணம்' என்ற பழமொழியை நாம் அறிவோம். இவ் வுலகத்தில் ஏழ்மைதான் சிறுமையுடையது.

வள்ளுவப் பெருமானும் 'பொருள் இல்லார்க்கு இவ் வுலகமில்லை" என்று அருளிப் போந்தார்.

திருவள்ளுவ நாயனாரின் 'பொருள் இல்லார்க்கு இவ் வுலகமில்லை' என்ற குறள் மணி பாரதியின் நெஞ்சிடை ஆழப் பதிந்து விட்டது. அதனால், அவர் **கனவு** நூலில் தம் சுயசரிதை பற்றித் தெரிவிக்கையில்,

பொருளி லார்க்கிலை யிவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளிலார்க் கின மில்லை துணையிலை
பொழுதெலா மிடர் வெள்ளம்வந் தெற்றுமால்

[**கனவு** : செய்யுள் 43-வரிகள் 1-4]

என்று குறிப்பிட்டு விட்டுப் 'பொருள் இல்லாதார் பொருள் செய்தல் முதற் கடன்' என்றும் பணித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள் செய்தலும் அறவழியில் இருத்தல் வேண்டும் என்பதையும் பாரதி தெளிவுபடுத்தவும் செய்தார்.

எப்படியும் பொருள் சேர்க்கலாம் என்கிற மனப்பான்மை கொள்ளாமல், இப்படித்தான் பொருள் சேர்க்க வேண்டும் என்கிற குறிக்கோளுடன் மக்கள் செயல்படுதல் வேண்டும் என்பதைப் பாரதி வற்புறுத்திய நேரத்தும் வள்ளுவர் காட்டிய நெறியையே சுட்டிக் காட்டினார்.

'அற மொன்றே இன்பம் தரும்' என்று வள்ளுவர் வகுத்த பாதையைப் பாரதி,

''அற மொன்றே தரு மெய்யின்ப மென்றநல்
லறிஞர்* தம்மை யனுதினம் போற்றுவேன்
பிற விரும்பி யுலகினில் யான்பட்ட
பீழை யெத்தனை கோடி! நினைக்கவும்
திற னழிந்தென் மனமுடை வெய்துமால்
தேசத் துள்ள இளைஞ ரறிமினோ!
அறமொன் றேதரு மெய்யின்ப மாதலால்
அறனை யேதுணை யென்றுகொண் டுய்திரால்

[**கனவு** : செய்யுள் 44—வரிகள் 1-8]

என்றே விளக்கி, அறத்தையே துணையாகக் கொண்டு வாழ அறிவுறுத்தினார்.

இங்கே **அறிஞர்** என்று தாம் குறிப்பித்ததை விளக்க அடிக்குறிப்பாக, அச்சொல் **வள்ளுவரையே** குறிக்கும் என்பதாகவும் பாரதி தெளிவுபடுத்தினார் என்பதையும் நாம் அறிதல் அவசியம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் - அசைவிலா
ஊக்க முடையா னுழை.

பாரதியின் கையெழுத்துப்

பிரதியில் காணப்பட்ட குறள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'செய்க பொருளை' என்றார் வள்ளுவர்.

வள்ளுவர் செந்நெறியைப் பாரதி சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்ற சுதேசிய முயற்சிகளின் வெற்றிக்காக மேற்கோள் காட்டினார்.

வெறும் கையால் முழம் போட முடியாதல்லவா? எத்தனை மனிதர்கள் கூடித் தொழில் புரிய முன் வந்தாலும், தொழில் முயற்சி வெற்றி பெறப் பொருள் தேவை. ஆம்; தொழில் பண்ணப் பெரு நிதியம் தேவை.

'செய்க பொருளை' என்பது வெறும் சொல் சேர்க்கை யுடையதன்று. வாழ்வின் உண்மையை ஆழமாக உணர்த்த எழுந்தது என்பதைப் பாரதி எடுத்துச் சொன்ன விதம் பொருள் செறிவு கொண்டது.

வள்ளுவர் உரைத்ததைப் பொன்னேபோல் கருதிச் 'செய்க பொருளை' என்றார், பாரதி.

ஏன்? எதற்காக?

> "ஸ்வதந்திர முயற்சிக்கு அளவற்ற பொருள் இன்றியமையாத தாகும். நமது சொந்தமான கல்விச் சாலைகள், தொழிற்சாலைகள் முதலியவை ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கு ஏராளமான திரவியம் வேண்டும். திரவிய மில்லாது போனால், ஸ்வதந்திர முயற்சியை இனிது நடத்த முடியாது. இடத்துக்கிடம் தடைப்படும். கண்ட இடங்களிலெல்லாம் முட்டுப்பாடு உண்டாகும்."

[**இந்தியா** : 27-3-1909 — பக். 3]

இங்ஙனம் பாரதி குறிப்பிட்டெழுதியது, குறள் நெறியை ஒட்டித்தானே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வதந்திர முயற்சி என்கிற மரக்கலமானது பாறைகளிலே மோதி விடாமல் சாமர்த்தியத்துடன் நடத்திச் செல்லும் சுக்கானாகப் பொருள் வலிமையைக் குறித்தார், பாரதி.

> "செல்வம் உணவைப் போன்றது. புதிதாக அதைத் தேடி உழைப்போர்களுக்கு அது நன்மையையும், க்ஷேமத்தையும் உண்டாக்கும்"
>
> [**இந்தியா** : *27-3-1909 — பக். 3*]

என்று செல்வத்தின் அருமையையும் விளக்கியவர் பாரதி.

செல்வத்தால் நன்மையும், க்ஷேமமும் ஏற்படுகின்ற காரணத்தால்தான் பாரதி "செய்க பொருளை" என்று குரல் கொடுத்தார்.

'செய்க பொருளை' என்ற திருக்குறள் தொடருக்கும் பாரதி எழுதிய பொருளுரை பெருமுயற்சி செய்து உழைத்துப் பொருள் தேடுவார்க்குத் தைரியத்தைத் தரும் பான்மை கொண்டது.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூறிய தில்

என்ற திருக்குறளுக்குப் பாரதி எழுதிய பொன்னுரை இதுதான்:

> "பொருளைத் தேடு. உனக்கு அநீதியான இமிசை செய்வோர்களை அடக்குவதற்கு, இதுபோலக் கூர்மை யுடைய ஆயுதம் வேறே கிடையாது."
>
> [**இந்தியா** : *27-3-1909 — பக்.3*]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கருத்துரையைப் பாரதி அடிமை நாட்டில், சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிய காலப் பகுதியில் எழுதினார் என்பதை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் பாரதியின் திருக்குறள் உள்ளத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

உலகியல் வாழ்க்கைக்குச் செல்வம் இன்றியமையாதது தான், 'இல்லாதவனை இல்லாளும் வேண்டாள்.'

செல்வத்தை முயற்சியால் அறநெறியில் சம்பாதிக்க வேண்டுவதே முறை. அதுவே மனிதனுக்கு இன்பத்தைத் தரக் கூடியது. சேர்க்கப்படுவது செல்வம் என்றாலும், தீயது செய்யாதபடிக்கும் செல்வத்தைச் சேகரிக்க வேண்டும்; அநியாய வழிகளில் சேர்த்த செல்வம் நிலைத்து நிற்காது.

அநீதியான முறைகளில் துன்பம் செய்பவர்களை அடக்குவதற்குச் செல்வத்தைத் தேடுதல் அவசியந்தான், ஆனால், செல்வம் சேர்த்த பிறகு, அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வோர் விரைவிலே கெடுவர்.

இந்த வாழ்வியல் உண்மையை விளக்க வந்த பாரதி'

அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்கிற திருக்குறளை மேற்கோள் காட்டிப் பின்னே எழுதினார் :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"துன்பப் பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்ப முண்டாக்கினவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெறியும் ஆயுதமாகும்"

[**பாரதி தமிழ்** (1953) — பக். 202]

என்று. இன்னும் சற்றுப் பொருள் விளக்கம் தரும் வகையிலும்,

"செல்வம் இனிது. அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலை மேன்மேலும் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும்"

[**பாரதி தமிழ்** (1953) — பக். 202]

எனப் பாரதி புலப்படுத்தியமை பொருள் வளம் செறிந்தது.

தீயது செய்தாலன்றிச் செல்வம் தேட முடியாதென்று பேசும் மூடர் கொள்கையைக் கண்டிக்கவும், நேர்மையான வழியில் முயற்சியின்பேரில் பொருள் சேர்ப்பதே பண்புடையார் செயல் என்பதைக் காட்டவும் பாரதி மேற்குறித்த குறளை எடுத்தாண்டார்.

பொருளை அறவழியில் சேர்ப்பது எத்துணை முக்கியமோ, அதைப்போலவே நல்ல புதல்வர்களைப் பெறுவதும் ஆகும்.

நம்முடைய இந்து சாஸ்திரங்கள் பெற்றோர்க்கு இக பர இன்பங்களைத் தரக்கூடியவர்கள் அவர்கள் பெற்ற மக்கட் செல்வங்களே யாவர் என்று கூறுகின்றன. எனவே, மானிடர்கள் இகத்தில் பெற வேண்டிய பேறுகளில் மிகச் சிறந்தது நன்மக்கட் பேறே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த உண்மையை வள்ளுவர்,

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடைய மக்கட் பெறின்

என்கிற குறளால் விளக்கி அருளினார்.

வள்ளுவரின் குறளைப் பாரதி ஒருசமயம் தாம் எழுதிய **மக்களின் மாட்சிமை** என்ற கட்டுரையில் எடுத்துக் கையாண்டதுடன் பொருள் விளக்கமாக,

''ஒருவர் குற்றமற்ற நற்குணங்களை யுடைய புத்திரனைப் பெறுவாராயின், அவர் தானடையும் எழுவகை பிறவிகளிலும் துன்பமடைவதில்லை யென்று திருக்குறள் கூறுகிறது.

"கேவலம், புதல்வனைப் பெற்றுவிட்டத னாலேயே ஈன்றோர்க்குப் புகழ்ச்சி யுண்டாவதில்லை. சத்புத்திரனாயும், சன்மார்க்க வழியறிந்து நடப்பவ னாயும், கண்டோர் புகழும் காருண்ய முள்ளவனாயு மிருக்கவேண்டும்''

[**இந்தியா** : 31-7-1909 — பக். 3]

என்றே எழுதினார்.

எனவே, நல்லறிவுள்ள சத்புத்திரர்களால் நற்பயன் பெறுவதால், பெறுக நன்மக்கட் பேறு என்றார் பாரதி, வான்புகழ் கொண்ட வள்ளுவர் வழியில்.

'மகனைத் தக்கோன் ஆக்குதல் அவன் தந்தையின் கடமை' என்று புறநானூறு என்கிற பழந்தமிழ் நூலில் ஓர் தமிழ்த்தாய் பாடி யிருக்கிறார்.

தன் மகன் சான்றோன் எனக் கேட்ட அளவிலே ஓர் தாய் மகிழ்ச்சி யடைவாள் என்பதை எடுத்துக் கூறுகிறது, குறள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் குறள் மணியைக் கூர்ந்து நோக்கிப் பொருளை நுணுகி அறிந்த பாரதி **பாரத குமாரிகள்** என்ற ஓர் அற்புதமான கட்டுரையினிடையே பொருத்தம் கருதி எடுத்தாண்டார்.

> “ **ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோ னெனக்கேட்ட தாய்**

என்றார் வள்ளுவர். இது எத்தனை உண்மையோ அத்தனை இதன் எதிரிடையும் உண்மையாகும். புத்திரப் பேறு உண்டான காலத்தில் மாதாவுக் குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் அப் புத்திரன் சான்றோனென்ற சொல்லைக் கேட்கும்போது அதிக மகிழ்ச்சி விளையுமாயின், மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப் படும்போது அத் தாய் மனம் அவன் இறக்கும்போது உண்டாகும் துயரத்தினும் அதிகத் துயரமடையு மல்லவா?”

[**சக்ரவர்த்தினி** : 1906 ஜனவரி இதழ் —பக். 124]

என்று பாரதி எழுதியதிலிருந்து, மானிடர்கள் கல்வி ஞானப் பரப்பும், இருள் நீங்கிய அறிவும், பெருந் தகைமையும், கருணையும் கொண்டு விளங்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது.

அறிவின்மை என்னும் பேரிருளில் அழுந்தி, கல்வி, அறிவு முதலிய யாதுமில்லாத வகையில் வாழும் மக்களைக் கண்டுதான் ஒரு தாய் மிக்க துயரமடைவாள். அதோடுமட்டுமல்ல அம் மக்கள் கீழோர் என்பவராயின், அத் தாயின் மனம் படும் துயரந்தான் சொல்லி முடியுமோ?

பாரதியும் வள்ளுவர் வழியில் சென்று, வள்ளுவர் எடுத்துக்காட்டிய உண்மைக்கு எதிரிடையாக உள்ள உண்மையை எடுத்துக் காட்ட விரும்பினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, தாமும் ஓர் தாயின் துயரத்தை எடுத்துக் காட்டும் வகையில்,

மாயும் பொழுதிற் பெரிதழுங்குந் தன் மகனைக்
கீழோன் எனக்கேட்ட தாய்

[**சக்ரவர்த்தினி** : *1906 ஜனவரி இதழ்—பக். 124-125*]

என்ற ஓர் குறளைப் பாரதி புனைந்தளித்தார்.

கல்விப் பயிற்சியினாலும், பெருந்தன்மையினாலும், கருணை உள்ளத்தாலும் மக்கள் மேலோர்களாகத் திகழ்வார்கள்.

அறிவு விலாசத்தால் மக்கள் மனப்பக்குவம் பெறுவார்கள். கல்விப் பயிற்சி மக்களுக்கு அருள் தன்மையை அளிக்கும். எனவேதான், பாரதி 'அறிவை வளர்த்திட வேண்டும்' என்றும், 'பயிற்றிப் பல கல்வி தந்து, பாரை உயர்த்திட வேண்டும்' என்றும் முரசு கொட்டித் தாம் கண்ட உண்மையை உரைத்தார்.

நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை அதிகரிக்க வேண்டும் என்கிற தம் எண்ணத்தைப் பாரதி நாளும் எடுத்துச் சொல்லி வந்தார்.

கல்வியின் சிறப்பையும், கல்வி கற்பதனால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் விளக்க முனைந்த பொழுதிலுங் கூட, குறள் வழிநின்று குரல் கொடுத்த பெருமை பாரதிக்கு உரிமை!

ஒரு நாட்டின் பெருமைக்குச் சான்றாக விளங்குகிற வர்கள், அந் நாட்டின் பெண்மக்களே யாவர் என்பதைப் பாரதி நன்கு உணர்ந்திருந்தார். எனவே, பெண்ணுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானத்தை ஊட்டி வளர்க்கவேண்டும் என்பதை எல்லோரும் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும் என்று பாரதி வற்புறுத்தி வந்தார். காரணம்,

''பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும்...''

[முரசு : செய்யுள் 10—வரிகள் 3-4]

எனப் பாரதி உறுதியாக நம்பியதால்தான்!

பாரதி தமக்கு நினைவு தெரிந்த நாள் முதற் கொண்டே பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய முற்பட்டு விட்டார்.

பெண்களின் சீரையும், சிறப்பையும், அறிவு நலத்தையும் அபிவிருத்தி புரிவதையே பெருநோக்கமாகக் கொண்டு பத்திரிகை வானில் ஒளி நட்சத்திரமாகத் தோன்றியது **சக்ரவர்த்தினி.** அப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்தானத்தில் அமர்ந்த பொழுதில் பாரதியின் இலட்சியக் குறளாக,

''பெண்மை யறிவுயரப் பீடோங்கும்; பெண்மைதான்
ஒண்மையுற வோங்கும் உலகு''

[**சக்ரவர்த்தினி** : 1905 ஆகஸ்ட் இதழ் — பக். 1]

என்பதாக முழங்கியது.

''தையலை உயர்வு செய்'' என்று **புதிய ஆத்திசூடியில்** நமக்கெல்லாம் போதனை செய்த பாரதிதான் 'பெண்மை வாழ்க' எனவும் குரல் கொடுத்தார். 'பெண்மை உயர்ந்தால் எல்லாம் உயரும்' என்பதே பாரதி கண்ட உண்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவேதான், அறிவின் வளர்ச்சியைப் பரப்புவதைத் தம் தலையாய நோக்கமாகக் கொண்டார், பாரதி. குறிப்பாகவும், சிறப்பாகவும் பெண்கள் அறிவுநலம் பெற்றுத் திகழ்வதையே பெருமையாகக் கருதினார்.

"தேசத்தின் 'சக்தி ரூபங்'களாகிய மாதர்களை அறிவின்மை யென்னும் பேரிருளில் ஆழ்த்தி வைத்துவிட்டுத் 'தேசாபிவிருத்தி', 'தேசாபிவிருத்தி, என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்றுரைப்போம்?"

[**சக்ரவர்த்தினி** : 1906 ஜனவரி இதழ்—பக். 126]

என்று கோபாவேசத்துடன் கேள்விக்கணை தொடுத்தார் பாரதி.

பேதைமைக்கு மருந்தாகவும் பாரதி அருளியவை வருமாறு :

"நமது தேசத்தின் 'ஆதார சக்தி'களாகிய மாதர் களின் ஹிருதயமும், அவர்களது ஆன்மாவும் இருளடைந்து போகவிடுவதைக் காட்டிலும் பாதகச் செயல் வேறில்லை. ஞான கிரணங்கள் அவர்களது ஆன்மாவில் தாக்குமாறு செய்தாலன்றி நமக்கு வேறு விமோசனம் கிடையாது."

[**சக்ரவர்த்தினி** : 1906 ஜனவரி இதழ்—பக். 126]

இங்ஙனம் பாரதி எழுதி வரும்போது அவருக்கு பெண்மணிகளைத் தேசத்தின அன்னதைகள் (அதாவது, உணவு கொடுப்போர்) மாதர்களே என்பது நினைவுக்கு வந்துவிட்டது. அக்கணமே வள்ளுவர் சொல் அமுதமும் பாரதியின் சிந்தனையில் தோன்றியது.

ப.—8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால் பாரதி,

"உணவு கொடுப்ப தென்றால், வயிற்றுக்கு மட்டிலுமில்லை. வள்ளுவரால் 'செவியுணவு' என்று கூறப்படும் ஞான உணவிருக்கின்றதே, அதனை அளிப்போரும் மாதர்களே யாவர்!''

[**சக்ரவர்த்தினி** : *1906 ஜனவரி இதழ்—பக். 126*]

என்று தெளிவுபடுத்தி, நாட்டைக் கைதூக்கி விடுபவர்கள் மாதர்களே என்பதையும் நினைப்பூட்டினார்.

சக்ரவர்த்தினியின் முதல் இதழிலேயே பாரதி கல்விச் சிறப்பை விளக்கினார். அதிலேயும், **விக்டோரியா மகாராணி**யின் சரிதையிலிருந்து நம் நாட்டு மாதர்கள் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்களில் முக்கியமானதாக, அப் பெண்ணரசியின் கல்வித் திறனே எனப் பாரதி எடுத்துக் காட்டினார். எப்படி எடுத்துக்காட்டினார்? அதுவும், குறள் வழியேதான்!

"விக்டோரியா மகாராணியின் பெருமைக்கு முதல் காரணம், அவரது கல்வித் திறமையே. கல்வித் திறமையில்லாதவர்கள் உலகினைப் புகழொடு ஆட்சிபுரிய மாட்டுவார்களா? ஐயோ! கல்வியில்லாத வர்கள் நேரே மண் சுமக்கக்கூட முடியாதவர்களா யிற்றே!

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

இக் குறள் தற்காலத்து ஆசாரத் திருத்தக் காரர்களில் ஒருவரால் இயற்றப்பட்டதன்று. தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படிப்பு இல்லாதவர்களையும் படித்தவர்களையும் ஒப்பிட்டு நோக்கினால், மிருகங்களையும் மனிதர்களை யும் ஒப்பிடுவது போலு மென்கிறார், வள்ளுவர். கல்வி யற்றோர் ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் வண்டி இழுக்கத்தான் பயன்படுவார்கள் என்பது திருவள்ளுவருடைய கருத்து.''

[**சக்ரவர்த்தினி** : 1905 ஆகஸ்ட் இதழ்—பக். 5-6]

குறள் வழி, நாட்டிலுள்ள மக்கள் யாவரும் கல்வித் திறமை கொண்டவர்களாக விளங்கவேண்டும் என்று கூறிய பாரதி, பின்னொரு சமயம் அக் குறள் மணிக்குக் கருத்துரையாக,

"படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்யம் எத்தனை யென்றால், மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளதத்தனை''

[**பாரதி தமிழ்** (1953) — பக். 198]

என்றே தெரிவித்தார். ஆம்; கல்வி அறிவு இல்லாத ஜனங்கள் வெறும் மிருகங்களுக்கே நிகராவார்கள்.

எனவே, நம்மவருடைய கடமையைப் பற்றிப் பாரதி தெளிவுபடுத்திய நேரத்தில்,

"படிப்பில்லாத ஜனங்கள் மிருகங்களுக்குச் சமானமென்று திருவள்ளுவர் பச்சைத் தமிழிலே சொல்லுகிறார். நமக்குள் எத்தனையோ புத்திமான்கள் இருந்தும், நம்மிலே முக்காற் பங்குக்கு மேலே மிருகங்களாக இருக்கும் அவமானத்தைத் தீர்க்க ஒரு வழி பிறக்கவில்லையே! ஏன்? எதனாலே? காரணந்தான் என்ன?''

[**பாரதியார் கட்டுரைகள்** (1940) — பக். 532]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று வினாவுக்கு மேல் வினா தொடுத்து, எதற்கெல்லாமோ வீண் செலவு செய்வதைக் காட்டிலும், பல்வேறு தான தர்மங்களைச் செய்வதைக் காட்டிலும், எவ்வகையானும் எதுவும் நல்கி, புண்ணியம் ஆயிரம் கோடி தரக்கூடிய கல்வி பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபடுமாறு அறிவுரை வழங்கினார்.

> "ஒரு நாட்டிலுள்ள எல்லாவிதமான குறைகளுக்கும் புத்திக் குறையே ஆதாரம். இது படிப்புக் குறைவினால் உண்டாவது. இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவசரம்"
>
> [**பாரதி தமிழ்** (*1953*) — பக். *233*]

என்று எழுதிய பாரதி தம் கருத்துக்கு அனுசரணையாக,

> **கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
> **புண்ணுடையர் கல்லா தவர்**

என்ற குறளை எடுத்தாளவும் செய்தார்.

பாரதியைப் பொறுத்த மட்டில், 'நம்மவர்களை விலங்குகளாக வைத்து, நாமே பார்த்துத் திருப்தி அடைந்து கொண்டிருப்பது போன்ற பாதகச் செயலை' நாளும் கண்டிக்கவே செய்தார். செல்வந்தர்கள் கல்விச் சாலைகளை ஏற்படுத்த முன் வரவேண்டும் என்றும் விரும்பினார்.

கற்க வேண்டுவதன் அவசியத்தைப் பாரதி குறள் வழியே விளக்கிய முறை நாளும் எண்ணிப் பெருமை கொள்ளத் தக்கது.

கற்றறிந்தவர்கள் தம் மனம் அறிந்த உண்மையின் படி ஒழுக முற்பட வேண்டும்; சொல் வேறாகவும் செயல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறாகவும் உள்ளவர்களுடன் உறவுகொள்ளுதல் பாவம் என்பதையும் குறள் வழியாகவே பாரதி விளக்கினார்.

பெரிதினும் பெரிது விரும்பிய பாரதி, உள்ளுவ தெல்லாம் உயர்வையே உள்ளினார். எனவேதான் அவர் திருவள்ளுவர் குறளை நம்மவர்க்கு எடுத்துக் காட்டினார்.

''கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல் வேறுடையார் தொடர்பு

என்று திருவள்ளுவர் பாடி யிருக்கிறார்.

இதன் பொருள் : வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது என்பதே யாம்.

[**பாரதியார் கட்டுரைகள்** (*1940*) — பக். *14*]

என்று பொருளுரையும் தந்தார்.

மனச்சாட்சிப்படி யோக்கியமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும், தம் அறிவுப் பயிற்சியின் விசாலத்திற்குத் தகுந்தபடி கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் நம்மவர் உணரவே, பாரதி மேற்குறித்த குறளை மேற்கோள் காட்டினார்.

எதை நம்புகிறோமோ — எதைச் சொல்கிறோமோ, அதைச் செய்கையிலே நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும் என்பதைப் பாரதி பெரிதும் விரும்பினார்.

மற்றும், அறிவினால் எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுவதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. 'ஊருக்கு உபதேசம்' செய்து வருகிற போக்குகளை அறவே வெறுத்தவர் பாரதி. ஒரு தர்ம உபதேசத்தைச் செய்தால், அதன்படி நடந்து காட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும் அல்லவா? அரிது என்பதையே நமது அனுபவத்தில் காண்கிறோம்.

இதை விளக்க வந்த பாரதி ஆத்ம ஞானத்திற்காகத் தாயுமானவ சுவாமிகளையும், உலக நடைக்காகத் திருவள்ளுவப் பெருமானையும் எடுத்துக்காட்டிப் பேசினார், நெஞ்சிலே பசுமரத்தாணிபோலே பதியும் வண்ணமாக.

> "பொதுவாகக் கூறுமிடத்தே, மனித ஜாதியார் அறிவு சம்பந்தப்பட்ட மட்டில் மஹா ஸூக்ஷ்மமான பரம ஸத்யங்களை யெல்லாம் கண்டு பிடித்து முடித்து விட்டனர். ஆனால், அறிவுக்குத் தெரிந்ததை மனம் மறவாதே பயிற்சி செய்ய வலிமையற்றதாய் நிற்கிறது. அறிவு சுத்தமான பின்னரும், சித்த சுத்தி ஏற்பட வழியில்லாமல் இருக்கிறது. எனவே, அறிவினால் எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுதல் பெருங் கஷ்டமாக முடிந்திருக்கிறது. ஆத்ம ஞானத்தின் சம்பந்தமாகக் கவனிக்குமிடத்தே, இந்த உண்மையைத் தாயுமானவர்,

> **வாசக ஞானத்தினால் வருமோ ஸுகம் பாழ்த்த**
> **பூசலென்று போமோ புகலாய் பராபரமே**

> என்ற கண்ணியில் வெளியிட்டிருக்கிறார்.

இதன் பொருள் : "வெறுமே வாக்களவாக ஏற்பட்டிருக்கும் ஞானத்தினால் ஆனந்த மெய்த முடியவில்லையே? என் செய்வோம்? பாழ்பட்ட மனம் ஓயாமல் பூசலிட்டுக் கொண்டிருக்கிறதே! இந்தப் பூசல் எப்போது தீரும்? கடவுளே, நீ அதனைத் தெரிவிப்பாய்" என்பதாம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே உண்மையை உலகநீதி விஷயத்தில் ஏற்கும்படி திருவள்ளுவர்,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்ற குறளால் உணர்த்துகிறார்.

இதன் பொருள்: "வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சொல்லின்படி நடத்தல் மிகவும் துர்லபம்" என்பது.

[**பாரதியார் கட்டுரைகள்** (1940) — பக். 44 — 45]

இவ்வாறு பாரதி எழுதி சத்திய தர்மத்தை நிலை நாட்ட மனித இனத்திற்கு வள்ளுவர் காட்டிய வழியைத் தெளிவுபடுத்தினார்.

சொல்லியவண்ணம் நடப்பது எவ்வளவு கஷ்டமோ, அதைப் போலவே இன் சொல் வழங்குவது என்பதும். இதை அனுபவத்தில் யாவரும் கண்டு உணர்ந்துள்ளோம்.

கண்ணைத் திறந்து கொண்டு பாழுங் கிணற்றில் விழுவதுபோல, மனித குலம் 'அன்பே இன்பம் தரும்; இனிய சொற்களே நன்மையை விளைவிக்கும்' என்பதை நன்றாய் உணர்ந்திருந்தும், அவற்றை கடைப்பிடிக்காமல் இருக்கும் கொடுமையைக் கண்டு மனம் பொருமினார் பாரதி.

மனித இனம் நன்மையை நன்றாய் உணர்ந்து இருந்தும், தீமையை உதறித் தள்ள வலிமை யில்லாமல் தத்தளித்த பொழுது, அதற்கு நிவாரணம் கண்டார், பாரதி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது**

என்ற குறளின்படி 'இனிய சொற்கள் சொல்வதி னின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கொருவர் கொடுஞ்சொற்கள் வழங்குவது மடமை' என்பது உலகத்தில் சாதாரண அனுபவ முடையவர்களுக் கெல்லாம் தெரியும்''

[**பாரதியார் கட்டுரைகள்** (1940)—பக். 46-47]

என்று எடுத்துச் சொல்லிக் கொடுஞ் சொற்களும், கோபச் செயல்களும் நீங்கியவர்களாய் வாழ முற்பட வேண்டுவது நம் கடமை என்பதைப் பாரதி உணர்த்தினார்.

மனித குலத்துக்குப் பொது நெறிகளை எடுத்துக் காட்டிய பாரதி, மற்றெல்லா வாழ்க்கைகளிலும் சிறந்தது 'குடும்ப வாழ்க்கை'யே என்பதையும் திருக்குறள் காட்டிய வழியில்தான் புலப்படுத்திக் காட்டவும் முற்பட்டார்.

குடும்ப நாகரிகத்தில்தான், தேச நாகரிகமும் அடங்கி யுள்ளது என்பதாக நம்பியவர், பாரதி. 'தொட்டில் பழக்கம் இடுகாடு வரை' என்பதுபோல, 'வீட்டுப் பழக்கம்தான் நாட்டிலும் தோன்றும்.' எனவே, குடும்பத் தவர் கூடித் துன்பமில்லாமல் வாழவேண்டும் என்று அவர் எடுத்துச் சொன்னார். வீட்டில் எப்போதும் அன்பு நிலவ வேண்டும்; அமைதி நிலவவேண்டும்; கணவன்-மனைவி கருத்தொருமித்து வாழ்க்கை நடத்தினால் குடும்பத்தில் சச்சரவு இல்லாமல் இருக்கும்.

குடும்ப வாழ்வின் சிறப்பை நன்குணர்த்துவான் வேண்டி, பாரதி தம் சிந்தை கவர்ந்த குறளைக் காட்டி இப்படி எழுதினார் ;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வீடு துன்பமாக இருப்பதன் மூலகாரணம் கணவனுக்கும் மனைவிக்கும் மனப் பொருத்த மில்லாமை. ஸ்திரீ—புருஷ விரோதத்தால் உண்டாகும் துன்பங்களே வீட்டுத் துன்பங்களுக் கெல்லாம் ஆதாரம்.

"கொடுங்கோன்மை தவறு என்றும், கொடுங் கோன்மை இழைத்தால், அதற்குமேல் கொடுங் கோன்மை அவசியம் விளையும் என்றும், அவனவன் வீட்டிலிருப்போரைக் கொல்லாமல் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்வானாயின், உலகத்தில் கொடுங் கோன்மையும், போரும் விளையக் காரணமில்லை யென்றும் நான் கருதுகிறேன்.

"குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கை களிலும் சிறந்தது. இதனால் அன்றோ திருவள்ளுவரும்,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்
நல்லாற்றின் நின்ற துணை

என்றார்."

[**பாரதியார் கட்டுரைகள்** (1940) — பக். 496]

தேசமாவது குடும்பங்களின் தொகுதி என்று பாரதி சொல்லி, குடும்பங்கள் இல்லாவிட்டால் தேசமே கிடையாது என்ற உண்மையைப் புலப்படுத்தி, இல்வாழ்க்கை என்பது ஒருவனும் ஒருத்தியும் நீடித்து ஒன்றாக வாழ முற்படுவதே யாகும் என்ற உலகியல் நீதியை 'உள்ளங்கை நெல்லிக்கனி' போலக் காட்டவே மேற்கண்ட குறளைக் கையாண்டார்.

பாரதியின் திருக்குறள் உள்ளம் விரிந்தது; பரந்தது. பாரதி தம் கருத்துகளை விளக்கிக் காட்டவே திருக்குறள் மணிகளை எடுத்துக் கையாண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குறளின் ஆழத்திலும், அழகிலும், உறுதியிலும் திளைத்தவர் அன்றோ பாரதி. அதனால், நினைத்த மாத்திரத்தில் அவருக்குக் குறள் கைகொடுத்தது.

பொருள் அறிந்தும், காலத்தை அனுசரித்துமே பாரதி திருக்குறளை எடுத்து ஆண்டார் என்றாலும், அதிலேயும் அவர் புதுமையைப் புகுத்தினார்; புதிய புதிய உண்மைகளைப் போதித்தார்.

அரசியல் ரீதியிலுங்கூடப் பாரதி, குறளின் உண்மை நெறியைப் பின்பற்றக் கோரினார்.

சுதந்திரப் போராட்ட முயற்சிகள் பாரத தேச மெங்கும் நடைபெற்று வந்தன. அம் முயற்சிகளுக்குப் பத்திரிகையாளர்களும், பேச்சாளர்களும் பெரிதும் துணை நின்றனர்.

சுதந்திரக் கிளர்ச்சிகள் வளர்ச்சி அடைவதைப் பார்த்துப் பிரிட்டிஷ் அரசு கவலை கொண்டது.

சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்கப் பிரிட்டிஷ் அரசு பலவிதமான உபாயங்களை மேற்கொண்டது.

ஒரு கட்டத்தில், அரசுக்கு எதிராக ஜனங்களைத் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லிப் பத்திரிகையாளர் களையும், மேடைப் பேச்சாளர்களையும் சட்டத்தின் மூலம் அடக்கிவிட மசோதா ஒன்றைக் கொண்டு வந்தது.

உண்மையிலேயே அரசுக்கு விரோதமாக ஜனங்களைத் தூண்டுவோரைத் தண்டிக்க வேண்டும் என்பதிலே பாரதிக்கும் உடன்பாடு உண்டு.

வீண் வதந்திகளையும், பொய்ச் செய்திகளையும் பரப்புகிறவர்களைப் பாரதி கண்டனை புரிந்துள்ளார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால், சுதேச பக்தியைப் பாராட்டும் பத்திரிகையாளர்களையும், பேச்சாளர்களையும் அதிகாரிகள் சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு அடக்கி விட முயற்சிப்பார்கள் என்று பாரதி அஞ்சினார்.

எனவே, சுதேச பக்தியைச் சட்டத்தின் மூலம் ஒடுக்கத் திட்டமிட்ட பிரிட்டிஷ் அரசின் கொள்கையையும் அதிகாரிகளின் போக்கையும் பாரதி மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார்.

எப்படி?

திருவள்ளுவ நாயனார் காட்டிய குறள் நெறி நின்று தான் பாரதி சத்தியக் குரல் கொடுத்தார்.

> "வர்த்தமானப் பத்திரிகைகளையும், உபந்நியாஸகர்களையும் அமுக்கி விடுதல் அதிகாரிகளுக்குச் சுலபம். நாளைக்குச் செய்து விடலாம்.
>
> "ஆனால், மனுஷ்ய ஜீவனுடைய இயற்கையை மாற்ற இந்த அதிகாரிகளால் முடியுமா? இந்தியாவிலே ஸ்வராஜ்ய விருப்பத்துடன் உண்டா யிருக்கும் புதிய கிளர்ச்சி மனுஷ்ய ஜீவனுடைய இயற்கையைப் பற்றியது. அதை அடக்க முயல்வதைக் காட்டிலும் பேதைமை வேறொன்றுமில்லை.
>
> "ஜனங்கள் சமாதான வழிகளை விரும்பி நிற்கும் வரை கவர்ன்மெண்டாரும் சமாதான சாந்த வழிகளை விரும்பி நிற்பதே அவர்களின் க்ஷேமத்திற்கு ஹேதுவாகும். அவ்வாறின்றி அவர்கள் லார்ட் மிட்டன் காலத்து மஹா கொடூரமான பத்திரிகைச் சட்டத்தைப் புதுப்பித்துத் தமது விருப்பத்தை ஸாதித்துக் கொள்ள முயலுதல் அவர்களுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலஹீனத்தைக் குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது, இத்தறுவாயில் அவர்கள் எவ்விதமான சற்போதனையையும் கேட்பார்களென்று தோன்றவில்லை. நேரே யோசிக்கும் திறமை அதிகாரிகளிடம் நின்று போயிருக்கின்றது. அந்தனை வெறியிலேயிருக்கிறார்கள்.

திருவள்ளுவர்,

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று

என்று சொல்லி யிருக்கிறார். அதாவது, குடிவெறியிலே இருப்பவனோடு, காரணங்கள் கூறி, விவகாரம் செய்ய முயலுதல் நீரின் கீழ் முழுகி யிருப்பவனை விளக்கைக் கொண்டு தேட முயல்வது போலாகும் என்றர்த்தம்.

''தற்கால அதிகாரிகள் அதே ஸ்திதிக்கு வந்து விட்டார்கள்''

[**இந்தியா** : 26-6-1906 — பக். 4]

என்றே பாரதி பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிலையைப் படம் பிடித்துக் காட்டினார்.

இந்த இடத்தில் பாரதி திருக்குறளை எடுத்துக் கையாண்ட விதம் சிந்திக்கத் தக்கது. மிக மிகப் பொருள் நயம் கொண்டதும் ஆகும்.

இந்திய நாடு சுதந்திரம் பெற வேண்டுமானால். நாமெல்லோரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்கிற எண்ணம் கொண்டு, விடா முயற்சியுடன் பாடுபட வேண்டும் என்பதைப் பாரதி வற்புறுத்திய இடத்திலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குறளையே தேச நலனில் ஈடுபட்டவர்களுக்கு எடுத்துக் காட்டினார்.

சுதந்திர முயற்சிக்குத் தெய்வானுகூலம் உண்டு என்பதை நினைத்துக்கொண்டு, முயற்சியைக் கைவிட்டு விடாமல் இரவுபகல் என்றும் பாராமல் உழைக்க வேண்டும் என்பதைப் பாரதி குறள்மூலம் வற்புறுத்தவே செய்தார்.

''பாரத தேசத்திலே பக்தி செலுத்துகிறோம். பாரத ஜனங்களின் க்ஷேமத்தையே நாடுகின்றோம். அந்த க்ஷேமம் உண்மையானதும், நீடித்ததுமாக இருப்பதற்கு ஸ்வதந்திரம் பரமாவசியமென்பதை ஐயந்திரிபற அறிந்திருக்கின்றோம். அந்த ஸ்வ தந்திரத்தை அனுபவத்தில் கொண்டுவருவதற்கு உடல், பொருள், ஆவி—மூன்றையும் அர்ப்பணம் செய்து, இரவு பகலாக உழைத்து வருகிறோம்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

[**இந்தியா**: *4-9-1909*—பக். 8]

ஆக, நம்முடைய சுதந்திரத்திற்கு இடைவிடாத முயற்சி தேவை. முயற்சி யுண்டானால் வெற்றி உறுதி என்பதை எடுத்துக்காட்டவும் பாரதி திருக்குறளை இடமறிந்து கையாண்டார்.

கூட்டங்களில் பேசுவோருக்கு "நாவடக்கம்" முக்கியம் என்கிற கருத்தைத் தெரிவிக்க வந்த பாரதி, அதேசமயம் "நன்றி மறவாமை"யும் இன்றியமையாதது என்பதைப் புலப்படுத்தவே செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றி மறவாமையும் நாவடக்கமுந்தான் சமூகத்தின் நாகரிகச் சின்னங்கள் என்பதை இளைய தலைமுறையினர்க்கு எடுத்துக்காட்டினார் பாரதி.

கருத்துகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளுகிற போதும், கருத்துகளில் மாறுபாடு கொள்கின்ற போதும் நயத்தக்க நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும் எனவும், ஒருவர் மனதை மற்றவர் புண்படுத்தும்படியான சொற்களை வழங்கலாகாது என்றும் எடுத்துரைத்தார், பாரதி.

ஒரு சமயம் சென்னைத் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்குப் பாரதி சென்று இருந்தார்.

அந்தக் கூட்டத்தில் பேசிய வாலிபர் ஒருவர் வயதான தேசத் தலைவர்கள் பற்றி வருத்தம் தரும்படியான வார்த்தைகளை உதிர்த்துவிட்டார். தேசபக்தியில் முதிர்ச்சிகொண்ட மஹான்களைப் பற்றி அந்த வாலிபர் பேசிய பேச்சு பாரதிக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. ''சிறுபிள்ளைகள் சிறுபிள்ளைத்தன"மாக நடந்துகொண்டதைக் கண்டனம் செய்ய முற்பட்டார், பாரதி. அதுவும், குறள்வழியில் **நன்றி மறவாமை** என்று சொல்லி, பாரதி எழுதிய வசனம் வருமாறு :

> **“தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
> **நாவினாற் சுட்ட வடு**

என்றார் திருவள்ளுவர். ஆதலால், ராஜ்ய தந்திரிகளாகவும், ராஜரீக உபந்யாஸகராகவு மிருந்து தேசத்துக்கு நன்மை செய்ய விரும்புவோர் சொற்களை உபயோகப்படுத்தும் விதத்தில் மிகவும் ஜாக்ரதை செலுத்த வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தேச விடுதலைக்கு முதலாதாரம் தேச ஐக்கிய மென்பது குழந்தைகளுக்குங்கூடத் தெரிந்த விஷயம். அதிலும், தேசியக் கக்ஷியாருக்குள்ளே பலமான ஐக்கிய உணர்ச்சி யிருத்தல் இன்றியமையாதது. ஆதலால், தேசீயவாதிகள் தம்முள் கருத்து மாறும்போதும், கண்டனம் செய்தல் அவசியமாகத் தோன்றும்போதும் தம் இனத்தாரை மாறாத மன வருத்தத்துக்குட் படுத்தக்கூடிய கடூர பாஷை சொல்வதை முற்றிலும் தவிர்த்துவிடுதல் நன்று."

[பாரதி தமிழ் *(1953)*—பக். *352*]

ஆக, கருத்து மாற்றத்தை நாகரிகமான முறையில் புலப்படுத்த வேண்டும் என்பதையும். கடூரபாஷை பயன் படுத்துவதைத் தவிர்த்துவிடுதல் முற்றிலும் நன்று என்பதையும் குறள்வழி நின்றே பாரதி போதனை செய்தார்.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறள்மணி பாரதியின் நெஞ்சிடை ஆழப் பதிந்து விட்ட குறள்மணிகளில் தலையாயது எனக் கொள்ளலாம்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கால, தேச, வர்த்த மானங்களை ஒட்டிப் பாரதி பற்பல குறட்பாக்களை மிக அழகாக எடுத்துக் கையாண்டிருப்பினும், 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்கிற பொருட் செறிந்த இக் குறட்பாவை அவர் கையாண்ட முறையில் புதுமையைக் காண்கிறோம்.

1907 ஜனவரியில் சென்னையில் தென்னிந்தியச் சங்கத்தில் கைத்தறி நெசவைப்பற்றி மிஸ்டர் சாட்டர்டன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பவர் பேசினார். இவர் தொழில் அபிவிருத்தியில் நாட்டம் கொண்டவர்; சென்னை மாகாண சித்திரக் கலாசாலையில் முதல்வராகப் பணியாற்றியவர்.

நாட்டில் சுதேசிய இயக்கம் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பொறுப்பான பதவி வகித்த ஆங்கிலேயர் பேசிய பேச்சு பாரதியை ஈர்த்தது.

குறிப்பாக. மிஸ்டர் **சாட்டர்டன்** சுதேசி இயக்கத்திற்கு விரோதமான கருத்துக்களையே சொல்லி வந்தவர் என்பதைப் பாரதியும் நன்கறிவார். ஆனால், எதிராளி என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்கும் மனப்பான்மையைப் பாரதி என்றும் கடைப்பிடித்தவர் அல்லரே!

சுதேசி இயக்கத்தின் விரோதியாகக் கருதப்பட்ட சாட்டர்டன் தம்முடைய தென்னிந்தியச் சங்கச் சொற் பொழிவில் நெசவுத்தறிகளில் விசை நாடாத்தறிகளே சிறந்தவை என்றும், இந்திய மக்கள் முன்னுக்கு வரவேண்டு மானால் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை களில், நெசவுத் தறிகளை ஆதரிக்க வேண்டுவதும் ஒன்றாகும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த அம்சம்தான் பாரதியைப் பெரிதும் கவர்ந்தது. எனவே, பாரதி மனந் திறந்து, சாட்டர்டன் பேச்சின் உட்பொருளைப் பாராட்டினார்.

> "மிஸ்டர் சாட்டர்டன் நமது சுதேசிய முறைமையின் சத்துருக்களிலே ஒருவர். எனினும், இவர் அன்று செய்த உபந்நியாசத்திலே சுதேசிய நிந்தை மட்டுமே யன்றி, வேறு சில நல்ல விஷயங்களு மிருந்தன. இவரது உபந்நியாசத்திலே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்மவர்களுக்கு ஹிதமான வசனங்களை வேறொரு பத்திரிகை மொழிபெயர்ப்பினின்று எடுத்துப் பதிப்பிக்கின்றோம்''

[இந்தியா : 2-2-1907 — பக். 6]

என்று தம் கருத்தை வெளிப்படுத்திய பாரதி, அதே மூச்சில்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பது திருவள்ளுவர் வாக்கு.

நமக்கு விரோதிகள் சொல்லும் விஷயங்களிலே கூட நமக்கு ஹிதமான விஷயங்களைத் தெரிந்தொழுக முயல வேண்டியது நமது பெருங்கடமையாகும்''

[இந்தியா : 2-2-1907 — பக். 6]

என மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி, சொல்வது யார் என்பதைப் பார்க்கக் கூடாது, என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும் என்கிற உண்மையை இங்கே குறள் மூலம் உணர்த்தினார்.

இதே போல், இன்னுமொரு செய்தி.

சென்னையிலிருந்து **பிழைக்கும் வழி** என்ற மாத பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

இந்தப் பத்திரிகையின் 1909 ஏப்ரல் மாத இதழில் திரு. **வி. கிருஷ்ணசாமி ஐயர்** அவர்கள் வாலிபர்களுக்கான கல்வி முறையைப் பற்றி விளக்கி ஓர் கட்டுரை எழுதி இருந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதாவது, நமது நாட்டு வாலிபர்கள் ஆங்கிலக்கல்வி கற்பதனால் யாதொரு பயனும் அடைகிறதில்லை என்றும், தொழிற்கல்விதான் அவர்களுக்கு வாழ்வுப் பயனைத் தரும் என்றும், அவர்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு படிப்பது நல்லது என்றும் திரு. கிருஷ்ணசாமி ஐயர் தம் கட்டுரையில் விளக்கி இருந்தார்.

நமது தேசத்தார் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பெரிய விஷயத்தைப் பற்றி மிகத் தெளிவாக திரு. கிருஷ்ணசாமி ஐயர் எழுதியதைப் பாரதி பார்த்தார்; உள்ளம் மகிழ்ந்தார்.

அரசியலைப் பொறுத்தவரை கிருஷ்ணசாமி ஐயர் மிதவாதப் போக்கைக் கைக்கொண்டிருந்தவர்; ஐயரும் பாரதியும் அரசியலில் எதிர் எதிர் துருவங்களைப் போலத் திகழ்ந்தவர்கள். கொண்டிருந்த கொள்கைப் பற்றுக் காரணமாக, கிருஷ்ணசாமி ஐயரைப் பாரதி கடுமையான வசனங்களால் சாடியுமிருக்கிறார். என்றாலும், பொது நன்மை கருதிக் கிருஷ்ணசாமி ஐயர் தெரிவித்த கருத்துகள் பாரதியின் தேசீய நெஞ்சத்தைத் தொட்டன.

அதனால், பாரதி சற்றும் தயங்காமல், அவரைப் பாராட்டவே செய்தார்:

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

—திருக்குறள்

"மனுஷ்ய சித்தம் கடல் நீரைப் போலன்று. ஒரே மொத்தமாக எங்கு பார்த்தாலும் உப்பா யிருக்க மாட்டாது. சுபாவத்தினின்றும் மிகுந்த மாறுபாடடைந்த சித்தங்களிலேகூடச் சிலசில விஷயங்களில் தெளிவும், இனிமையும் இருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆதலால், மிகுந்த கல்வியும், நுட்பமான அறிவும் உடையவரும், ஆனால் அக் கல்வியையும், அறிவையும் சென்ற மூன்று வருஷங்களாகத் தேச விரோதமான முயற்சிகளிலே செலவிட்டு வருபவருமாகிய ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் மனதிலேகூடச் சில சமயங்களில் பொதுஜன நலத்திற்கு அனுகூலமான உணர்ச்சிகள் ஜனித்து விடுகின்றன."

[**இந்தியா** : *22-5-1909 — பக். 3*]

நல்லதை எவர் சொல்லினும், வேற்றுமை பாராட்டாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற மெய்ப்பொருள் கருத்தை இங்கே எடுத்துக் காட்டினார், பாரதி.

சுதேசி இயக்கம், தொழிற்கல்வி விஷயம் போன்றவை களில் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்ற குறளைப் பொருத்தமுறக் காட்டின பாரதி கவிதை, சமுதாய சீர்திருத்தம் போன்ற விஷயங்களைப் பற்றிச் சொல்ல வந்தபோதும் அழகுறக் கையாண்ட முறை நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது.

அரசியல், சமூகம், இலக்கியம் ஆகிய இன்ன பிற துறைகளிலும் பாரதி மெய்ப் பொருளைக் காண விழைந்தார்; கண்டவிடத்து வியந்தார்.

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதைப் பாரதி பெரிதும் விரும்பினார்; அதனால், அக் கலை வளர வேண்டும் என்பதில் அக்கறையும் காட்டினார்.

கவிதைக் கலையிலே 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' மிகவும் சுலபம். பேருண்மைகளையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்செட்டுடன் சுருங்கிய கவிதை வடிவிலே அடக்கி விடலாம். ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மையே இதுதான் என்பது சிலருடைய கருத்து.

அந்தச் சிலரிலே **உயோநே நோக்குச்சி** தலைமை ஸ்தானம் வகித்தார்.

உயோநே நோக்குச்சி என்பவர் ஜப்பானியப் புலவரிலே கீர்த்தி வாய்ந்தவர், அவர் ஒரு சமயம் இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களில் உள்ள இங்கிலீஷ் கவிதைகளைக் காட்டிலும், ஜப்பானியக் கவிதைகளே சிறந்தவை என்றும், ஜப்பானியக் கவிதையில் அநாவசியமான பதச் சேர்க்கை, அநாவசியமான கருத்து விளக்கம் — இவை யில்லாமல் முத்துப் போலே பதங்கள் கோக்கும் முறையைக் காணலாகும் என்றும் தம்முடைய கருத்தைத் தெரியப்படுத்தி இருந்தார்.

ஜப்பானியப் புலவரின் கருத்தைப் படித்த அளவில், பாரதிக்குத் திருக்குறள்தான் நினைவுக்கு வந்தது.

வந்தவுடன் ‘எழுத்தும் தெய்வம்’ எனப் போற்றி வணங்கிய பாரதியின் எழுதுகோல் இப்படி எழுதியது :

“ ‘சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்’ ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மை யென்று நோக்குச்சிப் புலவர் சொல்வதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார்.

“நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது. ‘கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்.’

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ் நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது.

''ஆனாலும், ஒரேயடியாய் கவிதை சுருங்கியே போய்விட்டால் நல்லதன்று... நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மை யிருக்கிறது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

[**பாரதி தமிழ்** (*1953*) — பக். *154-155*]

கவிதையைப் பற்றிய தம் கருத்தை, குறள் நெறிப்படி, திருக்குறளின் சிறப்போடு கூடின வகையில் பாரதி சுருங்கச் சொல்லியே நமக்கு விளங்க வைத்து விட்டார்.

கவிதைகளிலே சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதான அற்புத ரஸத்தை வரவேற்ற பாரதி, ஆசார சீர்திருந்த விஷயங்களிலேயும் பரந்த மனப்பான்மை யுடனே மெய்ப்பொருள் கண்டார்.

1920 ஆம் வருடம் ஜூன் மாத இறுதியில், திருநெல்வேலியில் **மாகாண ஆசாரத் திருத்த மஹாசபை** மகாநாடு ஒன்று நடைபெற்றது.

பொதுவாக, ஆசாரத் திருத்த சபையானது ராஜரீக காரியங்களில் அவ்வளவாகக் கவனம் செலுத்தாமல், சமூக சீர்திருத்த விஷயங்களில் மட்டுமே கவனம் காட்டி வந்தது.

ஆசாரத் திருத்தக்காரர்களிடம் பாரதிக்கு ஒருவகையில் வருத்தம் உண்டு. என்றாலும், அவர்களின் கொள்கைகளில் பல உன்னதமானவை என்று பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்தும் கொண்டிருந்தார். அது மட்டிலுமில்லை — நமது தேச முன்னேற்றத்தின் பரம சாதனங்களில் ஒன்றாகவே ஆசாரத் திருத்தச் சபையைப் பாரதி மதித்தார்.

தமக்குள்ள கருத்து வேறுபாடுகளை யெல்லாம் பாரதி ஒருபுறத்தே தள்ளி வைத்து, ஆசாரத் திருத்தச் சபையின் விஷயத்தில் நம்மவர் அனைவரும், தம்மால் இயன்ற வகைகளி லெல்லாம் உதவி புரியும்படி கேட்டுக் கொண்டார்.

காரணம், பாரதிக்குள்ள திருக்குறள் பக்தியே; திருவள்ளுவரின் மெய்ப் பொருள் தத்துவத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையாலேதான்!

பாரதி தமிழ்நாட்டு மக்களை அறைகூவி அழைத்துச் சொல்கிறார் :

> "தமிழ்நாட்டு மக்களே! ஆரம்பம் முதல் சமீப காலம் வரை ஆசாரத் திருத்தத் தலைவர்கள் பெரும்பாலும் தேசாபிமானம், ஸ்வ பாஷாபிமானம், ஆர்ய நாகரீகத்தில் அனுதாபம் — இம் மூன்றும் இல்லாதவர்களாக இருந்து வந்தபடியால், பொது ஜனங்கள் இவர்களுடைய வார்த்தையைக் கவனிக்க இடமில்லாமல் போய் விட்டது. எனினும், அவர்களுடைய கொள்கைகளிற் பல மிகவும் உத்தமமான கொள்கைகள் என்பதில் ஐயமில்லை.
>
> **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்ப தறிவு.**
>
> "தேசாபிமானம் முதலிய உத்தம குணங்கள் இல்லாவிடினும் இந்த முயற்சி தொடங்கியவர்கள் உலகப் பொது நீதிகளை நன்குணர்ந்தோர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாவராலே தொடங்கப்பட்டதாயினும், இப்போது இம் முயற்சி தேச ஜனங்களின் பொதுக் கார்யமாக பரிணமித்து விட்டது.

"எனவே, இவ் வருஷத்து மஹா ஸபையில் தமிழ் மக்கள் பெருந்திரளாக எய்தி நின்று, ஸபையின் விவகாரங்கள் பெரும்பாலும் தமிழிலேயே நடக்கும்படி யாகவும், தீர்மானங்கள் பின்பு தேச ஒழுக்கத்தில் காரியப்படும்வண்ணமாகவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கடவர்."

[**பாரதியார் கட்டுரைகள்** (1940) — பக். 551]

இப்படி எங்கும், எவரிடத்தும், எதிலும் மெய்ப் பொருள் கண்டார் பாரதி.

'சொல்லிற் பயனுடைய சொல்லுக' என்று ஆணி முத்தைப்போலே வார்த்தை சொன்ன வள்ளுவர் வாக்கை வேதமெனக் கருதியவர் பாரதி என்பதைக் கண்டோம்.

தெய்வப் புலவரின் வாக்குகளை மனித குலம் கடைப்பிடித்து ஒழுகினால், எத்தனை வேற்றுமைகள், குணத்தாலும், செய்கையாலும், படிப்பாலும், மற்ற வீண் நியமங்களாலும் மானிடருக்குள் ஏற்பட்டிருந்த போதிலும் அந்த வேற்றுமைகள் யாவும் மறைந்துவிடும் என்பது பாரதியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

பாரதி தம் நம்பிக்கையின் அடிப்படையில் விடா முயற்சியையும் மனிதகுலம் கைக்கொண்டிருக்க வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் வழியில் வற்புறுத்தினார்.

'அறிவை நல்ல வழிகளில் உழைப்பவனுடைய உடம்பு முயற்சியில்லாமல் சோம்பிப் படுத்திருக்க நியாயமில்லை' என்று சொல்ல வந்த பாரதி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> "சோம்பேறியின் விருப்பங்கள் கவலைகளாக மாறுகின்றன. கையினால் உழைக்காமல் மனத்தால் விரும்புவோன் தன்னைத்தானே தின்று கொள்கிறான். சோம்பேறியின் மனத்தைக் கவலைகள் சூறையாடுவதுபோல், அவனுடம்பை வியாதிகள் சூறையாடுகின்றன. முயற்சியினாலே செல்வம் வருமென்றும், முயற்சியில்லாவிட்டால் வறுமை வருமென்றும் திருவள்ளுவர் சொல்லுகிறார்''
>
> [**பாரதி தமிழ்** : (1953) — பக். 179-180]

என்று விளக்கம் தந்தார். தவிர முயற்சியின் இன்றியமையாமையை,

> ''ஹிந்துக்களாகிய நாம் முயற்சியைக் கைவிடாமல் நடத்தவேண்டும். முயற்சி யுண்டானால் உடம்பிலே வலிமை யுண்டு; உள்ளத்திலே மகிழ்ச்சி யுண்டு; கல்வி யுண்டு; செல்வமுண்டு; நீண்ட வயதும் புகழும் இன்பங்களுமுண்டு. முயற்சி யிருந்தால் பயமில்லை. முயற்சி யுண்டானால் வெற்றி யுண்டு, முயற்சி உடையவனுக்கு விடுதலை கைகூடும்"
>
> [**பாரதி தமிழ்** (1953)—பக். 180]

என்று இப்படி பாரதி அடுக்கடுக்காக எடுத்துச் சொன்ன அழகு நெஞ்சு இருக்கும்வரை நினைவில் நிற்கும் அன்றோ?

விடுதலை இயக்கத்தில் பாரதி முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த காலத்தும், தெய்வப் புலவர் வள்ளுவப் பெருமானிடம் ஈடுபாடு கொண்டு, பொது நலங் கருதித் தம் படைப்புச் செல்வங்களில் திருக்குறட் மணிகளை எடுத்தாண்டு, நாட்டு மக்களிடையே விழிப்பு உணர்வு ஊட்டினார்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

பாரதியும் அரவிந்தரும்

வங்க தேசீயக் கல்வி இயக்கத்தின் பயனாகத் தேசீய இயக்கத்திற்குக் கிடைத்த துடிப்புள்ள இளைஞர் **அரவிந்த கோஷ்** என்பது வரலாற்றாசிரியர் பலரும் தெரிவிக்கும் சேதியாகும்.

அரவிந்தர் புலமையிலும், அறிவாற்றலிலும் சிறந்து விளங்கினார். எளிய வாழ்க்கை வாழ்ந்தார்; சமயப்பற்று கொண்டு திகழ்ந்தார். இந்திய தேசீய இயக்கம் எல்லாத் துறைகளிலும் சம வளர்ச்சி பெற்று ஓங்க வேண்டும் என்பது அவருடைய அசைக்க முடியாத கொள்கையாக இருந்தது, அதனால், தேசீய இயக்கம் வெற்றி பெறத் தம்மாலான பணிகளை ஆற்ற முன்வந்தார்.

வங்கப் பிரிவினையால் நாட்டில் எழுந்த சுதேசீய இயக்கத்தின் விளைவாக, அரவிந்தர் தம் உத்தியோகத்தை உதறி எறிந்துவிட்டு நேரடி அரசியலில் ஈடுபட்டார்.

அரவிந்தர் தேசத்திற்குச் செய்திருக்கும் பணியோ அளவிட முடியாதது; தேசத்தாரின் பொது வாழ்வை அவர் மேன்மைப்படுத்தினார்.

விபின சந்திர பாலரால் ஆரம்பிக்கப்பட்ட **வந்தே மாதரம்** என்கிற பத்திரிகைக்கு அரவிந்தர் ஆசிரியராகி, அப் பத்திரிகையின் மூலம் நாட்டில் புதிய எழுச்சியை உண்டுபண்ணினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காங்கிரஸ் மகாநாடுகளில் பங்கு கொண்ட அரவிந்தருடன் பாரதி பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டார். 'வந்தே மாதர' பத்திரிகைப் பாணியையே 'இந்தியா' பத்திரிகையில் பாரதி பின்பற்றினார். திலகர் தலைமையை அரவிந்தர் ஆதரித்தார். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் பாரதியும் திலகர் தலைமையை ஆதரித்து வந்த பத்திரிகையாளர் என்பது யாவரும் அறிந்த செய்தியாகும்.

அரவிந்தர் மாணிக்தோலா வெடிகுண்டு வழக் கொன்றில் சம்பந்தப்படுத்தப்பட்டு, 1908 மே மாதம் 4 ஆம் தேதி கைது செய்யப்பட்டார். அரவிந்தர் அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். விசாரணையின் போது ஓர் ஆண்டுக் காலம் காவலில் வைக்கப்பட்டிருந் தார். பின்னர், அரவிந்தர் குற்றவாளி அல்லர் என்று தீர்மானிக்கப்பட்டு, 1909 மே மாதம் 6 ஆம் தேதி விடுவிக்கப்பட்டார்.

புதுவையில் அடைக்கலம் புகுந்திருந்த பாரதி தம்மொத்த தீவிர தேசபக்தரும், தியாக சீலருமான அரவிந்தர் வழக்கு விசாரணை விவரங்களை யெல்லாம் **இந்தியா** பத்திரிகையில் முறையாகப் பிரசுரிக்கவும் செய்தார். மற்றும், இதே சமயத்தில், அரவிந்தர் வாழ்க்கைச் சரிதச் சுருக்கத்தையும், அவரைப் பற்றி அறிஞர் பெருமக்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் வெளியிடவும் முற்பட்டார்.

ஆக, அரவிந்தர் வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுக்கள், அரவிந்தர் தம் மனைவிக்கு எழுதிய கடிதங்கள், அரவிந்தரின் வாக்கு மூலங்கள், வக்கீல்களின் வாதங்கள் என்றிவ்வாறான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்திகள் எல்லாம் 'இந்தியா' பத்திரிகையை அணி செய்தன.

ஒருவழியாக வழக்கு விசாரணை முடிந்து, அஸெஸர்களும், தங்களுடைய அபிப்பிராயங்களையும் தெரிவித்து விட்டார்கள். குருதாஸ் பாபு, கேதாரநாத் சட்டர்ஜி ஆகிய இரண்டு அஸெஸர்களும் அரவிந்தர் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்து விட்டனர். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை 'இந்தியா' வெளியிட்ட பாங்கு நம்மைச் சிந்தனையில் ஆழ்த்துகின்றது.

'இந்தியா' பத்திரிகை தந்த செய்தி வருமாறு :

"...இரண்டு அஸெஸர் மனதிலும் அரவிந்த பாபு குற்றவாளி யில்லை யென்பது நிச்சயமாகப் பட்டிருக்கிறது.

குருதாஸ் பாபு சொல்லுகிறார்: 'அரவிந்த பாபுவின் உபந்யாஸங்கள் தீங்கற்றவை. அவர் ஸாத்துவிக எதிர்ப்பையே போதனை செய்கிறார். அது குற்றமாகமாட்டாது.

'அரவிந்தர் ராஜ துரோகப் பத்திரிகைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தா ரென்பது ருஜுவாகவில்லை. அரவிந்தரையும் வெடிகுண்டுக் கூட்டத்தையும் பிணைத்து ராஜாங்கத்தார் சொல்லும் கதைகளெல்லாம் ருஜுவில் நிற்கமாட்டா. அரவிந்தருடைய படிப்பையும், அறிவையும் கவனிக்க, அவர் இத்தனை சிறு பிள்ளைத்தனமான 'யுத்தக் கூட்ட'த்திலே சேர்ந்திருப்பாரென்று நினைப்பதற் கிடமில்லை. அவருக்கு விரோதமாகச் சொல்லப் பட்டிருக்கும் சாக்ஷியங்கள் பரஸ்பர விரோதமாகவும் பொய்யாகவும் இருக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வரீந்திர குமாரர் முதலியவர்கள் கொடுத்த 'அங்கீகார' வாக்குமூலங்களில் அரவிந்தரைக் குற்றத்தில் பிணைக்கும்படியான தொன்றுமில்லை. அரவிந்தரை எவ்வித பலத்தை வைத்துக்கொண்டும் வெடிகுண்டுக் கூட்டத்தோடு சேர்க்க முடியவில்லை. ஆதலால், நான் அரவிந்த பாபு குற்றவாளி யில்லை யென்று தீர்மானிக்கிறேன்.'

"கேதார பாபுவும் அரவிந்தர் விஷயத்தில் இதே விதமான அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்."

[**இந்தியா** : 24-4-1909— பக். 4]

இதனால் அரவிந்தர் விடுதலை யடைவது உறுதி என்று பாரதி நம்பினாலும், ஒரே ஒரு விஷயத்தில் அவருடைய மனதில் சந்தேகம் எழத்தான் செய்தது.

சந்தேகத்திற்கான காரணமாக,

"இன்னும் ஒரு மாத காலத்தின் பிறகு தீர்ப்புச் சொல்வதாக ஜட்ஜ் பீச் க்ராப்ட் கோர்ட்டில் தெரிவித்திருப்பது காண்கிறோம். எனவே, குற்ற மில்லாதவர்கள்கூட இத்தனை மாதங்கள் இருந்தது போதாதென்று சிறைக்கூடத்தில் இன்னும் ஒரு மாதம் அடைபட்டிருக்க வேண்டும். மேலும், அஸெஸர்கள் நம்மவர்க ளாகையாலும், அரவிந்த பாபுவின் பெருமையை நன்கு தெரிந்தவர்க ளாகை யாலும் அவர் குற்றமற்றவர் என்று கண்டு சொன்னார்கள். நமது ஜாதீய இயற்கையை அறியாதவரும், இயற்கையிலேயே நம்மவரிடம் அன்பில்லாதிருப்பதுடன் இப்போது பயமும் சேர்ந் திருக்கும் ஆங்கிலேய அதிகாரிகளின் கூட்டத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருவருமாகிய மிஸ்டர் பீச் க்ராப்ட் என்ன செய்யப் போகிறாரோ?

"தேச முழுதும் அரவிந்த பாபு வெடிகுண்டுக் கூட்டத்தில் சேர்ந்திருக்க மாட்டா ரென்ற நம்பிக்கையே பரவி யிருக்கிறது. அது என்ன பிரயோஜனம்? ஆங்கிலேயன் சொல்வதுதானே தெய்வ வாக்கா யிருக்கிறது!"

[**இந்தியா** : *24-4-1909*—பக். 4]

என்று தம் மனதில் தோன்றிய கருத்தை எழுதினார், பாரதி.

ஆனால், நமது ஜாதீய இயற்கையை ஆங்கிலேய ஜட்ஜ் அறியாதிருந்தாலும், வழக்கின் தன்மையை நன்கு ஆராய்ந்து, 1909 ஆம் வருடம் மே மாதம் 6 ஆம் தேதி அரவிந்தர் குற்றவாளி யல்லர் என்று தீர்ப்புக் கூறி, அவரை விடுதலை செய்யும்படிக்கு ஆணை பிறப்பித்து விட்டார்.

அரவிந்தர் விடுதலையில் பாரதி அளவு கடந்த ஆர்வம் காட்டினார்; மகிழ்ச்சி பாராட்டினார். ஆனால், குற்றவாளிக் கூட்டத்தில் சாராத அவரைத் துன்புறுத்தி யதில் பாரதி அடைந்த வருத்தத்திற்கும் எல்லை இல்லை.

"அரவிந்த பாபு விடுதலை யடைந்து விட்டார். சென்ற ஒரு வருஷக் காலமாக இம்மஹானைப் பிடித்து ஜெயிலில் வைத்திருந்ததற்கு என்ன நிவிருத்தி? யாரால் என்ன நிவிருத்தி செய்யமுடியும்? இந்தக் கேஸ் சம்பந்தமாக அடுத்த வாரம் விஸ்தாரமாக எழுதுவோம்

[**இந்தியா** : *8-5-1909* — பக். 4]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று நெஞ்சம் விம்ம, நெக்குருகி எழுதிய பாரதி, சொன்னபடி மறு வாரத்திய 15-5-1909 இதழில் **கிரஹண விமோசனம்** என்று சித்திரம் வரைந்து, 'அரவிந்த சூரியரை விழுங்கவந்த போலீஸ் பாம்பு நீங்கிப் போய்விட்டது!' என்ற குறிப்பும் தந்து, 'அரவிந்தர் மஹிமை'யைப் பெரிதும் எடுத்துரைத்தார்:

"அரவிந்தன் என்ற ஞானச் சுடரை — அரவிந்தன் என்ற தர்ம சூரியனை—அநீதியாகக் 'குற்றஞ் சுமத்துதல்' என்ற இராகு வந்து மறைத்திருந்தது. விழுங்கி விடலாமென்பது அந்தப் போலீஸ் பாம்பின் எண்ணம். சூரியனை விழுங்கப் பாம்பால் முடியுமா? சிறிது காலம் மூடியிருந்து பின் தானே அகன்று போய்விட்டது.

அரவிந்தர் விடுதலை பெற்றது பற்றி நாடு முழுதிலும் மகிழ்ச்சி கொண்டாடுகிறது. நாமும் மகிழ்ச்சி பாராட்டுகிறோமென்று சொல்ல வேண்டியதில்லை. அஸெஸர்கள் அவர் குற்றவாளி யில்லையென்று தீர்ப்பு செய்த பிறகுங்கூட, ஒருவேளை ஜட்ஜி பீச் கிராப்ட் நியாய விரோதமிழைத்து விடுவாரோ என்றெண்ணி யிருந்தோம்; ஏதோ தெய்வ கிருபையால் அந்த ஜட்ஜிக்கு நல்ல புத்தி பிறந்துவிட்டது. ஆனால், சுமார் ஒரு வருஷ காலமாக இந்த நிரபராதியாகிய மஹா புருஷரைக் கடுங் காவல் வைத்திருந்த கொடுமையை நினைக்கும்போது தான் நமக்கு மனம் பொங்குகிறது,

"இவர் வெடிக்காய் வியாபாரத்தில் சம்பந்தப் பட்டிருக்க மாட்டாரென்பது நமக்கு ஆதிமுதலே நிச்சயம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இவர் இன்னும் நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்து தமது தேசாபிமானப் பெருந் தொழில்களை நிறைவேற்றி வரவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறோம்''

[**இந்தியா**: 15-5-1909 —பக். 2]

என்றிவ்வாறு உணர்ச்சி பூர்வமாகப் பாரதி எழுதி, அரவிந்தர் சிறையினின்று விடுதலையான மகிழ்ச்சியை மக்களுடன் பகிர்ந்து கொண்டார்.

இங்கே பாரதி, தேசத்தாரின் வாழ்க்கை நிலையை நன்குணர்ந்து அரவிந்தரை **ஞானச் சுடர்** என்றும், **தர்ம சூரியன்** என்றும் பாராட்டி மகிழ்ந்த அதேபோதில் **ரிஷி** என்றும் பொருள் பொதிந்த சொற்றொடரால் விளித்தமை சிந்தனைக்குரியது.

படாடோபமில்லாத, அமைதியான மாமனிதரான அரவிந்தர் சிறைச் சாலையையும் தியாகசாலையாகக் கருதியவர் என்பதைப் பாரதி புலப்படுத்தினார். 'வெடிக்காய் வியாபாரத்தில்' அரவிந்தருக்கு எவ்விதமான தொடர்பும் இராதென்பது தம்முடைய திடமான நம்பிக்கை என்று பாரதி தாம் கருதியதை எடுத்துச் சொன்ன பாங்கு எண்ணியெண்ணி இன்புறத் தக்கதாகும்.

மற்றும், இதன்பின்னர் 'இந்தியா' பத்திரிகை வாசகர்களின் வசதிக்காக—படிப்போருக்கு இன்பமளிப்பதற்காக 22-5-1909ஆம் தேதியிட்ட இதழில் அரவிந்தரின் சரித்திரச் சுருக்கத்தை எழுதி வெளியிட்டார்.

அரவிந்தரின் தீவிர தேசபக்தியும், மாசற்ற ஒழுக்கமும் அவருடைய கொள்கையினின்றும் மாறுபட்டவர்களுங்கூட அவரைத் தெய்வம் போலப் பாராட்டி வந்தமையும் பாரதியை வெகுவாகக் கவர்ந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றும், அரவிந்தரின் சுதேசி இயக்கப் பணிகளும் சொற்பொழிவுகளும் பாரதியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அதனால், பாரதி தம் உள்ளம் கவர்ந்த தலைவரின் சுதேசிய முழக்கம் பற்றிய செய்திகளைத் தொடர்ச்சியாக 'இந்தியா'வில் வெளியிட்டார்.

அலிப்பூர் வழக்கில் விடுதலையான பிறகு முதன் முதலில் அரவிந்தர் கல்கத்தாவில் உத்தர்பாரா தர்ம ரக்ஷிணி சபையின் இரண்டாம் வருஷக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், "சுதேசீயம் தெய்வீக முயற்சி. அதை எவ்வித மனித சக்தியாலும் அடக்க முடியாது'' என்று குறிப்பிட்டார்.

அரவிந்தரின் இந்தச் சொற்பொழிவு பாரதிக்குத் தர்ம முழக்கமாகவே பட்டது. அதை வெளிப்படுத்தும் வகையில் **அரவிந்தரின் வெற்றி முழக்கம்** என்பதாகவே சித்திரத்தில் தீட்டி மகிழ்ந்தார், பாரதி.

சித்திரத்திற்கு விளக்கமாகப் பாரதி எழுதிய நடைச் சித்திரம் இவ்வாறு தெரிவிக்கிறது :

> ''அரவிந்தர்...சுதேசீயம் தெய்வீக முயற்சி யென்றும், அதை எவ்வித மனித சக்தியாலும் அடக்க முடியாதென்றும் சொல்லுகிறார்.
>
> ''இவர் மறுபடி தர்ம முழக்கத்துடன் வெளிப் பட்டிருப்பதைச் சித்திரத்திலே காட்டி யிருக்கிறோம்.
>
> ''சில மனிதர்களுக்குக் கஷ்டம் அதிகப்பட அதிகப்படத் தர்மத்தில் அதிகப்பற்றும், ஸத்யத்தில் அதிக நம்பிக்கையும் பிறக்கின்றன. வேறுசிலர் ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரவிந்தரின் வெற்றி முழக்கம்


இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தர்மத்தின் பொருட்டு அயலான் கஷ்டமுறுவதைப் பார்த்தமட்டிலே அதைரியமும் பயமும் கொண்டு அந்த தர்மத்தைக் கைக்கொள்ளாது கழித்து விடுவார்கள்.

"இதுவே மேலோர்களுக்கும் கீழ்மக்களுக்கும் உள்ள வேற்றுமை."

[**இந்தியா** : 12-6-1909—பக்.2]

மாசற்ற உள்ளத்தினரான அரவிந்தர் நம் நாட்டின் விடுதலை விரைவில் நிகழ்ந்தே தீரும் என நம்பினார்; அதனால் யோக வாழ்வை மேற்கொள்ள விரும்பினார்.

நாளடைவில், தம்முடைய அரசியல் பணிகளைக் குறைத்துக்கொண்டு ஆன்மீகம், பண்பாடு, யோகம் ஆகியன போன்ற விஷயங்களைப் பற்றித் தேசிய நோக்கில் **கர்மயோகின், தருமம்** என்கிற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதிவர முற்படலானார்.

அரவிந்தரைப் பொறுத்தவரையில் 'வாழ்வனைத்தும் யோகமே' என்பது உண்மையாகி விட்டது.

அதன் காரணமாக அரவிந்தர் யோகத்தைப் பற்றியும், ஆன்மீகப் புரட்சியைப் பற்றியும் தம்முடைய பத்திரிகை களில் அடிக்கடி எழுதி வந்தார்.

ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கமோ அரவிந்தரைச் சந்தேகக் கண்ணுடனேயே பார்த்தது; எப்படியாவது அவரைத் திரும்பவும் கைது செய்து, நாடு கடத்திவிடுவது என்று திட்டமிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தச் செய்தியை ஒருவாறு அறிந்தார் அரவிந்தர். தம்மை நாட்டைவிட்டு வெளியேற்றும் அரசு அதிகாரிகளின் கருத்தை வெளிப்படையாகக் குறிப்பிட்டு, நாட்டு மக்களுக்கு ஓர் செய்தி விடுத்தார். அதன் விவரத்தைப் பாரதி மொழிபெயர்த்து 'இந்தியா' பத்திரிகையில் வெளியிட்டார்.

அரவிந்தர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியைப் பிரசுரம் செய்த பாரதி, மிக அழுத்தமாகத் "தமிழர்கள் அரவிந்தர் வாக்கைத் தெய்வ வாக்காகக் கருதி அனுசரிக்கும்படி லோகமாதாவாகிய பாரததேவி கிருபை செய்வாளாக'' என்றும் வேண்டிக் கொண்டார்.

அரவிந்தரிடம் எந்த அளவுக்கு நம்பிக்கை கொண்டு இருந்தார் பாரதி என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அரவிந்தர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் கண்ட குறிக்கோள்களைத் தமிழக மக்கள் நிறைவேற்ற முன்வர வேண்டும் என்றே பாரதி விரும்பினார்.

பாரத விடுதலைப் போரில் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்பது அன்றோ பாரதியின் 'பேராசை!'

தாம் கைதாவதை அரவிந்தர் விரும்பவில்லை, நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல காத்துக் கொண்டிருக்கின்றன என அவர் எண்ணியதால்.

எனவே, அரவிந்தர் பிரெஞ்சு இந்தியாவில் இருந்த சந்திரநாகூரை 1910 பிப்ரவரியில் வந்தடைந்தார். அங்கு வாழ்ந்து வந்தார்; ஒற்றர்களின் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காகத் தம்முடைய இருப்பிடங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டும் வந்தார். இதன்பின் இறுதியாக, அவர் 1910 ஏப்ரல் 4ஆம் தேதி புதுவையை அடைந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரவிந்தர் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்த மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியார், பாரதி ஆகியோர் துறைமுகம் சென்று, அவரை வரவேற்றனர். அரவிந்தர் முதலில் கலவை சங்கர செட்டியாரின் வீட்டில் தங்கினார்.

அரவிந்தர் புதுவை வருவதற்குமுன், பாரதியும் சற்றே தனிமையில் தவித்தார். பிரிட்டிஷ் அரசின் செயல்களால் பாரதியின் பத்திரிகைப் பணிகள் முற்றிலும் தடைப்பட்ட நிலை. அந்தச் சமயத்தில்தான் அரவிந்தர் புதுவை வந்தார். அவர் வருகையால் பாரதி உற்சாகமடைந்தார்.

'வாடிய பயிருக்கு வான் மழைபோல' பாரதிக்கு அரவிந்த 'ரிஷி'யின் வரவு புதுத் தெம்பை அளித்தது.

அரவிந்தர் புதுவை வந்த நாள் முதல், பாரதி அவரைச் சந்தித்து, உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பாரதிக்குப் புதுவை புகலிடம் தந்ததைப் போலவே அரவிந்தருக்கும் அளித்தது. அரவிந்தர் இங்கே வந்த சுமார் நான்காண்டுகள் எளிய வாழ்வை மேற்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டியவரானார். பொதுவாகத் தனிமையை நாடினார்; தம் அறையில் அமர்ந்து, நெடுநேரம் யோக நிலையில் இருப்பார் என்றாலும், தம்மைத் தேடி வந்தவர்களிடம் உரையாடுவதை அவர் தவிர்க்கவில்லை,

நாளடைவில், அரவிந்தர் மெல்ல மெல்ல அரசியல் பேசுவதை நிறுத்திக் கொண்டார்; பொது அரசியல் நடவடிக்கைகளில் பங்கு எடுத்துக் கொள்வதையும் கட்டுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்திக் கொண்டார். தம் முழு நேரத்தையும் யோக சாதனையில் செலுத்தவே பெரிதும் விரும்பினார்.

'பாரமார்த்திகத் துறையில் தமது நாட்டார் உலகிற்கே வழிகாட்டப் போகிறார்களென்று அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்' என அரவிந்தரின் பெருமை பேசினார், **லாலா லஜபத்ராய்.**

> "தற்போது நமது தேசிய வாழ்வில் அற்ப அரசியல் முயற்சிகளுக்கு இடமிருக்கிறது, அவற்றில் ஈடுபட மன மில்லாமையினால்தான் நான் சிறிது காலமாக விலகி நின்று தனித்திருக்கிறேன். இத்தகைய காலங்களில் இதுபோன்ற பெரு நோக்கங் களுக்காகத் தவம் புரிவதில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஆத்மப் பயிற்சிக்காக. ஆத்ம ஞானத்திற்காக, ஆத்ம சக்தி சேகரித்துக் கொள்வதற்காக மௌனத் தவம் செய்தல் அவசியம். நமது முன்னோர் வெவ்வேறு முறையில் இச் சாதனத்தைக் கையாண்டார்கள். உலகின் வருங்காலம் மகா முக்கியம் வாய்ந்ததா யிருக்கப் போகிறது. அக்காலத்தில் திறமையாகத் தொண்டியற்றும் ஆற்றல் பெறுவதற்குத் தவமே சிறந்த சாதனை யாகும்"

[**யுவபாரதம்**: (*1937*)—பக். *311*]

என்று *1915*ஆம் ஆண்டின் வாக்கில் அரவிந்தர் 'ஹிந்து' பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டமை இங்குக் கருதத் தக்கது.

அரவிந்தர் அரசியலில் ஈடுபாடு கொள்ள மனமில்லாத வராக இருந்த நிலையில் — மனித குலம் மேன்மைப்படத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவ வாழ்க்கை மேற்கொள்வதில் நம்பிக்கை கொண்டிருந்த நிலையில் — பாரதி அவருடன் மிக நெருக்கமாகப் பழகினார் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டுவது அவசியமாகின்றது. அதாவது 1914 ஆகஸ்டு 15இல் அரவிந்தர் **ஆர்யா** (Arya) என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

பத்திரிகையின் குறிக்கோள் பற்றி திரு. **நவஜாதா** என்பவர்,

> "இப் பத்திரிகையின் குறிக்கோள் இருமுக மானது. முதலாவது, உலக வாழ்வின் முக்கியமான பிரச்சினைகளின் ஒழுங்கு பூர்வமான ஆய்வு. இரண்டாவது பல்வேறு வகையான அளவில் பரந்து பட்ட அறிவினை இணைக்கும் வழியினை உருவாக்கு தலும்—மனித குலத்தின் பல்வேறு மதப் பாரம் பரியங்களை கிழக்கத்திய, மேற்கத்திய கருத்துக்களை ஒன்றுபடுத்துதலு மாகும். அதன் வழிகள் நடப்பியல் நோக்குடன் கூடியவை; நடைமுறைக் கொத்தவை; அவை பகுத்தறிவு பூர்வமாகவும் அதே சமயத்தில் சாதாரண அறிவிற்கப்பாற் பட்டதாகவும் இருந்தன. இதனால் தூண்டுதல் பெற்ற பல்வேறு குழுக்களுக்கும் சமூகங்களுக்கும் கருவியாகப் பயன்பட வேண்டும் என்பதும் இதன் நோக்கமா யிருந்தது"
>
> [**ஸ்ரீ அரவிந்தர்**: *(1976)—பக். 87*]

என்று தெளிவுபடுத்தி உள்ளார்.

இந்தத் தத்துவ மாதப் பத்திரிகையில் பாரதியும் நிறைய எழுதி யுள்ளார். பத்திரிகை நடந்துவந்த காலப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதிகளில் பாரதி தினமும் அரவிந்தர் மாளிகைக்குச் சென்று, அங்குப் பல மணிநேரம் அரவிந்தருடன் வேதாந்த விசாரணையில் ஈடுபடுவாராம்.

புதுவையில் வாழ்ந்த திரு. **ப. கோதண்டராமன்** அவர்கள் **பாரதியாரும் அரவிந்தரும்** என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில்,

> "இந்தக் காலங்களில் பாரதியார், அவரை அடிக்கடி பார்க்கச் செல்வார். சில சமயம் அவருடன் உலாவப் போவார். இரவில் பியர் பாலத்தில் அமர்ந்து நீண்ட நேரம் அளவளாவுவதும் உண்டு. இச் சமயங்களில் ஸ்ரீ அரவிந்தர் பாரதியாருடன் கீதை, உபநிடதங்கள், வேதங்கள் ஆகியவற்றைப் பற்றியும், இவை விஷயமாக மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் செய்துள்ள பலவகையான ஆராய்ச்சிகளைப் பற்றியும் கூறுவாராம். ஓய்வு நேரங்களில் பாரதியார் அரவிந்தருக்குத் தமிழ் மொழிகூடக் கற்றுக் கொடுப்பாராம். மகாமேதை யாகிய ஸ்ரீ அரவிந்தர் தமிழ் மொழியை எளிதில் கற்று நம்மாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார் போன்ற வைணவப் பெரியார்கள் பாடிய தீஞ்சுவைப் பாடல்களைப் பாரதியார் படிக்கவும் பாடவும் கேட்டுச் சுவைக்கும் அளவுக்கு முன்னேறி இருந்தார் என அரவிந்தருடன் புதுவை வந்த சீடரும் இன்று ஆசிரம வாசியாக இருப்பவருமான நளினி காந்த குப்தா எமக்கு அறிவித்திருக்கிறார்"
>
> [**தமிழகம் தந்த மகாகவி** (1978)—பக். 249]

என்று மிக அருமையாகக் குறித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரவிந்தரின் ஆன்மீகத் துறை தேர்ச்சியைப் பாரதி பெரிதும் மதித்தார்; அவருடைய மேதைமையையும் ஆத்ம ஞானத்தையும் கண்டு அவரிடம் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார்.

அரவிந்தரும் பாரதியின் மேதைமையையும் புலமையையும் நன்குணர்ந்து, அவரை நன்கு மதித்து நட்புரிமையுடன் பழகினார்.

ஆரம்ப நாளில், அரசியல் துறையில் அரவிந்தர் கோட்பாடுகள் பாரதியை ஈர்த்தன. அதுபோலவே, புதுவை வாழ்வில் அரவிந்தரின் ஆன்மீக வாழ்வு பாரதியைப் பெரிதும் கவர்ந்தது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

பாரதியும், அரவிந்தரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்டு புதுவையில் வாழ்ந்த அந்த இனிய நாட்கள் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கவை.

தமிழறிந்த மக்களுக்குத் தேசீயப் போராட்டத்தில் தம்மைப் பிணைத்துக்கொண்ட அரவிந்தர் பற்றிய செய்திகளை யெல்லாம் முறைப்படத் தந்த பத்திரிகையாளர் பாரதியை அரவிந்த உலகம் என்றும் நினைவில் நிறுத்திப் போற்றிக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளது என்பதை எவரே மறுப்பர்?

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

பாரதியும் சிதம்பரனாரும்

'நமது நாட்டுச் செல்வம் வெளியேற வொட்டாமல் தடுக்க வழிதேடியவர்; தமிழ் மொழி சிறக்கப் பணியாற்றியவர்; இந்திய நாட்டிற்குச் சுயாட்சி வேண்டுமென்று பாடுபட்டவர்' என்றெல்லாம் நல்லோர்களால் பாராட்டப் பெற்றவர் **வ.உ. சிதம்பரனார்.**

'தென்னாட்டுத் திலகர்', 'கப்பலோட்டிய தமிழர்' என்னும் சிறப்பு அடைமொழிகளுக்கும் வ.உ. சிதம்பரனார் உரியவராவார்.

தம் தந்தையின் அடியொற்றியே சிதம்பரனார் வக்கீல் தொழிலை நாடினார். வக்கீல் தொழிலில் வருவாயைக் குறிக்கோளாகக் கருதாமல், நியாயத்தின்பாற்பட்ட வழக்குகளுக்கு மட்டுமே ஆஜரானார்.

வக்கீலா யிருந்த காலப் பகுதியிலேயே தமிழாராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்ட சிதம்பரனார், சுதேசி இயக்கம் தோன்றிய பொழுதில், அந்த இயக்கத்தோடு அவர் தம்மைப் பிணைத்துக் கொண்டுவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதேசிய ஆவேசம் கொண்ட காரணத்தால், ஆங்கிலேயக் கப்பல் கம்பெனிக்குப் போட்டியாகத் தமிழ் நாட்டிலேமுதன்முதலாகச் சுதேசியக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். அதனால், அவரடைந்த இன்னல்கள் வருணனைக்குள் அடங்காதவை.

நாட்டு நலத்தின் பொருட்டு உழைத்த காரணத்தால், தம் சொந்தப் பொருளை இழந்தார்; அதிகார வர்க்கத்தின் கொடுமைகளுக்கும் ஆளானார்; செல்வந்தர் குடும்பத்திலே பிறந்த சிதம்பரனார், தேசத்திற்காகச் சிறை சென்றார்; சிறையிலே செக்கிழுத்தார்.

சிறைத் தண்டனை அடையவும், சிறையில் துன்பங்கள் அனுபவிக்கவும் சிதம்பரனார் செய்த பெருங் குற்றந்தான் யாது?

இதோ, பாரதியே சொல்கிறார் :

> "ஆங்கிலேயருடைய வஸ்துக்களைப் பஹிஷ்காரம் செய்வதாகிய சுதேசீயத்தையே ஆயுதமாகக் கொண்டு ஸ்வராஜ்ய ஸித்திபெற முயல வேண்டுமென்று பிரசங்கம் செய்த பெருங் குற்றத்தின் பொருட்டாக, ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளைக்கு 20 வருஷத் தீபாந்தரமும், ஸ்ரீமான் சுப்பிரமணிய சிவனுக்கு 10 வருஷத் தீபாந்தரமும் விதித்தது நீதி—அதாவது, பிரிட்டிஷ் நீதி.''

[**இந்தியா**: *7-11-1908*—பக். 2]

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து, சுயாட்சி கோருவதும், அதன் பொருட்டுச் சொற்பொழிவாற்றுவதும் பெருங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குற்றமாகவே அன்னியர் ஆட்சிக் காலத்தில் கருதப் பட்டது. அந்த "மாபெரிய" குற்றத்தைச் செய்த நல்லோர் வரிசையில் வ.உ.சி.யின் பெயர் முன்னணியில் காணப்பட்டது.

நாட்டு நலப்பணியே பாரதியையும், வ.உ.சி.யையும் ஒன்றாகப் பிணைத்தது; வ.உ.சி.யின் தன்னலமற்ற நாட்டுப் பணி பாரதியைப் பெரிதும் ஈர்த்தது.

வ.உ.சி. பேரில் பாரதி புதிய நடையில் இயற்றிய பாடல்கள் வ.உ.சி.க்குப் பெருமையைச் சேர்த்தன என்று கூறுவதைப் போலவே, தமிழர்களுக்குப் புதிய ஆவேசத்தை உருவெடுக்கச் செய்தன.

இந்த உண்மையை நாவலர் **சோமசுந்தர பாரதியார்,**

> "ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை யவர்கள் சிறையிடப் பட்டபோது, அவர்களுக்கும், கலெக்டருக்கும் நடந்த ஸம்வாதமாகச் சில புதிய கருத்துக்களுடன் கீர்த்தனைகள் இயற்றித் தமிழ் மக்கள் மனதில் தூங்கிய ஒற்றுமை உணர்ச்சியையும், தேச நேசத்தை யும் உயிர்ப்பித் தெழுப்பி, உலவச் செய்தது உலகம் அறியும்"
>
> [**பாரதியார் சரித்திரம்** (1928)—பக். 12]

என்று உணர்ச்சி பூர்வமாக எழுதியதையும் நாம் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

சொல்லப்போனால், வ.உ.சி.யின் யோசனையை ஏற்றே பாரதி புதுவை சென்றடைந்தார் என்பதை நாம் நன்கறிந்த சேதியே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவை சென்றடைந்து, பாரதி பத்திரிகைப் பணி ஆற்றிய காலப் பகுதியில் தம் நண்பரான வ.உ.சி,யைப் பெருமைப்படுத்தினார்; அவருடைய சுதேசீயக் கப்பல் கம்பெனி முயற்சியை ஆதரித்துச் சேவை புரியலானார்; அவர் வழக்கு பற்றிய செய்திகள், சிறையில் பட்ட துன்பங்கள் ஆகிய இன்ன பிறவற்றைத் தொடர்ந்து மக்களுக்குத் தெரியப்படுத்தி வந்தார்.

வ.உ.சி. கோவைச் சிறையில் பட்ட துன்பங்கள் குறித்து அன்பர் ஒருவர் **துன்பம் சகியான்** என்ற பெயரில் எழுதிய கடிதத்தைப் பாரதி 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரம் செய்தார்.

கடிதம் தெரிவிக்கும் சோகக் கதையைப் படியுங்கள் :

"தேச பக்தரான ஸ்ரீயுத சிதம்பரம் பிள்ளை ராஜத் துரோக, ஜாதித் துவேஷக் குற்றங்கள் சாட்டப்பட்டு ஆறு வருடம் தீபாந்தர சிக்ஷை விதிக்கப் பெற்றிருக்கிறார்.

"தற்சமயம் சிறைப்படுத்தி யிருக்கும் கோயம் புத்தூர் ஜெயில் அதிகாரி அவரைக் கை கால் விலங்கிட்டு, கேவலம் மிருகம் போல் எண்ணெய் ஆட்டும் செக்கிழுக்கும்படி செய்திருக்கிறாராம்! தீப்பறக்கும் நடுவெயிலில் செக்கிழுத்துக் கஷ்டமடை கிறாராம்!

"அந்தோ! இக் கொடிய துன்பத்தை நினைக்கும் போதே நெஞ்சு உருகுகிறதே! இங்கெழுதும்போதே கை நடுங்குகின்றதே! அக் கொடுந் துன்பத்தைச் சகிக்கும் தேசபக்தர் பாடு எங்ஙனமோ, கடவுளே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யறிவார். கைதிகட்கு எத்தனையோ விதமான வேலைகளிருக்க, இத் தேசபக்தருக்கு நாற் கால் மிருகங்களும் துன்புறக்கூடிய எண்ணெய் யந்திரம் சுழற்றும் வேலையா கொடுக்க வேண்டும்? அவர் கை கால்கட்கு விலங்கிடுவதேனோ? இத்தகைய கொடிய சிக்ஷைகள் இத் தேச பக்தருக்குச் செய்ய வேண்டுமென்று பட்டது அச் சிறைச்சாலை அதிபரின் புத்திக்கூர்மை போலும்!

இராஜத் துரோகம், ஜாதித் துவேஷக் குற்றங்கள் செய்ததாகக் கருதப்படுகின்றாரானபடியால் தன்னையும் (வெள்ளையரானபடியால்) துவேஷித்ததாகக் கருதித் தருணம் வாய்த்த தென்று இவ்விதமான மிருகங்களும் துன்புறக்கூடிய கடின வேலையை இத் தேச பக்தருக்கிட்டுப் பழிக்குப் பழி வாங்குகிறார் போலும்! இவண் சிறைச்சாலை அதிபர் சுத்த வீரரே! இச் சிறைச்சாலை யதிபர்க்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வீங்குக.''

[**இந்தியா** : 28-11-1908—பக். 7]

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களுக்காக வருத்தப்பட்டு, அன்பர் ஒருவர் எழுதிய கடிதத்தை வெளியிட்டு, பொதுஜனக் கருத்தை உருவாக்கவே பாரதி முன்வந்தார்.

சிறைச்சாலையில் பலவிதத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்த காலத்தும், வ.உ.சி. மனநிலை கலங்காத ஞான தீரராகவே திகழ்ந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால், வ.உ.சி. யின் சிறைத் துன்பங்களைக் கேட்க, நெஞ்சு பொறுக்காத நிலையில்தான் பாரதி, "நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?'' என்று பாடினார்.

வ.உ.சி. க்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை மேல் முறையீட்டின் பேரில் ஹைக்கோர்ட்டில் ஆறு வருடங்களாகக் குறைக்கப்பட்டு விட்டதன்றோ? அவர் குற்றவாளி அல்லர் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிலைநாட்டி, அவரை விடுதலை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார், அவருடைய மனைவி. வழக்குக்காகத் தேவைப்படும் தொகையைத் திரட்ட அவ்வம்மையார் முழுமூச்சுடன் பாடுபட்டார். எனவே, அம்மையார் நிதி உதவி கோரிய வேண்டுகோளைப் பத்திரிகையில் வெளியிட்டார். சில பத்திரிகைகளில் அம்மையாரின் நிதி உதவி வேண்டுகோள் தக்க சமயத்தில் பிரசுரமாகியது.

நிதி உதவி வேண்டுகோளைப் பாரதியும் "இந்தியா'' பத்திரிகையில் தொடர்ந்தாற்போன்று பிரசுரம் செய்து, நிதி திரட்டும் பணிக்குத் துணை புரிந்தார்.

வ.உ.சி.யின் மனைவி மீனாட்சி அம்மாள் வெளியிட்ட அறிக்கையைப் பாரதி 'இந்தியா' பத்திரிகையில், 'அவரது பத்தினி தேசத்தாரிடம் செய்துகொள்ளும் பிரார்த்தனை' என்றே தலைப்பிட்டுப் பிரசுரம் செய்தார். அதன் விவரம் வருமாறு :

"சகோதர, சகோதரிகளே!

என் கணவராகிய ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை அவர்கள்மீது கொண்டு வரப்பட்ட ராஜத் துரோகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குற்றத்தை ரத்து செய்வதற்காக அவர்களது விருப்பத்தின் பேரிலும் பொது ஜனங்களது உதவியின் பேரிலும் ஹைகோர்ட்டில் அப்பீல் நடந்ததும், ஹைகோர்ட்டார் ஆயுள் வரை விதித்திருந்த தீபாந்தரத்தை ஆறு வருஷமாக மாற்றியதும் நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள்.

"ஆனால் ஹைகோர்ட்டாரும் அவர் குற்றவாளி யென்றே உறுதி செய்து விட்டார்கள். இது விஷயத்தைப் பற்றிப் பல பெரிய வக்கீல்களிடம் கேட்டதில், எனது நாயகர் நிரபராதி யென்று ஸ்தாபிக்கப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாயும் மேலே இங்கிலாந்து பிரிவிக் கௌன்சிலுக்கு அப்பீல் செய்தால், அது ஸாதகமாகு மென்றும் சொல்லு கிறார்கள். ஆதலால், நான் பிரிவிக் கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யப் போகிறேன். அதற்குச் சுமார் 10,000 ரூ. செலவாகு மென்று சொல்லுகிறார்கள். ஆகையால், நீங்கள் ஒவ்வொருவரும் மனமிரங்கித் தங்களாலியன்றதை என் பெயருக்கு அனுப்பி என்னை ஆதரிக்கக் கேட்டுக் கொள்கிறேன்."

[**இந்தியா** : *16-1-1909 — பக்.3*]

இந்த வேண்டுகோளைக் கண்ணுற்ற அன்பர்கள் நிதி உதவி செய்ய முன்வந்தனர்; சிறு தொகையே கிடைத்தது. ஆனால், எதிர்பார்த்தபடி தக்க தொகை கிடைக்கப் பெறாவிட்டால், அப்பீல் நடைபெறுவதற்கு இடையூறு நேரும் அன்றோ?

சில நூறு ரூபாய்களே அம்மையார் கைக்குக் கிட்டிய செய்தியை அறிந்தார் 'நந்தன்' என்ற பெயர் கொண்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் அன்பர். அவர் ஒரு கடிதம் 'இந்தியா' பத்திரிகைக்கு எழுதி யிருந்தார்.

மன வேதனைப்பட்டு 'நந்தன்' எழுதிய கடிதத்தின் சில முக்கியப் பகுதிகளை மட்டும் பார்ப்போம் :

"நாளிதுவரை சில நூறு ரூபாய்களே அம்மையார் கைக்குக் கிட்டியதாயும் அறிந்தேன். தக்க பொருள் விரைவில் வராதபட்சம் அப்பீல் நடைபெறுவதற்கு இடையூறு வருமோ என்றஞ்சுகின்றேன். ஆகையால், நம் தேசவாசிகள் ஒவ்வொருவரும் கூடிய வரையில் தங்களால் இயன்ற உதவிப் பொருளை நம் பிள்ளை யவர்களின் மனைவியார் தூத்துக்குடி ஸ்ரீமதி மீனாக்ஷி யம்மாள் பெயருக்கு அனுப்பும்படி பிரார்த்திக்கிறேன்.

சகோதரர்களே! சமணரால் கழுவேற்றப்பெற்ற மாணிக்கவாசகர் போலவும், அவரது மகிமை யறியாதார் சிலரால் துன்புறுத்தப்பெற்ற ஸ்ரீ கிறிஸ்து நாதர் போலவும் நம் தேசத்தவருக்காக உழைத்துத் தற்சமயம் விலங்கும், கலங்கும் எண்ணெய் யந்திரம் சுழற்றாநிற்கும் நம் தேச பக்த சிகாமணிக்கு நம்மாலியன்ற அற்ப உதவியையும் இச்சமயம் செய்யலாகாதா?"

[**இந்தியா** : 16-1-1909 — பக். 8]

வழக்குத் தொடர்பாக நிதி திரட்டிக் கொண்டிருந்த அதேபோதில் சுதேசிக் கப்பல் கம்பெனி செயற்பட வில்லை என்று சிலர் பிரச்சாரம் செய்யவும் முற்பட்டுவிட்டனர். வேண்டுமென்றே செய்கின்ற பொய்ப் பிரச்சாரம் என்றும், அதற்கு ஆதாரம் கிடையாது என்றும் தூத்துக்குடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்தியா' பத்திரிகை நிருபர் தெரிவித்த சேதியைப் பிரசுரித்து, மக்களுக்கு உண்மை நிலைமையை உணர்த்தினார், பாரதி.

'இந்தியா' பத்திரிகையின் தூத்துக்குடி நிருபர் எழுதியதாவது:

''தூத்துக்குடி சுதேச நீராவிக் கப்பற் சங்கத்துக்குச் சொந்தமாகிய 'காலியா', 'லாவோ' என்ற இரண்டு நீராவிக் கப்பல்களும் நடைபெறாது கொழும்புத் துறை முகத்திலேயே இருப்பதை உத்தேசித்து, அந்தச் சங்கம் நின்றுவிட்டதென்று சிலர் அறியாது பிதற்றுகிறார்கள். அது முற்றிலும் தவறு. கப்பல்கள் விஷயமாகக் கட்ட வேண்டிய தவணைகளுக்கு அப்போதைக் கப்போது பணம் கைவசம் கிட்டாததால் அதற்காக வேண்டிய முயற்சி செய்து, செலுத்த வேண்டிய தொகைகளில் சற்றேறக் குறைய எல்லாம் கொடுத்தாய் விட்டது. சொற்ப தொகைதான் பாக்கி யிருக்கிறது. அதைக் கூடிய சீக்கிரத்தில் கொடுத்து விடவும், கப்பல் நடைபெறவும் ரொக்க ரூபா பாங்கியில் போட்டு, வேண்டும் நடவடிக்கைகளை ஒழுங்காய் நடத்தவும், ஷ கம்பெனி கௌரவ காரியதரிசிகளாகிய ஸ்ரீ கிருஷ்ணயங்காரவர்களும், அது விஷயமாக உழைத்துவரும் வக்கீல் ஸ்ரீ வெங்கிட்ட ராமய்யரவர்களும் வேண்டும் பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள்.

''நமது கப்பல்கள் வேலை செய்யாமல் நின்று சுமார் மூன்று மாசங்களாகின்றன. என்றாலும், பரதேசிக் கம்பெனியார் கேள்வு உயர்த்தப்படவில்லை,

ப.—11

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்போது கப்பல் கூலியை அதிகமாக்கினால், நமது கப்பல் ஓடத் தொடங்கும் பொழுது தங்கள் கப்பலை வெறுங் கப்பலாய் ஓட்ட நேரிடுமென்று எண்ணியே இவ் வேலை செய்து வருகிறார்கள். இதுவே 'நமது கம்பெனி கெட்டுப்போகவில்லை; இனி நன்றாய் நடைபெறும்' என்பதற்கு அத்தாட்சியாக இருக்க வில்லையா? சுமார் இருபது நாள்களுக்குள் கப்பல்கள் ஓட ஆரம்பித்து ஒழுங்காய் நடைபெறுமென்று நிச்சயமாகத் தெரிகிறது.''

[**இந்தியா**: 30-1-1909—பக். 4]

மேற்கண்ட தூத்துக்குடி நிருபரின் கடிதத்தை வெளியிட்டதுடன் பாரதிக்கு மனநிறைவு ஏற்பட்டுவிட வில்லை. நிருபரின் கடிதத்தை வெளியிட்டதுடன் தம் கடமை முடிந்துவிட்டதென்றும் பாரதி கருதவில்லை. அதனால், கப்பல் கம்பெனி செம்மையாகவும் சீராகவும் நடைபெற்று, நமது ஜாதீய மானம் காப்பாற்றப்பட வேண்டும் என்றே பாரதி பெரிதும் விரும்பினார். எனவே, வ. உ. சி. ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனியின் பணிதொடர வேண்டியும், நமது மக்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் **தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி** என்ற தலையங்கத்தில் எழுதிப் புலப்படுத்தினார்.

அவசியம் கருதி, கட்டுரையின் சில முக்கியப் பகுதிகளைக் காண்போம்:

''சுதேசிக் கப்பல் பொதுஜன சகாயம் என்ற காற்று வீசாதபடியால், மேலோட்டமில்லாமல் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு சிரமப் பட்டு நல்ல நிலைக்கு வந்த கம்பெனி இன்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுமார் 2 லக்ஷம் ரூபாய் எங்கேனும் கிடைக்குமானால், பிறகு எக்காலத்திலும் மரண பயமின்றி ஸ்திரமா யிருக்கும்.

"இப்போது ஓர்சில சில்லரைத் தொந்திரவுகள் இருப்பதாகக் கேள்வி. இவற்றைக் கம்பெனிப் பொறுப்பாளிகள் க்ஷணத்திலே நிவிருத்தி செய்து விடக்கூடும். ஆனால், அப்போதப்போது வரும் தொந்தரவுகளை அப்போதப்போது சிரமப்பட்டு நீக்கிக் கொண்டிருந்தால் போதுமா?

"ஒரே மொத்தமாக இரண்டு மூன்று மாதங்களில் 2 லட்சம் ரூபாய் வந்தா லொழியக் கம்பெனிக்கு ஸ்திர ஜீவன் உண்டாக வழியில்லை. இந்த 2 லட்சம் எங்கிருந்து வரும்?

"ஏழைகள், அன்றாடகம் ஜீவனம் செய்வோர், வக்கீல் குமாஸ்தாக்கள், சொற்பத் தொழிலாளிகள் ஆகிய நாம் எல்லோருமே சேர்ந்து இந்தப் பெரு முயற்சியை அழிந்து விடாமல் காப்பாற்ற வேண்டும். நம்மை யெல்லாம் நம்பித்தான் சிதம்பரம் பிள்ளை இந்தக் கம்பெனியை ஆரம்பித்தார்.

"நாம்தான் ஒரே ஊக்கமாக மறுபடியும் மூச்சைப் பிடித்துக் கொண்டு 'ஏலேலோ' பாடிக் கப்பலை மேலே அபிவிருத்தி யடையும்படி தள்ள வேண்டும்.

"இந்த உபந்யாஸம் எழுதும் நாம் மிகுந்த ஏழை. எனினும், நமது சொற்ப வரும்படியிலிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பெனி ஏஜெண்டாகிய தூத்துக்குடி வக்கீல் வெங்கிட்ட ராமய்யரிடம் ரூபாய் ஐந்து கொடுத்திருக்கிறோம்.

''தூத்துக்குடிக் கம்பெனி நமது முதற் பெருந் தொழில் முயற்சி. இதைக் கைவிட்டு விட்டால் நம்மைப் பிறகு உலகத்தில் யாரும் நம்பவே மாட்டார்கள். உலகத்தா ரெல்லாம் சிரிப்பார்கள். நம்மை நாமே நம்பாத ஸ்திதிக்கு வந்துவிடும்.

"ஆகையால், இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் எழுதுபவரைப் போலவே, இந்த க்ஷணமே தமது கையிலகப்பட்டதை—அது அரைக் காசாயிருந்தாலும் சரி, அனுப்பி நமது மாதாவின் மானத்தைப் பாது காக்கவேண்டும்.

"தமிழ் நாட்டிலே 160 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். இதில் 159½ லக்ஷத்தைக் கழித்துவிட்டுப் பாக்கி அரை லக்ஷம் ஜனங்கள் தலைக்கு 4 ரூபாய் விழுக்காடு கொடுக்கும் பக்ஷத்தில் இந்த சுதேசிக் கப்பல் கம்பெனியின் நோக்கம் நிறைவேறிவிடும்.

"சுதேசியக் கப்பல் கம்பெனிக்குப் பணம் போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால் நமது ஜாதீய மானம் அழிந்து போய்விடும்...எத்தனை யாயிர விதமான ஏற்பாடு செய்வீர்களோ, நமக்குத் தெரியாது, எப்படியாயினும் 3 மாதங்களுக்குள்ளே 2 லக்ஷம் தூத்துக்குடியில் சுதேசியக் கப்பல் ஆபீஸுக்கு வந்துவிடவேண்டும்.''

[**இந்தியா**: *30-1-1909*—பக். 4]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் உள்ளார்ந்த — உணர்ச்சி பூர்வமான — தலையங்கத்தைப் படித்த கும்பகோணம் திருவிடை மருதூரைச் சார்ந்த மேலையூர் கிராமத்து ஏழை மிராசுதார் ராமய்யர் என்பவர் தம்மால் இயன்ற தொகை யான பத்து ரூபாயை அனுப்பி, கடிதம் ஒன்றையும் எழுதி இருந்தார்.

தொகையைப் பெற்றுக்கொண்ட பாரதி, ராமய்யரின் செயலைப் பாராட்டி எழுதி, அவரைப் போன்றே அனைவரும் — சுதேசியத்தில் பற்றுடைய யாவரும்—உதவி செய்ய முன்வந்தால், கம்பெனி எந்தவிதமான புயலுக்கும் அஞ்சாமல் ஓடக்கூடும் என்பதைத் தெளிவுறுத்தினார்.

மற்றும் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஸ்திரமான பண பலம் தேடுவதற்கான வழிகளில் நம்மவர்களை யெல்லாம் ஈடுபடுத்த விரும்பினார் பாரதி.

> "தர்மம் செய்வது பெரிதன்று. விரைவிலே செய்ய வேண்டும். 'காலைச் செய்வோமென்று அறத்தைக் கடைப்பிடித்துச் சாலச் செய்வோரே தலைப்படுவார்' என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்க ளல்லவா?
>
> "இந்த உண்மையை நன்கறிந்த ஸ்ரீ ராமய்ய ருக்கும் அவர் போன்ற தேசாபிமானிகளுக்கும் பாரத மாதா ஸர்வ ஐசுவரியங்களைக் கொடுத்து ரக்ஷணை புரிவாள்.''

[**இந்தியா** : 6-2-1909—பக். 2]

இப்படி எழுதிய பாரதி, அதே இதழில் கப்பல் கம்பெனிக்கு ஏற்பட்டிருந்த சில சில்லறைத் தொந்தரவுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீங்கிவிட்ட சேதியைத் தெரிவித்தது மட்டுமன்றி, தொந்திரவுகள் நீங்கிவிட்டபடியால் தமிழ் மக்கள் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து பின்தங்கிவிடக் கூடாது என்பதையும் அறிவுறுத்தவும் பாரதி தவறவில்லை.

பாரதி அறிவுறுத்திய அறவுரை வருமாறு :

"சென்ற வாரத்தில் இக் கம்பெனிக்குச் சில சில்லரைத் தொந்தரவுகள் இருப்பதாகவும் அவற்றைச் சீக்கிரமே கம்பெனிப் பொறுப்பாளிகள் நிவிருத்தி செய்து விடுவார்களென்றும் எழுதியிருந்தோ மல்லவா? நாம் எதிர்பார்த்தபடியே 'காலியா' என்னும் கப்பல் விஷயமாக ஏற்பட்டிருந்த தொந்தரவுக ளெல்லாம் நீங்கிவிட்டன என்றும், கப்பல் இனி யாதொரு துன்பத்திற்கும் உள்ளாகாது க்ஷேமமாகவே நடந்துவர வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தா யிருக்கிறதென்றும் கேள்விப்பட மிகவும் சந்தோஷ மடைகின்றோம்.

"இதிலிருந்து நமது தமிழ்நாட்டுச் சகோதரர்கள் இனி இதிலொன்றும் தாங்கள் தலையிட வேண்டியதில்லை யென்று எண்ண வேண்டாம். இது நமது ஜாதீய கௌரவத்தைப் பொறுத்ததாதலின், ஒவ்வொருவரும் தங்கள் குடும்பக் காரியங்களில் இதுவுமொன்றென எண்ணி, தங்களாலியன்றதை மிராஸ்தார் ஸ்ரீ ராமய்யரைப் போலவே உதவி செய்து, அதனது விருத்தியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டுமென்று இன்னொரு முறை வற்புறுத்துகிறோம்."

[இந்தியா : 6-2-1909—பக். 4]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாதாவின் கட்டளை

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ. உ. சி.யின் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டித் தம்முடைய சொற்ப வருவாயினின்றும் ஒரு சிறிய தொகையை யளித்து வழிகாட்டிய பாரதி, பாரத மாதா நமது ஜனங்களை நோக்கிச் சுதேசீயக் கப்பலுக்கு உதவி செய்யும்படி கட்டளை யிடுவதாக' ஓர் சித்திரத்தைப் பதிப்பித்திருந்தார். இதன் பின்னர், தம் அலுவலகத்தைச் சார்ந்த இளைஞர் சிலரைப் பணம் சேகரிக்கப் புதுவை நகரில் வலம் வரச் செய்தார்.

சித்திரத்திற்கான விளக்கம் பாரதியால் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது :

"பாரதமாதா நமது ஜனங்களை நோக்கி சுதேசீயக் கப்பலுக்கு உதவி செய்யும்படி கட்டளை யிடுவதாக இவ் வாரத்தில் சித்திரம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. தெய்வம் முன்னே வந்து நின்று பேசுவதில்லை. ஹிருதயத்தில் பேசும். அதுபோலவே நமது மாதா நம்மவர்களின் ஹிருதயத்தில் பேசத் தொடங்கிவிட்டாள். நாம் சரியானபடி செவி கொடுத்து, அவள் கட்டளைப்படி நடக்கவேண்டும்.

"புதுச்சேரியிலே நமது ஆபீஸைச் சேர்ந்த சில வாலிபர்கள் சுதேசீயக் கப்பல் தர்ம நிதியின் பொருட்டுப் பணம் சேகரிக்க ஒரு உண்டியல் பெட்டி கொண்டு சில கடைக்காரரிடம் போனார்கள்.

"அப்போது வீதியில் ஒரு எளிய ஸ்திரீ இவர்களிடம் 'எதற்கையா பணம் வசூலிக்கிறீர்கள்?' என்று கேட்டாள். இவர்கள் 'தூத்துக்குடியிலே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓடும் சுதேசீயக் கப்பலுக்கு' என்றார்கள். உடனே அவள் மன மகிழ்ச்சியுடன் ஒரு காசு பெட்டிக்குள் போட்டு விட்டு, 'ஐயோ பாவம், வேலை செய்யுங்கள். உங்கள் காரியம் கைகூடும்' என்று சொன்னாள்.

''மற்றொரு ஏழை ஸ்திரீ இதைப் பார்த்து 'ஐயா, என்னிடம் காசில்லை. விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தேன். கத்தரிக்காய்கள் இருக்கின்றன. அவற்றை வாங்கிக் கொள்வீர்களா?' என்றாளாம்.

''அதற்கு நமது வாலிபர்கள் 'வேண்டாமம்மா! உன் போன்ற நல்ல சித்தமுடையவர்களின் ஆசீர்வாத மிருந்தாலே எங்கள் முயற்சி வெற்றியடைந்துவிடும். நீ ஏழை. உன் குழந்தைகளுக்குக் கொண்டுபோகும் காய்கறியை நாங்கள் வாங்கலாமா?'' என்று சொல்ல, அந்த ஸ்திரீ அன்புடன் வாழ்த்திவிட்டுச் சென்றாள்.

''இதனை யெல்லாந்தான் நாம் **மாதாவின் கட்டளை** என்கிறோம்.''

[**இந்தியா** : 13-2-1909—பக். 2]

முன்னர் தெரிவித்திருந்தபடி, தூத்துக்குடி 'சுதேசிக் கப்பல் தரும நிதி' என்பதாகப் பெயரிட்டு, நிதி திரட்டும் பணியில் தீவிரம் காட்டினார்.

நிதி விவரம் பற்றிய செய்திகளை 'இந்தியா' பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரம் செய்து வந்தார்.

'கங்கை வெள்ளம் வேண்டுமென்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் பகீரதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைமீது ஒரு சிறிய தூற்றல் உதிர்ந்தது போல' அதி சொற்பமான தொகைதான் சேர்ந்தது. ஆரம்பத்தில் தூற்றல்களாக இருந்த போதிலும்,பகீரதன் கொண்டிருந்த தெய்வ பக்தியால் அவனுக்குக் கங்காப் பிரவாஹம் வந்தே தீர்ந்தது.

சுதேசிக் கப்பல் கம்பெனியார் பாரத நாட்டுப் பொது ஜனங்களிடம் அழியாத பக்தி பூண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணமும் நிறைவேறியே தீரும் என்பதாகவும் பாரதி நம்பினார்.

ஆனால், நடந்தது என்ன?

இரண்டு லட்சம் ரூபாய் கேட்டதற்கு, இரு நூறு ரூபாய்களே வசூலாயின.

பாரதி யாருக்காகக் கேட்டார்? எதற்காகக் கேட்டார்?

நமது ஜாதீயப் பெருமையை நிலைநாட்டவும், நமது பெருந் தொழில் முயற்சி வெற்றி பெறவும் தாராள நிதி உதவி கோரினார், பாரதி.

தமிழ் மக்களிடம் நிறைய எதிர்பார்த்து, ஏமாற்ற மடைந்த நிலையில் மன வேதனைப்பட்டு,

"தூத்துக்குடி சுதேசியக் கப்பலுக்கு இருநூறு ரூபாய் வந்ததிற்குப் பிறகு வரவு நின்றுவிட்டது. 'கப்பல் நிதி' என்ற பெயரால் 150 ரூபாய் தூத்துக்குடிக்கு அனுப்பிவிட்டோம். ஆறு பங்காயிற்று. என்ன வெட்கம்! என்ன வெட்கம்!! தமிழ்நாட்டு ஜனங்களிடம் அவர்கள் சொந்தக் காரியத்துக்காக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டு லட்சம் ரூபாய் கேட்டதற்கு இருநூறு வசூலா யிருக்கிறது.

கப்பலுக்கு ஓரிரண்டு உபகாரிகள் உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரங் களில் கப்பல் முன்போல் மிக க்ஷேமமான நிலைக்கு வந்து, ஊக்கத்துடன் வேலை நடக்குமென்றும் கேட்டு சந்தோஷ மடைகிறோம். நமது பத்திரிகையைப் பார்த்துக் காசியில் ஒரு தேசாபிமானி இவ் விஷயத் தில் முயற்சி யெடுத்து வருவதாகத் தெரிவதும் திருப்திக் கிடமான ஸமாசாரம். ஆனால், தமிழ் நாட்டுப் பொது ஜனங்கள் உறங்கிக் கிடக்கும் அற்புதந்தான் வருத்த முண்டாக்குகிறது. இவர் களை எப்படி விழிக்கச் செய்வது?

[இந்தியா : 10-4-1909—பக். 2]

என்று எழுதினார் பாரதி.

'இந்த நாட்டில் வாழும் பொது ஜனங்கள் பரம ஏழைகள். அவர்களுக்கு இவ்விதமான புண்ணிய கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதிலே அபிமானம் இருந்தபோதிலும், அவர்கள் உதவி செய்யச் சக்தி யற்றவர்களாக இருக்கிறார்கள்' என்று பாரதியே வருத்தப்பட்டது முண்டு, என்றாலும் தென்னிந்தியாவின் தேசாபிமானம் சுதேசீயக் கப்பல் கம்பெனி சிறப்பாக நடைபெறுவதில்தான் உள்ளது எனப் பாரதி பெரிதும் நம்பினார்.

வசதியுள்ள செல்வந்தர்களும், மடாதிபதிகளும் தாமே முன்வந்து, பங்குகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தையும் பாரதி வலியுறுத்த முற்பட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"முன்னொரு காலத்தில் சர்வ லோகத்தாரும் உஜ்ஜீவிக்கும்வண்ணம் திருப்பாற் கடலைக் கடைந்து அமுத முதலிய உலகத்திற்கு வேண்டிய ஐஸ்வரியங்கள் யாவும் ஒத்துழைத்து வரப்பெற்ற பரம சந்ததியைச் சேர்ந்த இந்திய பிராதாக்களே, நீவிர் யாவரும் ஒன்றுசேர்ந்து சின்னாளாய் கொஞ்சம் அநாதர வடைந்துள்ள சுதேச நீராவிக் கப்பலைப் பற்றி ஏன் கவனிக்கக் கூடாது? அதைப் பற்றிக் கவனித்தால் நம்முடைய முன் சந்ததியாருக்கும் பின் வருபவர்க்கும் எவ்வளவோ இயம்ப முடியாத புகழும் இன்பமுமளிக்கு மென்பதில் எள்ளளவும் தடையில்லை யென்பதை யறியாதார் யாருமில்லை. அப்படிக் கிருந்தும் கைக்கெட்டிய அமிர்தத்தை வாய்க்குள் வைக்க வருத்தப்படுபவரு முண்டா?

"நமது பிராதாவாகிய ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை முதலிய சிலருக்கிருக்கும் ஊக்கம் ஏன் ஏனையோருக் கிருக்கக் கூடாது?

"முதுகெலும்பைத் தந்த முனீஸ்வரனும், சதையை யறுத்துத் தந்த சக்கரவர்த்தியு மிருந்த பெருமை படைத்த சந்ததியைச் சேர்ந்த நாம் சொற்ப காரியமான சுதேசிக் கப்பலை முன்னுக்கு வரச் செய்யாவிடில், அந்தப் பெருமை படைத்த சந்ததியில் பிறந்தோ ராவோமா? வட்டிக்குக் கொடுத்து வழக்காடித் தோற்பதிலும், பாங்கியில் போட்டுப் பணமிழப்பதிலும் இச் சுதேசக் கப்பலை முன்னுக்கு இழுக்கலாகாதா?

"நமது வடநாட்டுச் சகோதரர்கள் செய்யும் முயற்சியில் ஆயிரத்தி லொன்றேனும் நாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்கிறோமா? இவ்வளவு நாம் சொல்வதும் பணத்தைப் பாழாக்கவேணும், இனாமாகக் கொடுத்து விடவேணுமென்றேனு மல்ல. பின்பென்னவெனில், தக்க பொருளாளிக ளெல்லாம் தங்கள் அந்தஸ்துக்கு தக்கபடி பங்கு சேர்த்து முயற்சிக்க வேணுமென்பதே எமது கருத்து.

"ஆகையால் பாரத புத்திரர்கள் ஒவ்வொருவரும் 'முயற்சி திருவினை யாக்கும்' என்ற முதியோர் மொழிப்படி தம்மாலியன்ற அளவு பங்குகள் வாங்கிப் பயனடைய வேண்டுவ தவசியம். தவறாதீர்கள். இதுவே நல்ல தருணம். இதுவே நம் தாய்த் திருநாட் டிற்குச் செய்யுங் கைங்கரியங்களி லொன்று.''

[**இந்தியா** : *17-7-1909—பக். 3*]

என்று திட்டவட்டமாக எழுதியவர் பாரதி.

இவ்வாறு பாரத புத்திரர்களின் கடமையை எடுத்துச் சொன்ன பாரதி, பின்னொரு சமயம்,

''தூத்துக்குடியில் 'கப்பற் சங்கம்' ஒன்று ஏற்படுத்தி வர்த்தகத்தை விருத்தி செய்ய முயற்சி செய்துவருகிறார்கள். அதற்குத் தக்க பொருளுதவி மடாதிபதிகள் செய்யலாகாதா? ஒவ்வொரு மடாதிபதி யும் பதினாயிரம் ரூபாய் அல்லது இருபதினாயிரம் ரூபாய் கொடுத்து, அதில் பங்குகளை வாங்கிக் கொண்டு அந்தக் கப்பல் கம்பெனியை நடத்தினால் மடங்களுக்கும் ஜனங்களுக்கும் அதிக லாபத்தைத் தருமே! கப்பல் வியாபாரம் மிகுந்த லாபத்தைக் கொடுக்கிற விஷயத்தைத் தூத்துக்குடி ஸ்வதேசிக் கப்பல் கம்பெனியார் காரியாம்சத்தில் ருஜுப்படுத்திக் காட்டி யிருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தென்னாட்டிலுள்ள மடாதிபதிகளும், ஜமீன் தார்களும் முன்வந்து அந்தக் கம்பெனியை ஆதரிப்பார்க ளென்று நம்புகிறோம். அதைவிட மேலான தருமம் ஒன்றுமில்லை யென்று அவர்களே யறிவார்கள்.

"அன்னதானம் அல்லது சுவர்ணதானத்தில் செலவே யல்லாது வரவில்லை. ஆனால், மேற் சொன்ன வர்த்தகச் சங்கம் போன்றவற்றை ஏற்றுக் கொண்டு நடத்தினால், செலவிற்குத் தகுந்த வரவும், ஜனங்களுக்கு லாபமும் உண்டாகும். தரித்திரமும் ஜனங்களைவிட்டு நீங்கும். கொடிய வறுமை நீங்கின பொழுதே ஜனங்கள் ஆத்ம ஞானத்தில் நாட்டம் கொள்வார்கள். இந்தப் புண்ணியத்தை எந்த மடாதிபதியான ஞான சிரேஷ்டர் கட்டிக் கொள்வாரோ?"

[**இந்தியா** : *2-10-1909 — பக். 3*]

என்றெல்லாம் எழுதி, கம்பெனி தொடர்ந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பலருக்கும் புலப்படுத்தினார்.

ஒருபுறம் சுதேசியக் கப்பல் கம்பெனியின் அபிவிருத்தி பற்றி வற்புறுத்தி எழுதிக் கொண்டிருந்த பாரதி இன்னொருபுறம் வ.உ.சி.யின் அப்பீல் பொருள் முடையால் தாமதமடைகிறது என்பதை அறிந்து வருந்தினார்.

நெஞ்சம் உருகி வருந்திய பாரதி,

"நமது பிள்ளை யவர்கள் கேசில் ப்ரீவி கௌன்சில் அப்பீல் பொருள் இல்லாக் குறையாலேயே தாமதமாகி யிருக்கிறதென்று கேட்க நமது மனம் வருந்துகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்முள் தனவான்களானாலும் சரி — ஏழைகளா னாலும் சரி — ஒன்றுபோலவே நாகரிகம் என்ற பேரிட்டு எத்தனையோ விதமான வீண் செலவுகளும் அநாவசியமான செலவுகளும் நம் நாட்டில் செய்கிறார்கள். அச் செலவுகளில் ஆயிரத்திலொரு பங்கு குறைத்து, இத்தகைய பொது நன்மையான வழிகளில் செலவிட்டால் நமது நாட்டுக்கே பேருதவி யாகு மல்லவா? சுயநலத்தைச் சிறிது ஒதுக்கிவிட்டுப் பொது நலம் என்ற புண்ணியத்தைச் சிறிதாவது ஒவ்வொருவரும் இயன்ற அளவு கைக்கொள்ளும்படி நமது பாரதமாதா தன் புத்திர — புத்திரிகளுக் கெல்லாம் சீக்கிரம் திருவருள் செய்வாளாக"

[**இந்தியா** : *11-9-1909* — பக். *8*]

என்று எழுதினார்.

இப்படி தம் ஆருயிர் நண்பர் சிதம்பரம் பிள்ளைக் காகப் பாரதி பட்ட பாடுகள் பற்பலவாகும்.

'இந்தியா' பத்திரிகையில் மட்டுமில்லை, தம்முடைய **கர்மயோகி** பத்திரிகையிலும் வ.உ.சி. பற்றிய செய்திகளைப் பாரதி பிரசுரம் செய்தார்.

கோயம்புத்தூர் சிறைச் சாலையில் வ.உ.சி.யை அவருடைய மனைவியும், நண்பர்களும் சந்தித்து உரையாடிய செய்தி *1910* மார்ச் **கர்மயோகி** இதழில் **ஸ்ரீமான் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை சந்திப்பு** என்ற தலைப்பில் கட்டுரையாகப் பிரசுரமாகி யுள்ளது.

அக் கட்டுரை தெரிவிப்பதாவது :

"சில தினங்களின் முன்பு கோயம்புத்தூர் ஸெண்ட்ரல் ஜெயிலில் இருக்கும் ஸ்ரீமான் சிதம்பரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிள்ளையை அவருடைய மனைவி மக்களும், அவருடைய ஆப்தராகிய ஸ்ரீ வள்ளிநாயக சாமியாரும், வேறொரு நண்பரும் பார்வையிடச் சென்றிருந்தார்கள்.

"அந்தச் சந்திப்பில் நடந்த சம்பாஷணை முதலிய விவரங்களைக் குறித்து, மேற்கூறப்பட்ட நண்பர் 'அப்பன்' என்பவருக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கின்றார். அப்பன் அக் கடிதத்திலிருந்து தெரிந்துகொண்ட செய்திகள் பின்வரும் உரையில் அமைக்கப்பட்டிருக்கின்றன:-

''ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பார்த்தவுடன் எனக்குத் தவப் பெருமையைக் குறித்த சிந்தனை யுண்டாயிற்று. அவர் முடியைச் சுற்றி, தவத்திறன் ஓர் ஸூக்ஷ்ம மண்டல மிட்டு விளங்குதல் கண்டேன். 'உரனொடும், ஒ ளி யொ டு ம் உவப்போடும் திகழ்ந்தனர்.' உடல் நிறை குன்றி யிருந்தது. உரையின் நிறை மிகுதி யடைந்திருந்தது. சாமியாரை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

அப்பால் நான் ஸ்ரீமான் பிள்ளையை வணங்கி எழுந்து நின்றேன். என் முகத்தினிடையே வருத்தக் குறி யிருப்பது கண்ட நந் தலைவர் 'கடவுள் அருள் செய்வார். கலங்குதல் வேண்டாம்' என உறுதி கூறினர். இடப் பாரிசத்திலிருந்து அவரது மனைவியார் கண்ணீர் ததும்பியவராகி, வணங்கி நிற்கக்கண்டு அவரிடமும் ஸ்ரீமான் பிள்ளை ''வருத்தப் படாதே. சித்தத்தில் பக்தி யுடையவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறுதி தானாகவே உண்டாகும். உன் உள்ளத்திலே பக்தியும் உறுதியும் நிலைத்திடுக'' என்று வாழ்த்து மொழி சொல்லினர்.

''பிறகு இரண்டு குழந்தைகளையும் எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு, உச்சிமோந்தனர், குழந்தைகளின் மழலை வார்த்தைகள் கேட்டு மகிழ்ச்சி பாராட்டி, அப்பால் எங்களை இருங்க ளென்று சொல்லித் தாமும் தரைமீது வீற்றிருந்தார். எங்களெல்லோரிடமும் க்ஷேம லாபங்கள் விசாரிக்க லாயினர்.

"உடனே, ஸ்ரீ வள்ளி நாயக சாமியார், சிதம்பரம் பிள்ளையின் சொந்த வீட்டில் பேசுவது போல மிகவும் உரத்த குரலில் பற்பல கதைகள் விரிக்கத் தொடங்கினார். 'மெதுவாகப் பேசுங்கள்' என்று நமது தலைவர் ஞாபகப்படுத்தினர்.

"குறிப்பிட்ட மணி நேரம் வருமளவும் சாமியாருடைய கதை வளரக்கூடுமென்று தோன்றிய படியால், அதை நிறுத்திவிட்டு ஸ்ரீமான் பிள்ளை தனியே தமது மனைவியாரை இட்டுப்போய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். திரும்பி வரும் போது அவ் விருவருடைய முகங்களும் பரிபூர்ணமான மலர்ச்சியுடன் விளங்கின. மறுபடியும் மூத்த மகனை வாங்கி முத்தமிட்டு என் கையில் கொடுத்தனர். இளைய மகனை வாங்கி முத்தமிட்டு மனைவியாரிடம் கொடுத்தனர்.

''பிறகு, கடவுளை நினைந்து கையெடுத்துத் தொழுதவர் 'திடமுள அகத்தொடும் சிரித்த மலர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகத்தொடும்' எங்களுக்கு விடை கொடுத் தனுப்பினர்.

"சம்பாஷணையினிடையே ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை யவர்களின் வாக்கிலிருந் துதித்த சில வசனங்கள்:

'தமிழர்க ளெல்லோரும் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றத் துறந்த முனிவரே யாயினும், என்னைப் பெற்ற தந்தையே யாயினும், யான் பெற்ற மக்களே யாயினும் யான் அவரைப் **பூர்த்தியாக** மதிப்பது மில்லை; நேசிப்பது மில்லை.

'ஞானமும் திறமையு மில்லாத ஜாதியார் விரைவில் நாசமடைவர். அவை யிரண்டு முடையார் நீடூழி வாழ்வர். ஆதலால், பாரத பக்தர் அவ் விரண்டையும் விரைவிலே கைக்கொள்வாராக.

'**தெரியாது** என்ற வார்த்தையும், **முடியாது** என்ற வார்த்தையும் பாரத பக்தர்கள் தவிர ஏனையோரின் பொருட்டாகவே உண்டா யிருக்கின்றன. இவ் வுண்மை உங்கள் மனதில் எப்போதும் திடமாக நிற்கட்டும்.'

"மேலே ஸ்ரீ சிதம்பரத்தின் வசனங்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழர்களே, 'மெய்த்தவன் கூறும் வாக்கை வேதமாக் கொண்டு வாழ்மின்!"

[**கர்மயோகி** : 1910 மார்ச்—பக். 71-72]

இவ்வாறெல்லாம் தம் அருமை நண்பர் வ. உ.சி.யைப் பற்றித் தவறாமல் எழுதுவதைக் கடமையாகக் கொண் டிருந்தவர் பாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ.உ.சி.யும் பாரதியிடம் அளவற்ற அன்புகொண்டு இருந்தார்.

தண்டனைக் காலம் முடிவுற்று, விடுதலை அடைந்த வ.உ.சி. புதுவை சென்று 'பாரதி மற்றும் நண்பர்களைச் சந்திக்க எண்ணி புதுவை சென்றடைந்தார்.

புதுவையில் பாரதி மற்றும் அங்கு வாசம் செய்துவந்த சென்னைத் தேச பக்தர்களை எல்லாம் வ.உ.சி. கண்டு, அங்கு சிலநாட்கள் தங்கி அக மகிழ்ந்தார்.

அந்த இனிய நினைவுகள் கொண்ட சந்திப்பைப் பின்னாளில் வ.உ.சி. குறிப்புகளாக வரைந்தார். அக் குறிப்பில் கண்டுள்ள வகையில் புதுவை சந்திப்புப் பற்றி வ.உ சி. என்ன சொல்கிறார்? கேட்போமா!

> "இந்திய தேசாபிமானிகள் பலர் புதுவையில் குடியேறி நிலையாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வேலைகள் செய்து கொண்டிருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திர ஜோதி தமிழ்நாடு முழுவதும் சுடர் வீசிக் கொண்டிருந்தது. கண்ணனூர்ச் சிறையினின்றும் எனது தண்டனைக் காலம் கழிந்து விடுதலை யடைந்த நான் என் குடும்பத்தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீநிவாஸாச்சாரி முதலிய சென்னைத் தேச பக்தர்களைக் காண வேண்டும் என்ற அவா எனக்கு மேலிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நான் புதுச்சேரிக்குச் சென்றேன். மாமா* வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்து, அங்கு போய்ச் சேர்ந்தேன். மாமாவின் மனைவி மக்களையும் கண்டு களித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும், ஆவிநீர் குடித்தும், அவரது ஆடல் பாடல் களைக் கண்டும் கேட்டும், அகமகிழ்ந்து சின்னாள் கழித்தேன்.

''மாமாவும், நானும் எங்கள் நண்பர் **அரவிந்தர்** மாளிகைக்குச் சென்றோம். **பலர் என்னிடம் சொல்லியது போல அரவிந்தர் ஓர் ரிஷியா யிருக்கவில்லை; தேச பக்தராகவும் தேசத் தலைவராகவுமே விளங்கினார்.''**

''தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழி களைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்துவந்தது. ஒரு நாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இது சம்பந்த மாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்தவேண்டும் என்றும், அதற்கான பணத்தைச் சுலபமாகப் பொது ஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

''இந்தச் சமயத்தில் மாமாவும், ஸ்ரீநிவாஸாச் சாரியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனது

*** பாரதியை மாமா என்று வ.உ.சி. அன்பு மிகுதியால் அழைப்பது வழக்கம். பாரதியைவிட வ.உ.சி. வயதில் மூத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திட்டத்தைக் கேட்டு மாமா 'கலகலென' நகைத்தார். 'பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாமான்யமா? அதற்கு எவ்வளவு ஆள் வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும்? இதெல்லாம் நடக்கிற காரியமா, ஓய்?' எனக் கேட்டார்.

''எனக்கு மாமா மீது கோபம் வந்துவிட்டது. 'பாரதி! ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும். உலகத்தை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்?' என்று கூறி என்னவோ சுடுசொற்கள் சிலவும் கூறி விட்டேன். மாமாவின் மணிவாக்கு என்னமோ உண்மையாய்த்தான் ஆயிற்று. ஆனால், எனது பத்திரிகைத் திட்டந்தான் பொய்த்துப் போயிற்று...

"கடைசியாக பாரதியார் முதலிய உண்மை அறிஞர்களையும், உண்மைத் தேசாபிமானிகளையும் மிக வருத்தத்தோடு பிரிந்து சென்னை வந்து சேர்ந்தேன்.

''நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசித்த பின் எங்கள் கம்பெனியைச் சேர்ந்த ஒரு கப்பலை எங்கள் எதிரியான பி.ஐ.எஸ்.என். கம்பெனியாரிடமே அப்போதிருந்த சுதேசிக் கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்றுவிட்டது எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இதுபற்றி மாமாவிடம் நான் பிரஸ்தாபித்தபோது, அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள்தான் நான் புதுவையைப் பிரியும்போது என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. அவை ;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒருசில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக் கப்பலை விற்று விட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொருக்கி வங்காளக் குடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய் விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!' என்று எவ்வளவோ கடுஞ் சொற்கள் கூறினார். என் செய்வது? தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். புதுவையிலிருந்து நான் என்னுடன் கொண்டு வந்தவை புஸ்தகங்கள், படுக்கைகள் மட்டுமல்ல; மாமாவின் இந்த மணிவாசகமும் நான்!'

[**வி.ஓ.சி. கண்ட பாரதி** (1946) பக். 43—49]

எத்தனை அழகான படப்பிடிப்பு!

வ.உ.சி. அவர்கள் சிறந்த தமிழ் அறிஞர் மட்டுமே யல்லர்; சிறந்த மொழிபெயர்ப்பாசிரியருங்கூட.

ஆங்கில நூல்களைத் தமிழில் தந்து மக்களின் மனம் செம்மைப்பட பாடுபட்ட உத்தமர் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

தம் நண்பரின் மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றியும் பாரதி தம்முடைய கருத்தை மிக நேர்த்தியான முறையில் தெரிவிக்கவும் செய்துள்ளார்.

அகமே புறம், மனம்போல வாழ்வு ஆகிய இரு நூல்களைக் குறித்துப் பாரதி தெரிவித்த அபிப்பிராயங்களை வ.உ.சி. தம்முடைய நூல்களிலேயே பதிப்பிக்கவும் செய்துள்ளார்.

பாரதி எழுதிய கருத்துரைகளை — நூல் பற்றிய மதிப்பீடுகளை — இங்கே காண்போம் :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"**அகமே புறம்** என்ற பெயருடன் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் புதிய நூல் ஆலன் என்ற பண்டிதரின் ஆங்கில நூல் ஒன்றிலிருந்து மொழிபெயர்த்தது. எனினும், பிள்ளை யவர்கள் இதிலே பரிபூர்ணமான தமிழ் மணத்தையேற்றியிருக்கின்றார்கள். பிறநாட்டுப் பொன்னிலே நமது முத்திரையை வைத்து நம் பொருளாக்கிவிட்டார்கள். இதுமொழிபெயர்ப்பென்று பிள்ளையவர்கள் சொல்லாவிடில், நாம் இதனைத் திருக்குறளின் சில பகுதிகளுக்கு விரிவுரை யென்று கொண்டிருப்போம். நோய், கீழ்மை, மிடிமை முதலிய தளைகளை இப்பிறப்பில், இன்றே, இப்பொழுதே தொலைந்து நலமெய்த வேண்டுவோர் இந் நூலின் உபதேசங்களைக் கைக்கொள்க. உடலுறுதி, அறிவு, ஆக்கம், தெளிவு, வீடு ஆகிய இன்ப நிலைகளைப் பெற விரும்புவோருக்கு ஸ்ரீமான் பிள்ளை யவர்கள் நல்ல துணையாக அமைந்துள்ளார்கள். இது நன்று."

[**மெய்யறம்** (*1914*) —பக். 7-8]

அகமே புறம் நூலைப் பற்றிக் குறள்போல் சுருங்கிய முறையில் கருத்துரை சொன்ன பாரதி, **மனம் போல வாழ்வு** நூல் பற்றித் தெரிவித்த கருத்தும் பொன்னேபோல் ஒளிர்கின்றது.

"இதன் முதனூலை எழுதியவர் அன்னிய தேசத்தாராயினும், நமது தேசத்து வேதாந்த சாஸ்திரத்தின் உண்மைகளை நன்கு தெளிந்துணர்ந்த அறிஞர் மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்த்தவருடைய மஹிமையைப் பற்றி நான் எழுதத் தகுதியுடையவன் அல்லன். அறிவிலே தெளிவும், நெஞ்சிலே உறுதியும் கொண்டு தம் வாழ்நாளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளும் பயனும் உடையதாக்க விரும்பும் தமிழர்க ளெல்லோரும் இந்தப் புஸ்தக மொன்று வாங்கி எப்போதும் திரும்பத் திரும்பப் படித்து வரவேண்டும்.''

[**அகமே புறம்** (*1914*) பக். 68]

பாரதி சிறந்த மொழிபெயர்ப்பாசிரியர் என்பதை யாவரும் அறிவர். அவரே, வ.உ.சி யின் மொழி பெயர்ப்புத் திறனை வியந்து, பாராட்டி மகிழ்ந்தார் என்றால் நண்பரின் மொழிபெயர்ப்புத் திறனை எந்த அளவுக்கு மதித்தார் என்பதை நாம் கண்டுகொள்ளலாம்.

நண்பர்களை மதித்துப் பாராட்டுவதிலும், அவர் களுடைய பணிகளை வியப்பதிலும் பாரதிக்கு நிகர் பாரதியே!

பாரதியும் வ.உ.சி.யும் ஒருவரை யொருவர் நேசித்த பாங்கும், அவர்களுக்குள் நிலவிய ஆழ்ந்த நட்பும் சொல்லின் எல்லைக்குள் அடக்க முடியாதனவாகும்.

பாரதியைவிட வயதில் மூத்தவராக இருந்தும், பாரதியை மாமனாகவே ஏற்றுக்கொண்டவர் வ.உ.சி.

ஒரு சமயம், வ.உ.சி.யே உள்ளம் பெருமிதத்தால் விம்ம, உரிமை உணர்வோடு,

"சுப்பிரமணிய பாரதியும் நானும் **சோழனும், கம்பனுமா** யிருந்தது மாறிக் கடைசியில் **மாமனும் மருமகனும்** ஆயினோம்!''

[**வி.ஓ.சி. கண்ட பாரதி** (*1946*)—பக். 8]

என்று சொன்னதே பொருத்தம் உடையது ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ.உ.சி.யைப் பாரதி மதித்துச் சிறப்பித்ததைப் போலவே, வ.உ.சி.யும் பாரதி மரணமடைந்த செய்தியைக் கேட்ட அளவில்,

> "மாமா இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டாலும் அவரது தேசிய கீதங்களும், மற்றைய பாடல்களும், கதை — கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரிதத்தில் மட்டுமல்லாமல் கவிதா மேதைகளின் சரிதத்திலும் வைரம் என ஒளிவிடும்"
>
> [**வி.ஓ.சி. கண்ட பாரதி** (1946)—பக். 57]

என்று பாரதியின் கவிதா மேதைமையை நினைந்து உருகினார்.

பாரதி — வ.உ.சி. தொடர்பு அவ்விருவருடைய சரிதையிலும் வைரம் என ஒளிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

பாரதியும் வ.வெ சு.ஐயரும்

மகரிஷி என்றும், **அந்தண்மையின் அணிகலன்** என்றும், **வீர விளக்கு** என்றும் இன்று மக்களால் போற்றி மதிக்கப் படுகின்ற **வ.வெ.சு.ஐயர்** என்கிற சுருக்கப் பெயரால் நமக்கு நன்கு அறிமுகமான வரகனேரி வெங்கட சுப்பிர மணிய ஐயர் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்களுள் முதல் வகுப்பைச் சார்ந்தவர்; பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்து, அம் மொழிகளில் திறமான புலமை பெற்றுத் திகழ்ந்தவர்; இலக்கியத் திறனாய்வில் தனித்த முத்திரை யைப் பதித்தவர். தமிழிடத்தும் அளவற்ற — ஆழ்ந்த பற்றுக் கொண்டு பணியாற்றியவர்; நவீன எண்ணங்களைக் கொண்டு விளங்கியவர்.

1907 செப்டம்பர் வாக்கில் 'பாரிஸ்டர்' பட்டம் பெற இலண்டன் சென்ற வ.வெ.சு. ஐயர், அங்கு **விநாயக தாமோதர சவர்க்கார்** என்பவரைச் சந்தித்தார். முதல் சந்திப்பிலேயே சவர்க்காரிடத்திலே ஐயருக்கு ஈடுபாடு உண்டாகி விட்டது. சவர்க்காருடைய தீவிர தேச பக்தியால் வ.வெ.சு.ஐயர் ஈர்க்கப்பட்டார். அதன் காரணமாக இந்திய நாடு விடுதலைக்கான பணிகளில் ஈடுபட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டம் பெற்று, உயர்ந்த பதவி அடைந்து, சுகபோக வாழ்க்கை வாழவேண்டிய வ.வெ.சு.ஐயர், நாடு அன்றிருந்த நிலையில் பட்டம் பதவிகளைத் துறந்து, தேச விடுதலைப் போராட்ட வீரரானார்; துன்பம் நிறைந்த வாழ்வைத் தாமே வலிய மேற்கொண்டார்.

வ.வெ.சு.ஐயர் நாட்டின் நிலைகளை விளக்கிப் பத்திரிகைகளுக்கு எழுதுவதைத் தம் கடமையாகவும் கருதி வந்தார். பற்பல ஆங்கில — தமிழ்ப் பத்திரிகைகளைப் படித்து வந்த அவர் புதுவையினின்றும் வெளிப்பட்ட **இந்தியா** பத்திரிகையின் வளர்ச்சியில் தனிப்பட்ட அக்கறை செலுத்தி வந்தார். 'இந்தியா' பத்திரிகையும் வ.வெ.சு.ஐயரின் எழுத்துக்களை நிறையவே பிரசுரம் செய்தது.

ஆக, வ.வெ.சு.ஐயர் 'இந்தியா' இதழின் அபிமான வாசகர் மட்டுமல்லர்; விஷயதானம் செய்துவந்த ஆசிரியருங்கூட.

பிரிட்டிஷ் அரசின் வரம்பு மீறிய செயலால் தமிழ் நாட்டில் 'இந்தியா' பத்திரிகை தன் பணியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டபோது பெரிதும் வருந்திய வ.வெ.சு.ஐயர், மீளவும் புதுவையினின்று பத்திரிகை வெளிவந்ததும் உள்ளார்ந்த நல்வரவும் கூறி வரவேற்றார்.

'இந்தியா' பத்திரிகை செயலாற்றிய விதம், அது விளைவித்த தேசபக்தி ஆவேசம் ஆகியன வ.வெ.சு. ஐயரை வெகுவாகக் கவர்ந்தன. அதனால் அவர்,

"நமது தென்னாட்டில் நமது 'இந்தியா' ஒரு பத்திரிகைதான் ராஷ்டிரீய தீபத்தைச் சோர விடாமல் காத்து வந்தது. மற்ற பத்திரிகைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாம் பீதியும் தன்னலமும் நிறைந்து ஆரிய ஜாதியின் பெருமையையும் கௌரவத்தையும் மறந்து, ராஜாங்க ஞானம் அடைய வேண்டிப் படிப்போருடைய மனதை யெல்லாம் தாஸிய மார்க்கத்தில் செலுத்திக் கொண்டிருக்க, 'இந்தியா' ஒன்று மாத்திரமே பயத்தைவிட்டு ஆரியர்களுக்கு உரித்தான உன்னத அபிப்பிராயத்துடன் பராதீனத்தின் கேட்டையும் சுவதந்திரத்தின் மேன்மையையும் இன்றியமையாமையையும் பிரசங்கித்து வந்தது.

"ஆகையால், 'இந்தியா' நின்று போகவே, இதர பத்திரிகைகள் புகட்டி வரும் கிலைப்பியமும் பராதீனதையில் திருப்தியும், சுவாதீனம் என்கிற வார்த்தையைக்கூட பிரயோகிப்பதில் பயமுமாகிற விஷம் நம்முடைய தென்னாட்டவருடைய இருதயத்தில் புகுந்து அவர்களைப் பேடிமைக்குக் கொண்டு வந்து விடுமே யென்று பயமடைந்திருந்தேன். இப்பொழுது 'இந்தியா' மறுபடியும் பிரசுரமாகிற விஷயத்தைக் கண்டு எனக்கு உண்டாகும் களிப்புக்கு எல்லை யில்லை.

"இனிமேல் 'இந்தியா'வினுடைய அபிப்பிராயங்களாகிற பிராணாதாரமான அமிருதம் ஜனங்களுடைய மயக்கத்தை நீக்கி, அவர்களுக்கு சுவதந்திர உற்சாகத்தையும், ஆவலையும், நெடு நாளைக்குக் கொடுத்துக் கொண்டு வரட்டும் என்று ஈஸ்வரனை மிக பயபக்தியுடன் பிரார்த்திக்கிறேன்.

"**இந்தியா** வாழ்க! அதன் செல்வாக்கும் சக்தியும் பெருகுக!''

[**இந்தியா**: *28-11-1908*—பக். 7]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தம் உள்ளத்து உணர்ச்சிகளை வார்த்தைகளாலே வடித்துக் காண்பித்தார்.

'இந்தியா' பத்திரிகையை வ.வெ.சு.ஐயர் எந்த அளவுக்கு மதித்தார் என்பதை இப் பாராட்டுரையால் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

வ.வெ.சு.ஐயர் 'இந்தியா' பத்திரிகைக் கென்றே **பாரதப் பிரியன்** என்கிற புனைபெயரில் **இலண்டன் கடிதங்கள்** என்னும் தலைப்பில் பல்சுவை நிரம்பிய கடிதங்களை எழுதிவந்தார். சில சமயங்களில், ஒருசில கடிதங்களில் புனைபெயரும் இல்லாமல் 'நமது இலண்டன் கடிதம்' என்று மட்டுமே பிரசுரிக்கப்பட்டு வந்ததும் உண்டு.

இலண்டன் கடிதங்கள் தவிர, **ஜூஸேப் காரிபால்டி சரித்திரம்**, **ழான்ழாக் ரூஸோவின் ஜன சமூக ஒப்பந்தம்** ஆகியவற்றையும் தம் சொந்தப் பெயராலே வ.வெ. சு. ஐயர் 'இந்தியா' பத்திரிகையில் எழுதினார்.

1857 ஆம் வருஷத்து இந்தியச் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி, தேசிய நோக்குடன் சவர்க்காரால் எழுதப்பட்டு, தடை செய்யப்பட்டு இருந்த **எரிமலை** நூலின் சில பகுதிகளைத் தமிழ்ப்படுத்த எண்ணி, முதல் பகுதியை மட்டும் 'இந்தியா'வில் பிரசுரிக்க அனுப்பி வைத்தார், வ.வெ.சு.ஐயர். முதலில் வெளியான ஒரு பகுதியின் வெளியீட்டுக்குப் பின் ஏனோ அப் பகுதி தொடரவில்லை.

இப்படியாக, வ.வெ.சு.ஐயருடைய 'இந்தியா' பத்திரிகையின் எழுத்துப் பணிகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ.வெ.சு.ஐயர் முதன் முதலாக **இந்தியா** பத்திரிகையில் **இலண்டன் கடிதங்கள்** என்கிற தலைப்பில் தொடர் கடிதங்களை எழுதி வந்தார். அக் கடிதங்களில் தேச பக்தியும், இலட்சிய வாழ்க்கைப் பிடிப்பும், நாட்டு நடப்பும் ஒளிரக் காணலாம். அவற்றைக் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள் எனக் கொள்ளலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் செயல்பட்டு, சுதேசி இயக்கத்திற்கு வெற்றி தேடக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்து, நம்மவர்க்குத் தன்மான உணர்வை ஊட்டிய வ.உ.சிதம்பரனார் தேச பக்தி காரணமாகவே சிறைபுக நேர்ந்தது. அத் தேச பக்த செம்மல் துவக்கிய சுதேசிக் கப்பல் கம்பெனி, அவருடைய சிறைவாசத்தால் பாதிக்கப்படுமோ என்று பலரும் அஞ்சியதுண்டு. வ.உ.சியின் சுதேச முயற்சி வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப்பட்டோரும் உண்டு. பாரதியின் பணியை நம்மவர் யாவரும் அறிந்ததே. அதேபோல், இலண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த வ.வெ.சு. ஐயரும் வ.உ.சி.யின் கப்பல் கம்பெனி நீடித்து நிலைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

தம்முடைய ஆசை எண்ணத்தை இப்படி வ.வெ.சு. ஐயர் எடுத்துரைத்தார்:

"சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் கப்பல் போக்குவரவு ஏற்படுத்தி யிருக்கிறதைக் கேட்க மிகவும் ஆனந்த மாக இருக்கிறது. 'ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தீபாந்தர தண்டனை அக்கிரமமாக அடைந்துவிட்டாரே, இனிமேல், கம்பெனியின் கதி என்ன ஆகுமோ?'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றிருந்தோம். கம்பெனியின் மூலதனம் 20 லக்ஷமாக்கப்பட்டதும், கப்பல்கள் நூதனமான துறைகளுக்குப் போவதும் அந்த சங்கையை நிவர்த்தி செய்துவிட்டது.

"ஸ்ரீ பிள்ளை யவர்களும் காவலிலிருந்து கொண்டிருக்கும்போதும் தன்னுடைய அருமைக் குழந்தையான கம்பெனி யடைந்திருக்கும் விருத்தியை உத்தேசித்து ஆனந்தத்தை யடைவார். நமது தென்னாட்டிலுள்ள தனவந்தர்கள் அந்தக் கம்பெனியை மேலும் மேலும் ஆதரித்து, கல்கத்தா, ரங்கூன், பம்பாய், கராச்சி முதலிய துறைமுகங்களுக்கு அதன் கப்பல்கள் செல்லுமாறு அதை விருத்திக்குக் கொண்டு வருவார்களாக.''

[**இந்தியா** : 10-10-1908—பக். 3]

நீதியற்றமுறையில் தண்டனை அடைந்த வ.உ.சி.யை மனம் குளிரப் பாராட்டிய வ.வெ.சு. ஐயர் அதே போதில் சுதேசியப் பணிகளுக்குச் செல்வந்தர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும் நினைப்பூட்டினார் என்பதே இங்குக் கருதத் தக்கது.

புதுவை 'இந்தியா'வை அணிசெய்த வ.வெ.சு. ஐயரின் முதல் கடிதம் இது என்பது பெருமைப்படத்தக்க செய்தி என்பது ஒருபுறமிருக்க, கடல்கடந்து சென்ற நிலையிலும் தென்னக சுதேசிய முயற்சிகளை ஊன்றிக் கவனித்து, நம்மவர் கடமையை நினைப்பூட்டிய பான்மையை என்ன வென்று புகல?

தாய்நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு பணியாற்றிய பாரதியும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ.வெ.சு.ஐயரைக் காணாமலேயே அவருடைய தேச பக்தி சுடர்விடும் எழுத்துக்களிலேயே கண்டு மோகித்து வந்தவர் தாம்!

மற்றும், ராஜரீக விஷயங்களில் மட்டுமே யல்லாது, வ.வெ.சு. ஐயருடைய இலக்கிய மேதைமையையும் பாரதி பெரிதும் மதித்தார்.

இத்தாலி தேசத்தை அடிமை வாழ்வு நிலையி னின்றும் மீட்ட கரிபால்டியின் சரித்திரத்தை 'இந்தியா' பத்திரிகையில் வ.வெ.சு. ஐயர் எழுத முற்பட்ட சமயத்தில் பாரதி 'இவ் வாரப் பத்திரிகையில் ஓர் முக்கிய விஷயம்' என்று தலைப்பிட்டு எழுதிய குறிப்பு நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது:

"இதிகாசம் (சரித்திரம்) எழுதும் தொழில் நம்மவர்களுக் குள்ளே மிக துர்லபமாய் விட்டது. உலக சரித்திரம் அறியாமையால் நம்மவர்கள் விழிகண் குருடர்களாய் லௌகிக விஷயங்கள் ஒன்றுக்குமே தகுதி யில்லாமல் போய்விட்டார்கள். இந்த நிலைமையில் யாரேனும் ஓர் பண்டிதர் கல்வித் திறனும், அறிவு விலாசமும், ஹிருதயத் தூய்மையும் பெரிதுடையராய், ஒரு சரித்திர நூல் எழுத முற்படும்போது நமக்குச் சொல்லுதற்கரிய குதூஹல முண்டாகிறது.

"இப் பெருந் தொழில் செய்யப் பாரத்துவாஜ குலோத்பவராகிய ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் (இவர் இப்போது லண்டனில் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்து வருகின்றார்) என்ற வித்வான் தலைப்பட்டு நமது பத்திரிகைக்குக் 'காரிபால்டியின் சரித்திரம்' என்ற இனிய நூலினை எழுதி யனுப்பி யிருக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இவர் ஆரம்பத்திலேயே மிகுந்த பக்குவநிலை காண்பிக்கிறா ரென்பது அதைப் படிப்பவர்களுக்கே விளங்கும். நாளுக்கு நாள் இவரது திறமை சுக்ல பக்ஷத்துச் சந்திரன் கலை போல வளர்ச்சிபெற வேண்டு மென்று தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்."

[**இந்தியா**: *20-3-1909*—பக். *2*]

இவ்விதமாக 'இந்தியா' பத்திரிகையில் பாரதி சொல்லுக்குச் சொல் அழகு மெருகேற எழுதி, வ.வெ.சு. ஐயரின் இலக்கியத் திறமையையும், சரித்திரத் தேர்ச்சி யையும் வியந்து போற்றிப் பெருமைப்படுத்தினார்.

இன்னொரு ரசமான செய்தியையும் பொருத்தம் நோக்கி இங்கே காண்போம்.

பாரதியின் இன் கவிதைத் தொகுதியைக் **குரு கோவிந்த ஸிம்ஹ விஜயம்** (ஒருசில கவிதை நூல்களில் **குரு கோவிந்தர்** என்று காணப்படும் பாடல்) என்ற பாடல் இடம் பெற்றுள்ளது அல்லவா?

இந்தப் பாடலுக்கு வரலாற்றுப் பின்னணி ஒன்று உண்டு.

வ.வெ.சு. ஐயரின் இலண்டன் கடிதத் தொடரில் வெளிவந்த ஒரு கடிதத்தில், இலண்டன் ஹவுசில் கொண்டாடப்பட்ட **குரு கோவிந்த சிங்**கினுடைய பிறந்த நாள் விழாவைப் பற்றி அவர் விரிவாக எழுதியிருந்தார்.

வ.வெ.சு. ஐயரின் கடிதத்தை *23-1-1909*ஆம் தேதி யிட்ட 'இந்தியா' இதழில் பிரசுரம் செய்தார் பாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடிதத்தின் வீரிய வாசகங்கள் பாரதியின் தேசிய நெஞ்சைத் தொட்டன.

பாரதியின் நெஞ்சத்திலே தேசாவேசத்தை உயிர்த்து எழச் செய்தன.

பாரதியை வீறுகொண்டு எழும்படியாகச் செய்ய அக் கடிதத்தில் காணப்பட்ட வீரிய வாசகங்களைத் தெரிந்துகொள்ள நமக்கும் ஆவல் எழுகிறதல்லவா?

சரி, இனி — கடிதம் ஊட்டிய தேச நேசச் செய்தியை நாமும் பார்த்துவிடுவோம் :

"சென்ற செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீமத் குரு கோவிந்த சிங்கினுடைய ஜன்ம தினம், இவ்விடத்தில் வசிக்கும் ஹிந்துக்களால் காக்ஸ்டன் ஹாலில் வெகு விமர்சையுடன் கொண்டாடப்பட்டது.

தேச பக்தர் பிபின சந்திர பாலர் அக்கிராசனம் வகித்தார். 'வந்தே மாதரம்', 'ஸகல ஜகாமதிசான்' ஆகிய இரண்டு கீர்த்தனங்களையும் பாடிய பிறகு ஸ்ரீ கோகுல் சந்து என்னும் பஞ்சாபி ஒருவர் ஸ்ரீயுத குருவின் திருச் சரித்திரத்தைப் பற்றி ஒரு வியாசம் படித்தார்.

"ஸ்ரீ பிபின சந்திரபால் அந்தச் சரித்திரத்தின் சாராமிசத்தைச் சொல்லி, அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் உள்ள இணையையும், இந்தக் காலத்தில், அந்தக் குரு காட்டிய குணங்களை ஜனங்கள்கூட காட்டவேண்டுமென்றும் பேசினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ லாலா லஜ்பத்ராயும் குருவின் பராக்கிரமத்தையும் ஆத்தும நிவேதனத்தையும் வியந்து பேசினார்.

"அக்கிராசனாதிபதி உட்காரும் மேடையில் ஒரு விஸ்தாரமான கொடி உயர்த்தப்பட்டிருந்தது. அதன் தலைப்பில் ஸ்ரீ குரு கோவிந்த சிங்கினுடைய தரும சூத்திரமான தருமம், வாள் வெற்றி என்கிற வார்த்தைகள் ஆரிய பாஷையில் வரையப் பட்டிருந்தன. மத்தியில் ஞானியும், கவியும், சுத்த வீரனுமான ஸ்ரீமத் குருகோவிந்த சிங்குக்குக் கீர்த்தி உண்டாகுக என்றும், அடியில் சீக்கியர்களுடைய யுத்த கர்ச்சனை யாகிற 'சத் ஸ்ரீ அகால்' (சனாதன புருஷன் ஒருவனே உண்மையன்) என்கிற வசனமும் எழுதப்பட்டுக் கொடி மிகவும் அழகாக விருந்தது''.

[**இந்தியா** : *23-1-1909*—பக். 7]

வ.வெ.சு.ஐயரின் கடிதத்தில் இன்னொரு தகவலும் தரப்பெற்றிருந்தது. அதாவது, சனிக்கிழமை யன்று நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் இருந்த சீக்கியர்களுக்கு 'இந்திய கிரக'த்தில் ஓர் விருந்து உபசாரம் நடைபெற்றதாம்.

இதைப் பற்றி வ.வெ.சு.ஐயர் வழங்கும் செய்திக் குறிப்பு வருமாறு :

''லண்டனில் உள்ள சீக்கியர்களுக்கு 'இந்திய கிரக'த்தில் ஒரு விருந்து நடந்தது, விருந்துக்குப் பிறகு ஸ்ரீமத் குரு கோவிந்த சிங்குக்காக 'டோஸ்டு'ப் பேச்சில், சீக்கியர்கள் சுதேசமாகிற மாதாவினிடத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதம பக்தியை வைக்க வேண்டுமென்றும், ஸ்ரீ குரு கோவிந்தருடைய தருமத்தைத் தழுவினர்கள் என்பதைத் தேச பக்தியினாலும், தரும பரிபாலன காரியங்களாலும்தான் காட்ட வேண்டுமென்றும் பேசப்பட்டது."

[**இந்தியா** : *23-1-1909*—பக். 7]

இந்தக் கடிதம் பிரசுரமானபின், அதாவது *30-1-1909* இதழ் முதல் தொடர்ந்தாற்போன்று நான்கு வாரங்கள் **குரு கோவிந்த ஸிம்ஹ விஜயம்** பாடல் 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரமானது என்பதைப் பாரதீய உலகம் நினைவில் கொள்ளவேண்டும்.

தேசீய கீதங்கள் பல பாரதி புனைந்து வழங்கி யிருப்பினும், இந்த ஒரு தொடர் செய்யுளுக்கு மட்டுமே பாரதி பொருள் விளக்கமும் எழுதினார் என்பதும் மறக்க முடியாத உண்மை.

தம் சிந்தை கவர்ந்த தலைவர்களான பிபின சந்திர பாலர், லாலா லஜ்பத்ராய் ஆகியோர் குரு கோவிந்தரின் வாழ்க்கை மற்றும் அவருடைய சிறப்பியல்புகள் பற்றி வசன வடிவில் எடுத்துரைத்ததைக் கண்ட பாரதி தம் பங்களிப்பாகக் கவிதையில் வீரச் சுவை ததும்பும் குரு கோவிந்தருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார்.

வ.வெ.சு.ஐயர் ரத்தினச் சுருக்கமாக இலண்டனில் கொண்டாடப்பெற்ற குரு கோவிந்தரின் விழா பற்றி எழுதியதற்குப் பாரதி மிக விளக்கமாகத் தமிழர்களும் குரு கோவிந்தர் பற்றித் தெரிந்துகொள்ளவே பாமாலை இயற்றி அருளினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1910 மே மாதம் இலண்டனில் கர்ஸன் வில்லி என்ற ஆங்கிலேயர் மதன்லால் திங்க்ரா என்ற இந்திய இளைஞரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மதன்லால் திங்க்ராவின் செயலால், இலண்டன் இந்திய விடுதியானது போலீசாரின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளானது. இதன் தொடர்பாக வ.வெ.சு.ஐயரைக் கைது செய்யத் திட்டமிடப்பட்டது. இதை அவர் அறிந்தார். போலீஸ் வலையில் சிக்காமல் வ.வெ.சு.ஐயர் இலண்டனிலிருந்து தப்பி, பாரீஸ் வந்தடைந்தார். இதன் பின்னர் வ.வெ.சு.ஐயர் பற்பல நாடு, நகரங்களைக் கடந்து 1910 அக்டோபரில் புதுவை நகரை அடைந்தார்.

புதுவையை வ.வெ.சு.ஐயர் அடைந்ததும் முதலில் மண்டயம் ஸ்ரீனிவாஸாச்சாரியார் அவர்களின் இல்லத்தை அடையாளம் கேட்டுக்கொண்டு அவரிடம் சென்றார். அங்கே பாரதியும் இருந்தார். அன்றைய தின முதல் பாரதிக்கு வ.வெ.சு.ஐயருடன் நேரிடையான பரிச்சயம் ஏற்பட்டு, நெருக்கமான பழக்கமும் உண்டாகியது.

வ.வெ.சு.ஐயரின் புதுவை வரவால் பாரதி தம் கவலைகளை யெல்லாம் மறந்தார்; அவருடைய உள்ளம் மகிழ்வுற்றது; மற்றும் ஐயருடன் அரசியல் — இலக்கிய விவாதங்களில் பாரதி ஈடுபட்டார். இருவரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்டனர்.

வ.வெ.சு.ஐயர் இலண்டனில் இருந்தபோது, பத்திரிகை ஆசிரியர் என்ற அளவில் அறிந்த பாரதியைப் புதுவை வாழ்வில் அவரைத் **தமிழ்க் கவிஞருக்குள் இணையும் ஏற்றமுமின்றித் தனியே விளங்கிய** கவியரசர் என்பதைக் கண்டு கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆஷ் கொலையின் தொடர்பாக, புதுவை வாழ் தேச பக்தர்களுக்குப் போலீஸாரின் தொந்தரவுகள் தொடர்ந்தன. ஆனால் பாரதி — வ.வெ.சு.ஐயர்—அரவிந்தர் ஆகிய தேச பக்தர்கள் போலீஸாரின் தொல்லைகளைப் பொருட் படுத்தாமல், தம்முடைய பணிகளைத் தொடர்ந்தனர்.

எத்தனையோ விதமான தொல்லைகள் தொடர்ந்து பாரதி குழுவினரைச் சூழ்ந்தபோதும் அவர்கள் அவற்றைப் பெரிதெனக் கருதாமல், நாட்டு நலப் பணிகளிலேயே கருத்தைச் செலுத்தி வாழ்ந்தனர்.

அரவிந்தர் — வ.வெ.சு.ஐயர் ஆகிய இவர்களுடைய கூட்டுறவால் பாரதி பெரிதும் பயனடைந்தார். தம்முடைய இலக்கிய வட்டம் வளர்பிறை போல் வளர்ந்தது கண்டு பாரதி பெருமிதம் அடைந்தார்.

என்றாலும், ஒரு கட்டத்தில் பாரதி தமிழகம் திரும்ப எண்ணங்கொண்டார். தாம் எண்ணியபடியே, போலீஸ் கண்காணிப்பையும் மீறி, புதுவையிலிருந்து வெளி யேறினார், அதனால் சிறைப்படவும் நேர்ந்தது, பின்னர் சில நிபந்தனைகளின்பேரில் பாரதி விடுதலை யடைந்தார்.

1918இல் தமிழகம் திரும்பிய பாரதி சில காலம் கடையத்தில் வாசம் செய்தார். அதுவேளை பரலி சு. நெல்லையப்பரின் உதவிகொண்டு, பாரதி தம் நூல்களை வெளிக்கொணரும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

பாரதியின் வாக்கையே வேத வாக்காக மதிக்கும் நெல்லையப்பரும் பாரதியின் விருப்பத்தின் பேரில் சில நூல்களை மறுபதிப்புச் செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த வகையில், இரண்டாம் பதிப்பாக வெளிப்பட்ட **கண்ணன் பாட்டு**க்கு வ.வெ.சு.ஐயர் அருமையான தொரு முன்னுரை வழங்கி யுள்ளார்.

அந்த முன்னுரையில் பாரதியின் பல்வேறு திறன்களைப் பாராட்டிப் போற்றி யுள்ளார்; அக்ஷர லக்ஷம் பெறுமான பாக்களை எழுதி யிருக்கும் பாரதியின் உற்சாகத்தைக் குன்றாமல் இருக்கச் செய்யவும், உயர்த்தவும் தமிழபிமானிகள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் வ.வெ.சு.ஐயர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

வ.வெ.சு.ஐயர் **கண்ணன் பாட்டு** முன்னுரையில் தம் எண்ணத்தை இப்படி எதிரொலித்தார் :

> "நம் காலத்துத் தமிழ்க் கவிகளுள் பிரதம ஸ்தானத்தை வகிக்கும் ஸ்ரீமான் ஸுப்ரஹ்மண்ய பாரதியின் நூல்களுக்கு முன்னுரை வேண்டுவதே இல்லை...
>
> "கவிதா ரீதியாகப் பார்க்கும்போது இக் கீர்த்தனங்களுள் பெரும்பாலவையினுள்ள சுவை தேனினும் இனிதா யிருக்கிறது.
>
> ''இன்னொன்று, கவிதை யழகை மாத்திரம் அனுபவித்துவிட்டு, இந் நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலவை தாளத்தோடு பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன.
>
> ''கடற்கரையில் சாந்திமயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோஹ வயப்படுத்தி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந் நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்.

"தமிழபிமானிகள் இப் பதிப்பை ஆதரித்து வாங்கி ஆசிரியனுடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் தமிழில் புதிய இலக்கியங்கள் பிறக்கும்படி செய்வார்கள் என நம்புகிறேன்.''

[**கண்ணன் பாட்டு** (*1919*)—பக். *1; 3-4*]

பாரதியின் திறமைகளைக் **கண்ணன் பாட்டு** நூல் முன்னுரையில் பாராட்டி மகிழ்வுற்ற வ.வெ.சு.ஐயர் பாரதியை **மறுமலர்ச்சிக் கவிஞர்** என்றே வருணித்தவருங் கூட.

*1918*ஆம் வருடத்திய **சுதேசமித்திரன்** மலரில் வ.வெ.சு. ஐயர் எழுதிய **மறுமலர்ச்சி** என்னும் கட்டுரையில் பாரதியார் பற்றிய மதிப்பீடு வருமாறு :

''நாட்டில் புதிய இயக்கம் பிறந்ததும் அதற்கேற்ற கவி ஒருவரும் தோன்றினார். அவர் பெயர் ஸுப்ரஹ்மண்ய பாரதி என்று நாம் சொல்லுவதற்கு முன்னேயே எல்லோரும் கண்டுபிடித்திருப்பார்கள். அவரும் பழைய இலக்கிய வகையில்தான் பழகினவரானாலும் புதிய இயக்கமானது, அவரைத் தனக்கு ஓர் பிரதானமான ஆதாரமாக ஆக்கிக் கொண்டு விட்டது. அவகும் அந்த இயக்கத்தின் வேகத்தால் தூண்டப்பட்டு, பழைய இலக்கணக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞரின் துறைகளை விட்டுப் பொது ஜனானுசார மான துறைகளிலேயே பாடத் துவக்கினார்.

''இயற்கையாகவே கவிதை நிரம்பிய பிரதிபை யோடு கூடிய அவருக்குப் பழைய காவியங்களின் பழக்கமும், புதிய கல்வியின் வேகமும், பாரத தேசத்தின் புதிய ஜீவோதயமும் சேர்ந்து புதிய நடையையும் புதிய வழியையும் கற்பித்தன. நாள் செல்லச் செல்ல, அவர் கவியின் நயம் உயர்ந்து கொண்டே வந்து, அவர் தற்காலத்திலுள்ள தமிழ்க் கவிஞருக்குள் இணையும் ஏற்றமுமின்றித் தனியே விளங்குகிறார். அவருடைய நடையில் ஸரளமும், நயமும், அழகும் மலிந்து கிடக்கின்றன.''

[**குமரி மலர்** : 1973 ஆகஸ்ட் இதழ்]

1920 பிப்ரவரியில் வ.வெ.சு.ஐயரும் புதுவையிலிருந்து வெளிவந்து, வட இந்திய யாத்திரையை மேற்கொண்டு பின்னர் அதே ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து சென்னையிலேயே தங்கிவிட முடிவு செய்து விட்டார்.

சென்னை வாழ்க்கையிலும் பாரதி—வ.வெ.சு.ஐயர் தொடர்பு நெருக்கம் ஆனது. இருவருடைய வாழ்வும் பத்திரிகைத் துறையோடு பின்னிப் பிணைந்து விட்டது.

இந்த நிலையில் பாரதி மரணமடைந்தார். பாரதியின் மரணம் வ.வெ.சு.ஐயரின் உள்ளத்தை வாட்டியது.

1924இல் சேரன்மாதேவியில் வ.வெ.சு.ஐயர் தாம் தொடங்கிய மாதப் பத்திரிகைக்குப் '**பால பாரதி**' என்றே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயர் சூட்டித் தம் நண்பரான பாரதியின் திருப்பெயரை மக்கள் மறவாமல் இருக்கும்படியான செயலைச் செய்தார்.

ஆம்; பாரதி உயிரோடு இருந்தபோது சரிவர நம் நாட்டார் அவரை ஆதரிக்கவில்லை; அவருக்குரிய மதிப்பையும் அளிக்கவில்லை என்பதாக உள்ளம் நொந்தவர், வ.வெ.சு.ஐயர்.

> ''எம்பிராட்டிக்கு ஆயிரம் நாமங்கள் இருக்கையில், 'பாரதி' என்ற பெயரை ஏன் தெரிந்து கொண்டோமென்றால், அத் திருநாமம் எமது நண்பரும், இன்றைக்கு இருபது வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளிக்க முயன்ற புண்யாத்மகக்களில் ஓர் பிரமுகருமான காலஞ்சென்ற சி. ஸுப்ரஹ்மண்ய பாரதியின் ஞாபகம் இம் மாஸிகையைப் படிக்கும் அனைவர் மனதிலும் என்றும் அழியாமல் பசுமையாக இருந்துவர வேண்டுமென்றே யாகும்.''
>
> [**பால பாரதி** (*1924*) புத்தகம் *1*; பகுதி *1*]

என்று எழுதிய கை வ.வெ.சு.ஐயருடையதாகும்.

இவ்வண்ணம் ஒருவர் மேதைமையை மற்றவர் மதித்து வந்ததை எடுத்துக்காட்டும் செயல்கள் பாரதி — வ.வெ.சு. ஐயர் வாழ்வில் நிறைய உண்டு. அந்த நேசம் மறக்காத நெஞ்சங்கள் காட்டிய அன்பு நெறியை நாம் எண்ணும் போது, நம்மை அறியாமலேயே நமக்குப் பெருமித உணர்ச்சி ஏற்படுகின்றது.

இலக்கிய — அரசியல் வானில் மின்னிய பாரதி — வ.வெ.சு.ஐயர் ஆகிய இவ் விருவரின் தொடர்புகள் உண்மையிலேயே மெய்சிலிர்க்க வைப்பன ஆகும்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

பாரதியும் புதுவையில் பூத்த பொன்மலர்களும்

"எட்டயபுரம் பாரதியைப் பெற்றது; புதுவையே பாரதியாரை வளர்த்தது; அவர் கவிதைகள் பெரும்பாலும் இங்கே பாடப் பெற்றவை; பாரதி நூல்கள் எல்லாம் புதுச்சேரியில் பூத்த பொன் மலர்களே"

[**கல்கி** : *23-9-1945* — பக். *19*]

என்று *1945* செப்டம்பர் *11*லே புதுவையில் நடைபெற்ற பாரதி விழாவின்போது **கவியோகி சுத்தானந்த பாரதியார்** தம் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையிலேயே பாரதி எட்டயபுரத்தில் பிறந்து, சிலகாலம் சென்னையில் புகழ் வாழ்வு வாழ்ந்திருந்தாலும் அவருக்குப் புகலிடம் அளித்த புதுவைதான் அவருடைய பன்முகப் பணிகளுக்கும் களமாக அமைந்தது.

பாரதியின் வரலாற்றுப் புகழ்கொண்ட கவிதை-வசன நூல்கள் யாவும் புதுவையில் மலர்ந்தனவே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகைப் பணிகளுடன் பாரதி மேற்கொண்ட முயற்சிகளின் பலனாகவும் நண்பர்களின் இனிய நல் ஒத்துழைப்புடனும் நூல்கள் ஒருசில வெளிப்பட்டன.

புதுவை வாழ்வில் பாரதி எழுதிக் குவித்தவை ஏராளம்; ஏராளம். ஆனால், நூல் வடிவம் பெற்ற படைப்புக்களோ மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவை.

> "நான் பன்னிரண்டு வருஷ காலம் சுதேசத்தினின்று அகன்றிருக்கையில் எழுதிய என்னுடைய கையெழுத்துப் பிரதிகளும் புதுச்சேரியினின்று இங்கு வந்து சேர்ந்திருக்கின்றன. அவற்றை 'நாற்பது புத்தகங்களாகப் பிரித்து.........அச்சிடுகிறேன்."

இது பாரதியின் கடிதம் ஒன்றில் காணப்படும் திருவாசகம்.

நாற்பது புத்தகங்களாகப் பிரித்து அச்சிடப் போவதாகப் பாரதி குறிப்பிட்டதிலிருந்து, அவர் புதுவை வாழ்வில் எழுதிய எழுத்தின் அளவை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

சொல்லப்போனால், புதுவையில் பாரதி தாம் வாழ்ந்த காலத்தை வீணே கழிக்கவில்லை. ஏராளமான பயனுள்ள நூல்களை எழுதுவதில் செலவிட்டார்.

புதுவை வாழ்வில் பாரதி தம் கண்ணாரக் கண்டு, மகிழ்ந்த நூல்கள் பதின்நான்கு மட்டுமே. அவற்றிற்கான விவரம் வருமாறு ;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	நூலின் பெயர்	பதிப்பாண்டு
1.	ஜன்ம பூமி (ஸ்வதேச கீதங்கள்- இரண்டாம் பாகம்	1909
2.	ஞானரதம்	1910
3.	கனவு	1910
4.	ஆறிலொரு பங்கு	1910
5.	பாஞ்சாலி சபதம் (முதல் பாகம்)	1912
6.	புதிய ஆத்திசூடி	1913
7.	The Fox with the Golden Tail	1914
8.	மாதா மணிவாசகம்	1914
9.	கண்ணன் பாட்டு	1917
10.	நாட்டுப் பாட்டு	1917
11.	பாப்பா பாட்டு	1917
12.	முரசு	1917
13.	மகாகவி ஸர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்	1918
14.	ஜீவ வாக்கு	1918

இந்தப் பதினான்கு நூல்களில் முதல் ஏழு நூல்கள் புதுவையில் பாரதியாலே பதிப்பிக்கப்பட்டன; **மாதா மணிவாசகம்** என்ற நூல் மட்டும் தென்னாப்பிரிக்காவில் பிரசுரம் செய்யப்பட்டது; அடுத்த நான்கு நூல்கள் சென்னையில் **நெல்லையப்ப**ரால் வெளியிடப்பட்டன வாகும். இறுதியாகக் காணப்பெறும் இருநூல்கள் சென்னை **சுதேசமித்திரன் புத்தகசாலைப்** பிரிவினால் வெளியீடு செய்யப் பட்டனவாகும்.

ஞானரதம் கதை நூலாகவும், **ஆறிலொரு பங்கு** சமூக சீர்திருத்தச் சிறுகதை நூலாகவும், **The Fox with the Goldem Tail** அவர் காலத்தில் நிகழ்ந்த உண்மைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சம்பவத்தை விளக்கும் நூலாகவும், **பஞ்ச வியாஸங்கள், ஜீவவாக்கு** — இவ்விரண்டும் மொழிபெயர்ப்பு நூல்களாகவும் அமைந்து விட்டன. **புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு** நீதி நெறிமுறைகளைப் புலப்படுத்திக் காட்ட எழுந்த நூல்கள் எனலாம். மற்றவை கவிதை நூல்களாகும்.

அவசியம் கருதியும், வாசக நேயர்களின் வசதிக்காகவும் புதுவையில் பூத்த பொன்மலர்கள் பற்றிய ஓர் மேலோட்டமான கண்ணோட்டத்தைச் செலுத்துவது பொருத்தமாகும்.

1909ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **ஜன்மபூமி** (ஸ்வதேச கீதங்கள், இரண்டாம் பாகம்) என்னும் நூல் வெளிப்பட்டது. புதுவையில் பாரதி தஞ்சம் புகுந்த பின்னர் வெளிப்பட்ட முதல் கவிதை நூல் இதுவாகும்.

இந் நூலில் இடம் பெற்ற பெரும்பாலான பாடல்கள் சென்னை **இந்தியா** பத்திரிகையில் வெளியானவை என்பது குறிப்பிடத் தக்கது.

முதல் பாக ஸ்வதேச கீதங்களைப் போலவே, இந்தப் பாடல் நூலும் மாதுரியத்திலும் சுதேச பக்தியிலும் சிறந்து விளங்கியது.

மாதாவின் மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியாம் **நிவேதிதா தேவி**க்குச் சமர்ப்பணம் செய்த இந்த **ஜன்ம பூமி** நூல் தொகுதியுள் பதினேழு பாடல்கள் இடம் பெற்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந் நூலிடைக் காணப்பட்ட பாடல்களைத் தமிழ் அறிஞர் **மு. ராகவையங்கார்** படித்து இன்பமுற்று,

"இதன் சில பகுதிகளை எம் நண்பர்கள் முன் படித்து வரும்போது உள்ளபடியே அவை, உரோமஞ் சிலிர்க்க எம்மைப் பெரிதும் உருக்கிவிட்டன"

[**செந்தமிழ்** (*1909*) தொகுதி 7—பக். *174*]

என்று பாராட்டுரை வழங்கினார் என்றால் நூலின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

வந்தே மாதரம்

ஜன்மபூமி.

(ஸ்வதேச கீதங்கள் — இரண்டாம் பாகம்)

ஸ்ரீ. ஸுப்பிரமணிய பாரதி

பாடியது

விலை அணா 0—3—0

1909

All Rights Reserved.

SAIGON SINNAYA PRESS, PONDICHERRY.

ஜன்ம பூமியை அணி செய்த பதினேழு பாடல்களுள், **சுதந்திரப் பெருமை, ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கில உத்தியோகஸ்தன் கூறுவது**—ஆகிய இரு பாடல்களே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நூலிலே பாரதியால் பொருத்தம் நோக்கிச் சேர்க்கப்பட்டன.

ஆங்கிலேய ஆட்சியாளரால் பாரதி கண்காணிக்கப் பட்டார்; அவருடைய எழுத்துக்கள் அரசு அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டன.

பாரதி அறியாமலே அவரது பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டன.

அந்த வகையில், **ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம், மாதாவின் துவஜம், ஸ்வதந்திர தாகம், கலெக்டர் வின்ச்—ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல், கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி** — ஆகிய பாடல்கள் மொழி யாக்கம் கண்ட. பாடல்களில் குறிப்பிடத் தக்கன.

சுதந்திர வேட்கையை ஊட்டுகின்ற பாடல்கள் என்று அன்றைய பிரிட்டிஷ் அதிகாரிகள் கருதியதால், உடன் மொழிபெயர்க்கப்பட்டன.

பாரதியாலே **ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்** என்று தலைப்பு தரப்பட்ட பாடல் இன்றுள்ள பெரும்பாலான பாரதியார் கவிதைத் தொகுதியுள் **சுதந்திர தாகம்** என்பதாக மாற்றங் கண்டு, காணப்படுவது வேதனைக்குரிய செய்தியாகும்.

இப் பாடல் முதன் முதலாக 7-3-1908ஆம் தேதியிட்ட **இந்தியா** பத்திரிகையில் பிரசுரமானது. அரசாங்க அந்தரங்க அறிக்கையில் சேர்ப்பிக்கும் பொருட்டு, மொழிபெயர்த்து An Exhortation to Sree Krishna என்று தலைப்பிட்டுப் பாடலின் முதல் எட்டு வரிகள் தரப்பெற்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்கத்தின் செல்வரான **பிபின சந்திர பாலரி**ன் விடுதலையைக் கொண்டாடச் சென்னையில் 9-3-1908ஆம் நாளன்று திருவல்லிக்கேணி நெற்குக் கடற்கரையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பாரதி ஶ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரப் பாடலைப் பாடியதாக ரகசியப் போலீஸ் குறிப்பும் தகவல் தெரிவிக்கின்றது.

மற்றும், ஆஷ் கொலை வழக்கின்போதும் இப் பாடல் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டு, நீதி மன்றத்தில் மேற்கோளாகவும் காட்டப்பட்டது, 1912இல்.

மூன்று முறை மொழியாக்கம் கண்ட இப் பாடல், எந்த அளவுக்கு அரசினர் கண்ணை உறுத்தி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மூன்றாம் முறையாக மொழியாக்கம் கண்டபோது It does not of Course Convey the force of Original என்ற குறிப்புரை தந்தமையும் சிந்தனைக்கு உரியது.

மற்றும், **அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்** என்கிற பாடல் தலைப்பும் தற்காலத்திய பதிப்புகளில் **அபேதாநந்தர்** என்றும், **அபேதாநந்த ஸ்வாமிகள்** என்றும் மாற்றங் கண்டுள்ளது.

1906 ஆகஸ்ட் 4ஆம் தேதிய **இந்தியா** இதழில் பாடல் பிரசுரமானபோது, பாடலுக்குரிய ஆசிரியரின் பெயராக **வேதாந்தி** என்று காணப்படுகின்றது.

ஜன்ம பூமி நூல் வெளிப்பட்ட நிலையில், வேதாந்தியாகத் தம்மைக் குறித்துக் கொண்டவர் பாரதிதான் என்கிற உண்மையை அறிய முடிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்வாமி அபேதாநந்தர் வேதாந்த மார்க்கத்தை ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் உபதேசம் செய்துவிட்டு, தாய்நாடு திரும்பினார். சென்னைக்கு 1906 ஜூலை 15ஆம் தேதி விஜயம் செய்தார்.

பெருங்கீர்த்தி பெற்றுத் திரும்பிய ஞான புருஷரான மஹான் அபேதாநந்தருக்குச் சென்னை மாநகரில் தக்க உபசரணைகள் செய்யப்பட்டன. மஹான் அபேதாநந்தர் சென்னையிலும், பிற இடங்களிலும் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

இதுவேளை பாரதி தம் அன்புக் காணிக்கைப் பொருளாக அபேதாநந்தரின் அருமை பெருமைகளைப் பாடல் வடிவிலே வடித்துக் கொடுத்தார்.

ஓவியர் மணி ஸ்ரீ ரவிவர்மா பாடலும் “இந்தியா” பத்திரிகையில் 6-10-1906ஆம் தேதியிட்ட இதழில் ஓவியர் திலகம் மறைவெய்தியபோது, அவருக்குப் புகழ் அஞ்சலி செலுத்துமுகத்தான் புனையப்பட்டதாகும். ‘இந்தியா’ இதழில் பாடல் வெளிப்பட்டபோது அதன் தலைப்பு **ரவிவர்மா மீது செய்யுள்** என்பதாகும்.

இங்ஙனமே ஜன்ம பூமிப் பாடல்களைப் பற்றிய செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்லிக் கொண்டே போகலாம்.

‘ஜன்மபூமி’ பாடல் நூலை அடுத்துச் சரியாக ஓராண்டின் பின்னர், அதாவது 1910 ஜனவரியில் **ஞானரதம்** என்ற நூல் வெளிவந்தது. இது, பாரதியின் முதல் கதை நூலாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஞானரதம் போல் ஒரு நூல் எழுதுதற்கு நானிலத்தில் ஆளில்லை' என்று பாவேந்தருடைய புகழுரையைப் பெற்ற இந்த நூலினைப் பண்டித மஹேச குமார சர்மா அவர்களோ 'இதைப்போல் அற்புதமான கதை தமிழ் பாஷையில் வேறு கிடையாது' என்றே போற்றிக் கொண்டாடினார்.

இக் கதையின் முன்பகுதி சென்னை 'இந்தியா' பத்திரிகையிலும், சிலகால இடைவெளியின் பின்னர் முன் கதைச் சுருக்கத்துடன் சில அத்தியாயங்கள் புதுவை 'இந்தியா' பத்திரிகையிலும் பிரசுரமாயின.

கதையின் முழுப் பகுதியும் பத்திரிகையில் வெளிப்பட வில்லை. அதற்கான காரணம், நண்பர்கள் நூலாக வெளியிடவேண்டும் என்று வற்புறுத்தியமைதான்.

நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 1909 மே மாதமே **ஞானரத** நூலை வெளியிட முயன்றும் 1910 ஜனவரி மாதத்தில்தான் நூல் வெளிவந்தது.

தமிழ் நவீனக சரித்திரத்தில் புதுமையைக் குறித்த ஞானரத நூலைத் தொடர்ந்து, அதே 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், கதாநாயகன் தனது சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடையில் அமைந்த **கனவு** என்னும் பாடல் நூலும், சமூக சீர்திருத்தத்தைப் புலப்படுத்தும் **ஆறிலொரு பங்கு** என்னும் கதை நூலும் பிரசுரமாயின.

கனவு நூலினிடையே பாரதியின் வாழ்வுத் தொடர்பான சரிதக் குறிப்புக்களும் இழையோடக் காணலாம்.

தமிழுக்கு இதுபோன்ற நூல்கள் புதியன என்பதால், 'தமிழறிந்த மேலோர்கள் அங்கிகரிக்கத்தக்கதுதானா?'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனப் பார்வையிடும் பொருட்டுப் பாரதி வெளியிட்ட இந்த நூலின் மீது பிரிட்டிஷ் அரசின் ராஜபார்வை பட்டது.

சமூகத்தில் ஆறில் ஒரு பங்கு மக்களைத் தீண்டத் தகாத சாதியாகக் கருதி, பிறவி மாத்திரத்தாலேயே உயர்வு-தாழ்வு கற்பித்துக்கொண்டு கொள்கை வாதம் பேசிய சமூகம் திருந்த—பிரச்சார நோக்கில் எழுதிய கதை **ஆறில் ஒரு பங்கு** ஆகும்.

பாரதியின் சமூகக் கொள்கையைப் பறைசாற்றும் வகையில் அமைந்த **ஆறில் ஒரு பங்கு** நூல் முகவுரை நம்மவர் மனம் வெளுக்கும் மாமருந்தாகவே கருதத் தக்கது :

> "ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு, தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தாலேயே உயர்வு—தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது. இவ் வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும். அமரத்தன்மையும் கொடுக்கும். 'நாந்ய: பந்தா வர்த்ததே அயநாய'; வேறு வழியில்லை."

நம்மவர்களுக்குச் சுதந்திர உணர்வையும், சுக வாழ்வையும் கொடுத்து நம்மவர்களை அமரர்களாக ஆக்க முன்வந்த **ஆறில் ஒரு பங்கு** நூலின் பேரிலும் பிரிட்டிஷ் அரசின் பார்வை விழுந்தது.

திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் **ஆஷ் துரை** 1911 ஜூன் மாதம் 17ம் தேதி கொலை செய்யப்பட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொலை தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டனர்; அவர்கள்மீது வழக்கும் தொடரப்பட்டது.

கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருசிலரிடம் பாரதியின் **கனவு**, **ஆறிலொரு பங்கு** ஆகிய இரு நூல் பிரதிகளும் இருந்தன; அதனால், புதுவையில் வாழ்ந்த பாரதியும் சந்தேகிக்கப்பட்டார்.

பாரதியின் நூல்களில் ராஜத்துவேஷத்தைத் தூண்டக் கூடிய கருத்துக்கள் இருப்பதாக அரசின் அதிகார வர்க்கத்தினரால் கருதப்பட்டது. அதன் அடிப்படையில், பாரதியின் மேற்குறித்த இரு நூல்களுக்குத் தடை விதிக்கலாம் என்பதாகச் சென்னை சி.ஐ.டி. போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் 1911 ஆகஸ்ட் 19ஆம் நாளன்று அரசுத் தலைமைச் செயலருக்குப் பரிந்துரை செய்தார்.

சி.ஐ.டி. போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பரிந்துரையை ஏற்று, 1911ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாளன்று 'கனவு', 'ஆறிலொரு பங்கு' ஆகிய நூல் பிரதிகளுடன் அவற்றிற்கான ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் இணைத்து, 1910ஆம் ஆண்டைய இந்திய அச்சுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாமா என்பது பற்றி கருத்துருப்பெற அட்வகேட் ஜெனரலுக்கு அரசாங்கக் கீழ் செயலாளர் அனுப்பி வைத்தார்.

அப்போதைய சென்னை மாகாண அட்வகேட் ஜெனரலான சர் பி. எஸ். சிவசாமி அய்யர் என்பார் அரசின் கருத்துரையைப் பரிசீலனை செய்து, பாரதியின் நூல்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்பதாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26-9-1911-இல் தெரிவித்தார். இதனை யடுத்து, 11-10-1911இல் இந் நூல்களைப் பறிமுதல் செய்வதற்கான அரசின் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தம் நூல்கள் பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்ட நிலையிலும், பாரதி நெஞ்சம் கலங்கவில்லை.

பாரதி தமக்கு இழைக்கப்பட்ட அநீதியை வன்மையாகக் கண்டித்தார்; தம் நூல்கள் தீங்கற்றவை என வாதாடினார்; பத்திரிகைகள் வாயிலாகத் தம் நூல்களுக்கு விதித்த தடையை நீக்கி, நியாயம் வழங்குமாறு முறையிட்டார்; அரசுக்கும் தம்முடைய நிலையை விளக்கி எழுதினார்.

பாரதியைப் பொறுத்தமட்டில், தம் நூல்களுக்கு விதிக்கப்பட்ட தடையைத் தனிப்பட்ட முறையில் தமக்கு இழைத்த அநீதியாகக் கருதினாலும், **நமது எழுத்துச் சுதந்திரத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே** எடுத்துக் கொண்டு போராடினார்.

பிரிட்டிஷ் அரசிடம் தாம் செய்துகொண்ட முறையீடு பயனற்றுப்போன நிலையில், எந்த இந்திய மக்களின் பேரால் இந்திய அரசாங்கம் நடத்தப்படுகிறதோ, அந்த இந்திய மக்களிடம் பாரதி முறையீடு செய்துகொண்டார். அதாவது, 8-10-1912லே **'ஹிந்து'** பத்திரிகையில் ஆசிரியர் பகுதிக்குக் கடிதம் எழுதித் தம்முடைய பிரச்சினையை மக்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தார் பாரதி.

'ஹிந்து' பத்திரிகைக்குப் பாரதி எழுதிய கடித வாசகங்கள் பின்வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"மக்கள் சார்பில் அரசு நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் அரசு யாருக்கும் எவ்விதத்திலும் ஒரு சிறிதும் தீங்கிழைக்காத — எனது இரு நூல்களான 'கனவு' (கவிதை)," 'ஆறிலொரு பங்கு' (சிறு கதை) என்பனவற்றைத் தடைசெய்து இழைத்துள்ள அநீதியைக் குறித்து, மக்களாகிய உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

''அரசு இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ள நூலில் ராஜத்துவேஷமான விஷயம் இருப்பதாக யூகித்ததே இதற்குக் காரணம்.

"என் நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களைச் சட்டம் அனுமதிக்காது என அரசுக்கு அறிக்கை கொடுத்தவர்கள், அதைப்பற்றி அறியாதவர்கள். என் வெளியீடுகளில் கண்டுள்ளவற்றை மீண்டும் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்கிறேன். நான் ஏற்கெனவே சென்னை ராஜாங்கத்தை இந்த விஷயமாக, தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியும், பத்திரிகைகள் வாயிலாகவும் அணுகி யுள்ளேன். ஆனால் இதுவரை எனது முயற்சிகளுக்குப் பலன் காண இயலவில்லை.

''நான் இந்திய மக்களிடம் திரும்பவும் முறையீடு செய்து கொள்கிறேன். அவர்களிடம் என்னுடைய பிரசுரங்கள் இருப்பது குறித்து நியாயம் வழங்குமாறு கோருகிறேன். இப்படி முறையீடு செய்வதானது, என் சொந்த நலன்களைக் கருதி அன்று; ஏனென்றால் பணம், புகழ் என்னும் நோக்கத்தின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, இந்தச் சிறு பிரசுரங்களால் அநேகமாக, எனக்கு ஒன்றுமில்லாதவையே; பிரிட்டிஷ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசாட்சியில் எழுத்துச் சுதந்திரம் எக் கதியில் உள்ளது என்பதை வலியுறுத்திக் காட்டவேதான் முறையிட்டுக் கொள்கிறேன்.

''காதற் பாட்டுக்கள், சமூக சீர்திருத்தக் கதைகள் போன்றன சந்தேகிப்போர் பேனாவிலிருந்து வெளி வந்தவை என்ற காரணத்தால் தடை செய்வது என்பது அவர்களின் (அரசாங்கத்தாரின்) எல்லை மீறிய செயலாகும். இதனால் எழும் கேள்வியை மக்களும், பத்திரிகைகளும் ஆராயவேண்டுமென்பதே என் பிரார்த்தனை.''

[**மகாகவி பாரதி : சில புதிய உண்மைகள்**—
(1984) பக். 92]

இப்படி, பாரதி தம் நிலையை **ஹிந்து** பத்திரிகையில் எழுதிய பின்னும் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

தம்முடைய 'கனவு', 'ஆறிலொரு பங்கு' என்னும் இரு நூல்களும் தீங்கற்றவை என்பதையும், அவை காதற் பாட்டு—சமூக சீர்திருத்தக் கதை நூல்களே என்பதையும் பின்னொரு சமயத்திலும் பாரதி சுட்டிக் காட்டினார்.

அப்போதைய பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினரும், தொழிற் கட்சித் தலைவருமான **ராம்ஸே மக்டானால்டு** அவர்களுக்குப் பாரதி 1914 ஆம் ஆண்டு கடிதம் ஒன்று எழுதினார். அக் கடிதமும் **ஹிந்து** பத்திரிகையின் 10-2-1914 ஆம் தேதியிட்ட இதழில் பிரசுரமானது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தக் கடிதத்தில் பாரதி,

> "மிஸ்டர் ஆஷைக் கொலை செய்யச் சதி நடந்தது என்ற குற்றச்சாட்டு விசாரணையின்போது தகர்க்கப்பட்டு விட்டது... அவ் வழக்கில் சம்பந்தப் பட்டவர்களிடம் என்னால் எழுதப்பட்ட தீங்கற்ற கவிதை நூலும், சமூக சீர்திருத்தக் கதை நூலும் இருந்தன"

என்று குறிப்பிட்டு எழுதியதும் பொருள் செறிவு கொண்டதாகும்.

ஆஷ் கொலையில் சந்தேகம் நிவர்த்தியான நிலையில், அப்படிப்பட்டவர்களிடம் நூல்கள் இருந்தன என்கிற காரணத்தைக் காட்டித் தடை செய்தமை வரம்பு மீறிய செயல் என்கிற கருத்தையும் பாரதி இக் கடித வாயிலாகப் புலப்படுத்திவிட்டார்.

கனவு நூலும் பிற்காலத்தில் பிரசுரமானபோது, அது தனி நூலாக வெளிப்படாமல், பாடல்கள் சிலவற்றுடன் சேர்த்து **ஸ்வசரிதையும் பிற பாடல்களும்** என்பதாக அச்சானது. இத் தலைப்பு 1937இல் பாரதி பிரசுராலயத் தாரால் இடப்பட்டதாகும். இம் மாறுதல் பெற்ற தலைப்பும் சிற்சில பாரதியார் கவிதைகள் தொகுதியில் 'சுய சரிதை' என்றும், 'தன் வரலாறு' என்றும் காணப் படுகின்றது.

1910இல் பாரதி சூட்டிய தலைப்பான **கனவு**தான் 1937இல் பாரதி பிரசுராலயத்தாரால் **ஸ்வசரிதை**யாக மாற்றம் கண்டது. தலைப்பு மாற்றத்திற்குக் காரணம், திரும்பவும் அப்போதைய பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பாரதி பிரசுராலயத்தார் கருதியதே யாகும். இக் காரணம் பற்றியே 'கனவு' என்பதானது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஸ்வசரிதை'யாகப் பெயர் மாற்றங் கண்டது; பாரதியே தம் நூல் முகவுரையில் 'கதாநாயகன் தனது சரிதையைத் தானே நேராகச் சொல்லும் நடை' என்று தெரிவித்ததை ஒட்டியும் நூல் தலைப்பு 'ஸ்வசரிதை'யாக உருவெடுத்தது.

'ஆறிலொரு பங்கு' என்னும் சிறுகதை நூல் தனிப்படப் பிரசுரமாகாமல் **பாரதியார் நூல்கள் — சமூகம்** என்கிற நான்காம் தொகுதியில் **கட்டுரைகள்** பகுதியில் சேர்த்து 1935இல் பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்டனர்.

ஆக, பிரிட்டிஷ் ஆட்சியால் பாரதி காலத்தில் தடை செய்யப்பட்ட நூல்கள் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே மறு உருவில் பிரசுரமாயின என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

சட்டம் ஓர்புறம் பாரதியைப் பயமுறுத்திக் கொண்டு இருந்தாலும், தம் எழுத்துப் பணிகளை மட்டும் பாரதி கட்டுப்படுத்திக் கொண்டாரில்லை. துன்பங்கள் சூழ்ந்த நிலையிலும் பாரதியின் எழுத்துப் பணிகள் தொடரவே செய்தன.

பாரதியார் நூல்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு தீவிரமான நடவடிக்கை களில் இறங்கியது. ஒருவேளை புதுவையில் வாழ்ந்த பாரதி உள்ளிட்ட தேசபக்தர்களுக்கும் ஆஷ் கொலையில் சம்பந்தம் இருக்குமோ எனச் சந்தேகிக்கவும் செய்தது.

இதன் காரணமாகப் புதுவை தேச பக்தர்களான பாரதி, வ. வெ. சு. ஐயர், சீனிவாச்சாரியார், நாகசாமி போன்றோர்களுடைய நடவடிக்கைகள் பிரிட்டிஷ் போலீசாரால் கண்காணிக்கப்பட்டன; ஒற்றர்கள் இத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசபக்தர்களைப் பின்தொடர்ந்தனர்; இவர்களது கடிதங்கள் பரிசீலனைக்குள்ளாயின. புதுவையிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பி விடுவார்களோ என்ற ஓர் கற்பனையை ஒற்றர்கள் துறையே வளர்த்துக்கொண்டு அவர்கள் தப்பிச் செல்ல முடியாதபடிக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இத்துணைக்கும் மேலாகப் பிடிவாரண்டும் பிறப்பிக்கப்பட்டது. பாரதி உள்ளிட்ட தேச பக்தர் குழுவினர் எவராகிலும் இந்திய எல்லைப் பகுதிக்குள் நுழைந்தால், உடனடியாகக் கைது செய்யவும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நாலாபக்கமும் துன்ப மேகங்கள் தம்மைச் சூழ்ந்து இருந்த நிலையில்தான் பாரதி தம் எழுத்துப் பணிகளை ஆற்றி வந்தார்.

புதுவையில் தங்கிய பிரிட்டிஷ் போலீஸ் ஒற்றர்களே பாரதி தம் படைப்புக்களை நூல் வடிவில் கொணர முயன்று வந்தார் என்று குறிப்புத் தந்தமையும் சிந்தனைக்குரியது.

சொல்லொணா துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் மத்தியில், மனம் தளராமல் நெஞ்சுரத்துடன் 1912ஆம் ஆண்டிலே **பாஞ்சாலி சபதம்** (முதல் பாகம்) நூலைப் பாரதி பதிப்பித்து வெளியிட்டார்.

'பாஞ்சாலி சபத' நூல் வெளியீடு பாரதியின் சிறப்பைப் பன்மடங்கு உயர்த்தியது; இலக்கிய உலகம் பாரதியின் திறமையை மெச்சியது.

தமது நூல் மாசற்றது; தமது இலக்கியப் படைப்புக் களில் ராஜத் துரோகக் கருத்து எப்போழ்து இடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றது கிடையாது எனப் பாரதி திடமாக நம்பியதால், தாம் புதிப்பித்து வெளியிட்ட 'பாஞ்சாலி சபத' நூலைச் சென்னைக் கவர்னருக்கும் அனுப்பி வைத்தார்; நூல் பிரதியைப் பெற்றுக் கொண்டதற்கு மறுமொழியும் பாரதிக்குக் கிடைத்தது. இந்தச் செய்தியைப் பின்னொரு சமயத்தில் நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய கடிதத் தால் உணரலாம்.



உ

பாஞ்சாலி சபதம்.

ஸி. சுப்பிரமணிய பாரதி.

1912.

Vidyabi Vardini Press Poudicherry.

தியாக சீலர் சுப்பிரமணிய சிவா அவர்கள் தம்முடைய **ஞான பாநு** மாதப் பத்திரிகையில்கூட நூலுக்கான மதிப்புரை எழுதும்போது,

"பாரதி யவர்களுடைய தமிழ் நடையைப் பற்றியும், செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்புகிறோம். ஆசிரியர் இப் புஸ்தகத்தின் ஒரு பிரதியைச் சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பி யிருந்ததாகவும், அவர் தாம் அதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியருக்குக் கடிதம் எழுதிய தாகவும் கேள்விப்படுகிறோம். பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் அவசியம் படிக்க வேண்டிய புஸ்தகம் இது."

[**ஞான பாநு** : *1913* நவம்பர் இதழ்—பக். 191]

என்று பாரதி நூல் பிரதியைச் சென்னைக் கவர்னருக்கு அனுப்பிய செய்தியை நினைவுகூர்ந்தார்.

ஓராண்டு இடைவெளிக்குப் பின்னர் *1913*ஆம் ஆண்டிலே **புதிய ஆத்திசூடி** என்கிற சிறு நூல் மட்டுமே வெளிவந்தது.

நூல் அளவால் சிறிதெனினும், விளக்கப்பெறும் கருத்தால் உயர்வுடைத்தது.

*1914*ஆம் ஆண்டிலே தமிழிலே கவிதை நூல் ஒன்றும், ஆங்கிலத்தில் உருவகக் கதை நூல் ஒன்றும் ஆக இரண்டு நூல்கள் பிரசுரமாயின.

தமிழில் வெளிப்பட்ட கவிதைத் தொகுதியின் பெயர் **மாதா மணிவாசகம்** என்பதாகும். இது தென்னாப்பிரிக்காவில் வெளியீடு செய்யப்பட்டதால், பாரதிப் பாடல்களுக்குக் கடல் கடந்தும் செல்வாக்கும் வரவேற்பும் இருந்தன என்பது தெரிய வருகின்றது.

இக் கவிதை நூல் முன்னம் வெளிப்பட்ட கவிதைத் தொகுதி நூல்களினின்றும் சற்று வேறுபட்ட, நிலையில் காணப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாதா மணிவாசகம் நூலுள் உள்ளக் கிளர்ச்சியையும், பூரிப்பையும் உண்டாக்கத் தக்க பதினான்கு பாடல்கள் இடம் பெற்றன.

இந்த நூலுக்குச் சுப்பிரமணிய சிவா மதிப்புரை வரைந்தார். அதுபோது நூலின் பெயரை அவர் **மாதா** என்றே குறித்து விட்டார்.


வந்தே மாதரம்

மாதா மணிவாசகம்.

ஸ்ரீமத் ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால்

சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1,960,853,014.

1914

பெயர்க் குழப்பம் நூலில் இடம் பெற்ற பாக்களின் தலைப்புகளைக் கொண்டு நீக்கிக்கொள்ளப் பட்டது. 'ஒவ்வொரு தமிழரிடத்தும் இருக்க வேண்டிய நூல் இது' என்று பாராட்டுரை நல்கினார் சுப்பிரமணிய சிவா.

"The Fox with the Golden Tail" (பொன்வால் நரி) என்பது பாரதிநேரடியாகவே ஆங்கிலத்தில் எழுதியதாகும் இந்த நூல் வெளிவந்ததும் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாலேயே இந் நூல் பற்றி "A Fable with an esoteric Significance" என்று குறிக்கப்பெற்றுள்ளது.

பிரம்மஞான சபையின் உலகக் குருவாகத் திகழ்ந்த ஜே. கிருஷ்ணமூர்த்தி விவகாரங்கள் காரணமாக, அன்னிபெசண்ட் அம்மையார்மீது தொடுக்கப்பட்ட வழக்கு நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டு எழுதப் பட்டதே 'பொன் வால் நரி' என்கிற உருவகக் கதை நூல்.

படித்தவர்களாலும், ஆன்மீகத்தின் பெயரால் நடைபெறும் மோசடியை விரும்பாத அன்பர்களாலும் இந்த நூல் பெரிதும் வரவேற்பைப் பெற்றது; இரு பதிப்புக்களையும் கண்டது. பின்னிட்டுப் பாரதி இந் நூலைப் பதிப்பிக்க விரும்பவில்லை. நையாண்டியும் நகைச்சுவையும் பாரதிக்குக் கைவந்த கலை என்பதை நூலைப் படிப்பவர்கள் உணரவே செய்வர்.

இந்த நூலைத் தொடர்ந்து 1915, 1916ஆம் ஆண்டு களில் பாரதியின் எந்தவொரு நூலும் வெளிப்படவில்லை. ஆனால், கவிதை நூலை வெளியிடத் திட்டமிட்டு இருந்தார். ஆயினும், திட்டமிட்டபடி கவிதை நூலை அவரால் வெளியிட முடியவில்லை. இதற்குக் காரணம், பொருளாதாரச் சிக்கல்தான்!

இந்தக் காலகட்ட வாழ்க்கையைப் பற்றி,

"புதுச்சேரி வாசத்தின்போது, பாரதியார், தமிழ் நூல்களைத் தவிர, ஆங்கிலத்திலும் சில கட்டுரைகள் எழுதி வந்தார்.

"பொதுவாக, 1910ஆம் வருஷத்திலிருந்து 1915ஆம் வருஷம் வரை பாரதியாருடைய வாழ்க்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிரமமான வாழ்க்கை யென்றே சொல்லவேண்டும். ஒழுங்கான வருவாய் கிடையாது; நண்பர்களின் உதவியை அடிக்கடி நாடவேண்டி யிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்து ஏவலாட்களின் தொல்லை ஒருபுறம்; இல்லாமை காரணமாக, பிணி, கவலை முதலியன அடிக்கடி இவரையும் இவர் குடும்பத்தை யும் வந்து தாக்கின. ஆனால், இந்தக் காலந்தான், இவருடைய சிறந்த இலக்கிய சிருஷ்டிகளுக்கு உகந்த காலமா யிருந்தது. இதை நோக்குகிறபோது, வேதனையிலிருந்தே சிருஷ்டி என்ற உண்மை புலனாகிறது.''

[**நான் கண்ட நால்வர்** (1959)—பக். 255]

என்று **வெ. சாமிநாத சர்மா** அவர்கள் எழுதியது உண்மை; முக்காலும் உண்மை.

வேதனைகளை உரமாக இட்டு உழைப்பு எனும் நீர் பாய்ச்சி நமக்கு இலக்கிய நறுமலர்களை வழங்கினார் பாரதி.

பாரதியின் இலக்கியப் புகழ் ஒளி வீசிடக் கங்கணம் கட்டி நின்ற நெல்லையப்பர் 1917 ஆம் ஆண்டிலே **கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு**—ஆகிய நான்கு நூல்களை வெளியிட்டுப் பாரதியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

நெல்லையப்பரின் பாரதி பக்தியை வார்த்தைகளாலே வடித்துக் காட்ட முடியாது. பாரதியிடம் நெல்லையப்பர் தேவ தா விசுவாசமே பாராட்டி வந்தார்.

பாரதியிடம் காட்டிய தேவதா விசுவாசத்தை நெல்லையப்பர் **கண்ணன் பாட்டு** நூலுக்கு எழுதிய முகவுரையே பறைசாற்றும் :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

“இதன் ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால், அவர் பெருமையை **உள்ளபடி** அறிந்தவர்கள் மிக மிகச் சிலரே யாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகாபண்டிதர்; தெய்வீகப் புலவர்; ஜீவன் முக்தர்; இவர் தமிழ் நாட்டு ‘ரவீந்திர நாதர்.’ இவர் எனது தமிழ்நாட்டின் தவப்பயன்.

“இவ்வாறு கூறுவதால் யான் எனது நண்பரை மிகுந்த உச்ச ஸ்தானத்தில் ஏற்றி வைப்பதாக எவரும் கருத வேண்டாம். அவருக்கு யான் கொடுக்கும் உச்ச ஸ்தானம் **நிச்சயமானது**. இதனைத் தற்காலத்தில் அறியாதவர்கள் பிற்காலத்தில் அறிவார்கள்.”

[**கண்ணன் பாட்டு** (*1917*) பக். 27]



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெல்லையப்பரின் சத்திய வாசகங்கள் பொய்க்க வில்லை. பாரதியை இன்று உலகமே கொண்டாடுகின்றதே!

1908-1909ஆம் ஆண்டுகளின் காலப் பகுதியில் வெளியான **ஸ்வதேச கீதங்கள், ஜன்ம பூமி** ஆகிய நூல்களில் இடம்பெற்றிருந்த பாடல்களில் சிலவற்றைத் தெரிந்தெடுத்தும், புதிய பாடல்களைச் சேர்த்தும் 1917லே **நாட்டுப் பாட்டு** என்ற தலைப்பெயரில் பதிப்பித்தார் நெல்லையப்பர்.

இதன் பின்னர் பாரதியின் வேண்டுகோளின்படி இந்த **நாட்டுப் பாட்டு** நூலும், **கண்ணன் பாட்டு** நூலும் 1919இல் மறு பிரசுரம் கண்டன. 'கண்ணன் பாட்டு'க்கு மகரிஷி வ.வெ.சு.ஐயர் முன்னுரை எழுதினார்.

பாரதி இரண்டாம் முறையாகச் **சுதேச மித்திரன்** பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றிய காலத்தில் **கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு** ஆகிய இரு நூல்களுக்கான விளம்பரம் ஒன்று 9-12-1920ஆம் தேதியிட்ட இதழில் பிரசுரமாகி யுள்ளது.

அந்த விளம்பரம் பின்கண்டவண்ணம் அமைந்தது:

கண்ணன் பாட்டு

நாட்டுப் பாட்டு

(ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியால் இயற்றப் பட்டவை)

நவீனத் தமிழின் வியப்புக்களும், இன்பங்களும் மேற்கூறிய இரண்டு தமிழ் நூல்களிலும் ததும்பிக் கிடக்கின்றன.

'கண்ணன் பாட்'டில் சிருங்கார ரஸமும், பக்தி ரஸமும் அதிகம். 'நாட்டுப் பாட்டு' தேசாபிமானி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கொரு புதையற் செல்வம் கிடைத்தது போன்றது. தெளிந்த, இனிய, ஆச்சர்யமான நடை. "தேசபக்தன்" ஆசிரியராகிய ஸ்ரீமான் வ.வெ.சு.ஐயர் பாரதியாரின் பாட்டுக்கள் அக்ஷர லக்ஷம் பெறுமென்று 'கண்ணன் பாட்டு' முகவுரையில் எழுதுகிறார்.''

இவ் விளம்பர வாசகங்கள் பாரதி நூல்களின் பெருமையை நமக்கு **உள்ளபடி** உணர்த்துகின்றன அல்லவா?

நாட்டுப் பாட்டைத் தொடர்ந்து, நூல் வடிவம் பெற்ற **பாப்பா பாட்டு** 1915 மார்ச் மாத **ஞானபாநு** இதழில் வெளிவந்ததாகும்.

'ஞானபாநு'வின் 'பாப்பா பாட்'டில் பதினான்கு செய்யுள்கள் காணப்பட்டன, ஆனால், நூலாக்கம் பெற்ற பொழுது ஒருசில திருத்தங்களுடனும், மாற்றங் களுடனும் பதினாறு செய்யுள்களாக உருப்பெற்றது.

மகிமை பொருந்திய 'பாப்பா பாட்டு' நூலைத் தொடர்ந்து **முரசு** நூல் வெளிப்பட்டது. இந்த நூலில் பாரதி தமக்கு உண்மை என்றும், ஊருக்கு நல்லது என்றும் கருதியவற்றை முரசு கொட்டிச் சொன்ன செய்திகள் பல உண்டு.

இவ் விரு நூல்களில் காணப்பட்ட பாடல்களைத் தங்க ஏடுகளில் நவரத்தின எழுத்துக்களால் பொறித்தற் குரியன என்றும், தமிழர்கள் வேதமெனக் கொள்ள வேண்டும் என்றும் பெருமிதத்தோடு பேசினார், நெல்லையப்பர்.

ஆம், "இரண்டும் இரு தங்க விக்கிரகங்கள்தாம்,'' வெறும் புகழ்ச்சி யில்லை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1918ஆம் ஆண்டிலே **சுதேச மித்திரன் புத்தகசாலை** பாரதியின் இரு மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டது.

இவ் விரு நூல் வெளியீடுகளால் பாரதியின் ஆங்கில மொழி அறிவையும், மொழிபெயர்ப்புத் திறனையும் தமிழ் உலகம் அறிந்துகொள்ள முடிந்தது.

முதல் நூல் மகாகவி ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கட்டுரைகளின் தமிழாக்கம் ஆகும்.

மகாகவி ஸர் ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள் என்பது நூலின் தலைப்பு ஆகும்.

தாகூரின் கவிதை நடைக் கட்டுரைகளைப் பாரதி தமக்கே உரித்தான முறையில் மூலத்தின் ரஸம் கெடாமல், மொழிபெயர்த்தளித்தார். அதோடுமட்டுமில்லை, மூல ஆசிரியரான தாகூரின் கருத்துக்களோடு தாம் மாறுபட்ட இடங்களையும் மொழிபெயர்த்தவரின் ஆக்ஷேபம் என்று சொல்லிக் குறிப்பிட்ட பாங்கும் பாரதிக்கே வாய்த்த நேர்மைத் திறம் எனலாம்.

கட்டுரைகள் யாவும் முதன் முதலில் பெங்காளியில் தாகூரால் எழுதப் பெற்றவை யாகும். பின்னர் அக் கட்டுரைகள் தாகூரின் சகோதரரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. அங்ஙனம் மொழிபெயர்க்கப் பட்ட கட்டுரைகள் யாவும் 'மாடர்ன் ரெவ்யூ' என்கிற மாதப் பத்திரிகையில் பிரசுரமாயின. இச் செய்திகளை நூலின் முகவுரை தெரிவிக்கிறது.

ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளே பாரதியின் தமிழாக்கத்திற்குத் துணை நின்றன,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்கத்துக் கவியரசராம் ரவீந்திரநாதர் அருளிய பஞ்ச வியாசங்களைத் தமிழ் நாட்டின் ரவீந்திரநாதராம் பாரதி மொழிபெயர்த்த நூலில் காணப்படும் கட்டுரைகளுக்கான விவரம் பின்வருமாறு :

1. சிறிதும் பெரிதும்
2. அடங்கி நட
3. ஜாதி
4. ஜப்பானுடைய ஆவி
5. கல்வி கற்பிக்கும் பாஷை

"மாடர்ன் ரெவியூ" மாதப் பத்திரிகையில் தாகூர் எழுதிய ஐந்து கட்டுரைகளும் எந்தெந்தத் தேதிகளில் வெளிப்பட்டன என்பதையும், ஆங்கிலக் கட்டுரைகளுக்கான தலைப்புகள் இன்னின்னவை என்பதையும் கண்டறிந்து திரு. **பெ. தூரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

பொருத்தம் நோக்கி அச் செய்திகளை இங்கே காண்போம் :

"தாகூர் எழுதிய இந்த ஐந்து கட்டுரைகளும் 'மாடர்ன் ரெவியூ' என்ற பத்திரிகையில் கீழ்க்கண்ட தேதிகளில் வெளியாகி யுள்ளன.

1. ஜப்பானுடைய ஆவி (The spirit of Japan) —1917 ஜூன்
2. ஜாதி (The Nation) —1917 ஜூலை
3. அடங்கி நட (Thou shalt obey) —1917, செப்டம்பர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. கல்வி கற்பிக்கும் பாஷை (The medium of Education) —1917 அக்டோபர்

5. சிறிதும் பெரிதும் (The small and the great) —1917 டிசம்பர்

"இவற்றில் ஜப்பானுடைய ஆவி, ஜாதி என்பவை தாகூரால் ஆங்கிலத்திலேயே எழுதப்பெற்றவை. மற்றவை மூன்றையும் வங்காளி மொழியில் அவர் எழுதினார். ரவீந்திரநாத தாகூரின் உடன்பிறந்தார் மைந்தரான திரு. சுரேந்திரநாத தாகூர் என்பவர் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்த விவரங்களை ரவீந்திரநாத தாகூரின் புத்திரரான திரு. ரதீந்திரநாத தாகூர் எனக்குத் தெரிவித்ததோடு, இக் கட்டுரைகளை வெளியிட அன்புடன் அனுமதியும் தந்தார்கள்.''

[**பாரதி தமிழ்** (1953)—பக். 611-612]

சுதேசமித்திரன் புத்தகசாலை வெளியிட்ட பிறிதொரு நூலின் பெயர் **ஜீவ வாக்கு** என்பதாகும்.

இந்திய விஞ்ஞானியான ஸர் ஜகதீச சந்திர வஸு (ஜகதீச சந்திர போஸ்) என்பவர் தம்முடைய விஞ்ஞானக் கூடத்தைத் திறந்து வைத்துப் பேசியதையே பாரதி தமிழாக்கம் செய்தார்.

இந்த நூலுக்கு திரு. **எ. ரங்கசாமி அய்யங்கார்** எழுதிய அரிய முகவுரையில், ஜகதீச சந்திரரின் பெருமைகளைப் புகழ்ந்து பேசியிருப்பதுடன், நூல் வெளிப்பட்ட காரணத்தையும் சொல்லி யிருக்கிறார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


ஜீவ வாக்கு.

ஸர் ஜகதீச சந்திர் வஸு
செய்த் பிரசங்கம்.

''ஜகதீச சந்திர வஸு தம்மாலயத்தில் செய்த முதல் பிரசங்கத்தை வங்க பாஷையிலோ ஆங்கிலத்திலோ படித்து அறிந்து கொள்ள முடியாத நமது தமிழர்களின் பொருட்டு ஸ்ரீமான் சுப்பிரமண்ய பாரதி இனிய நடையில் தமிழில் செய்திருப்பதை அனைவரும் ஆவலுடன் வாசித்து ஆனந்திப்பார்களென் றெண்ணி இப் புத்தகம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் யாவரும் இதை அங்கீகரிப்பார்களென நம்புகிறேன்"

[ஜீவ வாக்கு (1918)—பக்.2]

என்று திரு. எ. ரங்கசாமி அய்யங்கார் எழுதியதை யாரே மறுப்பர்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்படி வெளிவந்த நூல்களைக் கண்டு பாரதி மகிழ்ச்சி அடைந்தார். என்றாலும், தம்முடைய நூல்கள் நிறைய வெளிப்பட வேண்டும் என்றே ஆசைப்பட்டார்.

அவரது ஆசைக்கனவு ஓரளவே பூர்த்தியானது.

பாரதியின் புதுவை வாழ்வில் பூத்த பொன்மலர்களோ ஏராளம். ஆனால், மாலைகளாகத் தொடுக்கப்பட்டனவோ பதினான்கு மட்டுமே. எஞ்சியவை காலங்கடந்த நிலையில் தான் மாலைகளாகத் தொடுக்கப்பட்டன.

என்றாலும், அவை காலத்தை வென்று நின்று பாரெங்கும் பாரதியின் புகழை மணக்கச் செய்கின்றன.

பாரிலதிசயம் பாரதி—அவன்
பண்களை வேதமென் றோதுவோம்

—சுத்தானந்த பாரதி

100889

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Acces on 91252 20/7/95
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நூலைப் பற்றி...

பாரதி புகழ் பரவும் நூல் வரிசையில் வெளிப்படும் இந்த நூல் - பல்வேறு கோணங்களில் பாரதி தரிசனத்தைக் கண்டறியத் துணை புரிகிறது.

இதுநாள் வரை எந்தவொரு பாரதி ஆய்வு நூலிலும் வெளிப்படாத-போதிய அளவு விளக்கம் பெறாத சுவை மிகுந்த பல புதிய செய்திகள் இந்த நூலை அணி செய்கின்றன.

நம்பகமான சான்றுகளைக் கொண்டுள்ள நூல் செய்திகளுக்கு ஆதாரபூர்வமான சித்திரங்கள் புதுமெருகைத் தருகின்றன.

பாரதி ஆய்வுலகப் பரப்பை விரிவாக்க வேண்டும் என்கிற ஆசை காரணமாக வெளிப்பட்ட இந்த நூலில், பாரதீய உலகம் கண்டறியவேண்டிய உண்மைகள் பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது.

பாரதியின் விசுவரூப தரிசனத்தைக் கண்டு இன்புற விரும்புவோர்க்கு விருந்தளிக்கும், நூல் இது.

M. K. Process Madras-5
Phone : 841478

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar